சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி

# டாக்டர் உ.வே.சா.

முனைவர் பூ. சுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி
# டாக்டர் உ.வே.சா

முனைவர் பூ. சுப்பிரமணியம்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

டாக்டர் உ.வே.சா. அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர் - தமிழ் பற்றாளர் பலர்
வரிசை எண்: 10 நாள்: 07-01-05

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Suvadi pathippukkalai vazhikatti Dr. U.Ve.Sa** |
| Author | : | Dr. P. Subramaniam<br>23, II Vanniar Street<br>Choolaimedu,<br>Chennai - 600 094. |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Research Assistant<br>IITS, Chennai - 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Taramani, Chennai 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 527 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | iv+172 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 50/- (Rupees Fifty only) |
| Printing | : | Venkateswara offset Press<br>Aziz Mulk Street,<br>Chennai - 600 006. |
| Subject | : | Manuscriptology |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

பதிப்புலகின் தந்தை என்று பாராட்டப்பெறும் உ.வே.சா. அவர்கள் நூல் உருவாக்கத்திற்கென்று தனித்த பதிப்புக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கிக் கொண்டவர். நூற்றுக்கணக்கான நூல்களை அச்சிட்டுத் தமிழ் உலகில் வலம் வந்த தமிழ்ச் சான்றோர் பலரும் ஒரு நூலையாவது உ.வே.சா. அவர்களின் பதிப்பைப் போன்று கொண்டு வர இயலாதா என்று ஏங்குகின்ற அளவிற்கு இவரது பதிப்பு பல்லோராலும் போற்றத்தக்கதாக அமைந்து விட்டது. சுவடி எங்கிருந்தாலும், சுவடியைப் பாதுகாப்போர் எவ்விடத்து இருந்தாலும் அங்கெல்லாம் உ.வே.சா. அவர்கள் நினைக்கப்படுவார்; போற்றப்படுவார். இந்நிறுவனத்தில் உ.வே.சா. பெயரால் அமைந்த அறக்கட்டளை மேற்கண்ட நோக்கங்களில் உ.வே.சாவை நினைவு கூர்ந்து அவரின் பதிப்பு நுட்பங்களை இளைய தலைமுறையினர்க்குக் கொண்டு சேர்க்கும் வகையில் அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்வதும், அத்தகைய சொற்பொழிவுகளை நூலாக்கம் செய்வதுமாகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவ்வகையில் இவ்வரிசையில் பத்தாவது பொழிவின் வெளியீடாகச் **சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி டாக்டர் உ.வே.சா.** என்ற இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் இக்காலப் பதிப்பாசிரியர்களுக்குப் பெரிதும் வழிகாட்டுதற்குரிய பதிப்பு முறைகள் பலவற்றைத் தாங்கி நிற்பவையாகும். அம்முறைகளைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டுவதாக இந்நூல் அமைகிறது.

எங்களின் அழைப்பினை ஏற்றுப் பொழிவு நிகழ்த்த இசைவு வழங்கிய முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்கள் சுவடியியலில் ஆழ்ந்த புலமையும், திறனும் உடையவர். சுவடியியல் கோட்பாடுகளை உருவாக்கியவர். இந்நிறுவனத்தில் பணியாற்றிய காலத்துச் சுவடியியல் பட்டய வகுப்பைத் தலைமையேற்றுச் சிறப்புற நடத்தித் தந்தவர். நல்லதொரு நூலை உருவாக்கித் தந்திருக்கும் இவருக்கு நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அறக்கட்டளைப் பொறுப்பாளர் என்ற நிலையில் இச்சொற்பொழிவு நூலாக்கம் பெறுவதற்குத் துணைநின்ற முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கு நன்றி.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத் துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவுக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த வெங்கடேஸ்வரா அச்சகத்தார்க்கும் என் நன்றியும் பாராட்டுகளும் உரியன.

சென்னை

29-12-2004 **இயக்குநர்**

# ஆசிரியரைப் பற்றி. . .



வந்தவாசி வட்டம், வடஆற்காடு மாவட்டத்தில் திரு. பூங்காவனம், அங்கம்மாள் தம்பதியினருக்கு 02-07-1927ஆம் ஆண்டு அருமகனாய்ப் பிறந்தவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம், முதுகலைப்பட்டம், பிடி., முனைவர் பட்டம் பெற்றவர்.

தமிழாசிரியர் பணி, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலாகப் பணி, காப்பட்சியர் பொறுப்பு, இந்நிறுவன சுவடியியல் பட்டய வகுப்பு ஆசிரியர், ஆசியவியல் நிறுவனச் சுவடித் துறைத்தலைவர் போன்ற பொறுப்பான பணிகளை வகித்தவர்.

19-02-1992இல் கும்பகோணத்தில் நடைபெற்ற உ.வே.சா. ஆண்டுவிழாவில் **உ.வே.சா.வின் வழித்தோன்றல்** என்ற சிறப்பினைப் பெற்றவர்.

பணிக்காலத்து, சுவடியியல் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளையும், கருத்தரங்குகளையும் நடத்தியவர்.

சுவடி இயல் என்ற இவரது முனைவர் பட்ட ஆய்வேட்டின் வழி உருவாக்கம் பெற்ற நூல் சுவடி மாணவர்களுக்கு மட்டுமன்றிச் சுவடி உலகிற்கும் ஒரு சிறந்த ஆய்வுக்கருவூலக் கோட்பாட்டுக் கையேடாகத் திகழ்கின்றது.

மனை நூல், மெய்க்கீர்த்திகள், வர்ம சூத்திரம், யட்சகான நாடகங்கள், கணித நூல், மருத்துவச் சுவடிகள், ஆரூட சோதிடம் முதலான முப்பதுக்கும் மேற்பட்ட வெளியீடுகளையும், பல கட்டுரைகளையும் தந்தவர்.

சுவடித்துறை முன்னோடிகளுக்குப் பின் அவர்கள் வழித்தோன்றல்களில் இவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.

# நூலினுள்

பக்க எண்


நூன்முகம் 7

இயல் – 1. வழிகாட்டும் அனுபவம் 13

தமிழ் மொழி 13
தமிழ் மக்கள் 13
இறையியல் வாழ்க்கை 14
வேளாண் கலை 14
கட்டடக் கலை 15
மருத்துவக் கலை 15
சோதிடக் கலை 16
கணிதக் கலை 16
இலக்கியக் கலை 17
கலைகளின் நிலைபேறு 18
மரபுச் செல்வங்கள் 19
நம்மிடையே மரபுச் செல்வங்கள் 19
மரபுச் செல்வங்களை உணர்த்தியோர் 20
வெளியீட்டுச் சான்றோர் 21
வியத்தகு சான்றோர் 21
பதிப்புக்கலை வழிகாட்டிகள் 22
வழிகாட்டிகளுள் ஒருவர் 22
வழிகாட்டியை வழிகாட்டியவை 23
வழிகாட்டியை வழிகாட்டியோர் 23
வழிகாட்ட வித்திட்டோர் 24
வழிகாட்டிபெற்ற பிறகல்விச் செல்வங்கள் 25

| | |
|---|---|
| வழிகாட்டியாகும் நிறைவுத்திறன் | 32 |
| வழிகாட்டும் செல்வமளித்தோர் நிறை | 33 |
| பிள்ளையவர்களின் செல்வம் | 34 |
| வழிகாட்டத் துணைநின்ற அனுபவச் செல்வம் | 34 |
| தேடிப் பெற்ற அனுபவச் செல்வம் | 36 |
| வழிகாட்டத் துணைநின்ற தனிச்செல்வம் | 37 |
| சுவடி அனுபவச் சிக்கல்கள் | 38 |
| சுவடி அனுபவத் தெளிவு | 42 |
| மூலச் சுவடி இல்லை | 43 |
| வழிச்சுவடிகள் தோன்றக் காரணம் | 43 |
| வழி ஏடு தோன்றுவதில் முதல் நிலை | 44 |
| பாடவேறுபாட்டு வகை | 44 |

***இயல் – 2 வழிகாட்டும் பதிப்பு நெறிகள் 46***

| | |
|---|---|
| பதிப்பு | 46 |
| வெளியீடு | 46 |
| சுவடிப் பதிப்பு வெளியீடு | 47 |
| பதிப்புப்பணிகளில் வழிகாட்டி | 47 |
| முதற் பணி | 47 |
| பாடல்களைப் படியெடுத்தல் | 48 |
| பாட்டு அமைப்பு | 49 |
| சீர் அளவு ஒத்து வருதல் | 49 |
| ஒப்பிடும் பணி | 50 |
| ஒப்பிடுதலின் பயன் | 51 |
| ஒப்பிடும் பணியில் வழிகாட்டி அவர்கள் | 51 |
| சீவகசிந்தாமணிச் சுவடிகள் | 51 |
| யாத்திரையின் பேறு | 53 |
| சிலப்பதிகாரச் சுவடிக்காக யாத்திரை | 54 |
| வழிகாட்டி அவர்களின் பதிப்புப்பணிக்காலம் | 54 |
| பதிப்புப்பணியில் இன்றைய நிலை | 54 |

பொதுநிலை 55

அன்றைய நிலை 56

பொதுநிலை 58

**இயல் – 3. வழிகாட்டும் பதிப்புப் பணிகள் 59**

சுவடிப் பதிப்பின் தொடக்கம் 59

வழிகாட்டி அவர்களின் முதல் வெளியீடு 60

நூலின் அமைப்பு 61

இரண்டாவது வெளியீடு 62

வெளியீட்டின் அமைப்பு 62

சுவடிப்பதிப்பு வெளியீடுகள் 64

சொந்த வெளியீடுகள் 67

சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் 68

சிற்றிலக்கியங்கள் 70

தென்றல்விடு தூது 70

சுவடிப் பதிப்பு வெளியீடுகளின் பொது அமைப்பு 71

**இயல் – 4 வழிகாட்டும் வெளியீட்டு நெறிகள் 74**

*நூல்களின் முகவுரை* **74**

சீவக சிந்தாமணி 74

சிலப்பதிகாரம் 75

மணிமேகலை 77

பத்துப்பாட்டு 79

பரிபாடல் 81

ஐங்குறுநூறு 83

புறநானூறு 85

பதிற்றுப்பத்து 87

*சிற்றிலக்கியங்களுள் முகவுரை* **88**

மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது 88

நூலாசிரியர் வரலாறு 89

திருத்தக்கத்தேவர் 90

இளங்கோவடிகள் 91

சீத்தலைச்சாத்தனார் 92

பத்துப்பாட்டு பாடியோர் 93

பாடினோர் வராறு 100

புறநானூறு 100

பதிற்றுப்பத்து 103

பரிபாடல் 104

ஐங்குறுநூறு 108

பாடப்பெற்றோர் வரலாறு 110

பத்துப்பாட்டு 110

புறநானூறு 113

பாடச்செய்தோர் வரலாறு 116

சீவகசிந்தாமணி 116

சிலப்பதிகாரம் 116

மணிமேகலை 118

ஐங்குறுநூறு தொகுத்தோர் 118

உரையாசிரியர் வரலாறு 119

நச்சினார்க்கினியர் 119

அடியார்க்கு நல்லார் 120

அரும்பத வுரையாசிரியர் 120

பரிமேலழகர் 121

இயல் – 5. வழிகாட்டும் தொகுப்பு நெறிகள் 122

நூல்களாலறியப்பெறுவன 122

சீவகசிந்தாமணி 123

சிலப்பதிகாரம் 124

மணிமேகலை 124

**சிறப்புச் செய்திகள்** 125

சீவகசிந்தாமணி 125

சிலப்பதிகாரம் 126

மணிமேகலை 129

பரிபாடல் 131

புறநானூறு 134

தமிழ் விடுதூது 136

தென்றல் விடுதூது 137

**இயல் – 6. ஒருமைப்பாடுகள்** 139

**இலக்கிய ஒருமைப்பாடு** 139

முந்நீர் - சொல் 139

பிறப்புகள் பல 140

வாழ்த்து - வணக்க நெறிகள் 140

அறச்சாலைகள் 141

வண்டுடை இயற்கை 141

அந்தணர் ஒழுகலாறு 143

பாலைக் கௌதமனார் 144

நாடும் மக்களும் 144

**இலக்கிய – இலக்கண ஒருமைப்பாடு** 148

ஒடு, ஓடு உருபு 148

திணை மயக்கம் 148

உயிர் முன் உயிர் 148

இரட்டைக் கிளவி 149

செய்யுமென் எச்சம் 149

அஃறிணை 150

மிகைத் தொடர் 150

தன்மைப் பன்மை 151

இடப்பொருள் 151

குறிப்பு வினைமுற்று; அசைநிலை 152

உயர்திணை - அஃறிணை 152

மெய்யீற்றின்முன் உடம்படுமெய் 154

தொகையுள் மயக்கம் 154

செய்யுமென்முற்று 155

சொல் - என்னும் பொருளன 156

தொகைப் பொருள் 156

ஐந்தன் உருபுப்பொருள் 157

ஒருபொருட் பன்மொழி 158

உம்மை 158

பாடாண் - கைக்கிளை 159

நிரல் நிறை 159

*வழிகாட்டிய நிறைவுவழி* ***160***

பெறும்பயன் பெரும் பயன் 162

துணை நூல்கள் 163

சொல்லடைவு 165

# நூன்முகம்

செம்பரிதி ஒளிபெற்றான் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்தது ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்று
எவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் *சாமிநா*
*தப்புலவன்* குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கின் றீரே?
அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் *மகாமகோ பாத்தியா*
*யப்பதவி* பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்இவனப் பாண்டிர்நாள் இருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ! - - - - -
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -
குடந்தைநகர்க் கலைஞர் கோவே!
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே" (பாரதியார்)

அகவிருளை அகற்றவல்லது எது? இருளற்ற வாழ்க்கைக்குரிய கலைகள் யாவை? அக்கலைகள் எவ்வாறு நிலைபெற்றன? மரபுச் செல்வம் என்று ஏதேனும் ஒன்று உண்டா? உண்டு என்றால் அதை நம்மிடையே உணர்த்தியோர் யார்? உணர்த்துவதற்குரிய பணியாது? அப்பணிகளுக்கு உரிய தகுதிகள் யாவை? அத்தகுதிகளை நாம் பெறமுடியுமா? முடியுமென்றால் அதற்குத் துணைநின்று வழிகாட்டுவோர் உள்ளனரா?

இத்தகு வினாக்களுக்கு விளக்கமான, தெளிவான விடை தருகிறது இக்கட்டுரையின் - இந்நூலின் தொடக்க இயல். நமக்குத் துணை நின்று வழிகாட்டும் வழிகாட்டி அவர்கள் பெற்ற பலவகை

அனுபவச் செய்திகளை உள்ளவாறே எடுத்துக் கூறுகிறது அவ்வியல் எனலாம்.

வழிகாட்டி அவர்கள் பெற்றுள்ள அனுபவங்கள் அனைத்தும் ஒரே பணிக்கு உரியனவா? ஒரே பணிக்குரியனவே என்றால் அப்பணிதான் எது? அப்பணிக்குரிய அடிப்படை நெறிமுறைகள் என்னென்ன? அந்த நெறிமுறைகளை அனைவரும் கையாள இயலுமா? படிப்படியாக அந்நெறிமுறைகளை வகைப்படுத்த முடியுமா? முடியும் என்றால் அவற்றுள் முதற்பணி எது? அடுத்தடுத்த பணிகள் யாவை? அப்பணிகளுக்காக நாம் அலைய வேண்டி நேருமா? அலைந்து பெறுவது யாது? என்பன போன்ற வினாக்களுக்குத் தெளிவான விளக்கங்களைக் கூறி, அலைந்து பெறும் பெருஞ்சொத்தையும் தெளிவுபடுத்துகிறது இரண்டாவது பகுதி. பெருஞ்சொத்துகளைப் பெறுவதிலும் அவற்றைப் பயன்படுத்து வதிலும் ஏற்படும் அன்றைய சிக்கல்கள் என்னென்ன? அவற்றின் இன்றைய நிலை எத்தன்மைத்து என்பதையும் ஒப்பிட்டுப் புரிய வைப்பதோடு இன்று அப்பணியை மேற்கொள்ளுபவர்களுக்கு ஏற்ற துணிவையும் உருவாக்குகிறது அதே பகுதி.

அத்துணிவை உண்டாக்குவதற்கு உறுதுணையாக நிற்பன, முன்னோர் தம் உழைப்பின் மூலம் உருவாக்கி நம்மிடையே கொடுத்துள்ள செல்வங்களேயாகும் என்பதைச் சுட்டுகிறது மூன்றாவது பகுதி. அச்செல்வங்களின் பெயர்களைக் கூற முடியுமா? அச்செல்வங்களில் கூறுபாடுகள் உண்டா? அக்கூறுபாடுகளை நாமும் நம் உழைப்பால் உருவாக்க முடியுமா? அக்கூறுபாடுகள் நிறைந்த மொத்த செல்வத்தை முழுமையாக உருவாக்க அவை நமக்குத் துணை நிற்குமா? அல்லது வழிகாட்டுமா? என்னும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சான்று காட்டி விளக்கமும் தருகிறது மூன்றாவது பகுதி.

முழுமையாக உருவாக்கப்பெற்ற அந்த அறிவுச் செல்வம் ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக அறியும் வாய்ப்பு உண்டா? என்ற வினாவுக்குத் தெளிவாக விடை கூறுகிறது அடுத்த பகுதி. சுருக்கமாக அறியச் செய்வதோடு மட்டுமன்றி அச்செல்வத்தினுள் அடங்கும் ஒவ்வொரு உறுப்பையும் செலவிடச் செய்வதற்கும் வழிகாட்டுகிறது இப்பகுதி. அந்த உறுப்புகள் தரும் உண்மைப் பொருள்களையும் நிரல்படுத்தித் தருவது அனைவருக்கும் வழிகாட்டியாக அமைவதோடு அவற்றை உருவாக்கவும் ஊக்கமளிக்கிறது.

நான்கு பகுதிகளாகக் கூறப்பெற்ற முழுப் பயன்பாடுகளையும் அறியவும் உணரவும் உள்ளத்து நிறுத்தவும் செய்யும் தொகுப்பு நெறிகளையும் அவை தரும் இன்பப் பொருள்களையும் அவை அமையும் அமைப்பு ஒழுங்குகளையும் சான்றுகளோடு உருவாக்கிக் காட்டுகின்றன அடுத்த இரண்டு பகுதிகள்.

இவ்வாறு ஆறு பகுதிகளில் விளக்கம்பெறும் அந்த ஒப்பற்ற செல்வமே அகவிருளை அகற்ற வல்லதும் இருளற்ற வாழ்க்கைக் குரியதுமாகிய **சுவடிப்பதிப்பு வெளியீடு** எனப் பெறும் நூல் என்பதாகும்.

இன்றைய கண்டுபிடிப்புகள், அனுபவங்கள், கற்பனை போன்றவற்றின் அடிப்படையில் நூல்கள் பல உருவாக்கப் பெறுகின்றன. இந்த நூல் உருவாக்க முறைகள் பலவும் தமிழ் மக்களிடையே பழங்காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன. வாழ்க்கையில் தாங்கள் கண்ட உண்மைகளை, தாங்கள் பெற்ற அனுபவங்களை, தாங்கள் பயன்படுத்திய நெறிமுறைகளைத் தங்கள் வழிவருவோரும் அறிய வேண்டும்; அறிந்து பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்தித் தங்களைப் போலவே மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று கருதினார்கள். அவர்கள் கருத்துகளை வரிவடிவில் பொறித்து வைத்தார்கள். அவ்வாறு எழுதி வைக்கப் பெற்றவையே தமிழ்ச் சுவடி வடிவங்களாகும். அக்காலத்தில் எழுதப்பயன்படுத்திய பொருள் ஓலையேயாகும். இந்த அடிப்படையில் உருவாக்கப் பெற்ற ஓலைச்சுவடிகளில், நம் முன்னோர்களின் அனுபவத்தால் உருவாக்கப் பெற்ற,

கட்டிடக்கலை, மருத்துவக்கலை, சோதிடக்கலை, கணிதக்கலை, இலக்கியக்கலை போன்ற பலவகைக் கலைகள் அடங்கியுள்ளன. எழுதப்படு பொருளாகத் தாள்கள் உருவாகி அவற்றைக் கொண்டு நூல்களை வெளியிடும் வழக்காறு தோன்றிய பிறகு, சிறிது சிறிதாக - ஓலைகளில் எழுதுவது குறைந்து, ஓலைகளில் எழுதி வைத்ததைப் படிக்கும் பழக்கமும் குறைந்து வந்தது. இன்று அடியோடு மறைந்தும் போயிற்று எனலாம்.

சுவடியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்த சான்றோர் சிலர் நம் முன்னோர் கருத்துகளை நிலைபெறச் செய்து, பின்னவரும் அறியுமாறு செய்ய வேண்டும் என்னும் ஆழ்ந்த கருத்தையும் பரந்த உள்ளத்யையும் உடையவராய்ச் சுவடிச்செய்திகளை எடுத்தெழுதிப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். வெளியிட்டும் வருகிறார்கள். சுவடிப்பதிப்பு வெளியீட்டுப் பணியை மேற்கொள்ளுபவர்களுக்கு

உறுதுணையாக இருக்குமாறு பழம் பெரும் பதிப்பாசிரியர்கள் மேற்கொண்டுள்ள பதிப்பு நெறிமுறைகளை எடுத்துக்காட்ட வேண்டும் என்னும் நோக்கத்தில் உருவாக்கப் பெற்றதே இக்கட்டுரை; இந்நூல்.

பதிப்பு நெறிமுறைகளுக்குச் சான்றாக அமையும் நூல்களும் பதிப்பாசிரியர்களும் பலராக இருப்பினும், அவர்களுள் சிறந்தோராக,

மஹாமஹோபாத்தியாயராகிய

**டாக்டர் உ.வே. சாமிநாதையர்**

அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள்தம் பதிப்பு நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு

சுவடிப்பதிப்புக் கலை வழிகாட்டி

**டாக்டர் உ.வே. சாமிநாதையர்**

என்னுந் தலைப்பில் இக்கட்டுரை - இந்நூல் உருவாக்கப் பெறுகிறது.

சான்று காட்டுவதற்காக வழிகாட்டி அவர்களுடைய சுவடிப் பதிப்பு வெளியீடுகளிலிருந்து,

1. சீவகசிந்தாமணி
2. சிலப்பதிகாரம்
3. மணிமேகலை
4. பத்துப்பாட்டு
5. பதிற்றுப்பத்து
6. பரிபாடல்
7. ஐங்குறுநூறு
8. புறநானூறு
9. தமிழ் விடு தூது
10. தென்றல் விடு தூது

என்னும் பத்து நூல்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன. சுவடிப் பதிப்பை மேற்கொள்ளுபவர்களுக்கு வழிகாட்டும் அவர்களுடைய பணிகளை முறைப்படுத்திக் காட்டப் பெறுகிறது.

1. சுவடிப்பதிப்பை மேற்கொள்ளுவதற்கு அடிப்படையான அவர்களுடைய கல்வித்தகுதிகளையும் அவற்றைப் பெற்ற வழிமுறைகளையும் எடுத்துக் காட்டுவதன் வழி, பதிப்பாசிரியர்களும் அத்தகுதிகளைப் பெற வேண்டும் என்பதை உணர வைக்கிறது. இதேபோல,

2. பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூலுக்குரிய சுவடிகளைத் திரட்டுவதில் பெருமளவு உடலுழைப்பை மேற்கொள்ள வேண்டும்.

3. கிடைத்த சுவடிகளில் முழுமையான, பிழையில்லாத ஒரு சுவடியைத் தேர்ந்தெடுத்துப் படியெடுக்க வேண்டும். பிற சுவடிகளை வைத்து ஒப்பிட்டுப் பாடவேறுபாடுகளோடு முழுமைப்படுத்த வேண்டும்.

4. உரை, விளக்கவுரை, எடுத்துக்காட்டுகள், பிறநூல் மேற்கோள்கள், பாடவேறுபாடுகள், இலக்கணக்குறிப்புகள் போன்றவற்றால் ஒவ்வொரு பாட்டையும் அல்லது ஒவ்வொரு பகுதியையும் தெளிவுபடுத்தி உருவாக்க வேண்டும்.

5. நூலாசிரியர், உரையாசிரியர் போன்றோர் தம் வரலாறுகளைத் தொகுத்துத் தரவேண்டும்.

6. நூலில் கூறப்பெறும் செய்திகளாகிய நூலின் கருத்து, கதைச்சுருக்கம் போன்றவற்றில் பொருந்துவனவற்றை உருவாக்கி அமைக்க வேண்டும்.

7. நூலாலறியப்பெறும் வாழ்வியல் உண்மைகளாகிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து அளிக்க வேண்டும்.

8. நூலில் இடம் பெறும் நாடு, நகரம், ஊர், மன்னர், மக்கள், மலை, ஆறு போன்றவற்றைத் தொகுத்துத்தருவதோடன்றி அவற்றின் விளக்கங்களையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

இங்கே எடுத்துக் கொண்ட நமது வழிகாட்டி அவர்களின் பதிப்பு நூல்கள் அனைத்தும் இவையனைத்துக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. அவையே இக்கட்டுரையுள் - நூலுள் தனித்தனித் தலைப்புகளில் தொகுத்துக்காட்டப் பெறுகின்றன.

இந்தக் கட்டுரை - நூல் ஆய்வின் அடிப்படையில் உருவானது அல்ல. வெறும் முறையான தொகுப்புகளின் வெளியீடுகளே கட்டுரையாக - நூலாக வடிவம் பெற்றுள்ளது என்பதே உண்மை.

# நன்றியுடைமை

டாக்டர் உவே.சா. அறக்கட்டளை இயக்கத்தின் மூலமாக இக்கட்டுரையை வழங்குமாறு அடியேனுக்கு வாய்ப்பளித்து, நூலாக வெளியிடும் பொறுப்பையும் ஏற்று நின்றவர், அடியேன் வணக்கத்திற்கும் நன்றிக்கும் உரியவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநருமான **முனைவர் சா. கிருட்டினமூர்த்தி** அவர்கள் ஆவார்கள். சான்றாண்மை மிக்க அன்னாருக்கு அடியேன் வணக்கத்தையும் நன்றியையும் உரித்தாக்குவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு அடியேனை முன்மொழிந்து இப்பணியையேற்குமாறு பணித்தவர்கள் வணக்கத்திற்கும் அன்புக்குமுரிய **முனைவர் தி. மகாலட்சுமி** அவர்களாவார்கள்.

இக்கட்டுரைக்குத் துணைநின்ற அனைத்து நூல்களையும் அவ்வப்போது நூலகத்திலிருந்து தம் பொறுப்பில் பெற்றுச் சுமந்து வந்து கொடுக்கும் பணியை ஏற்று முழுமையாக உதவிபுரிந்தவர் அன்புக்குரிய திருமதி **இரா. வெண்ணிலாஇளவரசு** அவர்கள் ஆவார்கள்.

வேண்டிய நூல்களை அவ்வப்போது கொடுத்து உதவிப் பெரிதும் துணைபுரிந்தவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகர் அன்புக்குரிய திருமதி **இரா. பார்வதி** அவர்கள் ஆவார்கள். நூல்களைக் குறிப்பிட்டு வேண்டி நூலகத்திற்குச் சென்ற போதெல்லாம் மிகவும் ஆர்வத்தோடு வேண்டிய நூல்களைக் கொடுத்து உதவியவர் டாக்டர் உவே.சா. நூலக உதவியாளர் அன்பர் திரு. எஸ். சாயிராமன் அவர்கள் ஆவார்கள். இதே போல் அரசினர் சுவடி நூலகப் பணியாளர்களாகிய அன்பர்களும் உதவி புரிந்து வந்தனர்.

அனைத்து அன்பர்களுக்கும் என் உள்ளம் உவந்த மகிழ்ச்சியோடு நன்றி கூறிக் கொள்ளுகிறேன். வணக்கம்.

அன்பன்

**பூ. சுப்பிரமணியம்**

## சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி
# டாக்டர் உ.வே. சாமிநாதையர்

# இயல்-1

## வழிகாட்டும் அனுபவம்

ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னே ரிலாத தமிழ்.

### தமிழ்மொழி

உலகத்து இருளகற்ற வல்லன; இருளகற்றி ஒளிதரவல்லன; உயர்ந்தோர் தொழ விளங்குவன இரண்டு. ஒன்று கதிர்; ஒளியூட்டும் கதிரவன். ஏனையது தமிழ்; ஒப்பும் உயர்வும் இல்லாத தமிழ். இரண்டும் இருளகற்ற வல்லவனவே. ஆயின், கதிர் உலகத்து இருளை மட்டுமே அகற்ற வல்லது. அதாவது புறவிருளை மட்டுமே அகற்ற வல்லது.

தமிழோ அகவிருளை, ஆறறிவு படைத்த மக்களின் அகவிருளை, தனித்தனி ஒவ்வொருவரின் அகவிருளை அகற்ற வல்லது. உயர்ந்தோர் தொழ விளங்கும் அத்தமிழ், தனக்குள் அடங்கும் மகர, மூகரங்களால் மட்டுமே உருவான, மொழி என்னுஞ் சொல்லை உடன் ஏற்றுத் **தமிழ்மொழி** என்றே வழங்கப்பெறுகிறது.

தமிழ்மொழியில் உருவாகியுள்ள கலைச்செல்வங்கள் இயல் இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளில்அடக்கப் பெறுகின்றன. அதனால் முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரையும் பெறுகிறது.

### தமிழ் மக்கள்

முத்தமிழாம் கலைச்செல்வங்களை உருவாக்கிய தமிழ் மக்கள், வாழ்க்கையின் தொடக்க காலத்தில் பலதிறத்தானும் தங்கள் வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தவர்களாவார்கள். அத்தகு

பலவகை வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் வாழ்க்கைக் கலைகள் பலவற்றையும் கண்டறிந்தவர்கள்.

## இறையியல் வாழ்க்கை

வாழ்க்கையின் தொடக்க காலத்தில் மலையிலும் காட்டிலும் என இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ் மக்கள் அந்த இயற்கையையே இறையாகக் கண்டார்கள். ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என ஒளிதரும் கதிரவனைப் போற்றித் துதித்தார்கள். திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் எனச் சந்திரனை வணங்கி மகிழ்ந்தார்கள். மலைக் காட்சிகளை யெல்லாம் இறைவனது அருஞ்செயல்களாகவே கண்டு மகிழ்ந்தார்கள். வனத்து வளப்பங்கள் யாவும் அவனது உருவாக்கங்களே என்று உணர்ந்து போற்றினார்கள். ஆங்காங்கு இறைவழிபாட்டைத் தொடங்கினார்கள்.

தொடர்ந்து பரந்த நிலவுலகையும் கடற்பரப்பையுங் கண்டார்கள். ஆங்காங்கு தங்கி வாழவும் தொடங்கினார்கள். மலைகளிலும் காடுகளிலும் கண்ட காய், கனிகள் போன்றவற்றைத் தாங்கள் வாழத் தொடங்கிய நிலவுலகிலும் உருவாக்க முற்பட்டார்கள். அந்த உருவாக்கப் பணி மேலும் மேலும் வளர்ச்சி பெற்றது. அவற்றின் பெருக்கத்தால் பலதிற உண்மைகளைக் கண்டறிந்து, சிறந்த அனுபவங்களைப் பெற்றுச் சிறந்தார்கள்.

## வேளாண்கலை

'ஏர் நடந்தால் ஊர் நடக்கும்' என்னும் பேருண்மையைக் கண்டறிந்து செயலாற்றத் தொடங்கினார்கள். தங்கள் செயற்பாடுகளுக்கு உறுதுணையை அறிந்த அவர்கள்,

> **"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
> **நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்**
> **மேல்நின்று தான்சுரத்த லான்" (சிலம்பு - வாழ்த்துரை)**

என்று நன்றி உணர்வோடு மழையைப் போற்றினார்கள். தங்கள் செயற்பாடுகளுக்காக அம்மழை நீரை ஏரி, குளம், கிணறு போன்றவற்றில் தேக்கினார்கள். ஊற்றுக் கால்களை உருவாக்கி, வாய்க்கால்கள், மதகுகள், மடைகள் எனப் பல வழிமுறைகளில் அந்நீரைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். ஏற்றங்கள், கவலைகள் என்ற துணைக்கருவிகளைப் பயன்படுத்தி உழைத்தார்கள். பயன்பெற்றதன் விளைவாக 'ஆடிப்பட்டம் தேடி விதை' பருவத்தே பயிர் செய் என்னும் அனுபவங்களை உணர்த்தினார்கள். இறுதியாக

'சீரைத்தேடின் ஏரைத்தேடு' என்னும் பேருண்மையை உலகறியச் செய்து **வேளாண்மைக்கலை** என்னும் உயர்கலையை உலகிற்கு அளித்தார்கள்.

### கட்டிடக்கலை

மலை வாழ்க்கை, வன வாழ்க்கைகளிலிருந்து மாறி மருதநிலங் கண்டு, வேளாண்கலையில் ஊறிய தமிழ் மக்கள் தாங்கள் தங்குவதற்கெனச் சிறுசிறு குடில்களைக் கட்டி முறையான தெருக்களையும் வகுத்தார்கள். வளர்ந்த நிலையில் முறையான தலைவர்களையும் சான்றோர்களையும் மன்னர்களையும் ஏற்றார்கள். அவர்களுக்கென,

> **"மயன்விதித் தன்ன, நெடுநிலை மாடங்களையும்' (சிலம்பு. 2)**
>
> 'வேயா **மாடமும் வியன்கல இருக்கையும்**
> **மான்கண் காலதர் மாளிகை யிடங்களை' (சிலம்பு. 5)**

யுடைய தெருக்களையும் தோற்றுவித்துக் கட்டடக்கலை என்னும் அறியதோர் கலையையும் உலகறியச் செய்தார்கள்.

### மருத்துவக்கலை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பேருண்மையைக் கண்டறிந்தவர்கள் தமிழ் மக்கள். இயற்கை யோடியைந்த வாழ்க்கையை மேற்கொண்ட காலத்தே மருந்தாகப் பயன்படுவனவாகிய இயற்கைப் பொருள்களைத் தங்கள் உணவுப் பொருள்களோடு சேர்த்து உண்ணும் பழக்கத்தைக் கடைபிடித்து வந்தார்கள். இவ்வுணவு முறையே தமிழர்தம் மருத்துவக் கலைக்குத் துணையாகி நிற்கிறது. இலை, வேர், கிழங்கு, பூக்கள், மரப்பட்டைகள், மூலிகைகள் போன்றவற்றை இயற்கை வழி மருத்துவத்திற்குப் பயன்படுத்தினார்கள்.

அன்றே நோயின் அடிப்படைக் குறிகளான நாடிகளைக் கண்டறிந்தார்கள்.

> **மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
> **வளிமுதலா யெண்ணிய மூன்று (குறள். 941)**

என்னும் வள்ளுவர் கூற்றுக்குக் காரணமானவை அவர்கள் கண்ட **'வாத, பித்த, சிலேத்துமம்'** என்னும் மூவகை நாடி ஓட்டங்களேயாகின்றன. நோய்நாடி, அதன் முதல் நாடி, அது தீர்க்கும்

வழி நாடி, உரிய மருத்துவத்தை முறையாக மேற்கொண்டு, அம்முறையை உலகறியச் செய்தவர்கள் தமிழர்கள்.

இவ்வாறு இயற்கை வழியில் கண்ட மருத்துவக் கலையில் ஊறித்திளைத்த தமிழர்கள் மருந்தின் பெயர்களும் அவற்றின் உட்கருத்துகளும் அடங்கிய பெயர்களாலேயே இலக்கியங்களையும் கண்டிருக்கிறார்கள். அவை இலக்கியப் படைப்பில் இடம் பெறுகின்றன.

### சோதிடக்கலை

எந்த ஒரு பணிக்காகவும் புறப்படும் போதும் எந்த ஒரு பணியையும் தொடங்கும் போதும் மங்கலகரமான நல்ல நல்ல சொற்களைக் கேட்பதும், நல்லவர்களைக் காண்பதும் நல்ல சகுனம் என்று உள்ளம் மகிழ்ந்தவர்கள் தமிழர்கள். விதை விதைத்தல், வீடு கட்டுதல், மருந்து உண்ணுதல், கல்வி தொடங்குதல், தொழில் தொடங்குதல், மணஞ் செய்தல் போன்ற நல்ல செயல்களை மேற்கொள்ள, நல்ல நாளையும் நேரத்தையும் அறிந்து செயல்படுவதில் மிகவும் ஈடுபாடு உடையவர்களாய் விளங்கினார்கள். 'நாள் செய்வதை நல்லோர் செய்யார்' என்ற அனுபவத்தைப் பெற்றார்கள். வானிலையை ஆழ்ந்து அறிந்தார்கள். அதன் அடிப்படையில் இத்தகு காலத்தைப் பற்றி ஆராயுங்கலையை உருவாக்கினார்கள். இராசி என்றும் இலக்கினம் என்றும் பலவாறு வகுத்தார்கள். குரு, சூரியன், சந்திரன், சனி போன்ற கிரகங்களின் அடிப்படையில் முறையே ஆண்டின் பலன், மாதத்தின் பலன், நாளின் பலன், தனி மனிதனின் தற்காலிகப் பலன் என வகுத்து அவற்றை உலகறிய உணர்த்தினார்கள். தமிழர் கண்ட இக்கலையே இன்று உலகளாவிய நிலையில் சோதிடக் கலையாகப் பரிணமித்து விளங்குகிறது.

### கணிதக்கலை

மனித வாழ்க்கையின் இரு கண்களாக விளங்குவன எண்ணும் எழுத்துமேயாகும். அவற்றுள்ளும் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் பொருள்களின் அளவை எண்ணி அறியவும், கொடுக்கவும் வாங்கவும் எனப் பல்லாற்றானும் பயன்படுவதில் எண்ணே முதலிடம் பெறுகிறது; மிகுதியான இடத்தையும் பெறுகிறது. எனவேதான்,

> **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"**
> **(கொன்றை வேந்தன். 7)**

> **"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
> **கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள்-392)**

என்னும் வழக்காற்றுக் கூற்றுகளும் உருவாகியுள்ளன.

பலவகைக் கலைகளையும் கண்டறிந்த நிலையிலும் அவற்றோடு இரண்டறக் கலந்து உறவாடி நிற்பன எண்களும் அவற்றாலாம் கணக்குகளுமே யாகும்.

மேலே காணும் சோதிடக்கலை, மருத்துவக்கலை போன்ற அனைத்துக் கலைகளுக்கும் உறுதுணையாய் நின்று அக்கலைகளை வழிப்படுத்துவது எண்கலையாகிய கணிதக் கலையே யாகும்

**இலக்கியக்கலை**

தமிழ்மொழியின் உலகளாவிய உயர்வுக்கும் பெருமைக்கும் காரணமாகி விளங்குவன தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களுமே யாகும் என்பது மிகைபடக் கூறும் கருத்து ஆகாது. மனித வாழ்க்கை என்பது தொடங்கும் பொழுதே அகவாழ்க்கை, புற வாழ்க்கை என்னும் இருதிறத்தில் அமைந்து விடுகிறது என்பது இயற்கை; உலக இயற்கை. ஆடவரும் மகளிரும் ஒருவரையொருவர் விரும்பி வாழ்க்கையை ஏற்கின்றனர். அவ்வாழ்க்கையின் தொடர்ந்த நடைமுறைக்காகப் பிற பணிகளை மேற்கொள்ளுகின்றனர். இவை முறையே அக வாழ்க்கை, புற வாழ்க்கை என்னும் பெயர்களைப் பெறுகின்றன.

இத்தகு வாழ்க்கை நெறிகளையே பாடல்களாகப் பாடி மகிழ்ந்தனர் புலவர் பெருமக்கள். அப்பாடல்களின் தொகுப்புகளே பெரும்பாலும் இலக்கிய அமைப்பைப் பெற்றன. அவை முறையே அக இலக்கியம், புற இலக்கியம் என்னும் பெயர்களைப் பெற்றன.

அகப்புற வாழ்க்கை நெறிகளில் பலவாறான நன்மை, தீமைகள் ஏற்படத் தொடங்கின. எனவே அக்காலத்து மக்கள் கடைபிடிக்க வேண்டிய நீதிநெறிகளை, ஒழுக்க நெறிகளைச் சான்றோர் எடுத்துக் கூறினர். அக்கூற்றுகளே நீதி இலக்கியங்களாக உருவெடுத்தன. மக்கள் வாழ்க்கை நிகழ்வுகளாலேயே அவ்விலக்கியங்கள் பெயரும் பெற்றன. சான்றாக,

மக்கள் மருந்துப் பொருள்களையும் உணவுப் பொருள்களாகப் பயன்படுத்தினர் என்றோம். அந்த நிகழ்வுகளின் அடிப்படையில் **நல்லாதனார்** என்னும் பெரும்புலவர் இயற்றிய ஒரு நீதி நூல் **திரிகடுகம்** என்னும் காரணப் பெயரைப் பெற்றது. சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துப் பொருள்களைத் **திரிகடுகம்** என்றனர். புலவர் இயற்றிய அந்நூலுள் இடம் பெறும் ஒவ்வொரு பாடலும் மும்மூன்று நீதிக்கருத்துகளை உள்ளடக்கியவை. எனவே அது திரிகடுகம் என்னும் பெயரைப் பெற்றது.

இதே அடிப்படையில் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து ஐந்து நீதிக்கருத்துகளை உட்கொண்ட, **காரியாசான்** அவர்களின் நூல் **சிறு பஞ்சமூலம்** என்று பெயர் பெறுகிறது. கண்டங்கத்திரிவேர், சிறுவழு துணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சில்வேர் என்னும் ஐவகை வேர்கள் (மூலம் - வேர்) அடங்கிய மருந்துப் பொருள்கள் சிறுபஞ்சமூலம் எனப் பெறுகின்றன. இந்நூற் கருத்துகள் என் வெறும் வாய்ச்சொல் அலல; வழக்குச் செய்திகளே என்று வலியுறுத்திக் கூறும் ஆசிரியர் கூற்று குறிப்பிடத்தக்க ஒன்று.

ஏலாதிச் சூரணம் என்பது ஒரு இயற்கை மருந்துப் பொருள். அச்சூரணத்தில் ஏலம், இலவங்கம், சிறு நாவல்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறுபொருள்கள் இடம்பெறும். அதே போல ஒவ்வொரு பாடலிலும் ஆறு, ஆறு கருத்துகளை இடம்பெறச் செய்து **கணிமேதையார்** இயற்றியருளிய நூல் **ஏலாதி** என்றே பெயர் பெற்றது.

புலவர் **முன்றுரை அரையனார்** அவர்கள் தம் அனுபவத்தால் அறிந்தவற்றை எளிய சுருங்கிய தொடராக ஒவ்வொரு பாடலிலும் அமைத்து எல்லோரும் அறியுமாறு பாடிய தம் நூலினைப் பழமொழி என்றே வழங்கினார்.

இவ்வாறான பலவகை முறைகளில் தமிழ் இலக்கியங்கள் பலப்பல உருவாகியுள்ளன; இன்று நமக்குக் கிடைக்கின்றன. ஆனால் நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்களுக்கு முன்பே உருவாகி, இன்று நம்மிடையே இல்லாத இலக்கியங்கள் பலப்பல என்பதை அறியமுடிகிறது. அவற்றின் துணைகொண்டு தான் அகத்தியம், தொல்காப்பியம் போன்ற பழம்பெரும் இலக்கண நூல்கள தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் காண்பதே நெறியாதலின், அகத்தியம், தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களுக்கு முன்பே பேரிலக்கியங்கள் பல இருந்திருக்கின்றன என்னும் பேருண்மையை அறிய முடிகிறது.

**கலைகளின் நிலைபேறு**

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைத் தொடங்கியது முதலாகப் படிப்படியே தங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற பலகலைகளையுங்கண்டு, அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் கையாண்டு பயனடைந்த தமிழ் மக்கள், தங்கள் அனுபவக் கருத்துகளைப் பலருக்கும் எடுத்துச் சொல்லி அவர்களையும் பயன்பெறச் செய்து மகிழ்ச்சி யடைந்து வந்தார்கள். தங்கள்

அனுபவக் கருத்துகளை அவ்வப்போது எடுத்துக் கூறி வந்ததனால் நேரில் உள்ளவர்கள் மட்டுமே பயன்பெறுகின்றார்கள் என்பதை உணர்ந்து வந்தார்கள்.

தமிழ்மொழிக்குரிய வரிவடிவங்களை உருவாக்கிய காலந் தொடங்கி அறிஞர் பெருமக்கள் அக்கலைகளை என்றும் நிலைபெறச் செய்ய வேண்டும்; இன்றும் என்றும் அருகில் இல்லாத பலரும் அறியுமாறு செய்ய வேண்டும்; அறிந்து பயன்பெறுமாறு செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆழ்ந்து கருதினார்கள். அவற்றிற்கான முயற்சியிலும் ஈடுபட்டார்கள். அந்த முயற்சியின் செயற்பாடுகளே, அக்கலைகளை வரிவடிவில் உருவாக்கி நிலைபெறச் செய்வது என்பதாயிற்று.

வரிவடிவில் உருவாக்கி வைப்பதற்கு அன்று அவர்கள் பயன்படுத்திய எழுதப்படு பொருள்களாகப் பனை ஓலை ஏடுகளே இடம்பெற்றன. அந்த ஏடுகளில் எழுதப்பெற்றுத் தோற்றம் பெற்ற கலைச்செல்வங்களே இன்று நம்மிடையே கிடைத்திருக்கும் ஓலைச் சுவடிகளாகிய நமது மரபுச் செல்வங்களாகும்; நிலைபேறு பெற்ற நமது கலைச்செல்வங்களாகும்.

### மரபுச் செல்வங்கள்

தமிழர்தம் கலைச் செல்வங்களைத் தாங்கி நிற்கும் சுவடிகளாகிய நமது மரபுச் செல்வங்கள் தலைமுறை தலைமுறையாக நம்மிடையே வாழ்ந்து வருபவையாகும். இன்று நம்மிடையே உள்ள அவை தொடக்க காலத்து உருவாக்கப் பெற்ற மூலச்சுவடிகளல்ல. அவை காலங்காலமாக ஏட்டு வடிவில் வாழ்ந்திருக்க இயலாதவை யல்லவா? அவை அழியாதிருக்க மீண்டும் மீண்டும் படியெடுக்கப் பெற்றவை. தேவைக்கு ஏற்பப் பலராலும் படியெடுத்துக் கொள்ளப் பெற்றவை. ஒரு சுவடியைப் பார்த்துப் படியெடுக்கும் போது, படியெடுப்போரின் திறத்திற்கேற்ப, மூல நூலிலிருந்து பலதிறக் குறைபாடுகளும் வேறுபாடுகளும் பெற்றிருப்பவை. தெரிந்தோ தெரியாமலோ மூலநூல் செய்திகளைக் குறைத்தோ கூட்டியோ மாற்றியோ எழுதப் பெற்றிருப்பவை. இத்தகு பலநிலைகளில் உருவாகிக் கிடப்பவையே இன்றைய நமது மரபுச் செல்வங்கள்.

### நம்மிடையே மரபுச் செல்வங்கள்

எத்தகு நிலையில் வேறுபட்டவையாக இருந்தாலும் அல்லது மூலச் சுவடியாகவே இருந்தாலும் இன்று நம்மிடையே கிடைக்கும் இல்லை - நம்மிடையே கிடக்கும் - அந்த மரபுச் செல்வங்களை

நம்மால் என்ன செய்ய முடிகிறது? மேலும் மேலும் அழியுமாறு கிடக்கத்தான் செய்ய முடிகிறது. என்றாலும் அந்த மரபுச் செல்வங்களில் அடங்கியிருக்கும் முன்னோர்தம் உள்ளங்கள்தாம் யாவை? அந்த உள்ளங்களிலிருந்து வெளிவந்துள்ள முத்துக்கள் எத்தகையவை? அவை எந்தெந்த வண்ணங்களில் உதித்துள்ளன? அவற்றை எந்தெந்த வகையில் அணிந்து மகிழலாம்? இத்தகு முறைகளை மட்டும் தெளிவாக அறிந்திருக்கிறோம்; அறிந்து மகிழ்ந்து வருகிறோம். முழுமையாக அணிந்தே மகிழ்ந்து வருகிறோம். அதாவது எல்லா வகையான வாழ்க்கைப் படிகளிலும் அந்த முத்துக்களைப் பயன்படுத்தியே வாழ்ந்து வருகிறோம். உலகையே வாழ வைக்கிறோம்.

இந்தக் கூற்று புதுமையாகத்தான் இருக்கும். நம்மிடையே கிடக்கும் அந்த மரபுச்செல்வங்களை நம்மால் என்ன செய்ய முடிகிறது என்னும் ஒரு அரிய, பெரிய வினாவிற்கு, அவற்றை மேலும் மேலும் அழியுமாறு கிடக்கத்தான் செய்ய முடிகிறது என்னும் விடையை - உண்மையான விடையை அளித்து விட்ட நாமே அந்த மரபுச் செல்வங்களில் கிடைக்கும் முத்துக்களை எல்லா வகையான வாழ்க்கைப் படிகளிலும் பயன்படுத்தியே வாழ்ந்து வருகிறோம்; பிறரையும் - ஏன், உலகையே வாழ வைக்கிறோம் என்னும் கூற்று, புதுமையாக - ஏன், வியப்பை ஊட்டுவதாக இல்லையா? இல்லை. உண்மை நிலை அதுதான். அம்முத்துக்களைப் பயன்படுத்தித்தான் வாழ்ந்து வருகிறோம்.

## மரபுச் செல்வங்களை உணர்த்தியோர்

தமிழர்தம் மரபுச் செல்வங்களாகிய சுவடிகளில் தங்கள் அனுபவக் கருத்துகளாகிய கலைச்செல்வகங்களை வரிவடிவில் பொறித்து வைத்த சான்றோர்கள், தங்கள் கருத்துகள் நிலை பெற வேண்டும்; மக்களிடையே பரவவேண்டும்; தங்கள் மரபு வழி வரும் மக்கள் தங்கள் அனுபவங்களை அறிய வேண்டும்; அறிந்து பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்தி அனுபவிக்கவும் வேண்டும் என்னும் பரந்த நோக்கில்தான் அவ்வாறு பொறித்து வைத்தார்கள். அந்தப் பரந்த நோக்கம் அவர்களைச் சார்ந்தோரிடமும் உருவாயிற்று. தம் முன்னோர் கருத்துகளை அறியத் தொடங்கினார்கள். அறிந்ததோடல்லாமல் தங்களுக்கென அச்சுவடிகளைப் படியெடுத்து வைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள். இவ்வாறு அன்றைய சுவடிகளைப் படிக்கவும் எழுதவும் செய்து வந்த மரபினரிடையே 18,19ஆம் நூற்றாண்டுகளில் அச்சுக்கலை ஒன்று வந்து சேர்ந்தது. சுவடியைப் படித்தறிவதில் பயிற்சி பெற்றிருந்த சான்றோருள் ஒரு சிலர் அச்சுவடிச் செய்திகளை அச்சிட்டு வெளியிடத் தொடங்கினார்கள்.

தெளிவாகப் படித்தறியக் கூடிய, முத்து, முத்தான, ஒரே மாதிரி அமைந்த எழுத்துகளில் அச்சிடப்பெற்ற அவை, சுவடி என்னும் பெயரை விட்டு நூல் என்னும் பெயரைப் பெற்றன. அந்நூல்களை அச்சிட்டு வெளியிட்ட அச்சான்றவர்களே, நம் மரபுச் செல்வங்களை நம்மிடையே உணர்த்தியோர் ஆகின்றனர்.

## வெளியீட்டுச் சான்றோர்

நம் மரபுச் செல்வங்களை நமக்கு உணர்த்திய சான்றோர்கள் யார் யார்? அவர்களுள் முதன்மை வாய்ந்தவர் யார்? மிகுதியான நூல்களை வெளியிட்டவர் யார்? அவர்களின் சிறப்பான வெளியீடுகள் யாவை? அவை எந்தெந்த ஆண்டுகளில் வெளியிடப் பெற்றன? என்பன போன்ற பொதுச் செய்திகளுக்கு விடை காண்பதன் வழி நம்மிடையே சுவடிச்செய்திகளை அச்சிட்டு, வெளியிட்டு உணர்த்திய வெளியீட்டுச் சான்றோர்களை அறியலாம்.

## வியத்தகு சான்றோர்

20-2-1557 இல் அச்சிடப் பெற்ற **தம்பிரான் வணக்கம்** என்னும் நூலே தமிழில் வெளியான முதல் நூலாகும். இது ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப் பெற்ற நூலாகும். கொல்லத்தில் அச்சிடப் பெற்றது. தொடர்ந்து பல நூல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் தரங்கம்பாடி என்னுமிடத்தில் கி.பி. 1712 இல் தான் அச்சகம் ஒன்று தோற்றுவிக்கப் பெற்றது. இந்த அச்சகத்தின் வழியும் சில தமிழ் நூல்கள் வெளியாகியுள்ளன. அவை யாவும் கிறித்தவத் தமிழ் தொண்டர்களால் அவ்வப்போது உருவாக்கப் பெற்றவையே யாகும்.

நமது மரபுச் செல்வங்களாகிய ஓலைச் சுவடிகளுள் முதன் முதலாக அச்சேறிய ஒன்று திருக்குறள் மூலம் மட்டும் அடங்கிய சுவடியேயாகும். இது வியத்தகு செய்தியல்லவா! இச்சுவடி கி.பி.1812 இல் அச்சாகியுள்ளது.

இந்தத் திருக்குறள் மூலநூலைத் தஞ்சையைச் சார்ந்த மலையப்பப் பிள்ளை அவர்களின் குமாரன் **ஞானப்பிரகாசன்** என்னும் வியத்தகு சான்றோர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. இந்த நூலுள் நாலடியார் மூலமும் திருவள்ளுவமாலையும் சேர்த்து வெளியிடப் பெற்றுள்ளன.

## பதிப்புக்கலை வழிகாட்டிகள்

யாழ்ப்பாணம் **ஆறுமுக நாவலர்** அவர்கள், கி.பி. 1822 முதல் 1879 வரை சூடாமணி நிகண்டு, நன்னூல் காண்டிகையுரை, விருத்தியுரை, போன்ற பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். 1830 இல் **சரவணப் பெருமாளையர், விசாகப் பெருமாளையர்** ஆகிய இருவரும் சேர்ந்து திருக்குறள் மூலமும் உரையும் என்னும் நூலை வெளியிட்டுள்ளனர். 1832 முதல் 1901 வரை **சி.வை. தாமோதரம் பிள்ளை**யவர்கள் வீரசோழியம், தொல்காப்பியம் - எழுத்து - நச்சர் உரை, சொல் சேனாவரையம், பொருள் நச்சினார்க்கினியம், பேராசிரியம் போன்ற பல நூல்களை வெளியிட்டுள்ளார்கள். தொடர்ந்து, **தாண்டவராய முதலியார், முத்துசாமிப் பிள்ளை, புதுவை நயனியப்ப முதலியார், சுப்பராய ஐயர், பழவை மகாலிங்க ஐயர், இராமானுசக் கவியராயர், வேதகிரி முதலியார்** போன்ற சான்றோர் பலரும் தமிழ்ச் சுவடிப் பதிப்புக் கலை வழிகாட்டிகளாய் விளங்கியுள்ளனர்.

இவ்வழிகாட்டிகளின் வெளியீடுகளும் பிறவும் சுவடிச்சுடர் என்னும் நூலில் விரிவாக இடம் பெற்றுள்ளன. எனவே இங்குச் சுருங்கிய அளவில் விடப்பெறுகிறது.[1]

## வழிகாட்டிகளுள் ஒருவர்

உரைநடை எழுத்தாளராக, வாழ்க்கை வரலாற்று எழுத்தாளராக, நாளிதழ், வார இதழ், திங்களிதழ்களின் கட்டுரையாளராக, கவிஞராக, பேச்சாளராக, உரையாசிரியாக, தன் வரலாற்றாசிரியராக, இசைப் பயிற்சியுள்ளவராக, கல்லூரிப் பேராசிரியாக, ஒப்பற்ற சுவடிப் பதிப்பாசிரியராகத் தமிழுலகுக்கு - ஏன் - உலகிற்கே அறிமுகமாகி விளங்குபவ ராயினும், நமக்குச் **சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி**யாகவே விளங்குபவர் **டாக்டர் உ.வே.சா.** என்னும் மூவெழுத்துப் பேரறிஞர் அவர்கள்.

ஈ.வெ.ரா., வ.உ.சி., ம.பொ.சி., ராஜாஜி, நேருஜி, நேதாஜி, திரு.வி.க., தெ.பொ.மீ., சி.வை.தா., அண்ணா, காந்தி போன்று மூவெழுத்தில் உலகறிந்த பேரறிஞர்களுள் ஒருவராக இடம் பெற்றவரே நமது சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டியாகிய உ.வே.சா. என்னும் மூவெழுத்துப் பேரறிஞர் அவர்கள்.

---

1. சுவடிச்சுடர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2001, பக். 21-28.

## வழிகாட்டியை வழிகாட்டியவை

நமது சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டியாகிய டாக்டர் உவேசா. அவர்களை நம்மிடையே வழிகாட்டியது தஞ்சை மாவட்டம். பாபநாசம் வட்டத்தைச் சார்ந்த உத்தமதானபுரம் அதற்குத் துணை நின்றது.

தன் இயற்கைக் காட்சிகளைத் துய்க்குமாறு அன்று தஞ்சை சமஸ்தானத்தை ஆண்டு வந்த மன்னர் ஒருவரை அழைத்தது பாபநாசத்தைச் சார்ந்த, இயற்கைக் காட்சி நிறைந்த ஓரிடம். ஏகாதசி யன்று ஒருவேளை உணவு மட்டுமே உண்டு, தாம்பூலம் தரித்தல் போன்ற செயல்களில் ஈடுபடாத விரதம் பூண்டவர் தஞ்சை மன்னர் என்பதை அறிந்திருந்தது அந்த இயற்கைக் காட்சி நிறைந்த இடம். ஏகாதசி அன்றுதான் அங்கு வந்தார் மன்னர். தன் அழைப்பை ஏற்று வந்த மன்னரை உணவு உண்டு மகிழச் செய்தது. மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த மன்னரை, உணவிற்குப் பிறகு தாம்பூலம் தரித்து ஓய்வெடுக்கவும் செய்தது.

எதிர்பாராமல் விரதத்திற்குக் கேடு நிகழ்ந்துவிட்டதை உணர்ந்தார் மன்னர். வருந்திய மன்னருக்கு, வைதிக ஒழுக்க நெறிகளை உணர்ந்த சான்றோர்களின் வழி, அந்தக் கேடு நீங்க ஒருவழியைக் கூறச் செய்தது. அவர்கள் கூறியவாறு, மன்னர்தாம் அன்று தங்கியிருந்த இடத்தில் நாற்பத்தெட்டு வீடுகளைக் கட்டச் செய்தார். இரண்டு வீட்டிற்கு ஒரு கிணறு வீதம் இருபத்து நான்கு கிணறுகளையும் தோண்டச் செய்தார். அவற்றை நாற்பத்தெட்டு அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கச் செய்தார். மேலும் அந்தணர் ஒருவருக்குப் பன்னிரண்டு மா நன்செய் நிலம், அவற்றிற்குரிய புன்செய் நிலம் எனத் தானமாகக் கொடுத்தார் மன்னர். இவ்வழியில் மன்னரைக் கேட்டிலிருந்து விலகச் செய்தது அந்த இயற்கை இடம். உத்தம தானப் பொருளாக அமைந்த அந்த ஊரையே **உத்தமதானபுரம்** என்னும் பெயரால் நிலையான சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டியாக நிலைக்கச் செய்தது. இந்த இடங்களே நமக்கு வழிகாட்டுமாறு வழிகாட்டி ஒருவரை நம்மிடையே வழிகாட்டியிருக்கின்றன.

## வழிகாட்டியை – வழிகாட்டியோர்

உத்தமதானபுரத்து அந்தணர் பரம்பரையில் தோன்றி, பள்ளிக் கூடம் வைத்து நடத்தி வந்தவர் வேங்கடாசலையர் அவர்கள். இசைக்கலையில் வல்லவராக விளங்கிய செல்லத்தம்மா என்பவரைத்

தம் இல்லத்தரசியாக ஏற்றார். அவர்களின் மூன்று மக்களுள் ஒருவரான வேங்கடசுப்பையர் அவர்கள், சரசுவதியம்மாள் என்பவரை மணந்தார். சரசுவதியம்மையார் கருவுற்றிருந்தபோது உத்தமதான புரத்தில் சீமந்தம் நடைபெற்றது. பிறகு தம் தாய் வீடான சூரியமூலை என்னுமிடத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்கள். தம் தாய் வீடான சூரியமூலையில் 19- 2- 1855 இல் நமது வழிகாட்டியை ஈன்றளித்தார். குழந்தை பிறந்த, ஐந்தாம் மாதத்தில் தாயாருடன் அரியலூரில் கொண்டு போய்த் தந்தையாருடன் விட்டனர். வேங்கடசுப்பையர் அவர்கள் அரியலூர் ஜமீன்தார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அரியலூர் சென்று அந்த ஜமீன் சங்கீத வித்துவானாக இருந்து வந்ததால் அவருடன் குழந்தையையும் தாயாரையும் கொண்டு போய்விட்டனர். இச்செய்திகள் நமது வழிகாட்டியைச் சூரியமூலை என்னுமூரே நமக்கு அளித்தது; குழந்தையாக அரியலூர் ஜமீனே ஏற்று வளர்த்தது என்னும் உண்மைகளை விளக்குகின்றன.

### வழிகாட்ட வித்திட்டோர்

சாமிமலை என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் **சாமிநாதன்** என்னுந் திருநாமத்தையுடைய முருகபெருமான் நமது வழிகாட்டிக்குத் தன் பெயரையே சூட்டுமாறு பணிக்க, பெற்றோரும் அரியலூர் சான்றோரும் சேர்ந்து **சாமிநாதன்** என்னும் பெயரைச் சூட்டி, அரியலூரிலேயே ஆண்டு நிறைவையும் சிறப்பாகச் செய்து மகிழ்ந்தார்கள்.

தம் பெற்றோர் தங்கள் இறுதிக் காலத்தைத் தங்கள் சொந்த ஊரான உத்தமதானபுரத்திலேயே கழிக்க விரும்பியதை ஏற்று, வேங்கடசுப்பையர் தம்மை ஆதரித்து வந்த அரியலூர் ஜமீன்தார் முதலான சான்றோரிடத்து இசைவு பெற்றுத் தங்கள் குடும்பத்துடன் உத்தமதானபுரத்தில் குடியேறினார்.

நமது வழிகாட்டியின் ஐந்தாம் வயதில் நமக்கு வழிகாட்டும் வழியாகிய கல்விக்கு வித்திட்டார்கள். வித்தியாப்பியாசம் என்னும் அவ்விழாவைப் பாட்டனாராகிய **வேங்கடாசலையர்** அவர்களே தொடங்கி வைத்தார்கள்.

1. கைப்பிரம்பு ஒன்றையே தம் செங்கோலாக ஏந்திய, உத்தமதானபுரம், **நாராயணையர்** அவர்கள் முதல் ஆசிரியராக இருந்து எண்ணும் எழுத்துமாகிய எண் சுவடியையும் அரிச்சுவடியையும் **மனப்பாடம்** செய்ய வைத்தார்.

2. முறையான பள்ளி ஆசிரியராகிய சாமிநாதையர் அவர்கள் தமிழ், கணக்கு ஆகியவற்றைப் படிக்கவும் எழுதவும் பயிற்று வித்தார். பள்ளியில் படிக்க நூல்களோ எழுதத் தாளோ இல்லாத காலம். படிக்க ஓலைச்சுவடிகளில் எழுதிய நூல்களே பயன்படுத்தப் பெற்றன. எழுதுவதற்கு ஓலை ஏடுகளும் எழுத்தாணியுமே துணை நின்றன. எழுதிப் பழகுவதற்குத் தயாரிக்கும் மூல ஏடுகள் சட்டம் எனப் பெற்றன. ஓலை வாரவும் சுவடியாகச் சேர்க்கவும் எழுதவும், சுவடியைப் பிரித்து ஒழுங்காகக் கட்டவும் பயிற்சியளிக்கப் பெற்றது. சுவடியில் எழுத, குண்டு எழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி ஆகியவை துணைபுரிந்தன. ஏடுகளில் படிக்க, எழுதத் தொடங்குதல் சுவடித்துவக்கல் எனப் பெறும்.

முதலில் எழுத்துப் பயிற்சியளித்த ஆசிரியராகிய சாமிநாதையர் அவர்கள் சம்க்ஷேபராமாயணம், விஷ்ணு சகஸ்ரநாமம், நீதிசாரம், அமரம் மூன்று காண்டங்கள் ஆகியவற்றை மனப்பாடம் செய்யச் செய்தார். இவற்றைத் தவிர பிரபவாச்சுவடி என்று வழங்கும் பிரபவாதிச் சுவடியையும் முழுமையாக மனப்பாடம் செய்ய வைத்தார். பிரபவ, விபவ, ஆங்கிரஸ போன்ற தமிழாண்டுகளின் பெயர் முதலானவை அடங்கிய சுவடியே பிரபவாதிச் சுவடி எனப் பெறும். அச்சுவடியுள் தமிழ் ஆண்டுகள், மாதம், நட்சத்திரம், யோகம், கரணம், இராகுகாலம், குளிகை காலம், யமகண்டம், போன்ற சோதிடச் செய்திகளும், லோகங்கள், சக்கரவர்த்திகள், மனுவின் காலமாகிய மன்வந்தரம், தீவுகள் போன்ற செய்திகளும் இடம்பெற்றிருக்கும். இவற்றை முழுமையாக மனப்பாடம் செய்யச் செய்தார்.

ஆசிரியர் சாமிநாதையரின் உறவினராகிய சிவசாமி ஐயர் அவர்கள், சாமிநாதையரின் வீட்டுக்குவரும் போதெல்லாம் அவரிடம் ஆங்கில எழுத்துகளையும் எண்களையும் கேட்டுக் கற்றுக் கொண்டார் நமது வழிகாட்டி, 1, 2, 3 என்னும் எண்களையே ஆங்கில எண்கள் என்கிறார்.

## வழிகாட்டி பெற்ற பிற கல்விச் செல்வங்கள்

3. அரியலூர் சென்று தங்கிய போது கிருஷ்ணவாத்தியார் என்பவரிடம், ஏடுகளில் எழுத்தாணி கொண்டு எழுதப் பழகி வந்த நமது வழிகாட்டி அவர்கள், மேலும் வளர்ந்த நிலையில் கிடைத்த மட்டிக் காகிதமாகிய கறடாவில், கொறுக்கந்தட்டாகிய பேனாவால்

எழுதக் கற்றுத் தெளிந்தார். அதோடு ஆத்திசூடி, மூதுரை, மணவாள நாராயண சதகம் போன்ற பல சதக நூல்கள், இரத்தின சபாபதி மாலை, நாலடியார், குறள் ஆகிய மூலநூல்கள் போன்றவற்றைப் படித்து மனப்பாடம் செய்தார்.

4. அரியலூரிலே சடகோபையங்காரிடம் சேர்ந்து, அவர் இயற்றிய ஆலந்துறை ஈசர் பதிகம், பிறவாகிய திருவேங்கடத் தந்தாதி, திருவேங்கடமாலை ஆகியவற்றையும் மனப்பாடம் செய்தார். அதே சமயம் வீட்டிலிருந்தபோதெல்லாம் சூடாமணி நிகண்டு - 12 தொகுதிகளையும் மனப்பாடம் செய்தார். இதேபோல நன்னூல் சூத்திரம், அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், கோவிந்த சதகம், மணவாள நாராயண சதகம் (மீண்டும்), இரத்தின சபாபதி மாலை, நீதி வெண்பா ஆகிய நூல்களையும் மனப்பாடம் செய்து தந்தையாரிடம் ஒப்பித்து வந்தார். இவையாவும் நம் வழிகாட்டி அவர்கள் தம் ஏழாம் வயதுக்குள் பெற்ற நிலையான, உள்ளத்தில் ஊறிய கல்விச் செல்வங்களாகும்.

5. குன்னம் (குன்றம்) என்னும் கிராமத்துக் கணக்குப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை யவர்களின் அழைப்பின் பேரில் குடும்பத்துடன் அங்கு தங்கியிருந்தனர். அப்போது கணக்குப் பிள்ளையைக் காண வந்து அங்கு தங்கியிருந்த **கதிர்வேல் கவிராயரிடம்** - பல தனிப்பாடல்கள், அவற்றைப் பாடியோர் வரலாறு, பாடக்காரணம் போன்ற அடிப்படை வரலாறுகள் பலவற்றில் சிறந்த அனுபவம் பெற்றார். அவ்வரலாறுகள் பதிப்புப்பணிக் காலத்துப் பெரிதும் துணைபுரிந்தன. பெயரையே கேட்டறியாத பல நூல்களைப் பற்றியும் கவிராயர் விளக்கிக் கூறி யறியச் செய்தார்.

6. குன்னத்தில், **சிதம்பரம்பிள்ளை** அவர்களிடம் சிறு பிரபந்தங்கள் சிலவற்றைப் பாடம் கேட்டதோடு திருவிளையாடற் புராணத்தை முறையாகக் கேட்டுணர்ந்தார்.

7. இடையிலே, சிறிய பாட்டனார் **ஐயாகுட்டி ஐயரிடம்** திருவிளையாடற்புராணத்தில் உள்ள விருத்தகுமாரபாலரான படலத்தின் கருத்தடங்கிய ஹாலாஸ்ய மகாத்மியத்தைப் பொருளுடன் கேட்டறிந்தார்.

8. மாடு வெட்டி மங்கலத்தைச் சார்ந்த **பரதேசிகள்** என்போர் சிதம்பரம் பிள்ளையவர்களிடம் வந்து, செல்வம் பெறுவதற்காகப்

பல நூல்களைக் கூறி உரை விளக்கமும், தருவார்கள். அவர்கள் கூறி வந்த ஞானவாசிட்டம், குமாரதேவர் சரித்திரம், கைவல்ய நவநீதம், வைராக்கிய சதகம் ஆகியவற்றை உரையுடன் கேட்டுணர்ந்தார்.

9. கார்குடி, **கஸ்தூரி ஐயங்கார்** அவர்களின் விருப்பப்படி, கார்குடி சென்று, கஸ்தூரி ஐயங்காரிடம் நன்னூல், நவநீதப்பாட்டியல், சில பிரபந்தங்கள் போன்றவற்றை முறையாகக் கேட்டறிந்தார்.

10. கஸ்தூரி ஐயங்காரின் நண்பர் **சாமி ஐயங்கார்** அவர்களிடம் கம்பராமாயணத்தையும் திருவரங்கத்தந்தாதியையும் கற்றறிந்தார்.

11. குன்னம் வந்து குடும்பத்துடன் தங்கிய போது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி நீதிநெறிவிளக்கம் ஆகியவற்றைத் தாமே படித்தார். அவற்றுள் ஐயம் நிகழும் போது கார்குடி சென்று கஸ்தூரி ஐயங்காரிடம் கேட்டு அறிந்து வருவார்.

12. செங்கணம் **விருத்தாசல ரெட்டியார்** அவர்களிடம் பாடம் கேட்க வேண்டுமென்றே குடும்பத்துடன் செங்கணம் சென்றனர். ரெட்டியாரிடம் யாப்பருங்கலக்காரிகையைக் கற்றுப் பிரபந்த இலக்கணங்களையும் பாடங் கேட்டார். பாடங் கேற்றவற்றுள் தாத்திரேயப் பாட்டியலும் ஒன்று. அந்நூல் நமது வழிகாட்டியின் காலத்திலேயே இல்லாமற் போயிற்று. ரெட்டியார் அளித்த தனிப்பாடல் திரட்டிலிருந்து காளமேகப் புலவர், சொக்கநாதப்புலவர் ஔவையார் போன்றோர் பாடிய தனிப்பாடல்கள் பலவற்றைத் தாமே மனப்பாடம் செய்தார்.

13. விருத்தாசல ரெட்டியார் அவர்களின் மகன் **நல்லப்ப ரெட்டியார்** தம் தந்தையாரிடம் இராமாயணம் படித்து வந்தார். அப்போதெல்லாம் நல்லப்பரெட்டியாருடன் இருந்து நம் வழிகாட்டியும் இராமாணயத்தைக் கேட்டு வந்தார்.

14. நமது வழிகாட்டியவர்கள் தாமே எழுதிய அறுசீரடி ஆசிரிய விருத்தம் ஒன்றை ரெட்டியார் அவர்களின் நண்பர் **பெருமாளையர்** என்பவரிடம் காட்டினார். நான்கு அடிகளும், ஒரு அடிக்கு ஆறு சீர்களும் என அமைந்து, எதுகை, மோனை எல்லாம் பொருந்த இருந்தால் மட்டும் அது விருத்தமாகிவிடாது; ஓசை

பொருந்த அமைய வேண்டும் என்னும் விருத்தத்தின் அமைப்பை முழுமையாக அவர் மூலமே உணர்ந்தார். அதாவது,

அளவொத்தல் என்பது அடிதோறும் அமையும் ஒவ்வொரு சீரும் அளவொத்து அமைதல் வேண்டும் என்னும் செயல்முறை உண்மையில் பெருமாளையர் மூலமே தெளிவுபெற்றார்.

15. ரெட்டியார் அவர்களின் கருத்தை ஏற்று, 1871 இல் மாயூரம் மகாவித்துவான் **மீனாட்சிசுந்தரம் பிள்ளை** அவர்களின் மாணாக்கராகச் சேர்ந்தார். முதலில் பிள்ளையவர்கள் தம் மாணாக்கர் சவேரிநாத பிள்ளையை அழைத்து நைடதத்தை நடத்துமாறு கட்டளையிட்டார். அவரிடம் நைடதம் படித்து வரும் போது, காலை நேரத்தில் மாயூரம், **கோபால கிருஷ்ணபாரதியாரிடம்** சங்கீதம் கற்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார் வழிகாட்டி அவர்களின் தந்தையார். அதன்படி சங்கீதமும் பயின்று வந்தார்.

நைடதம் முடிந்தவுடன் பிள்ளையவர்களே பாடம் நடத்தத் தொடங்கினார். பிள்ளையவர்கள் இயற்றித் தாமே சுவடியில் எழுதி வைத்திருந்த திருக்குடந்தைத் திரிபந்தாதியை முதலில் தொடங்கினார். எளிமையாகப் பாடம் செய்ய முடியும்; சொற்கள் பலவற்றையறிய முடியும்; அவற்றைப் பிரித்துக் கூறிப் பொருளறிய வசதியாக இருக்கும்; சொற்களஞ்சியம் உள்ளத்தில் மிகுதியாகும் என்னும் பலவகைச் சிறப்பறிவு காரணங்களால் தொடர்ந்து, பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் திரிபந்தாதி, மறைசையந்தாதி, தில்லையமக அந்தாதி, துறைசையமக அந்தாதி, திருவேரகத்து யமக அந்தாதி, போன்றவற்றைத் தொடர்ந்து தெளிவாக நடத்திக் கொடுத்தார்.

அடுத்து பிள்ளைத் தமிழ் வரிசையில், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துகுமாரசாமி பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றைப் பாடங்கேட்டார். தொடர்ந்து பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றிய அஷ்டப் பிரபந்தங்களுள் ஐந்து, ஆறு பிரபந்தங்களைக் கற்றார். ஒவ்வொரு நூலுக்கும் இலக்கணக் குறிப்புகள் முதலான விளக்கங்கள் பலவற்றையும் தெளிவுபடுத்துவதுடன் நூலைத் தொடங்கும்போது நூலாசிரியர் வரலாறு, அவர் செய்த வேறு நூல்கள் போன்றவற்றையும் தெளிவாக எடுத்துக் கூறுவார்.

இவற்றையெல்லாங் கற்குங்காலத்து நம் வழிகாட்டி அவர்களுக்குப் பிள்ளையவர்களுடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டு

விட்டது. எங்கு சென்றாலும் உடனழைத்துச் செல்லுவது, சான்றோர் எவரேனும் வந்து பிள்ளையவர்களுடன் கலந்துரையாடும் போதெல்லாம் தம்மோடு உட்கார வைத்துக் கொள்ளுவது, வரும் சான்றோர் சிலருடைய வினாக்களுக்கு இவரையே விளக்கம் சொல்லச் செய்வது போன்ற செயற்பாடுகளால் **ஆசிரியருடன் இணைந்த வாழ்க்கை** ஏற்பட்டு விட்டது.

அடுத்து கோவை இலக்கியம் நடத்தத் தொடங்கினார். நமது வழிகாட்டி அவர்கள் முதலிலேயே திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை ஆகியவற்றைப் படித்திருந்ததால், பிள்ளையவர்கள் தாமே இயற்றிய சீகாழிக் கோவையை நடத்த விரும்பினார். ஆனால் தாம் எழுதிய அந்த நூல் சுவடி பிள்ளையவர்களிடமே இல்லை. கூறை நாட்டுக் கனகசபை ஐயரிடம் கொடுத்திருந்தார். இதையறிந்த நம் வழிகாட்டி தாமே சென்று அதைப் பெற்று வந்து பாடங் கேட்கத் தொடங்கினார்.

கோவையைத் தொடங்குமுன் பிள்ளையவர்கள், பிரபந்த இயல்பு, அகப்பொருள் இலக்கண நுணுக்கங்கள் போன்றவற்றைத் தெளிவு படுத்தியதோடு, கவிஞன் கூற்றாக அமையும் வறிது நகைதோற்றல் என்னும் துறையை விளக்கி, அது தம் நூலில் அமையும் முறையையும், பிறகோவைகளில் அது தலைவன் கூற்றாக அமைந்துள்ள நிலையையும் தெளிவுபடுத்தி நூலை நடத்தத் தொடங்கினார். உள்ளத்தில் பதிந்து போன இக்கருத்துகள் நமது வழிகாட்டியின் பதிப்பு நெறிகளுக்குத் துணை நின்று நமக்கு வழி காட்டுகின்றன.

தொடர்ந்து பெரியபுராணம் தொடங்கி நடத்தப்பெற்றது. அப்போது திருவாவடுதுறை ஆதீனகர்த்தராக விளங்கிய திரு. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள், தங்கள் மடத்திற்கு வந்து தமிழ்ப் பாடம் நடத்தியுதவுமாறு பிள்ளையவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் அழைப்பை ஏற்றுத் திருவாவடுதுறைக்குச் சென்ற பிள்ளையவர்கள் நமது வழிகாட்டியவர்களையும் உடன் அழைத்துச் சென்றார்கள்.

மடத்தில் தங்கியிருந்த போது திரு. சுப்பிரமணிய தேசிகர் அவர்களும் பிற தம்பிரான்களும் தாங்கள் படித்து வந்த நூல்களுள் ஏற்பட்ட ஐயங்களைக் கேட்கப் பிள்ளையவர்கள் அவற்றிக்கு விளக்கம் அளித்து வந்தார்கள்.

பட்டீசுவரத்திற்குச் சென்று, பிள்ளையவர்களே இயற்றிய, திருநாகைக் காரோணப்புராணம், மாயூரப் புராணம் (1894 பாடல்களாலியன்றது) ஆகிய இரண்டையும் விரிவாக நடத்தினார்கள். எல்லா இடங்களுக்கும் நமது வழிகாட்டி அவர்களையும் உடன் அழைத்துச் செல்லுவார் என்பதை மறந்து விடக்கூடாது.

மீண்டும் திருவாவடுதுறையில், குமாரசாமித்தம்பிரான் உள்ளிட்ட தம்பிரான்கள் பலருக்கும் திருவானைக்கா புராணம், சீகாளத்திப் புராணம் ஆகியவை நடத்தப் பெற்றன. இவற்றை நம் வழிகாட்டியவர்கள் முதலில் படிக்க, பிள்ளையவர்கள் விளக்கம் தருவார்கள். படிப்பது என்பது மூன்று முறை நடைபெறும். முதலில் பாடலை இசையுடன் படிப்பது; பிறகு பிரித்துப் பிரித்துப் படிப்பது; விளக்கம் முடிந்தவுடன் இசையுடன் படித்து முடிப்பது. இவ்வாறு மும்முறை தெளிவாகப் படிப்பதால் வழிகாட்டி அவர்களுக்கும் மனப்பாடமாகிவிடும். தொடர்ந்து விளக்கத்தையும் கேட்பதால் நல்ல தெளிவும் ஏற்பட்டு விடும்.

இவ்வாறே காசி காண்டம், பிரமோத்திரகாண்டம் கந்தபுராணம் ஆகியவை யாவும் நடத்தி முடிக்கப் பெற்றறன. 1872 இல் மீண்டும் பிள்ளையவர்களிடம் பெரியபுராணத்தைப் பாடம் கேட்க விரும்பினார்கள். வழிகாட்டியவர்கள் இசையுடன் படிக்கப் பெரியபுராணமும் பிள்ளையவர்களால் நடத்தப் பெற்றது.

வழிகாட்டியவர்கள் ஓய்வாக இருந்த போதெல்லாம் காசிக்கலம்பகம், சோழ மண்டல சத்கம் போன்ற நூல்களை ஆசிரியரிடம் கேட்டறிந்தார்கள். பிள்ளையவர்கள் எழுதிக் குறையாக இருந்த அம்பர் புராணத்தைப் பட்டீசுரத்திலிருந்து திருவாவடுதுறை செல்லும் போது, வண்டியில் அமர்ந்தபடியே பிள்ளையவர்கள் சொல்ல, நம்வழிகாட்டி அவர்கள் சுவடியில் எழுதிவருவார்கள்.

இடையே மாயூரம் சென்று தங்கியபோது தஞ்சைவாணன் கோவையை நடத்தினார் ஆசிரியர். நம்வழிகாட்டியவர்கள் முன்பே படித்திருந்தாலும் பிள்ளையவர்கள் நடத்த மீண்டும் கேட்டறிந்தார். அப்போது துறை விளக்கங்களில் தெளிவு பெற்றதோடு தஞ்சைவாணன், பாண்டிய மன்னனின் சேனாதிபதியாக இருந்த வேளாளச் செல்வந்தன் என்பதையும் நூலாசிரியராகிய பொய்யாமொழிப்புலவர் வரலாற்றையும் தெளிவாக அறிந்தார்.

அவையே பின்னால் வரிவடிவம் பெற்று இன்று நம்மிடை வழங்குகின்றன.

திருப்பெருந்துறை சுப்பிரமணியத் தம்பிரான் அவர்களின் வேண்டுகோளின்படி திருவாவடுதுறை, சுப்பிரமணியதேசிகர் கூற, பிள்ளையவர்கள் **திருப்பெருந்துறைப் புராணம்** ஒன்றை இயற்றத் தொடங்கினார். பிள்ளையவர்கள் சொல்ல, நம் வழிகாட்டியவர்கள் ஏட்டில் எழுதி வரலானார்.

இடையிலே பெரியபுராணம், நன்னூல் காண்டிகையுரை, விருத்தியுரை ஆகியவற்றைச் சிலருக்குப் பிள்ளை அவர்கள் நடத்துவார். அவர்களோடு நம்வழிகாட்டி அவர்களும் கலந்து கொள்ளுவார். தனித்து திருச்சிற்றம்பலக்கோவையாரை நம் வழிகாட்டி பாடம் கேட்டு வந்தார்.

கும்பகோணம் தியாகராச செட்டியார் அவர்கள் கூற, உதவித் தமிழாசிரியர் திரு. தி.கோ. நாராயணசாமிபிள்ளை அவர்களிடமிருந்த, விசாகப் பெருமாளையர் எழுதிய **பாலபோத இலக்கணம்** என்னும் நூலைப் பெற்று வந்து பிள்ளையவர்கள் பாடம் நடத்தினார். இலக்கணக் கருத்துகளோடு விசாகப் பெருமாளையர் வரலாற்றையும் எடுத்துக் கூறினார்.

திருப்பெருந்துறைத் திருத்தலத்தில் 1873 டிசம்பரில் திருவாதிரைத் திருநாளில் நடைபெற்ற விழாவின் போது, திருப்பெருந்துறைப் புராணத்தை அரங்கேற்றத் தொடங்கினர். நமது வழிகாட்டி அவர்கள் பாடலை இசையுடன் படிக்கப் பிள்ளையவர்கள் பிரசங்கம் செய்து வந்தார். மீண்டும் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை வந்தபோது கம்பராமாயணம் பாடம் நடத்தி வந்தார். உடல்நல மின்மையால், அயோத்தியா காண்டத்தோடு பாடம் நடத்துவதை நிறுத்தி விட்டார் என்றாலும் நம் வழிகாட்டியவர்கள் இறுதிவரை பிள்ளையவர்களுடன் இருந்து ஐயங்களைக் கேட்டு விடைபெற்று வந்தார்கள்.

16. பிள்ளையவர்களின் மறைவுக்குப் பிறகு திருவாவடுதுறை, சுப்பிரமணிய தேசிகர் அவர்களிடம்,

நன்னூல், இலக்கணக்கொத்து, தொல்காப்பிய சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி நன்னூல் விருத்தியுரை,

யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், விசாகப் பெருமாளையர் எழுதிய அணியிலக்கணம் ஆகிய இலக்கண நூல்களைப் பாடம் கேட்டு வந்தார்.

தேசிகர் அவர்கள் தண்டியலங்காரத்தை நடத்தும் போது, அதன் மூலநூலாகிய வடமொழி காவ்யாதரிசனம் என்ற நூலின் சுலோகங்களை ஆங்காங்கு கூறி, ஒப்பிட்டு விளக்கி வந்தார். அதே போல அணியிலக்கணம் நடத்தும் போது, அது வடமொழி குவலயானந்தத்தைத் தழுவியது ஆதலின் அதன் சூத்திர விளக்கங்களையும் உதாரணச் செய்யுள்களையும் கூறி ஒப்பிட்டுக் காட்டுவார்.

தேசிகர் அவர்களிடம் திருக்குறளைப் பாடங்கேட்டபோது உரையாசிரியர் பரிமேலழகரின் உரைச்சிறப்புகளை நுணுகிக் கற்றுத்துய்த்தார். தொடர்ந்து தேசிகர் அவர்கள் சித்தாந்த நூல்களாகிய சிவஞானபோதச் சிற்றுரை, சிவாஞானசித்தியாருரை ஆகியவற்றையும் கற்பித்தார்.

தேசிகர் அவர்களிடம் படித்த காலத்தில் ஓய்ந்த நேரங்களிலெல்லாம் தொல்காப்பியம் எழுத்து இளம்பூரணம், சொல்-சேனாவரையம், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களைத்தாமே படித்து வந்தார்.

## வழிகாட்டியாகும் நிறைவுத்திறன்

ஆசிரியர் கற்பித்தவற்றைத் தன்னறிவின்கண் நிலை நிறுத்தியதோடு, உடன்பயில்வோர், ஆசிரியரிடம் ஐயம் கேட்டுவரும் சான்றோர் போன்றவர்களோடு வினவியும் வினவியவற்றிற்கு விளக்கமளித்தும் பலவாறு பயின்று வந்த நம் வழிகாட்டியவர்கள், தாம் கற்றறிந்தவற்றை அவையோரிடத்தே எடுத்துக்கூறவும் விழைந்தார்கள். மையறுபுலமை மாண்புடைத்தாகும் நிலையல்லவா அது?

1. 1874 இல் காரை என்னும் ஊரில் **திருவிளையாடற் புராணச்** சொற்பொழிவைத் தொடங்கினார். தம் தமிழ் இலக்கியப் பயிற்சித் திறனையும், இசைப் பயிற்சியையும் முழுமையாகப் பயன்படுத்தினார். தாம் கற்ற நூல்களிலிருந்து மேற்கோள்கள் பலவற்றை இடையிடையே பொருத்திக் கூறிக் கேட்போரை வியப்பில் மூழ்கச் செய்து வந்தார்.

2. பகல் நேரங்களில் காரை என்னும் ஊரில் வாழ்ந்து வந்த கிருஷ்ணசாமி ரெட்டியார் என்னும் செல்வந்தருக்குத் திருவானைக்காப் புராணத்தைப் படித்து விளக்கமளித்து வந்தார்.

3. திருவிளையாடற் புராணச் சொற்பொழிவையும், திருவானைக்கா புராணப் பாடத்தையும் சிறப்புற முடித்துத் திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரிடம் இலக்கண நூல்கள் பலவற்றைப் பாடம் கேட்டபிறகு, தேசிகர் அவர்களின் ஆணையை ஏற்றுப் பலருக்குப் பாடம் நடத்தத் தொடங்கினார்.

திருவாவடுதுறை மடத்திலிருந்த தம்பிரான்கள் பலருக்கும் தமிழ் நூல்கள் பலவற்றை முறையாக நடத்தி வந்தார். தம்பிரான்களைத் தவிர, மடத்தில் பாடம் கேட்க வேண்டும் என்று பேரளம், ஏம்பல், கோயிலூர் போன்ற பல ஊர்களிலிருந்தும், திருவாவடுதுறையிலிருந்தும் வந்த சான்றோர் பலருக்கும் அவரவர் விரும்பிய தமிழ்நூல்களை முறையாகக் கற்பித்து வந்தார்.

4. காவடிச்சிந்து என்னும் நூலை இயற்றிய, சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் அவர்களுக்கு நன்னூல், மாயூரப் புராணம் ஆகியவற்றை நடத்திக் கொடுத்தார்.

## வழிகாட்டும் செல்வமளித்தோர் நிறை

1. பாட்டனார் வேங்கடாசலையர் தொடங்கி வைக்க, 2. உத்தமதானபுரம் நாராயணையர் 3. சாமிநாதையர் 4. அரியலூர் கிருஷ்ண வாத்தியார் 5. சடகோபையங்கார் 6. குன்னத்தில் கதிர்வேல் கவிராயர் 7. சிதம்பரம் பிள்ளை 8. சிறிய பாட்டனார் ஐயா குட்டி ஐயர் 9. மாடுவெட்டி மங்கலம் பரதேசிகள் 10. கார்குடி கஸ்தூரி ஐயங்கார் 11. கஸ்தூரி ஐயங்கார் நண்பர் சாமி ஐயங்கார் 12. செங்கணம் விருத்தாசல ரெட்டியார் 13. ரெட்டியார் நண்பர் பெருமாளையர் 14. மாயூரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 15. திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் ஆகிய கல்விச் செல்வந்தர்கள் அன்போடும் ஆர்வத்தோடும் ஆழ்ந்த உள்ளத்தோடும் ஆதரவோடும் வாரியளித்த கல்விச் செல்வத்தின் குவியல் நமது வழிகாட்டி அவர்கள் பரந்த உள்ளத்தே குவிந்து கிடந்தது என்பது போற்றத்தக்கதோர் செல்வக் குவியலாகி வழிகாட்டும் பெருமையைப் பெற்றிருந்தது.

### பிள்ளையவர்களின் செல்வம்

முன்பே தெளிவுபடுத்தியவாறு - ஏழு அந்தாதி நூல்கள், நான்கு பிள்ளைத் தமிழ் நூல்கள், ஆறு அஷ்டப்பிரபந்தங்கள் (ஏட்டில்), பத்து புராணங்கள், கம்பராமாயணம், மூன்று கோவை இலக்கியங்கள், இரண்டு இலக்கண நூல்கள், ஒருகலம்பகம், ஒரு சதகம் ஆகிய **முப்பத்தைந்து** நூல்கள் ஐயந்திரிபறப் பிள்ளையவர்கள் அளித்த செல்வங்களாகும். பிள்ளையவர்கள் பிரசங்கம் செய்யும் போது நமது வழிகாட்டியவர்கள் இசையுடன் படிக்கும் வாய்ப்பையும் பெற்றார். பிள்ளையவர்கள் இயற்றிய அம்பர்புராணம் திருப்பெருந்துறைப் புராணம் ஆகியவற்றைப் பிள்ளையவர்கள் கூற அவற்றை ஏட்டில் எழுதும் வாய்ப்பால் பெரும்பயன் ஏற்பட்டது. இவற்றோடு ஒவ்வொரு நூலுக்குமுரிய நூலாசிரியர் வரலாற்றைப் பிள்ளையவர்கள் தெளிவு பட உணர்த்தியுள்ளார். தஞ்சை வாணனாகிய வேளாளச் செல்வந்தன் பாண்டிய மன்னனின் சேனாதிபதியாக இருந்தவன் என்ற செய்திகளையும்; பொய்யாமொழிப் புலவர், சிவப்பிரகாச சுவாமிகள், விசாகப் பெருமாளையர் போன்றோர் வரலாறுகளையும் தம் பதிப்புகளில் தெளிவாக எழுத நம் வழிகாட்டி அவர்களுக்குத் துணைபுரிந்தவை பிள்ளையவர்கள் அளித்த வரலாற்றுச் செல்வங்களேயாகும்.

### வழிகாட்டத் துணைநின்ற அனுபவச் செல்வம்

நமது வழிகாட்டியவர்களின் பாட்டனார் தொடங்கி வைக்க, நாராயணையர், சாமிநாதையர் போன்றோரிடம் தொடக்கக் கல்வியைப் பெற்றவர் நமது வழிகாட்டி தொடர்ந்து அரியலூர் கிருஷ்ண வாத்தியார், சடகோபையங்கார், குன்னம் சிதம்பரம் பிள்ளை போன்றோரிடம் பெற்றவை ஏட்டுக் கல்வியனுபவம் மட்டுமே.

கி.பி. 1871 இல் மாயூரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களை ஆசிரியராக ஏற்றதிலிருந்து, மாயூரம் கோபாலகிருஷ்ணபாரதியார் (இசைப்பயிற்சியளித்தவர்), மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை ஆகியோர் தொடர்பு கிடைத்தது.

திரிகூடராசப்பக் கவிராயர் அவர்களின் பரம்பரையினரும், திருவாவடுதுறை ஆதீன கர்த்தராயிருந்தவருமாகிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களுடைய அழைப்பின் பேரில் திருவாவடுதுறை சென்ற

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நமது வழிகாட்டி அவர்களையும் உடன் அழைத்துச் சென்றார். இதுவே பெரும் அனுபவச் செல்வத்தைப் பெறும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தின் குடமுழுக்கு விழாவிற்குச் சென்ற ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் அவர்கள் நமது வழிகாட்டி அவர்களை உடனழைத்துச் சென்றார். திருவிளையாடற் புராணத்தைப் படித்தும் நடத்தியும் மட்டுமே பாண்டிய நாட்டின் பெருமைகளில் திளைத்திருந்தவர், பாண்டிய நாட்டில் நுழைந்த போது பெற்ற மகிழ்ச்சி எல்லையற்றதாகிவிட்டது. காசி முதல் கன்னியாகுமரி வரையிலிருந்து விழாவிற்கு வருகை தந்திருந்த ஜமீன்தார்கள், மிட்டா மிராசுதாரர்கள், அவர்களுடன் வந்திருந்த அவர்களின் பரிவாரங்கள் அவரை மேலும் திகைக்க வைத்தன. தரிசனத்தை மிக எளிமையாகவும் சிறப்பாகவும் காணும் பேற்றினை மதுரைச் சான்றோர் மணி ஐயர் அவர்களால் பெற்றார். மாயூரம் வேதநாயகம் அவர்களின் பாடலைப் பாடிப் பலரின் போற்றுதலுக்கும் உரியவரானார்.

விழாவிற்குப் பிறகு அம்பாசமுத்திரத்தையடுத்த செவந்திபுரம் மடத்தில் நடைபெற்ற சுப்பிரமணிய தேசிகர் விழாவில் பங்கேற்றுப் புலவர் பலர் கூடிய அவையில் விழாப்பாடல்களைப் பாடி அரங்கேற்றும் வாய்ப்பினைப் பெற்றார். சங்கரநயினார் கோயில் அடைந்து, அடுத்த கரிவலம் வந்த நல்லூரில் - வரதுங்கராம பாண்டியர் இயற்றியவையும் கரிவலம் வந்த நல்லூரின் தலச்சிறப்புகள் அடங்கியவையுமான கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, கருவை கலித்துறை யந்தாதி, வெண்பா அந்தாதி ஆகியவற்றைப் படித்துப் பொருள் கூறிப் பெருமை யடைந்தது அரிய வாய்ப்பாக அமைந்தது. அதே நிலையில் திருச்செந்தூரை அடைந்த போது அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள செந்தில் பெருமான்மீது குமரகுருபரர் பாடியருளிய கந்தர் கலிவெண்பாவைப் பாடி யுரைக்கும் வாய்ப்பு கிடைத்து.

இத்தகு திருத்தலங்களுக்குஞ் சென்று, ஆங்காங்கு சான்றோர் பலரைக் காணும் பெருமை பெற்றார் என்பது மட்டும் பெருமைக் குரியதாகாது. அந்தத் திருத்தலங்களும் நகரங்களும் எந்தெந்தப் பகுதியைச் சார்ந்தவை? அவற்றின் சுற்றுச்சூழல்களும் உற்பத்திப் பொருள்களும் யாவை? அங்குள்ள மக்கள் வாழ்க்கை எத்தகையது?

அங்கு வாழும், வாழ்ந்து வந்த சான்றோர்களின் பெருமைகள் எத்தகையவை? இலக்கியச் சிறப்பு பெற்ற ஆசிரியர்களும் நூலாசிரியர்களும் யார் யார்? அவர் செய்த அருஞ்செயல்கள் யாவை? இத்தகு பல செய்திகளையும் அறிவதில் முனைப்புக் காட்டினார். சான்றோருடன் பழகி இத்தகு செய்திகளை அறிந்து கொள்ளுவது மட்டுமன்று; அவற்றை அவருடைய இயல்பான திறமையின் துணையால் அப்படியே உள்ளத்தில் திரட்டிக் கொள்ளுவார். அவை அவர்தம் நூல் பதிப்பின்போது பதிப்புரை, நூலாசிரியர் வரலாறு போன்றவற்றை எழுதப் பெரிதும் துணையாய் நின்றன.

## தேடிப்பெற்ற அனுபவச் செல்வம்

வாய்ப்பு கிடைத்த இடங்களுக்குச் சென்று, ஆங்காங்கு எதிர்பாராது சந்தித்த சான்றோருடன் பழகிப் பெற்ற அனுபவச் செல்வங்கள் ஏராளமாய் அவர் உள்ளத்தில் குவிந்து கிடந்தன. என்றாலும் தாம் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு பணியின் மேம்பாட்டுக்காகத் தாமே தேடிச்சென்று சந்தித்த சான்றோர்களும், அவர்கள் பால் பெற்ற அனுபவச் செல்வங்களும் நமக்கு வழிகாட்டுவதற்கு மேலும் துணை நின்றுள்ளன. சான்றாக:

கும்பகோணம் திரு. **தியாகராசசெட்டியார்** அவர்களின் சந்திப்பு, கல்லூரிப் பேராசிரியர் பணியைத் தேடித்தந்தது. கல்லூரிப் பணியை ஏற்ற பிறகு ஏற்பட்ட **சேலம் இராமசாமி முதலியார்** அவர்களின் சந்திப்பே பதிப்புப் பணிக்கு முதல் வித்திட்டது. முதலியார் அவர்களின் வினாவே **சீவக சிந்தாமணி** என்னும் ஒரு பழம் பெருங்காப்பியத்தை அறிய வைத்துப் படிப்படியாக அந்நூலை வெளியிட்டு நமக்கு வழிகாட்டவும் செய்துள்ளது என்பது மிகையாகாது.

சென்னை நகரம் சென்னை வாழ் பேரறிஞர் பெருமக்கள் பற்றி முழுமையாக அறிய வேண்டும் என்னும் அவர் தம் நோக்கம் நிறைவு பெற உதவியவரும் **சேலம் இராமசாமி முதலியார்** அவர்களேயாவர். சென்னை மாநிலக்கல்லூரிப் பேராசிரியர்கள் பூண்டி அரங்கநாத முதலியார், தொழுவூர் வேலாயுத முதலியார் போன்றோர் நட்பு அவரால் கிடைத்தது. அதே போல நீதிபதிகள் **முத்துசாமி ஐயர்** போன்றோரும், புரசவாக்கம் **அட்டாவதானம் சபாபதி முதலியார், சோடசாவதானம் சுப்பராய செட்டியார்**

போன்ற சான்றோர் பலரும் நெருங்கிய நண்பர்களாகும் வாய்ப்பையும் ஏற்படுத்தி உதவினார். அவர்களின் துணையால் சென்னை நகரக் கல்லூரிகள், நூலகங்கள், பொருட்காட்சி சாலை போன்ற பல இடங்களையும் அறிய முடிந்தது.

கும்பகோணம் சந்திரநாதச் செட்டியார், வீடூர் அப்பாசாமி நயினார் ஆகியோரை அணுகிச் சமணசமயச் செய்திகளையறிந்து பெற்ற அனுபவமே சீவகசிந்தாமணி வெளியீட்டின் மூலம் நமக்கு வழிகாட்டத் துணை நின்றது.

யாழ்ப்பாணம் ராவ்பகதூர் **சி.வை. தாமோதரம்பிள்ளை** அவர்கள்தம் வாதங்கள், **தேரழுந்தூர் சக்கரவர்த்தி இராசகோபலாச்சாரியார்** அவர்கள்தம் முயற்சிகள், **பூண்டி அரங்கநாத முதலியார்** அவர்களின் பதிப்புப் பணி உதவி, **வேலூர் வீரசைவர் குமாரசாமி ஐயர்** அவர்களின் படியெடுத்தற் பணி போன்ற பலவும் நமது வழிகாட்டி அவர்கள் தேடிப்பெற்ற அனுபவங்களாகும். அவ்வனுபவ வெளியீடுகளே இன்று நமக்கு வழிகாட்டிகளாகின்றன.

### வழிகாட்டத் துணைநின்ற தனிச்செல்வம்

நமது வழிகாட்டி அவர்களின் அத்தை மகனுக்கு உபநயனம் நடைபெற்றது. அவ்விழாவில் இசைப்புலவர் ஒருவர் நந்தனார் சரித்திரத்திலிருந்து,

> **'தீயினில் முழுகினார் திருநாளைப் போவார்**
> **தீயினில் முழுகினார். . . . "**

என்னும் கீர்த்தனையைப் பாடினார். அதை மிகுந்த ஆவர்த்தோடு கேட்டுக் கொண்டிருந்தார் நமது வழிகாட்டி மறுநாள் நண்பர் முன்னிலையில் சில பாடல்களைப் பாடிக்காட்டிக் கொண்டிருந்த போது, நண்பர் ஒருவர் எங்கே 'தீயினில் முழுகினார்' என்ற பாடலைப் பாடு பார்ப்போம் என்றார். அதை அவ்வாறே திறம்படப் பாடியதைக் கேட்ட தந்தையார் முதல் அனைவரும் பாராட்டினர்.

வழிகாட்டியவர்கள் குன்னத்தில் திரு. சிதம்பரம் பிள்ளை யவர்களிடம் திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களைப் பாடம் கேட்டு வந்தார். அப்போது பிள்ளையவர்களைக் காண வரும் புலவர்கள் பலபாடல்களைக் கூறித் தங்கள் திறனை வெளிப்படுத்துவார்கள். அப்பாடல்களை அப்படியே மனப்பாடம் செய்து கொள்ளுவார்.

அதேபோல, செங்கணம் விருத்தாசல ரெட்டியாரைக் காண வருவோர் பாடிய பாடல்கள் மனப்பாடமாயின. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் வந்த தர்மதானபுரம் கண்ணுவையர், சபாபதி ஐயர் போன்ற பலர் கம்பராமாயணம் போன்ற பல நூற் பாடல்களை இசையுடன் பாடிப் பேசி மகிழ்வர். அவ்வளவு பாடல்களும் மனப்பாடமாகிவிடும். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சீகாழிக் கோவையைப் பாடம் கேட்டு அவரிடமே ஒப்பித்துக் காட்டினார்.

பிள்ளையவர்கள் திருவாவடுதறை ஆதீனத் தம்பிரான்கள் பலருக்குத் திருவானைக்காபுராணம், சீகாளத்திப்புராணம் ஆகியவற்றைப் பாடம் நடத்தும் போது, நமது வழிகாட்டியவர்கள் பாடலைப் படிக்க, பிள்ளையவர்கள் விளக்கம் தருவது என்னும் முறை மேற்கொள்ளப் பெற்றது. முதலில் பாடலை இசையுடன் படிப்பது, அடுத்து பிரித்துப் படிப்பது, விளக்கம் முடிந்தபின் இசையுடன் படித்து முடிப்பது என மும்முறை படிப்பார். ஒருமுறை ஒருவர் பாடியதை அப்படியே மனப்பாடம் செய்து விடும் தனித்திறம் பெற்ற அவர்களுக்கு இவ்வாறு மும்முறைபடிக்கும் நூல்களின் நிலையைப் பற்றிக் கூற வேண்டுமா? அவை அப்படியே வழிகாட்டி அவர்களின் உள்ளத்தில் குடிபுகுந்து விடும் என்பதைக் கூற வேண்டிய கட்டாயம் இல்லை. இவ்வாறே பல புராணச் சொற்பொழிவுகளில் பாடல்களைப் படித்த அனுபவம்; தாமே பல புராணப் பிரசங்கங்களை நடத்திய அனுபவம்; பல நூல்களைப் பாடம் நடத்தியதன் வழி பெற்ற அனுபவம் போன்றவற்றால், அந்த நூல்கள் அனைத்தும் அவர்தம் மனப்பாடத்திறனால் அவர் உள்ளத்தில் குடியேறிவிட்ட நிலையான செல்வங்களாகி அவர்தம் பதிப்புகளின் வழி நமக்கு வழிகாட்டத் துணைநின்றன.

### சுவடி அனுபவச் சிக்கல்கள்

நமது வழிகாட்டியவர்கள் ஏட்டுச் சுவடிகளின் மூலமே அரிச்சுவடி தொடங்கி ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலான பல நூல்களைப் படித்தவர். ஏட்டுச் சட்டங்களிலேயே எழுதிப் பழகியவர். கல்வி வளர்ந்த நிலையிலும் கடின நடையில் உருவான பல சிற்றிலக்கியங்களையும் புராணங்களையும் சுவடிகளைக் கொண்டு படித்தும் பாடங்கேட்டும் அனுபவம் பெற்றவர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் திருக்குடந்தைத் திரிபந்தாதி முதல் பல சிற்றிலக்கியங்களையும்

சுவடிகளின் துணை கொண்டே பாடங் கேட்டுப்படித்துப் பழகியவர். பிள்ளையவர்கள் தாம் நடத்திய சுவடிகளை அப்படியே படியெடுத்துக் கொள்ளச் சொல்லுவதோடு தாமே **ஏடுவாரிச் சுவடி** சேர்த்துக் கொடுத்து **வாரெழுத்தாணியையும்** கொடுத்து எழுதிக் கொள்ளச் செய்வார்கள்.

இவ்வாறு தொடக்க நிலையிலிருந்து இலக்கியங்கள் வரை சுவடிகளின் துணை கொண்டே படித்தும் எழுதியும் பலவகை அனுபவங்களைப் பெற்றவர் நமது வழிகாட்டி அவர்கள். பிள்ளையவர்கள் இயற்றிவந்த அம்பர் புராணத்தைப் பட்டீசுரத்தி லிருந்து திருவாவடுதுறை செல்லும் போது வண்டியில் அமர்ந்தபடியே ஆசிரியர் சொல்லச் சுவடியில் எழுதி வந்திருக் கிறார்கள்.

சுவடி படிப்பதிலும் எழுதுவதிலும் இத்தகு அனுபவங்களைப் பெற்ற நமது வழிகாட்டியவர்களே, **'மயக்கம் தந்த விஷயங்கள்'** என்னும் ஒருதலைப்பை **என் சரித்திரத்தில்** கொடுத்து (பக்கம். 559) சில மயக்கச் செய்திகளை எழுதியிருக்கிறார் என்றால் நம் நிலைமை எத்தகையது? ஆனால் அவர்தம் சுவடி அனுபவச் சிக்கல்களே அச்சிக்கல்களிலிருந்து தெளிவு பெற நமக்கு வழிகாட்டி நிற்கின்றன என்பது நமக்கு ஒரு தெளிவை உண்டாக்குகிறது.

'பலபிரதிகள் கிடைத்தன. அவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு பார்க்கலானேன். - - - மனம் போன போக்கிலே எழுதிய கனவான்களால் விளைந்த விபரீதம் எவ்வளவோ ஏட்டில் உண்டு.

இது கொம்பு, இது சுழி என்று வேறுபிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியே யிராது.

ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும். சாபம் சரபமாகத் தோற்றும். ஓரிடத்தில் சரடு என்று வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்றே பலகாலம் எண்ணியிருந்தேன். தரன் என்பதைத் தான் என்று நினைத்தேன். 'யானை நாகத்திற் றோற்றுதலின்' என்று ஓரிடத்தில் இருந்தது. யோசித்து யோசித்துப் பார்த்தேன். யானைகளில் வனசரம், நதிசரம், கிரிசரம் என்று மூன்று வகையுண்டென்று கேட்டிருக்கிறேன். நாகமென்பது மலையாக இருக்குமென்றும் கிரிசரமாகிய யானையைக் குறித்ததாகக் கொள்ளலாமென்றும் தோன்றியது. ஒரு நண்பர் "ஜைன

சம்பிரதாயத்தில் நாகத்தின் வயிற்றில் யானை முதலில் பிறந்ததென்று இருக்கலாமோ என்னவோ" என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார். 'அது நாகத்தில் பிறந்ததோ அல்லது நரகத்தில் பிறந்ததோ, ஒன்றும் விளங்கவில்லையே' என்று சொல்லிச் சிரித்தேன்.

'யானை நரகத்தில் தோற்றுதலின் அதற்கு வணங்குதல் இயல்பு' என்று நச்சினார்க்கினியர் எழுதுகிறார். காந்தருவத்தையோடு இசை பாடித் தோல்வியுற்றவர்களை நோக்கி,

"இசையினி லிவட்குத் தோற்றாம்
யானையால் வேறு மென்னின்
இசைவதொன் றன்று கண்டீர்"

என்று ஒருவர் சொன்னதாக வரும் சந்தர்ப்பத்தில், யானையால் வெல்லுதல் அரிது என்பதை விளக்குவதன் பொருட்டு நச்சினார்க்கினியர் அந்த வாக்கியத்தை எழுதியிருக்கிறார். ஆகவே அங்கே இசையொடு சம்பந்தமுடைய விஷயம் இருந்தால்தான் பொருத்தமாக இருக்கும். இவற்றை யெல்லாம் யோசிக்கையில் 'யானை நாதத்தில் தோற்றுதலின்' என இருக்க வேண்டுமென நிச்சயித்தேன். பல பிரதிகளில் தெளிவாக 'நாகத்தில்' என்றே இருந்தது. ஒரு பிரதியில் மாத்திரம் '**நாதத்தில்**' என்ற பாடம் காணப்பட்டது" (என் சரித்திரம், பக். 559-560).

இவ்வாறு குருதி என்பது குந்தி எனத் தடுமாறியதுண்டு. ஞமலிக் கமிர்த மீந்தவாறும் என்னுந்தொடரில் - அமிர்து என்பதற்குப் **பஞ்சாட்சரமாகிய மந்திரம்** என்பது உரையாக இருந்தது. சமண நூலாதலின் இப்பொருள் அமையாது; இது பொருந்தாது என்று பலவாறு சிந்திக்க நேர்ந்தது. அடுத்து ஐம்பத அமிர்தமுண்டால் என்னுந் தொடர் வந்தபோது, அது **பஞ்சநமஸ்காரமந்திரம்** என்று தெரிய வந்தது. சமணச் சான்றோர் உதவியால் அருகர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள், சித்தர் என்னும் பஞ்சபரமேஷ்டிகளை வணங்குவதற்குரிய மந்திரங்கள் பஞ்சநமஸ்காரம் என்பது புலனாயிற்று.

இடையின ரகரத்திற்கும் வல்லின றகரத்திற்கும் வேறுபாடு தெரியாமல் தவித்த இடங்கள் பல. மூலம் இது, உரை இது, மேற்கோள் இது என்னும் வேறுபாடுகளை அறிய முடியாமல் தடுமாறிய இடங்கள் பல.

சுவடி எழுத்துகளில் இடம் குறைவாக வேண்டும் என்ற நோக்கத்தில் கையாளப்பெற்ற கூட்டெழுத்துகள் பல இடம் பெறும். சான்றாக, க்க என்னும் எழுத்துகள் க போலவும் த்த - த போலவும் எழுதப்பெற்றிருக்கும். இரண்டு எழுத்துகள் ஒரு எழுத்தின் இடத்தைப் பெறும். ட்ட, ப்ப, க்கு, த்து, போல்வனவும், இத்தகு மெய்களோடு சேர்த்து எழுதப் பெறும் உயிர் மெய்கள் பலவும் ஒரே எழுத்தமைப்பில் எழுதப் பெற்றிருக்கும். பணம் என்பது பணு எனவும், எண்ணம் - எண்ணு; மனம் - மனு; அன்னம் - அன்னு போலவும் பல கூட்டெழுத்துகள் இடம் பெறுவதுண்டு. இக்காலத்து வண்ணம் என்பதைச் சுவடியிலிருந்தவாறே வண்ணு என்றே அச்சிட்டுள்ளனர். 'சுவடிக்கூட்டெழுத்து முறையை அறியாமையே இதற்குக் காரணமாகும். இவ்வாறான கூட்டெழுத்து வடிவங்கள் நிறைய உண்டு. அவற்றை அச்சிட்டுக் காட்ட முடியாது. (ற்றா - பழைய றா வடிவம் ரு . ற்றா = ற என அமையும்; ற்று - ; க்கு = ; த்து = ; ட்ட = ; ப்ப = ய)

இத்தகு கூட்டெழுத்து முறைகளை நம் வழிகாட்டி அவர்கள் சுட்டிக்காட்டவில்லை. மறந்து விட்டார்; அல்லது விட்டுவிட்டார் என்பது பொருளல்ல. இக்கூட்டுமுறைகளில் அவர் சிக்கித்தவிக்க வில்லை என்பது தான் பொருள். ஒரு பாட்டின் இறுதியில் அந்தப் பாட்டின் எண் இடம்பெறும். அந்த எண் தமிழ் எண். பாட்டின் இறுதி எழுத்தோடு சேர்ந்தே அமையும். முற்றுப் புள்ளி போல்வன இடம் பெறாது. தமிழ் எண்ணையடுத்தும் புள்ளி இராது. அடுத்த பாடலின் முதலெழுத்து தொடங்கி விடும்.

செலலாது காணககாணவே நனறாம" என்பது சுவடியில் காணும் ஒருவரி. புள்ளியிட்டு எழுதும் போது இவ்வரி,

"செல்லாது காணக் காணவே நன்றாம்'

செல்லாது காண்க காணவே நன்றாம்" என்பன போன்று அமையும். ஆனால் இவ்வரியில், 'செல்லாது காண்' என்பது ஒரு பாட்டின் இறுதித்தொடர். காணவே நன்றாம் என்று அடுத்த பாடல் தொடங்குகிறது. இடையிலுள்ள க, தமிழ் எண் ஒன்றைக் குறிக்கும். எனவே இவ்வரி,

செல்லாது காண். 1.

காணவே நன்றாம் .... என்னும் முறையில் அமைய வேண்டும். இவ்வாறே ஒரு அடியின் இறுதியில் இடம் பெறும் 2, 3, 4 ..... போன்ற தமிழ் எண்களும் சிக்கலைத் தோற்றுவிக்கும்.

கூட்டு எழுத்து முதல், தமிழ் எண்களின் அமைப்பு வரையிலான இத்தகு சிக்கல்களை எடுத்துக்காட்டாததற்குக் காரணம் நம்மைப் போல அவர் அன்று இத்தகு சிக்கல்களில் சிக்கித் தவிக்கவில்லை என்றோம். சுவடியிலேயே அரிச்சுவடி முதல் பல இலக்கியங்களைப் படித்தும், சுவடியிலேயே அவற்றை எழுதியும் அன்றைய சுவடி வரிவடிவ நிலைகளில் நன்கு ஊறித் திளைத்திருந்த நம் வழிகாட்டி அவர்களுக்கு,

அச்சு நூல்கள் மூலமே படித்தும் எழுதியும் பழகி வருவதோடு, சுவடிகளையும் அவற்றின் எழுத்து அமைப்புகளையும் அறியாதவர்களாகிய நமக்கு இன்று ஏற்படும் சிக்கல்கள் பலவும் ஏற்படக் காரணம் இல்லை என்பது தெளிவு.

### சுவடி அனுபவத் தெளிவு

"இவ்வுரையாசிரியர் கருத்தறியாது இக்காலத்தார் வேண்டாதனவற்றிற்கு வேண்டுவனவாகக் கருதி எழுதிய அடைவாசகங்கள் முடிக்குஞ் சொல்லோடு முடியாமையால் மிகையென்று விதப்புரைகளையும், நாட்டுவளங்களிலும் நகரவளங்களிலும் கதைகளிலும் கூடிப் பாடப்பட்ட பாட்டுக்களையும், சொல் வேறுபாட்டாலும் பொருள் வேறுபாட்டாலும், இலக்கண வழுவாலும் வாய்பாட்டின் பேதங்களானும் கண்டு அவற்றைத் தள்ளி எழுதிய சிந்தாமணியுரை நச்சினார்க்கினியம் முடிந்தது" என்னும் செய்தி நமது வழிகாட்டியவர்களுக்குக் கொழும்புத்துறை திரு. தி. குமாரசாமி செட்டியாரவர்கள் அளித்த சிந்தாமணி ஏட்டின் இறுதியில் காணப்பெற்ற செய்தி. இதை வழிகாட்டி அவர்களே சிந்தாமணியின் முன்னுரையில் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாறு தமக்குக் கிடைத்த பதினேழு சுவடிகளின் இறுதியிலும் காணப்பெறும் செய்திகளைத் தொகுத்துத் தருகிறார். இதே இறுதிக் கூற்று, திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் (வழிகாட்டியவர்களின் ஆசிரியர்) வழங்கிய சுவடியிலும் காணப்பெற்றது.

வழிகாட்டியவர்கள் கருதியது போல மனம் போன போக்கிலே எழுதிய கனவான்களால் ஏற்பட்ட பலவகையான பிழைகள் மூலச்சுவடிகளிலே ஏற்பட்டுள்ளன என்னும் கருத்து உரையாசிரியர்கள் காலத்துக்கு முன்பே தோன்றிவிட்டது. சுவடிகளில் இத்தகு வேறுபாடுகள் தோன்றக் காரணம் என்ன?

## மூலச்சுவடி இல்லை

இன்று நம்மிடையே கிடைக்கின்ற அனைத்துப் பொருட் சுவடிகளும் - அதாவது - இலக்கணம், இலக்கியம், கணிதம், மருத்துவம், சோதிடம் போன்ற அனைத்துப் பொருட் சுவடிகளும் நூலாசிரியர்களால் எழுதப்பெற்ற அல்லது நூலாசிரியர் சொல்ல, அவர் முன்னாலேயே இருந்து பிறரால் எழுதப்பெற்ற சுவடிகளாகிய மூலச்சுவடிகளைக் கொண்டு பிறரால் படியெடுக்கப் பெற்ற வழிச்சுவடிகளேயாகும். மூலச்சுவடி என்பது இன்று நம்மிடை எதுவும் இல்லை என்பது உறுதி. என்றாலும் மிகவும் பிற்காலத்து, பத்தொன்பது இருபதாம் நுற்றாண்டுகளில் ஒரு சில சான்றோரால் எழுதப்பெற்ற சிற்றிலக்கியங்கள், மருத்துவம் போன்ற சில சுவடிகள் கிடைக்கின்றன. அவை மட்டுமே மூலச்சுவடிகளாகும். அச்சு வசதி கிடைத்து விட்ட காரணத்தால் அத்தகு மூலச்சுவடிகள் அவ்வப்போது அச்சிடப்பெற்று விட்டன. அச்சிடாமல் இருக்கின்ற மிகப் பழங்காலத்துச் சுவடிகள் அனைத்துமே பிறரால் படியெடுக்கப் பெற்ற வழிச்சுவடிகளேயாகும் என்பது நமது வழிகாட்டியவர்கள் கண்டுள்ள தெளிவான உண்மை.

## வழிச்சுவடிகள் தோன்றக்காரணம்

ஒரு நூலை ஆசிரியரிடம் பாடம் கேட்கத் தொடங்கும் போது அந்த நூல் தன்னிடமும் இருக்க வேண்டும் என்னும் நோக்கில் ஆசிரியரிடத்திலிருக்கும் சுவடியையோ அல்லது வேறு யாரிடமிருந்தாவது பெற்றோ படியெடுத்துக் கொள்ளுவர். அந்தாதி ஒன்றைப் படிப்பவர் வேறு அந்தாதிகள் யாரிடமாவது இருக்கக் கண்டால் அது நமக்கு உதவும் என்று கருதி அதைப் படியெடுத்து வைத்துக் கொள்ளுவது; ஆசிரியர்கள், புலவர்கள், செல்வந்தர்கள், பிற ஆர்வலர்கள் போன்றோர் இந்த நூல் நம்மிடம் இருக்கட்டும், நம் வீட்டு நூல்களோடு இருக்கட்டும் என்னும் பலவகை நோக்கங்களோடு படியெடுத்து வைத்துக் கொள்ளுவது; அல்லது பிறரைக் கொண்டு படியெடுக்கச் செய்து பெற்றுக் கொள்ளுவது; இந்தச் சுவடி மிகவும் பழையதாகிப் பொடிந்து போகிறதே; வேறுபடி எடுத்து வைத்துக் கொள்ளுவோம் என்று புதிய படியெடுத்துக் கொள்வது; புதியபடி எடுக்கச் செய்வது. இந்த நிலை பாடம் நடத்துகின்ற ஆசிரியர்களிடையே மிகுதியாக ஏற்படுவதுண்டு.

## வழி ஏடு தோன்றுவதில் முதல் நிலை

அவரவர் தேவைக்கேற்ப ஒரு சுவடியைப் பார்த்துப் படியெடுக்கும் போது முதலில் தோன்றுவது கையெழுத்துச் சிக்கல்களே. எல்லா வகையான வசதிகளோடு கூடிய எழுதுகோல்களைப் பயன்படுத்தும் இக்காலத்து எழுத்துகளிலேயே பலருடைய கையெழுத்தைப் படித்தறிவது கடினமாக உள்ளதை அனைவரும் அறிவோம். எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதுவோரின் எழுத்து முறைகளைச் சொல்லவே வேண்டாம்.

அ - சு இவற்றிடை வேறுபாடு தெரியாது இதே போல இ-ஐ வாகத் தோன்றும். ஈ - •ா• - புறத்திலே புள்ளியிருக்கும். உ - 2 போல; ஊ - உள போல; எ - ∩ போல; இவ்வாறு வடிவங்கள் வேறுபடுவதால் இடத்திற்கேற்ப வெவ்வேறு சொற்களாகக் கருத நேரிடும். ஊக்கத்தோடு என்னுஞ்சொல் உறக்கத்தெரரு என்று தோன்றிப் பொருள் விளங்காது சிக்கலேற்பட்டதுண்டு.

சு,ச,த; த ந, லவ, ளற, ஞருடு போன்ற எழுத்துகளிடையே வேறுபாடு தெரியாது. இவற்றைப் போன்று பல சிக்கல்கள் தொடக்க நிலையிலேயே ஏற்படுவது கண் கூடு. ஒன்றை வேறொன்றாகக் கருதி எழுதி விடுவதே வழி ஏடுகளில் முதல் நிலை வேறுபாடுகளாகி விடுகின்றன. எழுத்துச் சிக்கல் முதலாக ஏற்படும் இவ்வேறுபாடு களைப் பாடவேறுபாடு என்கிறோம்.

### பாடவேறுபாட்டு வகை

பாடம் வேறுபடுவது பாடவேறுபாடு எனப் பெறுகிறது. பாடம் என்பது மூலபாடம். நூலாசிரியர் உரையாசிரியர் ஆகியோர் நிறுவிய உண்மைத் தொடரே மூலபாடம் எனப்பெறுகிறது. அந்த உண்மைத்தொடர் சொல்வோராலும் படிப்போராலும் எழுதுவோராலும் வேறுபட்டு வழங்கப்பெறுமேயானால் அது பாடவேறுபாடு என்னும் பெயரைப் பெறுகிறது.

நமது வழிகாட்டி அவர்களைப் போன்ற பழம்பெரும் பதிப்பாசிரியர்கள் பாடபேதம், ரூபபேதம், பிரதிபேதம் என்னும் பெயர்களால் இந்த வேறுபாட்டு முறைகளைக் கையாண்டுள்ளனர்.

இந்த வேறுபாடுகள் நூலின் தலைப்பு உட்தலைப்பு போன்ற இடத்தால் வேறுபடுவதும், மூலபாடத்தின் கருத்திலேயே வேறுபடும்

**பொருளால்** வேறுபடுவதும், சுவடிகள் படி யெடுக்கப் பெற்ற அடிப்படையில் **காலத்தால்** வேறுபடுவதும், சொற்களில் அமையும் எழுத்துகளால் வேறுபடுவதாகிய **வடிவத்தால்** வேறுபடுவதும், தோன்றலும் திரிதலும் வேறுபடுதலுமாகிய **தன்மையால்** வேறுபடுவதும், பாடல் எண், இயல் எண் போன்றவை வேறுபட்டு நிற்பனவாகிய **எண்ணால்** வேறுபடுவதும் ஆகிய பலவகையில் வேறுபட்டுள்ளன என்பதை ஆங்காங்கே நம்வழிகாட்டியவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அம்முறை நமக்குப் பெரிதும் வழிகாட்டியாக அமைகிறது.

வழிகாட்டி அவர்களின் பதிப்பு நூல்களில் இடம்பெறும் வழிகாட்டும் முறைகள், பலதலைப்புகளில் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன. அவற்றுள் முழுமையான வேறுபாட்டுச் சான்றுகள் பல இடம்பெறுகின்றன ஆதலின் இங்கு ஒவ்வொரு வகைக்கும் சான்று காட்டாமல் விடப்பெறுகிறது.

# இயல்-2

## வழிகாட்டும் பதிப்பு நெறிகள்

### பதிப்பு

பதிப்பு என்பதே நூல் என்பதைச் சுட்டிவிடாது. ஒரு நூல் வெளியாவதில் நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் என்னும் மூவரின் பணி முழுமையாக இடம்பெறுகிறது. தம்முடைய கருத்துக்கும் கற்பனைக்கும் ஏற்ப ஒரு நூலை உருவாக்குகிறார் நூலாசிரியர். அந்நூல் செய்யுள் நடையில் அமையும் போது, அப்பாடலுக்குரிய பொருளை எளியநடையில் எழுதிச் சேர்க்கிறார் உரையாசிரியர். அப்பாடல்களை எண், தலைப்பு, அந்தந்தப் பாடலுக்குரிய உரை போன்றவற்றை முறைப்படுத்திக் கொடுத்து அச்சு நூலாக வெளியாகும் முறையில் ஒழுங்குப்படுத்தி அமைக்கிறார் பதிப்பாசிரியர். இம்மூவர் பணிகளையும் ஒருவரே ஏற்கலாம். அவ்வாறு ஏற்பது இக்கால நூலாசிரியர்களால் இயலும். இம்மூவகைப் பணிகளையும் ஒருவரோ இருவரோ மூவரோ முடித்து ஒழுங்கு படுத்தியபின் அச்சிட்டு வெளியிடுவதே நூல் எனப்பெறுகிறது.

### வெளியீடு

நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் ஆகிய மூவரின் பணிகளும் முற்றுப் பெற்று அச்சிடத் தயாராக இருக்கும் எழுத்துப்படி அச்சுப்படி (Press Copy) எனப்பெறுகிறது. அச்சுப்படி உருவானபிறகு அச்சிடுவோர், வெளியீட்டாளர், விற்பனையாளர் ஆகிய மூவரின் பணியும் இணைகிறபோதுதான் அந்த நூல் பலரிடத்தும் பரவிப் பயன் தருவதாக அமையும். தொடர்ந்து இம்மூவர் பணியும் முடிந்து வெளியாகும் நூல் வடிவமே வெளியீடு எனப் பெறுகிறது.

இத்தகு அறுவர் பணிக்குமேலும் நூலின் அட்டைப்படம், உட்பொருளை எடுத்துக்காட்டும் படங்கள் போல்வனவற்றை உருவாக்க ஓவியர், புகைப்படக்காரர் போன்றோர் உழைப்பும்

தேவைப்படுகிறது. நூலின் உட்பொருளில் ஏற்படும் ஐயங்களைப் போக்கி முழுமை பெறச் செய்ய அந்தந்தப் பொருள்களில் நிறைந்த அறிவும் அனுபவமும் பெற்ற சான்றோர் பலரின் துணையும் தேவைப்படுகிறது. இத்தகு பலரின் உழைப்பால் வெளிவருவதே நூல் எனப் பெறுகிறது.

## சுவடிப்பதிப்பு வெளியீடு

நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் ஆகிய மூவர் பணிகளையும் ஒருவரே மேற்கொள்ளலாம் என்றோம். அது இக்காலத்து உருவாகும் நூல்களுக்கு மட்டுமே. ஓலைச்சுவடிகளிலுள்ள நூல்களை வெளியிடுவதில் நூலாசிரியர் துணை கிடைக்காது. அவை உரையுடன் கூடிய நூலாக இருந்தால் உரையாசிரியர் துணையும் கிடைக்காது. எனவே சுவடிப் பதிப்பு நூல்களுக்கு முழுபொறுப்பையும் ஏற்பவர் பதிப்பாசிரியர் ஒருவரேயாகிறார்.

## பதிப்புப் பணிகளில் வழிகாட்டி

பதிப்புப்பணி என்பது சுவடி வெளியீடுகளில் முதன்மை வாய்ந்தது. இப்பணியில் நமது வழிகாட்டியவர்கள் காட்டியுள்ள அடிப்படைக் கொள்கைகளை இப்பகுதியில் தொகுத்துக் காட்டி அவற்றுக்கான வழிகாட்டியவர்களின் பதிப்புச் சான்றுகளை அடுத்த பகுதியில் எடுத்துக்காட்டலாம்.

### முதற்பணி

சுவடிப்பதிப்பில் முதற்பணி படியெடுத்தல். படியெடுத்தலில் ஈடுபடும் போது நமது வழிகாட்டியவர்கள் கண்ட உண்மைகள் யாவை? சுவடிகளில்,

பாடல், உட்தலைப்பு, உரை, விளக்கம், பாடல் எண், சுருக்கக்குறியீடுகள், திணை துறை விளக்கம், இலக்கணக் குறிப்பு, மேற்கோள், ஒப்புமைப்பகுதி, பாடவேறுபாடு, அவ்வேறுபாட்டு விளக்கம், பிற உரையாசிரியர் கருத்து, அதற்கான மறுப்பு ஆகியவை ஒன்றற்கொன்று பிரித்து அறிய இயலாதவாறு தொடர்ந்து எழுதப்பெற்றிருந்ததை - ஆழ்ந்து படித்து, உற்று நோக்கி அறிந்தார். தம் ஆழ்ந்த பல நூலறிவையும், நினைவாற்றலையும் பயன்படுத்தி, எவ்வாறேனும் முறைப்படுத்திப் பதிப்பித்தாக வேண்டும் என்னும்

ஊக்கமும், அயரா உழைப்பும் துணை நிற்க முறையாகப் படியெடுத்து முடித்து நமக்கு வழிகாட்டியிருக்கிறார். வேண்டிய இடங்களில் புள்ளி வைத்து எழுதி,

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"
(தொல். எழுத். 15)

"மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்"
(தொல்.எழுத். 104)

என்னும் எழுத்தின் அமைப்புகளையும் தெளிவுபடுத்திக் காட்டியிருக்கிறார். தமிழ்ச்சுவடிகளில் மெய் எழுத்துக்கள் புள்ளி வைத்து எழுதும் முறை கையாளப் பெற்று வந்துள்ளது. இடைக்காலத்தில் வடமொழித்தாக்கம் தமிழிலும் நுழையத் தொடங்கியது. வடமொழிக்குரிய கிரந்த எழுத்துகளுக்கு புள்ளியிட்டு எழுதும் அமைப்பே கிடையாது. தமிழும் கிரந்தமும் கற்றிருந்த சான்றோர், தமிழ்ச் சுவடிகளை எழுதும் போது இடையிடையே கிரந்த எழுத்துகளைப் புகுத்தியும், கிரந்த எழுத்துகளைப் போலத் தமிழ் மெய் எழுத்துகளுக்குப் புள்ளி வைக்காமலும் எழுதத்தொடங்கினர். பல்வேறு துணை காரணங்களால் தமிழ்ச்சுவடிகள் அனைத்திலுமே புள்ளியிட்டு எழுதும் முறை அடியோடு கைவிடப்பெற்று விட்டது. இந்த உண்மையில் தெளிவு பெற்ற நமது வழிகாட்டியவர்கள் தம் பதிப்பு முறையில் புள்ளியிட்டுப் படியெடுத்தே வழிகாட்டி யிருக்கிறார்.

### பாடல்களைப் படியெடுத்தல்

நமது வழிகாட்டியவர்கள் செங்கணத்தல் தங்கி, விருத்தாசல ரெட்டியார் அவர்களிடம் யாப்பருங்கலக்காரிகை, பாட்டியல் நூல்கள் போன்றவற்றைப் பாடங்கேட்டு வந்தார். அப்போது ரெட்டியார் அவர்களுடைய நண்பர் பெருமாளையர் என்பவர் வந்தார். அவர்களிடம் தாம் எழுதிய அறுசீர் விருத்தம் ஒன்றினைக் காட்டினார். பெருமாளையர் அப்பாடலைப் பார்த்துச் சிரித்து விட்டு, அறுசீர் விருத்தம் என்பதில் அடிதோறும் ஆறுசீர்கள் அமைந்து நான்கு அடிகளில் எழுதினால் மட்டும் விருத்தம் முழுமையானது என்று கூறிவிட முடியாது. எந்தச் சீர் எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அப்படி அமைந்து ஓசை பிறழாமல் இருத்தல் வேண்டும் என்று கூறி, நான்கடிகளிலும் சீர்கள் அளவொத்து

இருத்தல் வேண்டும் என்பதற்குச் சான்றுகளும் காட்டினார். (என் சரித்திரம், 145-146).

## பாட்டு அமைப்பு

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாஇனம் என்பன யாப்பிலக்கணம் உணர்த்தும் பா, பாஇனங்கள் இவற்றிற்குரிய உறுப்புகள் ஆகியவற்றைக் குறிக்கும். இவற்றுள் முதல் ஆறும் பாவின் உறுப்புகளாகும். இவ்வுறுப்புகளுள் சீரும் தளையும் பொருந்தி, தொடை நயம் தோன்ற வருவதே சிறந்த பாடலுக்குரிய அமைப்பாகும். இந்த அமைப்பை ஆழ்ந்து அறிந்த நமது வழிகாட்டியவர்கள் சுவடிப்பாடல்களைப் படியெடுப்பதில் இந்த ஒழுங்கு முறைகளைக் கையாண்டு நமக்கும் வழிகாட்டியிருக்கிறார். இவற்றுள்,

## சீர் அளவு ஒத்து வருதல்

ஒரு பாடலின் ஒரு அடியில் ஆறு சீர்கள் அமைகின்றன என்றால் அப்பாடலின் நான்கு அடிகளிலும் ஆறு ஆறு சீர்களே அமைய வேண்டும் என்பது மட்டுமன்று சீர் அளவு ஒத்து வருதல் என்பது. ஒவ்வொரு அடியிலும் இடம்பெறும் முதற்சீர், இரண்டாம் - - - - ஆறாம் சீர் என்பனவும் அளவு ஒத்து வருதல் வேண்டும். அதாவது முதலடியின் முதற்சீர் காய்ச்சீராயின் நான்கு அடியிலும் முதற்சீர் அளவொத்ததாக - காய்ச்சீராக அமைதல் வேண்டும். இவ்வாறே முதலடியின் இரண்டாஞ்சீர் விளச்சீராயின் நான்கு அடியின் இரண்டாஞ் சீர்கள் அனைத்தும் விளச்சீராதல் வேண்டும். இவ்வாறே ஆறுசீர்களும் அளவொத்து வருவதே ஓசைநயமுடைய பாடல் என்பதே பெருமாளையர் அவர்களால் பெற்ற முழு அனுபவம். இந்த அனுபவத்தைத் தம் பதிப்பு முறைகளில் கையாண்டு அனைத்து நூல்களின் வழி நமக்கு வழிகாட்டியிருக்கிறார்.

**“ஆடகச் செம்பொன் கிண்ணத்**
**தேந்திய அலங்கல் தெண்ணீர்**
**கூடகங் கொண்ட வாழ்நாள்**
**உலர்ந்ததேற் கொல்லும் பவ்வத்**
**தூடகம் புக்கு முந்நீர்**
**அழுந்தினு முய்வர் மேலோர்**
**பாடகம் போலச் சூழ்ந்த**
**பழவினைப் பயத்தி னென்றான்” (சீவக. 510)**

இந்த **அறுசீர் விருத்தத்தின்** முதலடியின் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்கள் பிற நான்கும் மாச்சீர்கள். இதே சீர் அளவுகள் அடுத்த மூன்று அடிகளிலும் ஒத்து நிற்கின்றன. எனவே நான்கு அடிகளும் ஒத்த ஓசையையுடையனவாகின்றன.

இவ்வமைப்பை,

"விள மா மா விள மா மா" என்னும் வாய்பாட்டில் அமைவதாகக் கொள்ளுவர். இதே போல,

> **"கண்ணுதல் மதுரைப் பிரானையிவ் வாறு**
> **கருதிய பாணியாற் கனிந்து**
> **பண்ணுதல் பரிவட் டனைமுதல் இசைநூல்**
> **பகர்முதற் றொழிலிரு நான்கும் . . . ."**
>
> **(திருவிளை-இசைவாது-37)**

என்பது **எழுசீர் விருத்தம்.** அடிதோறும்,

"விளம் மா விளம் மா விளம் விளம் மா" என்னும் வாய்பாட்டால் சீர்கள் அமைகின்றன. எனவே பாடல் ஓசை பிறழாது அமைகிறது.

சுவடிகளிலிருந்து பாடல்களைப் படியெடுக்கும் போது ஒவ்வொரு அடியிலும் அமையும் எதுகை மோனைகள், அடிகளைப் பிரித்து அமைக்கத் துணைசெய்வது போலப் பாடலடிகளைச் சீர்கள் பொருந்துமாறு பிரித்துப் பாடலைத் தெளிவாக எழுத இந்த ஓசைநய அமைப்புகள் நமக்குப் பெரிதும் வழிகாட்டிகளாகின்றன.

விருத்தப்பாக்களுக்கு மட்டுமின்றி ஓசை நயம் அமையும் கலித்துறை, கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை, கலிவெண்பா, வெண்கலிப்பா போன்றவற்றிலும் இம்முறை சிறுசிறு மாற்றங்களோடு அமைவதைப் படியெடுக்கு முன்பே தெளிவு படுத்திக் கொண்டு அவ்வமைப்பைப் பாடல் முழுமையும் கையாளுதல் படியெடுப்போரின் கடமையாகும்.

### ஒப்பிடும் பணி

சுவடிகளில் எழுதப்பெற்றுள்ள முறை, கையெழுத்து முறை, பாட்டு அமைப்பு போன்றவற்றில் தெளிவு பெற்று ஒரு நூலின் பதிப்புக்குத் தேர்ந்தெடுத்த ஒரு சுவடியைப் பார்த்து முழுமையாக,

மூலம், உரை, விளக்கம் போல்வனவற்றைத் தெளிவாக எழுதி முடித்த பின் மேற்கொள்ளுவது ஒப்பிடும் பணியாகும்.

ஒரே நூல், மூல நூலாகவோ உரையுடன் கூடியதாகவோ பலரிடத்திலிருந்து கிடைக்கும் வாய்ப்பு உண்டு. அதே போலப் பல சுவடி நூலகங்களிலும் கிடைக்கக் கூடும். ஒரே நூலின் பல சுவடிகள் ஒரு நூலகத்திலிருப்பதும் உண்டு. இவ்வாறு கிடைக்கும் சுவடிகளைப் பெற்று நாம் எழுதியுள்ள எழுத்துப்படியோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே ஒப்பிடும் பணியாகும்.

### ஒப்பிடுதலின் பயன்

முதலில் ஒரு நூலை எழுதுவதற்குத் துணையாயிருந்த முதற் சுவடியில் பிழைகள், விட்டுபட்ட இடங்கள், விளங்காத சொற்கள், தொடர்கள், எழுத்துத் தெளிவின்மை, ஓலை முறிவு போன்றவற்றால் ஐயம் ஏற்பட்ட இடங்கள் பல இருக்கக்கூடும். பிற சுவடிகளைக் கொண்டு ஒப்பிடும் போது ஐயம் ஏற்பட்ட இடங்களில் தெளிவு ஏற்படக்கூடும். அவற்றை முறையாகத் திருத்திப் பதிப்பிக்கும் முறைக்கு ஒப்பிடும் பணி பெரிதும் துணை நிற்கிறது.

ஐயங்களில் தெளிவு ஏற்படுவதோடு, ஒப்பிடும் போது சில சுவடிகளிலிருந்து பாடவேறுபாடுகள் பல கிடைப்பதும் உண்டு. பயனுள்ள அவ்வேறுபாடுகளை அடிக்குறிப்பில் இடம் பெறச் செய்வதால் நூலைக் கற்போருக்கும் ஆய்வாளருக்கும் அவை பெரிதும் துணை நின்று நூலைப் பற்றிய சிறந்த கருத்துகளை மேலும் மேலும் அறியச் செய்யும்.

### ஒப்பிடும் பணியில் வழிகாட்டி

நமது வழிகாட்டியவர்கள் மேற்கொண்ட சுவடிப்பதிப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது அவர்தம் ஒப்பிடும் பணியேயாகும். ஒரு சுவடியைப் பதிப்பித்து வெளியிடுவது என்று முடிவு செய்தவுடன், அந்த நூலின் சுவடிகளைத் தேடித் திரிவதையே முதற் பணியாக மேற்கொள்ளுவார்கள்.

### சீவக சிந்தாமணிச் சுவடிகள்

ஸ்ரீவைகுண்டத்தில் முனிசீபாக இருந்த திரு. ஏ. இராமசந்திரையர் அவர்கள் மூலம் சேலம் இராமசாமி முதலியார் பெற்று வைத்திருந்த

சுவடியைத் தமக்குச் சீவகசிந்தாமணி பாடம் நடத்துமாறு வழிகாட்டியவர்களிடம் கொடுத்தார்கள். அச்சுவடி நச்சினார்க்கினியர் உரையுடன் கூடியது. சிந்தாமணியைப் பதிப்பிப்பது என்று முடிவு செய்த பிறகு, திருவாவடுதுறைக்குச் சென்று மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதி வைத்திருந்த ஒரு சுவடியை மடத்திலிருந்து பெற்றார். ஆதீனக்கர்த்தர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் அவர்கள் திருநெல்வேலியிலிருந்து சில சுவடிகளை வரவழைத்துக் கொடுத்தார்கள்.

சுவடி தேடுவதற்கென்றே தஞ்சை சென்றார் நமது வழிகாட்டியவர்கள். தஞ்சை செல்வந்தர் விருஷபதாச முதலியார் அவர்களிடம் சுவடி இருக்கிறதென்று அறிந்து, தெரிந்த சான்றோர் உதவியுடன் சென்று கேட்டார். சிந்தாமணிச்சுவடியும் வேறு சமண சமயச் சுவடிகளும் பூசையில் இருக்கின்றன. அவற்றை எடுக்க முடியாது என்று மறுத்ததோடன்றி இவரைப் பற்றிய செய்திகளை அறிந்த பின் ஜைனரைத் தவிர மற்றவர்களுக்குத் தருவது எங்கள் சமய சம்பிரதாயத்துக்கு விரோதமானது. உங்களுக்குக் கொடுத்தால் எங்களுக்குப் பாவம் ஏற்படும். அதுவும் சைவ மடத்தில் பழகியவர்களுக்கு ஜைனகிரந்தங்களில் அன்பு ஏற்பட நியாயமே இல்லை. சைவர் ஜைனரைத் துச்சமாக எண்ணுபவர்கள் என்றெல்லாம் கூறி மறுத்துவிட்டார். பலவாறு முயன்று இறுதியில் தஞ்சை, துக்காராம் ஹோல்கார் என்னும் மகாராஷ்டிரச் செல்வந்தரை அழைத்துச் சென்று அவர் உதவியால் சுவடியைப் பெற்று வந்தார். இவ்வாறு பலவழிகளில் முயன்று இருபத்து மூன்று சுவடிகளைத் திரட்டி ஒப்பிடும் பணியை மேற்கொண்டிருக்கிறார். அந்த இருபத்து மூன்று சுவடிகளுள் நான்கு மூலம் மட்டுமே உள்ளவை.

சிந்தாமணியின் அச்சுப் பணி நடந்து கொண்டிருக்கும் போதும் திருநெல்வேலி, சுப்பிரமணிய தேசிகர் பிறந்ததும், அவருடைய இளைய சகோதரராகிய திரிகூடராசப்பக்கவிராயர் வாழ்ந்து வருவதுமாகிய மேலகரம், திருக்குற்றாலம், செங்கோட்டை, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் போன்ற ஊர்களுக்குச் சுவடி தேடும் யாத்திரையை மேற்கொண்டு மேலும் சில சுவடிகளைத் திரட்டி யிருக்கிறார். இவ்வாறே ஒவ்வொரு சுவடிப் பதிப்பிற்காகப் பல ஊர்களுக்கு யாத்திரையே மேற்கொண்டிருக்கிறார் என்பது மிகையாகாது.

## யாத்திரையின் பேறு

சுவடி தேடிய யாத்திரையில் பலவகையான அனுபவங்களைப் பெற்றுச் சுவடி திரட்டிய முறை ஒவ்வொரு நூலின் பதிப்பு முறைக்கும் பொருந்துவதாகும். சீவகசிந்தாமணிச் சுவடிகளைத் திரட்டி வருங்காலத்து, சமணசமயக் கோட்பாடுகளைப் பற்றிய பலவகைச் செய்திகளைத் திரட்டித் தொகுத்தல், திருத்தக்க தேவரின் வரலாற்றை யறிதல், சமயக் கருத்துகள் பற்றிய பரம்பரைச் செய்திகள், பரம்பரைப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றையறிதல் போன்ற பலவகை அனுபவங்களைப் பெற்ற பேறு யாத்திரை காலத்துப் பெற்ற பெரும் பேறாகும்.

அந்தப் பேற்றைப் பெற, கும்பகோணம், இராமசாமி கோவில் மேல் தெருவில் வாழ்ந்து வந்தவரும், சிந்தாமணியின் அகராதியாக விளங்கும் பெருமை பெற்றவருமான திரு. **சந்திரநாதசெட்டியார்** அவர்கள் முதல் துணையாகி விளங்கினார்கள்.

அதே நிலையில் திருத்தக்கதேவர் வரலாறு போன்ற அரிய செய்திகளைத் தருவதில் சந்திரசேகர செட்டியார் அவர்களின் எதிர் வீட்டில் வாழ்ந்து வந்த திரு. **குணபால செட்டியார்** அவர்களும் அவர்தம் **இல்லத்தலைவியார்** அவர்களும், உதவி செய்துள்ளார்கள். இவர்களைத் தவிர அதே ஊரைச் சார்ந்த திரு. **சமுத்திரவிசயம் செட்டியார்** அவர்களின் கருத்துகளும் மிகுதியாகக் கிடைத்தன. இவையனைத்தும் வழிகாட்டியவர்கள் பெற்ற சமண சமயக்கருத்துக் குவியலாக அமைந்த பெரும் பேறாகும். இக்கருத்துச் செல்வங்களே சிந்தாமணிப் பதிப்பில் நிரம்பி நிற்கின்றன. பதிப்புப் பணி நடக்குங் காலத்தில் ஆங்காங்கு ஏற்படும் ஐயங்களைப் போக்க **வீடூர் அப்பாசாமி நயினார்** அவர்கள் உதவி புரிந்து வந்தார்கள்.

இதே அடிப்படையில் மணிமேகலை என்னும் நூலின் பதிப்புப் பணிக்குக் கிடைத்த பத்து சுவடிகளும் தேடிப் பெறப் பெற்றவை. அந்நூலின் பௌத்த சமயக் கருத்துகளில் தெளிவு பெறுவதற்காக, பௌத்தம் அறிந்த, சென்னை மாநிலக் கல்லூரி, வடமொழிப் பேராசிரியர் **ராவ் பகதூர் மளூர் ஸ்ரீ அரங்காச்சாரியர்** அர்களை அடைந்து, அடிக்கடி ஐயங்களை வினவித் தெளிவுபெற்று வந்துள்ளார்.

இதே நிலையில் பத்துப்பாட்டு முதலான அனைத்துப் பதிப்புப் பணிகளுக்கும் சுவடி தேடி யாத்திரை செய்துள்ள செயல் ஒவ்வொரு நூலின் முகவுரையிலும் இடம் பெறுகிறது.

### சிலப்பதிகாரச் சுவடிக்காக – யாத்திரை

தேரழுந்தூர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அளித்த அரும்பதவுரைச் சுவடியை ஆய்ந்து வரும் போது வேறு சுவடிகளுக்காகவும் அடியார்க்கு நல்லாருரைக்காகவும்,

திருவாவடுதுறை, தருமபுரம், திருவண்ணாமலை, செங்கோல் மடம் ஆகிய நான்கு ஆதீனங்கள்; சென்னை, தஞ்சை ஆகிய பழைய சுவடி நூலகங்கள், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம் தொடங்கி மதுரை, சென்னை ஈறாகச் சுமார் முப்பத்தைந்து ஊர்களிலுள்ள புலவர் பெருமக்களின் வீடுகள் போன்றவற்றிற்குச் சென்று தேடியிருக்கிறார்கள். இங்கிலாந்து சுவடி நூலகத்திலிருந்த கொழும்பு நகர ஸ்ரீமான். பொ. குமாரசாமி முதலியார் அவர்கள், பாரீஸ் சுவடி நூலகத்திலிருந்த பேராசிரியர் (புரொபெஸர்) ஜூலியன் வின்சன் அவர்கள் ஆகியோரைக் கொண்டும் தேடியிருக்கிறார்கள்.

ஸ்ரீசக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் அளித்த ஒரு சுவடி மட்டுமே முதற்பதிப்பு வெளியீட்டிற்குத் துணையாயிருந்துள்ளது. இரண்டாவது பதிப்பிற்கு மூன்று சுவடிகளும், மூன்றாவது பதிப்பிற்கு அந்த மூன்றோடு, அடியார்க்கு நல்லார் உரைச்சுவடிகள் 14, மூலம் மட்டுமுள்ள சுவடிகள் 8 (எட்டு) என 22 சுவடிகள் கிடைத்துள்ளன.

### வழிகாட்டி அவர்களின் பதிப்புப்பணிக் காலம்

நமது வழிகாட்டியவர்களின் பதிப்புகளையும் அவர்தம் பதிப்புப்பணிகளையும், அவற்றின் வழி நமக்கு அவர்கள் காட்டியுள்ள பதிப்பு நெறி வழிவகைகளையுங் காணுமுன், அவர்கள் சுவடிப்பதிப்புப் பணிகளை மேற்கொண்ட காலம் எத்தகையது என்பதைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளுவது பதிப்புப்பணி மேற்கொள்ளுவோருக்குப் பெரிதும் துணைபுரியும்.

### பதிப்புப் பணியில் இன்றைய நிலை

இன்றைய பதிப்பாசிரியர் ஒருவர் ஒரு சுவடிப்பதிப்புப் பணியை மேற்கொள்ளுவாரேயானால் வேண்டிய கருவிகள்

அனைத்தையும் எளிதில் பெறும் வாய்ப்பு அவருக்கு ஏற்படுகிறது. சான்றாக ஒரு இலக்கியச் சுவடி இதுவரை வெளியிடப்பெறாத அரிய சுவடி என்று கண்டு அதைப் பதிப்பித்து வெளியிடலாம் என்று அவர் கருதினால், அந்நூலின் சுவடிகள் எங்கெங்கே உள்ளன என்பதை அறியச் சுவடி நூலகங்கள் பல துணை நிற்கின்றன. ஒவ்வொரு சுவடி நூலகத்திற்கும் தேடிச் செல்ல வேண்டிய கட்டாயமும் இல்லை. அந்தந்தச் சுவடி நூலகங்களில் உள்ள சுவடிகளின் பெயர் முதல் அதில் அடங்கும் ஏடுகளின் எண்ணிக்கை ஈறாக அனைத்துத் தகவல்களையும் தரும் சுவடி விளக்க அட்டவணைகள் உள்ளன. அனைத்து நூலக அட்டவணைகளும் ஒவ்வொரு நூலகத்திலும் இடம் பெறுகின்றன. அவற்றின் வழி எங்கெங்கே அதே இலக்கியச் சுவடிகள் உள்ளன என்பதை எளிதில் அறியலாம். அதோடு அதே வகை இலக்கியச் சுவடிகள் போன்ற பல செய்திகளையும் திரட்ட முடியும். சுவடிகளைத் தேர்ந்தபிறகு, அவற்றைப் பற்றிய பொதுச் செய்தி, சிறப்புச் செய்திகளையறிய பலவகைத் துணைக்கருவிகள் கிடைக்கின்றன.

தமிழில் உள்ள இலக்கியங்கள் எத்தகையவை? என்னென்ன பொருள் பற்றியவை? எந்தெந்தப் பாடலால் இயன்றவை? அவற்றின் வகைகள் யாவை? குறைந்த, நீண்ட அளவுகளுக்கு எல்லை உண்டா? அவற்றை இயற்றியோர் யார்? இயற்றக் காரணம் உண்டா? அவை எக்காலத்துத் தோன்றியவை? அவை கூறும் செய்திகள் யாவை? என்பன போன்ற எத்தகு செய்திகளையும் திரட்டுவதற்கான ஆய்வு நூல்கள் பல கிடைக்கின்றன. இத்தகு பொதுச்செய்திகளை அறிந்தபின் சிறப்புச் செய்திகளாக, எடுத்துக் கொண்ட நூலின் உட்பொருள் போன்றவற்றில் ஏற்படும் ஐயங்களைப் போக்க, அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், அபிதான சிந்தாமணி போன்ற பல கருவிகள் துணைநிற்கின்றன. அந்தத்துறை வல்லுநர் பலர் பட்டம் பெற்றவர்களாகவும் அனுபவம் உள்ளவர்களாகவும் துணை நிற்கின்றனர். இவை அனைத்தும் இன்றைய பதிப்பாசிரியர்களின் பணிக்கு வேண்டிய நிலையில் துணைபுரிகின்றன. இவை இன்றைய நிலை.

**பொதுநிலை** - இன்று - தமிழர் பண்பாடு, நாகரிகம், தமிழர் மரபு, பாரதநாட்டின் மிகப் பழைய மொழி தமிழ், இலக்கிய வளம் மிக்கது தமிழ், ஐவகை இலக்கண வரம்பு உடைய ஒரே மொழி தமிழ், சொல்வளம் மிக்கது தமிழ், தனித்தியங்கும் ஆற்றலுடைய ஒரே

மொழி தமிழ் என்பன போன்ற கருத்துகளை நிறுவும் வாய்ப்பினைப் பெற்று நிற்பது இன்றைய காலம்.

இத்தகு அனைத்துச் சிறப்புகளையும் உணர, உணர்த்த மூலகாரணமாக விளங்கியவை சுவடிப்பதிப்புப் பணிகளே என்பது மறுக்க இயலாத ஒன்று.

**அன்றைய நிலை**

1880 இல் நமது வழிகாட்டி அவர்கள் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பேராசிரியராகச் சேர்ந்த காலம் அரியலூரிலிருந்து கும்பகோணம் முனிசீபாக மாற்றப் பெற்று வந்து சேர்ந்தார் சேலம் இராமசாமி முதலியாராவர்கள். நமது வழிகாட்டியவர்கள் அவரைச் சந்தித்தார். அவர்களிடையே நடந்த உரையாடலின் போது, முதலியார் அவர்களின் வினாவிற்கு விடையாகத் தாம் கற்றிருந்த பலவகை நூல்களின் பெயர்களையும் கூறினார். இவையெல்லாம் இருக்கட்டும் பழைய நூல்களில் ஏதாவது படித்ததுண்டா என்ற வினா வழிகாட்டி அவர்களுக்கு அதிர்ச்சியை யுண்டாக்கியது.

**சீவகசிந்தாமணி** படித்திருக்கிறீர்களா? **மணிமேகலை** படித்திருக்கிறீர்களா? **சிலப்பதிகாரம்** படித்திருக்கிறீர்களா? என்று முதலியார் அடுக்கிச் சென்றார்.

முதலியார் கூறிய நூல்களை நான் படித்ததில்லை; என்னுடைய ஆசிரியர் அவர்களே படித்ததில்லை. என்று கூறிய தோடன்றி, அந்த நூல்களைக் **கண்ணாலுங் கண்டதில்லை** என்று கூறியகாலம் அது. (என் சரித்திரம் - பக். 531-532).

பொதுவாகச் **'சங்கநூல்'** என்ற சொல்லே அறியாதிருந்த காலம் என்பர். **'சிலப்பதிகாரம் புகார் காண்டம்'** கல்லூரிப் பாடமாக வைக்கப் பெற்றிருந்தது. மாணவருக்குப் பயன்படுமாறு, மாநிலக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் (அன்று பண்டிதர்) திரு. ஈ. **சீநிவாசராகவாச்சாரியார்** அவர்கள், பாடமாக இருந்த புகார் காண்டத்தை மட்டும் கி.பி. 1876 இல் வெளியிட்டார். அதில்,

**சேரமான் பெருமாணாயனார்** இயற்றிய சிலப்பதிகாரம் என்று குறிப்பிட்டிருந்தார். இது ஆசிரியர் பெயரை அறியாதிருந்தகாலநிலை. நூலின் பெயர்களையே சிறப்பதிகாரம்,

திருவிளையாடற் பயங்கரமாலை (பயஹரமாலை) எனவும், ஒரே நூலின் பெயரைக் கொங்குவேளிர் மாக்கதை, உதயணன் கதை, பெருங்கதை என்னும் பலநூல்களின் பெயர்களாகச் சுட்டிய காலம்.

> **"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்**
> **பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்**
> **இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி யென்பவே**
> **கைந்நிலையொ டாங்கீழ்க் கணக்கு"**

என்னும் கீழ்க்கணக்கு நூல்களைக் கூறும் வெண்பாவின் முழுப்பொருளை யுணர இயலாத நிலையில்,

ஐந்திணை ஒரு நூல், முப்பால் ஒரு தனி நூல், இந்நிலை, இன்சொல் என இரண்டு நூல்கள் எனப் பலவாறு கருதிய காலம். ஐந்திணை, மாறன் பொறையனார் எழுதிய ஒரு நூல்; முப்பால், மூன்று சிறு நூல்களைக் குறிப்பது என்று கொண்டார் திரு.சி.வை. **தாமோதரம் பிள்ளையவர்கள்.**

**ஜி.யு.போப்** அவர்கள் நாலடியார் பதிப்பு வெளியீட்டின் ஆங்கில முன்னுரையில் 1893 இல் சிலப்பதிகாரம் என்னும் நூலின் ஒரு சிறு பகுதியே அச்சாகியிருக்கிறது. அதன் ஆசிரியர் **சேரமான்** என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் 1892 இலேயே சிலப்பதிகாரம் முழுவதையும் பதிப்பித்து வெளியிட்டு, இளங்கோவடிகளின் வரலாற்றையும் எழுதியிருக்கிறார் நமது வழிகாட்டி அவர்கள்.

இவ்வாறு நூல்களின் பெயர்களையும், அவற்றின் ஆசிரியர்களின் பெயர்களையுமே தெளிவாக அறிய முடியாத சூழ்நிலை நிறைந்திருந்த காலமே நமது வழிகாட்டியவர்கள் பதிப்புபணியில் ஈடுபட்ட காலம்.

அகராதி ஒன்றினை வெளியிட வேண்டும். **ராவ் பகதூர் பட்டாபிராம பிள்ளை** அவர்களைக் கொண்டே வெளியிடச் செய்யலாம் என்று பலமுறை திருவாவடுதுறை திரு. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் சிந்தித்துக் கூறி வந்தார். ஆனால் இறுதி வரை அது நிறைவேறாமலே இருந்து விட்ட காலம். அகராதி என்பதே இல்லாத காலம். கலைக்களஞ்சியம் போன்ற துணைக்கருவிகளின் பெயரைக்கூட நினைக்காத காலம். துறைவல்லுநர் என்போரை அறியாத காலம். அனுபவம் நிறைந்தோரைத் தேடிச்சென்றும் பல செய்திகளை அறிய இயலாத நிலையிருந்த காலம். தங்களிடம் இருந்த

சுவடிகளைத் தருவதற்கும் மறுப்புத் தெரிவித்த காலம். இவ்வாறு பலவகையான இடையூறுகள் நிலவிய காலமே நமது வழிகாட்டி அவர்கள் தம் சுவடிப் பதிப்புப்பணிகளை மேற்கொண்ட காலம்.

## பொதுநிலை

பெரும் புலவர்கள் பலரும் சங்க நூல்கள் என்று பெயரளவில் அறிவார்களே தவிர, அவை எவை எவை என்பதை அறிய முடியாத நிலையே இருந்த காலம்.

திராவிட மொழிகளின் ஒப்பியல் என்னும் நூலை உருவாக்கிய கால்டுவெல் அவர்களுக்குக்கூட எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பது தெரியாதிருந்த காலம்.

பொதுப்பட கோவலன் கதை ஒரு நாடோடிக் கதையாகக் கருதி கண்ணகி, மாதவியை அறிந்திருந்த காலம். இத்தகு காலமே, அவர்தம் பதிப்புப்பணி தொடங்கிய காலம் என்பதைக் குறிப்பாகக் கூறலாம்.

இத்தகு நிலையிலேயே தம் சுவடிப்பதிப்புப் பணியைத் தொடங்கிப் பதிப்பு நெறிமுறைகளைத் தாம் கையாண்டுள்ளதன் வழி நம்மையும் பின்பற்றச் செய்திருக்கிறார் என்பதே இச்செய்திகளின் பயனாகும்.

# இயல்-3

## வழிகாட்டும் பதிப்புப் பணிகள்

### சுவடிப் பதிப்பின் தொடக்கம்

இன்றைய நிலையில் சுவடிப்பதிப்புகளை,

1. பழைய பதிப்பு 2. திருத்தப் பதிப்பு 3. தெளிவுப் பதிப்பு 4. ஆராய்ச்சிப் பதிப்பு 5. தொகுப்புப் பதிப்பு 6. மறுபதிப்பு என ஆறுவகையில் காண முடிகிறது.

சுவடிப் பதிப்புப்பணி தொடங்கி, வளர்ச்சியுற்ற காலமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சுட்டலாம்.

கி.பி. 1812இல் **திருக்குறள் அறத்துப்பால்** F.W. எல்லீஸ் அவர்களால் சுவடிப் பதிப்பாக வெளியிடப் பெற்றது. அச்சிடப் பெற்ற முதல் தமிழ் நூல் இதுவேயாகும்.

கி.பி. 1824இல் திரு. தாண்டவராய முதலியார், திரு. இராமச்சந்திர கவிராயர் ஆகியோர் சென்னைக் கல்விச் சங்கத்தின் சார்பாக, வீரமாமுனிவர் அவர்கள் எழுதிய **சதுரகராதியைப்** பதிப்பித்து வெளியிட்டனர் (பெயர், தொகை, தொடையகராதிப் பகுதிகள்).

கி.பி. 1836இல் **தஞ்சை வாணன் கோவை, நேமிநாதம் மூலம்** ஆகியவை, புதுவை நயனியப்ப முதலியார் அவர்களால், கோட்டை, கல்லூரிக் கல்விச் சங்கத்தின் சார்பில் பதிப்பித்து வெளியிடப் பெற்றன.

கி.பி. 1838இல் **திருக்குறள்** முழுமையாக **உரையுடன்**, திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பெற்றது. இவை தொடக்க நிலைச் சுவடிப் பதிப்பு வெளியீடுகளில் ஒரு சில. தொடர்ந்து பதிப்பு அறிஞர் பலர் தமிழ் நூல்கள் பலவற்றை நம்மிடையே வெளிக்கொணர்ந்துள்ளனர். அவர்களுள் பதிப்புப் பணி வகையில் பல்லாற்றானும் முதனிலை வகிப்பவரே நமது **வழிகாட்டி அவர்கள்.**

## வழிகாட்டி அவர்களின் முதல் வெளியீடு

தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் மீது திரு. பரமசிவத் தம்பிரான் அவர்கள் ஒரு மும்மணிக்கோவை இயற்றினார். அக்கோவைக்குப் பதின்மர் சிறப்புப்பாயிரம் அளித்தனர். அவற்றுள் நமது வழிகாட்டி அவர்களின் பாடல்கள் இரண்டு இடம்பெற்றன. அதன் பிறகு அவருக்கு ஆதீன மகாவித்துவான் என்ற சிறப்புப் பெயரும் அளிக்கப் பெற்றது.

அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீன மடத்திலிருந்த மண்டபத்தின் முன் வெளியானது கீற்றுப் பந்தலாகவே இருந்தது. ஜவந்திபுரம், **பெரியகாறுபாறு வேணுவனலிங்கத் தம்பிரான்** அவர்கள் முயற்சியால் சேற்றூர் ஜமீன்தார் அவர்களும், சிவகிரி ஜமீன்தார் அவர்களும் உடன் இணைந்து அந்தக் கீற்றுப் பந்தலைத் தூண்கள் இல்லாமல் மரக்கொட்டகை மண்டபமாக்கினர். முயன்றவர் பெயரால் அம்மண்டபம் '**வேணுவனலிங்கவிலாசம்**' என்னும் பெயரைப் பெற்றது.

அந்த மண்டபத்தின் தொடக்க விழா (பிரவேச விழா) சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் தம்பிரான்களும் புலவர்களும் பாடல்கள் இயற்றிப் பாடினர். நமது வழிகாட்டியவர்களும் மூன்று பாடல்களை இயற்றிப் பாடினார். அனைத்துப் பாடல்களையும் வழிகாட்டி அவர்களே இசையுடன் பாடிக்காட்டினார். அவருடைய மூன்று பாடல்களில் ஒன்று,

"இந்த மண்டபத்தைக் காலில்லா மண்டபம் என்று யாவரும் கூறுவர். அங்கே தென்கால் (தென்றற் காற்று) பலகாலும் விரவுதலால் நான் அங்ஙனம் கூறேன்" என்னும் கருத்தைப் பெற்றிருந்தது. (என் சரித்திரம், பக். 437) யாவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

பாண்டி நாட்டு நாயக்க மன்னரின் அதிகாரியாக இருந்த செவந்தியப்ப நாயகர் அவர்களால் மடத்துக்கு விடப்பட்ட எட்டு கிராமங்களுள் ஒன்று செவந்திபுரம் என்பது. அங்கிருந்த செவந்தீசுவரர் ஆலயத்தருகே அழகான ஒரு பெரிய மடத்தைக் கட்டுவித்து, அதற்குச் '**சுப்பிரமணிய தேசிக விலாசம்**' என்று பெயர் வைத்தார் **வேணு வனலிங்கத் தம்பிரான்** அவர்கள். மடாலயத்தில் சுப்பிரமணிய தேசிகருடைய திருவுருவம் ஒன்றும் அமைத்திருந்தார். அந்த மடாலயத்திற்கு தேசிகரை எழுந்தருளச் செய்து ஒரு பெரிய விழாவினை நடத்தினார்.

அந்த மடாலயத்தின் சிறப்பைக் குறித்துப் புலவர்கள் பலர் பாடிய பாடல்கள் விழாக் காலத்தில் படிக்கப் பெற்றன. அவற்றுள் நமது வழிகாட்டியவர்களின் எட்டுப் பாடல்களும் இடம் பெற்றிருந்தன.

'வேணுவனலிங்க விலாச' வெளியீட்டு விழாவிலும், 'சுப்பிரமணிய தேசிக விலாச' வெளியீட்டு விழாவிலும் படிக்கப்பெற்ற அனைத்துப் பாடல்களையும் சேர்த்து வெளியிடலாம் என்று வேணுவனலிங்கத் தம்பிரான் அவர்களின் விருப்பத்தின்படி அனைவராலும் முடிவெடுக்கப் பெற்றது.

அந்தப் பாடல்கள் முழுவதையும் ஒழுங்குபடுத்தி நூலாக வெளியிடும் பொறுப்பைப் பெற்று, அவ்வாறே தமது முதல் வெளியீடாக வெளியிட்டவர் நமது வழிகாட்டி அவர்களே ஆவார். **'வேணுவனலிங்க விலாசச் சிறப்பு'** என்பதே நூலின் பெயர்.

## நூலின் அமைப்பு

வேணுவனலிங்கத் தம்பிரான் அவர்களுடைய சரித்திரச் சுருக்கம், திருவாவடுதுறை குமாரசுவாமித் தமிபிரான் அவர்கள் இயற்றிய தோத்திரப் பாடல்கள், சுப்பிரமணிய தேசிகர் அவர்களைப் பாராட்டி வேதநாயகம் பிள்ளையவர்கள் பாடிய பாடல்கள், பிழைதிருத்தம் ஆகியவற்றுடன் முப்பத்திரண்டு பக்கங்களில் அமைந்தது அந்நூல். முதல் பக்கம்,

**கணபதி துணை**

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தைச் சேர்ந்த செவந்திப்புரத்தில் மேற்படி ஆதினம்,

பெரிய காறுபாறு வேணுவனலிங்க சுவாமிகள் இயற்றுவித்த

**சுப்பிரமணிய தேசிக விலாசச் சிறப்பு**

மேற்படி திருவாவடுதுறையில் மேற்படி சுவாமிகளியற்றுவித்த
கொலுமண்டபமென்னும்

**வேணுவனலிங்க விலாசச் சிறப்பு**

இவை பல வித்துவான்களாற் பாடப்பட்டு மேற்படி ஆதீன அடியார் குழாங்களிலொருவராகிய

ஆறுமுக சுவாமிகளாலும் மேற்படி திருவாவடுதுறை **வேங்கடசுப்ப ஐயரவர்கள்** புத்திரராகிய

**சாமிநாத ஐயரவர்களாலும்**

பார்வையிடப்பட்டு,

திருநெல்வேலி முத்தமிழாகர அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

வெகுதான்ய ஞூ ஆனி மீ

## இரண்டாவது வெளியீடு

நமது வழிகாட்டி அவர்களின் இரண்டாவது வெளியீடாக வெளிவந்தது **திருக்குடந்தைப் புராணம்** என்னும் நூல். இந்நூல் நமது வழிகாட்டி அவர்களின் ஆசிரியரும், திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கியவருமாகிய **திருசிரபுரம் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை** அவர்களால் இயற்றப் பெற்றது.

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் அவர்கள் அருளியவாறு,

தியாகராச செட்டியார், உ.வே. சாமிநாதையர் ஆகிய இருவரும் சேர்ந்து வெளியிடப்பெற்றது.

நூலின் தொடக்கத்தில், 1. திருஞானசம்பந்தர் பதிகம் 2. திருக்குடந்தைக் காரோணப் பதிகம் 3. திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் ஆகியவை இடம்பெறுகின்றன. அடுத்து, படல அட்டவணை அமைகிறது. அதில் பாயிரம் முதல் முனிவர் பூசைப் படலம் என்பது முடிய எழுபது படலங்கள் இடம்பெறுகின்றன. நூல் 2388 விருத்தங்களாலியன்றுள்ளது.

## வெளியீட்டின் அமைப்பு

**பாயிரம்** - இறை வணக்கங்களாக, விநாயகர் - ஆதி விநாயகர், சபை விநாயகர், வல்லபை விநாயகர், முற்ற வெளி விநாயகர், கரும்பாயிரங் கொண்ட விநாயகர் ஆகிய விநாயகர் வணக்கங்கள் இடம்பெறுகின்றன. தொடர்ந்து கும்பேசர், மங்களநாயகி, ஆடல் வல்லார், சிவகாமியம்மை, தட்சிணாமூர்த்தி, வயிரவர், குமாரக்கடவுள் நாயன்மார்கள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்,

மாணிக்கவாசகர், சிவநேசர்கள், அறுபத்து மூவர் ஆகியோர் வணக்கங்களாக முப்பத்தைந்து திருவிருத்தங்கள் இடம்பெறுகின்றன.

### 1. திருநாட்டுப் படலம்

கும்பலிங்கசேனார், மங்கள நாயகி அருள் பெற்று விளங்கும் சோழநாட்டுச் சிறப்பினைக் கூறுவாம் என்று தொடங்குகிறார்.

1. குறிஞ்சி – வள்ளியைப் புணர்ந்து உயர் வெற்பெல்லாம் வாழ்க்கையுற்றான் நம் குமரேசப்புத்தேள்.
2. முல்லை – கரியகார் மேனிவந்து, பிருந்தை உரியதாய்த் தழுவி ஒண்மானுறப் புணர்ந்து - செங்கண்மால் சூழ் கானம்.
3. மருதம் – தாரணமளவிலாக் கட்டாமரையாக வெள்ளைவாரண மூர்ந்து அரம்பை மரீஇ - கற்பக நாடு காப்போன்.
4. நெய்தல் – நெய்தல் புரப்பானாயினான் - வலைஞரேத்தப் பொலியும் வருணனே.
5. பாலை – தோகையமைந்த கலையூருந் தோகையரசு செய்தமர்வாள் ஈகை அமைந்த அவள் பாதம் ஏத்தி மறவர் பலர் பயில்வார்.

இவ்வாறு ஐந்திணை மருவும் சோழநாட்டுச் சிறப்பு கூறித் தொடங்குகிறது நூல்.

### 2. திருநகரப் படலம் – முதலிய சில

நாமலிபுலவரேத்த நலந்தரு கும்பகோணம் வேளாளர் வீதி, பரத்தையர் வீதி, வைசியர் வீதி, அரசர் வீதி,மறையவர் வீதி, மெய்ஞ்ஞான யோகர் மேவ நைமிசஞ்சிறக்கும். கோட்டுவாரண முகைக்கும் கும்பலிங்கேசர் மங்களநாயகியொடும் ஆரணமுழங்குங் கும்பகோணம், திருவிடைமருதூர், திருநாகேசுரம், தாரேசுரம், சுவாமி, பாடலவனம் எனும் பழம்பதி ஆகியவை நிறைந்தது சோழநாடு எனப் பத்தாம் படலம் வரை நகரச் சிறப்புகள் இடம்பெறுகின்றன.

கும்ப உற்பத்தி, கும்பேசுவரர், மங்கள நாயகி, பிரமன் பூசை, பிரமன்வரம் பெறுதல், விசுவநாதர் வரவு, பிரமன்விடைபேறு, நவகன்னியர் மகிமை, மகாமகத் தீர்த்த மகிமை, கும்பேசர் பணிவிடை, மாந்தாதா, பொற்றாமரை, இந்திரன் பூசை, சோமேசர், சோழேசர், நாகேசுரர், உமாபாகர், அகத்திய மாமுனி, சோழன் திருப்பணி,

காரோணம், குடவாயில், ஆராவமுதர், வராகம், கைலாயநாதர், முனிவரர் பூசை யெனச் சிறப்புமிகு சோழநாட்டு வரலாறுகள் பலவற்றை எழுபது படலங்களில் 2388 திருவிருத்தங்களால் விரித்துக் கூறுகிறது நூல்.

சுவடிப்பதிப்பு என்னும் நிலை பெறாவிடினும், ஆசிரியர் சொல்ல வழிகாட்டியவர்கள் எழுதிய சுவடியின் வெளியீடாக அமைகிறது.

## சுவடிப்பதிப்பு வெளியீடுகள்

நமது வழிகாட்டி அவர்களின் நூல்கள், 1. சுவடிப் பதிப்பு வெளியீடுகள் 2. தாமே எழுதி வெளியிட்ட நூல்கள் என இருவகையில் இடம்பெறுகின்றன. அவற்றுள் சுவடிப்பதிப்பு வெளியீடுகளே மிகுதியானவை. அவை:

***1. சங்கநூல்கள் – 6.***

1. பத்துப்பாட்டு - 1889
2. புறநானூறு - 1894
3. ஐங்குறுநூறு - 1903
4. பதிற்றுப்பத்து - 1904
5. பரிபாடல் - 1918
6. குறுந்தொகை - 1937

***2. காப்பியங்கள் – 5.***

1. சீவக சிந்தாமணி - 1887
2. சிலப்பதிகாரம் - 1892
3. மணிமேகலை - 1898
4. பெருங்கதை - 1924
5. உதயணகுமாரகாவியம் - 1935

***3. தலபுராணங்கள் – 13***

1. திருக்குடந்தைப் புராணம் - 1883
2. திருப்பெருந்துறைப் புராணம் - 1892
3. வீரவனப் புராணம் - 1903
4. சூரைமாநகர்ப் புராணம் - 1904
5. தியாகராசலீலை - 1905
6. திருவிளையாடற் புராணம் - 1906
7. தனியூர்ப்புராணம் - 1907
8. மண்ணிப்படிக்கரைப் புராணம் - 1907
9. திருக்காளத்திப் புராணம் - 1912
10. விளத்தொட்டிப் புராணம் - 1934
11. தணிகாசலப் புராணம் - 1935
12. ஆற்றூர்ப் புராணம் - 1935
13. வில்லைப் புராணம் - 1940

**4. இலக்கணநூல்கள் – 4.**

1. புறப்பொருள் வெண்பாமாலை - 1895
2. நன்னூல் - மயிலைநாதர் உரை - 1925
3. நன்னூல் - சங்கரநமச்சிவாயர் உரை - 1928
4. தமிழ் நெறி விளக்கம் - 1937

**5. சிற்றிலக்கியங்கள் – 45 அவற்றுள்–**

**1. கோவை இலக்கியங்கள் – 6+1**

1. சீகாழிக் கோவை - 1903
2. திருவாவடுதுறைக் கோவை - 1903
3. பழமலைக் கோவை - 1935
4. கலைசைக் கோவை - 1935
5. சிராமலைக் கோவை- 1937
6. திருவாரூர்க் கோவை - 1937
7. திருக்கழுக்குன்றக் கோவை - 1943 (அவர் குறிப்புரை எழுதி வைத்தது)

**2. மும்மணிக்கோவை இலக்கியங்கள் – 2**

1. மதுரை மும்மணிக்கோவை - 1932
2. வலிவல மும்மணிக்கோவை - 1934

**3. உலா இலக்கியங்கள் – 9.**

1. திருப்பூவணநாதருலா - 1904
2. திருக்காளத்திநாதர் உலா - 1904
3. தேவை யுலா - 1905
4. திருவாரூர் உலா - 1905
5. சொக்கநாதர் உலா - 1931
6. கடம்பர் கோயில் உலா - 1932
7. சங்கரலிங்க உலா - 1933
8. திருஇலஞ்சிமுருகன் உலா - 1935
9. திருக்கழுக்குன்றத்து உலா - 1938

**4. தூது இலக்கியங்கள் – 6.**

1. வண்டுவிடு தூது - 1888
2. தமிழ்விடு தூது - 1930
3. தென்றல்விடு தூது - 1932
4. மான்விடு தூது - 1936
5. அழகர்கிள்ளை விடு தூது - 1938
6. புகையிலைவிடு தூது - 1939

**5. பிரபந்தத் திரட்டுகள் – 3.**

1. ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத் திரட்டு - 1910
2. சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு - 1932
3. ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு - 1939

**6. பரணி இலக்கியங்கள் – 2.**

1. தக்கயாகப் பரணி - 1930 2. பாசவதைப் பரணி - 1933

**7. அந்தாதி இலக்கியங்கள் – 3.**

1. திருமயிலைத் திரிபந்தாதி - 1930
2. சங்கரநயினார் கோயில் அந்தாதி - 1934
3. திருமயிலையமக அந்தாதி - 1936

**8. இரட்டை மணிமாலை இலக்கியங்கள் – 2.**

1. பழநி இரட்டைமணிமாலை - 1932
2. களக்காட்டுச் சத்திய வாகீசர் இரட்டைமணிமாலை - 1932

**9. வெண்பா இலக்கியங்கள் 3.**

1. சிவசிவ வெண்பா - 1938
2. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா - 1939
3. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா - 1940

**10. மாலை இலக்கியங்கள் – 2.**

1. திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை - 1938
2. மகர நெடுங்குழைக்காதர் பாமாலை - 1939

**11. திருமலையாண்டவர் குறவஞ்சி – 1938**

**12. திருமயிலைக் கபாலீசர் பஞ்ச ரத்தினம் – 1932**

**13. பழநிப் பிள்ளைத் தமிழ் – 1932**

**14. திருத்தணிகைத் திருவிருத்தம் – 1941**

**15. திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் – 1908**

இந்த எண்ணிக்கையளவில் நாற்பத்து நான்கு சிற்றிலக்கியங்களே கிடைக்கின்றன.

இவ்வாறு சுவடிப்பதிப்பு வெளியீடுகள் என்ற நிலையில் எழுபத்திரண்டு அல்லது எழுபத்து மூன்று வெளியீடுகள் இடம் பெறுகின்றன. எனவே 73 அல்லது 74 பதிப்புகளின் வழியே நமக்கு பதிப்பு வழிகாட்டியுள்ளார் என்பது சிறிதும் பொருந்தாது.

ஒவ்வொரு நூலின் வெளியீடுகளும் இரண்டு முறை, மூன்று முறை, நான்கு முறை என்று வெளியாகியுள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தனிப் பதிப்புகளாக வெளியாகி, ஒவ்வொரு வெளியீட்டிலும் வெவ்வேறு பதிப்பு நெறிகள் கையாளப் பெற்றுள்ளன ஆதலின் அப்பதிப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதிப்பு நெறிக்கு வழிகாட்டுவனவாகவே அமைகின்றன.

## சொந்த வெளியீடுகள்

நமது வழிகாட்டியவர்கள் தமது வாழ்நாள் முழுமையும் சுவடிப்பதிப்பு வெளியீட்டுப் பணிகளையே மேற்கொண்டவர்கள் ஆவார்கள். என்றாலும் தமது சொந்தக் கருத்துகளை அவ்வப்போது பலவழிகளில் தொகுத்து வந்திருக்கிறார்கள். அவற்றையும் நிலையாக இருக்குமாறு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். ஆனந்த விகடன், கலைமகள், சுதேசமித்திரன், தினமணி, தினவணிகன், மணிக்கொடி, ஆனந்தபோதினி, ஹனுமான், ஜயபாரதி, ஜோதி போன்ற இதழ்களில் வெளியான கட்டுரைகள், சென்னைப் பல்கலைக்கழக மன்றத்தின் வழி ஆற்றிய சொற்பொழிவுகள் போன்றவற்றின் வெளியீடுகள் சொந்த கருத்து வெளியீடுகளாகின்றன.

**நல்லுரைக்கோவை** என்னும் பெயரில் நான்கு பகுதிகள் வெளியாகியுள்ளன. தாம் இதழ்களில் வெளியிட்ட கட்டுரைகளுள் நல்ல கருத்துகள் இடம் பெற்ற சில கட்டுரைகளின் தொகுப்பு என்னும் பொருளில் வெளியிடப் பெற்ற நூல். இதன் முதற்பகுதியில்,

1. தருமம் தலைகாக்கும்
2. வன்றொண்டர்
3. அரியலூர்
4. பூண்டி அரங்கநாத முதலியார்
5. பண்டைக் காலத்துப் பள்ளிக் கூடங்கள்
6. ஆடல் பாடல்
7. அப்படிச் சொல்லலாமா?
8. பொன்காத்த கிழவி

என்னும் எட்டுத் தலைப்புடைய கட்டுரைகள் இடம்பெறுகின்றன. தாம் வாழ்ந்த இடங்கள், பழகிய சான்றோர்கள், தாம் விரும்பிய பள்ளி, இசை போன்ற செய்திகள் போன்றவற்றில் கண்ட அனுபவ உண்மைகளை நிலைநிறுத்திக் காட்டுவதன் மூலம் நம் பணிகளிலும்

இத்தகுநிலையான அனுபவங்களைப் பிறருக்குப் பயன்படச் செய்யுமாறு வழிகாட்டுகிறார்.

இதே அடிப்படையில் நல்லுரைக்கோவையின் இரண்டாம் பாகத்தில் 14 கட்டுரைகள் இடம்பெறுகின்றன. 3,4ஆம் பகுதிகளில் முறையே 15, 20 கட்டுரைகள் அமைகின்றன.

பத்துப்பாட்டைப் பதிப்பிக்கத் தொடங்கிய போது முதலில் மூலச்சுவடிகள் கிடைக்கவில்லை. கிடைத்த பதவுரைச் சுவடிகளைக் கொண்டே மூலத்தைத் தொகுத்தார். அந்த அனுபவச் செய்திகளை **உதிர்ந்த மலர்கள்** என்னுங் கட்டுரையாக உருவாக்கியுள்ளார். அதே போல,

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகியவை கூறும் சங்ககாலச் செய்திகள் **அவன்யார்?** என்னுங் கட்டுரையாக வடிவெடுத்துள்ளன.

நம்முடைய பணிக்கால அனுபவங்களைப் பலருக்கும் பயன்படுமாறு நிலைநிறுத்த இவை வழிகாட்டுகின்றன.

**சங்கத்தமிழும் பிறகாலத் தமிழும்** – என்னும் நூல் முதலில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் வழி நமது வழிகாட்டியவர்களின் முகவுரையுடன் 1929 டிசம்பரில் வெளியிடப் பட்டுள்ளது. அடுத்த வெளியீடுகள் தியாக ராச விலாச வெளியீடு களாக வெளியாகியுள்ளன. இந்நூலுள்,

1. தமிழ்ச்சங்கம்
2. முத்தமிழ்
3. சங்க நூல்களில் தெய்வங்கள்
4. சங்ககாலப் புலவர்கள் ஆண்பாலார்
5. சங்ககாலப் புலவர்கள் பெண்பாலார்
6. சங்கப்புலவர்களை ஆதரித்த பிரபுக்கள்
7. கலைகள்
8. பண்டை உரையாசிரியர்கள்
9. சங்ககாலத்திற்குப் பிறகு தமிழை ஆதரித்த பிரபுக்களும் புலவர்களும்
10. ஆராய்ச்சி

என்னும் பத்துத் தலைப்புகளில் நமது வழிகாட்டி அவர்கள் 1927 நவம்பர் – டிசம்பர் மாதங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் இடம்

பெறுகின்றன. தமிழ்ச்சங்கம், சங்க நூல்கள் என்பன பற்றிய தெளிவான செய்திகள் அறிய இயலாதிருந்த காலத்தில் நிகழ்த்தப் பெற்ற இச்சொற்பொழிவுகள் அவர்கள்தம் பேருழைப்பின் வழிகண்ட செய்திகளடங்கியவை மட்டுமன்றி, மன்றத்துப் பெரும்புலவர்களாலும் போற்றப் பெறும் அரிய செய்திகளை உள்ளடக்கியவை. அன்றைய நிலையில்,

1. 1. தமிழ் என்னும் பெயர்
   2. தமிழின் தெய்வத் தன்மை
   3. சங்கம்
   4. அகத்திய முனிவர்
   5. தொல்காப்பியத்தின் பழமை
   6. தமிழ்நாட்டின் எல்லை
   7. சங்கப் புலவர்கள்
   8. சங்கப் பலகை
   9. இறையனா ரகப்பொருள்
   10. உக்கிரப் பெருவழுதி

2. 1. இயற்றமிழிலக்கணங்கள்
   2. இயற்றமிழ் இலக்கியம்
   3. இசைத்தமிழ்
   4. வாத்தியங்கள்
   5. நாடகம்

3. 1. குறிஞ்சிக் கடவுள்
   2. மருதக் கடவுள்
   3. பாலைநிலக் கடவுள்
   4. நெய்தற் கடவுள்
   5. வேறு தெய்வங்கள்

4. சங்க நூல் வாரிப் புலவர்கள்

5. காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், பொன்முடியார், பூதபாண்டியன் தேவியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பாரி மகளிர், ஔவையார்.

6. பாடிய அரசர், தொகுப்பித்த அரசர், கரிகாற் சோழன், நள்ளி, குமணன்.

7. அகத்தியர், ஓவிய நூல், கரவடநூல், சிற்பநூல், சோதிடம், துடி நூல், புதையல் நூல், யோக சூத்திரம், மடை நூல்.

8. இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், பேராசிரியர், மயிலைநாதர், - பிற நூல் உரையாசிரியர்கள் நூல்வாரியாக.

9. விக்கிரமசோழன், குலோத்துங்கன், இராசராசசோழன் - ஒட்டக்கூத்தர். அநபாய சோழன் - சேக்கிழார்; சடையப்பர் - கம்பர்; சந்திரன்சுவர்க்கி - புகழேந்தி; தஞ்சைவாணன் - பொய்யாமொழி;

10. பலவகை ஆராய்ச்சி முறைகள்

என்னும் உட்தலைப்புகளுள் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவுகள் ஆழ்ந்த கருத்துகளைக் காண நமக்கு வழிகாட்டி நிற்பவையாகும்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் I. 1938 II. 1940 போன்ற பல வரலாற்று நூல்கள் நன்றியுணர்வை வெளிப்படுத்தி நிலை நிறுத்தும் சொந்த வெளியீடுகளாகும்.

**சிற்றிலக்கியங்கள்**

ஏடும் நூலும் உழைப்பும் உதவியுமாகிய பொருள்களை எடுத்துக்காட்டி நிலைநிற்கச் செய்வது முகவுரைப் பகுதி. மேலும் ஆய்வுப் பணிகள் நிறைந்து நிற்கும் அப்பகுதியே நூலை முழுமையாகப் படிப்பதற்குத் தூண்டும் கருவியாகவும் அமைகிறது. எனவே முகவுரை எழுதும் முறையைத் தாம் பதிப்பித்து வெளியிட்டுள்ள அனைத்துச் சிற்றிலக்கியங்களிலும் கையாளுகிறார்.

எளிமையாகப் பாடம் செய்யக் கூடியவை சிற்றிலக்கியங்களே. அவற்றிலும் மிக எளிமையுடையவை அந்தாதி இலக்கியங்களாகும். ஒரு பாடலை முடித்தவுடன் அடுத்த பாடலுக்கு அடியெடுத்துக் கொடுத்து விடுகிறது முந்திய பாடலின் ஈற்றடி. எளிமையாக மனப்பாடம் செய்வதனால் பலதிறப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் உள்ளத்தில் இடம் பெற்றுவிடுகின்றன. அவற்றைப் பிரித்தறிதலும் பொருளுணர்தலும் தெளிவு பெற்று விடுகின்றன. உள்ளமே ஒரு சொற்களஞ்சியமாகிவிடும். இத்தகு சிறப்பறிவு மிகுதியாகுங் காரணங்களால் பலவகை அந்தாதி முதலான சிற்றிலக்கியங்கள் பலவற்றைத் தம் ஆசிரியர்களிடம் படித்தார். அதேபோலத் தாம் பாடம் நடத்திய காலத்தும் சிற்றிலக்கியங்களையே மிகுதியாக நடத்தி வந்தார். பதிப்பித்து வெளியிட்டதிலும் சிற்றிலக்கியங்களே மிகுதியாகும். ஒரு சிற்றிலக்கிய முகவுரை சான்று காட்டப் பெறுகிறது.

**தென்றல் விடுதூது**

தூதிற்குரிய பொருள்களாக அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும்

பத்தும் **இரத்தினச் சுருக்கம்** முதலிய இலக்கண நூல்களுள் கூறப் பெற்றுள்ளன. இவற்றைத் தவிர தத்தம் கற்பனைத் திறத்திற் கேற்பப் புலவர்கள் பணம், பொன், மான், விறலி, தமிழ், மலர்கள் எனப் பல பொருள்களைத் தூதிற்குரியனவாக்கியிருக்கின்றனர்.

அஃறிணைப் பொருள்களுக்குத் தூது போகுந்திறனுண்டா? அவை கருத்தை எடுத்துச் சொல்ல வல்லனவா? இல்லை. என்றாலும் அவற்றை விளித்துக் கூறுவது, தலைவன் தலைவியரின் மனமயக்கத்தால் நிகழ்வதாகும். அகத்திணையுள், காமமிக்க கழிபடர் கிளவியின் பாற்படுவதே தூது ஆதலின், அம்மயக்கமே அஃறிணைப் பொருள்களைத் தூது அனுப்புவதற்குக் காரணமாகி விடுகிறது.

இரட்டைமணி மாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலம்பகம், அந்தாதி போன்ற சிற்றிலக்கியங்களிலும், தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறை நூல்களிலும் தூதுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவை தனிப்பாடல் வடிவில் உருவாக்கப் பெற்றவை. வடமொழியிலும் சந்தேசங்கள் எனப்பெறும் பலநூல்கள் தூது பற்றியவைகளாகும்.

**'பத்மகிரிநாதர் தென்றல்விடு தூது'** என்பதே இந்நூலின் முழுப்பெயர். **பத்மகிரி** என்பது திண்டுக்கல் என்னுந் திருத்தலத்தைக் குறிப்பது. பத்மம் - தாமரை. தாமரை அரும்பின் வடிவத்திலமைந்த மலையே பத்மகிரி எனப் பெறும். அதைச் சார்ந்த திருத்தலமே திண்டுக்கல். பத்மகிரி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பத்மகிரிநாதன். அத்தலைவனிடம் தென்றலைத் தூதாக அனுப்பும் பொருளில் உருவானது இந்நூல். அருகில் உள்ள தீர்த்தம் பத்மதீர்த்தம் என்றே பெயர் பெறுகிறது. **பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை** அவர்களே நூலாசிரியர்.

திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெருவில் வாழ்ந்த வக்கீல் - திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் வீட்டில் கிடைத்த ஒரு சுவடி மட்டுமே இப்பதிப்பிற்குத் துணை நின்றது. திண்டுக்கல், பத்மதீர்த்தம் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளை அவ்வூர் வக்கீல் - திரு. **எல்.ஏ. வெங்குசாமி ஐயர்** அவர்களை அணுகிக் கேட்டறிந்துள்ளார் நமது வழிகாட்டி அவர்கள்.

## சுவடிப்பதிப்பு வெளியீடுகளின் பொது அமைப்பு

பதிப்பு வெளியீடுகளின் பொது அமைப்பு என்றே தலைப்பு அமைந்தாலும், இதுவரை அந்த வெளியீடுகளின் பெயர்களும்

எண்ணிக்கையும் மட்டுமே கூறப்பெற்றன. எனவேதான் மீண்டும் பொது அமைப்பு என்று ஒரு தலைப்புச் சுருக்கமாகக் கொடுக்கப் பெறுகிறது.

**"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்**
**இன்றுநம் மானுள் வருமேல்" (ஆய்ச்சியர் – 19)**

என்னும் பாடலடிகள் சிலவற்றைக் காண வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அது ஆய்ச்சியர் குறவைக் காதை என்னும் பகுதியைச் சார்ந்தது என்பதை அறிவோம். சிலப்பதிகாரத்தை எடுக்கிறோம்.

பதிப்புரை, சிலப்பதிகாரக் காதைச் சுருக்கம், சிலப்பதிகாரத்திறன், தமிழ்ப்புணர்ச்சி என்னுந் தலைப்புகளில் சுமார் ஐம்பது பக்கங்கள் காணப்பெறுகின்றன. அவற்றையடுத்து, பதிகம் என்னும் முதற்பகுதி தொடங்குகிறது. ஆய்ச்சியர் குறவை எங்கே? எந்தப் பக்கத்தில்? தேடுவோம்.

சில நூல்களில் முன்னுரை, அணிந்துரை, வாழ்த்துரை, நன்றி, நூற்சுருக்கம் என்னும் பல பக்கங்களையடுத்து பொருளடக்கம் கிடைத்து விடுவதும் உண்டு.

காதை பெயர் தெரியாது. கன்று, மாயவன் போன்ற சொற்கள் எந்தப் பக்கத்தில்? அருஞ்சொற்பொருளகராதி என்னும் ஈற்றுப்பகுதியில் அந்தச் சொற்களே இல்லை. இத்தகு இன்னல்கள் பலப்பல.

நூலின் பக்கங்களைப் புரட்டினால், ஒரு பக்கத்தின் மேற்பகுதியில் நூற்பெயர், எதிர்பக்கத்தில் காதைத் தலைப்பு என்று அமைகிறதா? பல நூல்களில் இரண்டு பக்கமும் நூல்பெயர் அல்லது நூல்பெயர், மறுபக்கம் ஆசிரியர் பெயர் என அமைகிறது. சிலவற்றில் தலைப்பில் எதுவுமே இருப்பதில்லை. இத்தகு இடையூறுகளும் பலப்பல.

நமது வழிகாட்டி அவர்கள் இத்தகு இடையூறுகளில்லாமல் பயன்பாட்டின் அடிப்படையில், நூல்தலைப்பும் பிறவுமடங்கிய முதல் ஏட்டையடுத்து அடுத்த ஏட்டின் முதல்பக்கத்தில்,

**இப்புத்தகத்தில் அடங்கியவை** என்னுந் தலைப்பில் இக்காலத்துக் கூறும் உள்ளுரை, பொருளடக்கம் என்பதை இடம் பெறச் செய்து விடுகிறார். இம்முறை அவர்தம் நூல்கள்அனைத்திலும் கையாளப் பெறுவது குறிப்பிடத்தக்க முதற்செயல். அவர்தம்

நூல்களை மறுபதிப்புகளாக வெளியிடும் திரு. S. கலியாணசுந்தரம் அவர்கள் இம்முறையில் பலநூல்களில் மாற்றம் செய்திருப்பதை இன்று காண முடிகிறது.

இப்புத்தகத்தில் அடங்கியவை என்னும் பகுதியைத் தொடர்ந்து,

**இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி** என்னுந் தலைப்பில் அடிக்குறிப்பு போன்ற இடங்களில் கையாளும் நூல்பெயர், ஆசிரியர் பெயர், உரை போன்றவற்றின் சுருக்கக் குறியீடுகளுக்குரிய விளக்கத் தொடர்களை எடுத்துக்காட்டியிருப்பது, அந்தச் சுருக்கத் தொடர் எதைக் குறிக்கிறது என்பதை அறிய நூலின் தொடக்க இடமே துணை புரிகிறது.

**பக்கத்தலைப்பு** - ஒவ்வொரு நூலிலும் பக்கங்களின் தலைப்பில் இடது புறம் நூற்பெயர், வலது பக்கம் காதை, இயல் போன்ற அப்பகுதியின் உட்தலைப்பு ஆகியவை அமைவது பெரும்பயன் தருவதாகும். இன்றைய சிலநூல்களின் முதல் ஏடு இல்லாமற் போனால், அது என்ன நூல் என்பதையே அறியமுடியாமல் பக்கங்களின் தலைப்பு வெற்றிடமாகவே இருப்பது கண்கூடு.

**பக்கஎண்** - ஒவ்வொரு பக்கத்திற்குமுரிய எண்கள் வலது பக்கத்தில் வலது ஓர மூலையிலும் இடது பக்கத்தில் இடது ஓர மூலையிலும் அமைக்கப் பெறுவது, எளிமையாக ஏடுகளைத் தள்ளியவாறே எண்களைக் காணப்பெரிதும் துணைபுரியும். இம்முறையே அவர்தம் நூல்களில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. நூல்பக்கங்களின் இடைப்பகுதியில் பக்க எண் இடம் பெற்றால், பக்கங்களை, ஏடுகளை முழுமையாகத் தள்ளித்தான் பார்க்க வேண்டும் என்பது இங்கே அறிய வேண்டிய ஒன்று.

தொடக்க வெளியீடுகளின் வழி, பதிப்புப்பணிகளை முடித்து வெளியீட்டின் அமைப்பு நெறிகளை முறைப்படுத்திக் கூறாமல் தம் வெளியீடுகளின் வழி செய்முறைப்படுத்திக் காட்டி வழிகாட்டி யிருப்பதே நம் வழிகாட்டி அவர்களின் தனிச்சிறப்பு வழிகாட்டும் நெறிகளாகியுள்ளன.

# இயல்-4

## வழிகாட்டும் வெளியீட்டு நெறிகள்

### நூல்களின் முகவுரை

நூல்பெயர் முதலிய அடங்கிய முதலேடு உள்ளுரை, எடுத்தாண்ட நூற்பெயரகராதி போல்வனவற்றையடுத்து, அனைத்து வெளியீடுகளிலும் இடம்பெறுவது முகவுரை என்னும் பதிப்பு வரலாற்றுச் செய்திகளாகும். பதிப்புப்பணியில் வழிகாட்டும் முதற்பகுதியாதலின், ஒருசில வெளியீடுகளில் இடம்பெறும் முகவுரைகளின் சுருக்கம் தொகுத்துத் தரப்பெறுகிறது.

### சீவகசிந்தாமணி

தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களுள் முந்தியதாக அமைவது சீவகசிந்தாமணி, திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவரால் இயற்றப் பெற்றது. முதல் நூல் எது என்பது தெளிவாக அறிய இயலவில்லை என்றாலும் வடமொழியிலுள்ள **க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்த சம்பு** ஆகிய நான்கு நூல்களிலும் சீவகன் சரிதம் இடம்பெற்றுள்ளது. மகாபுராணத்தின் ஒரு பாகத்திலும், மணிப்பிரவாளமாகிய ஸ்ரீபுராணத்தின் ஒரு பாகத்திலுங்கூட இந்தச் சீவகன் சரித்திரம் இடம் பெறுகிறது. ஆனால் இவற்றுள் கதையமைப்புச் சிறுசிறு வேறுபாடுகளுடன் காணப்பெறுகிறது.

நூலினுள் 3145 பாடல்கள் இடம்பெறுகின்றன. இதன் 3143 ஆம் பாடலில், திருத்தக்கதேவர் இயற்றிய பாடல்கள் 2700 என்று குறிப்பிடுகிறார் நச்சினார்க்கினியர். எனவே பிற, பிறரால் இயற்றிச் சேர்க்கப் பெற்றவை என்று கருதப் பெறுகிறது.

'சீவகசிந்தாமணியை நச்சினார்க்கினியர் உரையுடன், பல பிரதி ரூபங்களைக் கொண்டு நன்றாகப் பரிசோதித்து **எழுதுவோரால் நேர்ந்த வழுக்களை** மாற்றிப் பலருக்கும் பயன்படும் வண்ணம் அச்சிடுவிக்க முயலும்படி சில வருடத்திற்கு முன் சேலம் ம.ள.ள.ஸ்ரீ **இராமசாமி முதலியார்** அவர்கள் பலமுறை வற்புறுத்திக் கூறித் தம்பாலிருந்த கையெழுத்துப் பிரதியையுங் கொடுத்தார்கள்' என்னும் முகவுரைக் கூற்று நூல்வெளியாவதற்கு முதற்காரணமாயமைந்தது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

"எழுத்துஞ் சொல்லும் மிகுந்துங் குறைந்தும் பிறழ்ந்துந் திரிந்தும் பலவாறு வேறுபட்டுக் கிலமுற்றிருந்த இந்த நூலுரைப் பழைய பிரதிகள் பலவற்றையும் பலகால் ஒப்புநோக்கி, இடையறாது பரிசோதனை செய்து வந்த பொழுது,

கவிகளின் சுத்த வடிவத்தையும் உரையின் சுத்த வடிவத்தையும் கண்டுபிடித்தற்கும், உரையினும் விசேட உரை இன்னது, பொழிப்புரை யின்னது என்று பிரித்தறிதற்கும், மேற்கோள்களின் முதலிறுதிகளைத் தெரிந்து கோடற்கும், பொழிப்புரையை மூலத்தோடு இயைத்துப் பார்ப்பதற்கும், பிழையைப் பிழையென்று நிச்சயித்துப் பரிகரித்தற்கும், பொருள் கோடற்கும் எடுத்துக் கொண்ட முயற்சியும், அடைந்த வருத்தமும் பல." இது முகவுரைச் செய்தி - அக்டோபர் - 1887.

*சிலப்பதிகாரம்*

காவிரிப்பூம்பட்டினத்துப் பெருங்குடி வாணிகர் மரபினராகிய கண்ணகி - கோவலன் வரலாற்றை விரித்துக் கூறுவது. தமிழ்நாட்டரசர் மூவரின் தலைநகரங்களாகிய புகார், மதுரை, வஞ்சி யென்னும் மூன்றன் பெருமைகளை விளக்குவது. பண்டைக்கால மக்களின் ஒழுகலாறுகளை எளிதில் அறியும் ஒரு கருவியாக விளங்குவது. நீதி தவறும் மன்னரை அறக்கடவுளே கூற்றாய் நின்று கொல்லும்; கற்புடை மகளிரைத் தேவரும் முனிவரும் துதித்தல் இயல்பு; இருவினையும், செய்தோனை நாடி வந்து பயன் நுகர்விக்கும் என்னும் இம்மூன்றையும் முக்கியப் பொருளாகக் கொண்டு **இளங்கோவடிகளாற்** செய்யப் பெற்றது; இவற்றைச் சிலம்பு காரணமாகத் தெரிவித்தலின் இந்நூல் **சிலப்பதிகாரம்** என்னும் பெயர்பெற்றது என்னுஞ் செய்திகளோடு முகவுரையைத் தொடங்குகிறார். இச்சுருங்கிய செய்தி ஒவ்வொரு நூலின் பதிப்புக்காலத்து முகவுரையைத் தொடங்குவதற்குச் சிறந்த வழிகாட்டியாவது தெளிவு. இச்செய்திகளுக்கு நூலின் பதிகப் பகுதி துணை நிற்கிறது.

'இம்மூன்று முக்கியப் பொருள்களையும் சிலம்பு காரணமாகத் தெரிவித்தலின் இந்நூல் **சிலப்பதிகாரம்** என்னும் பெயர் பெற்றது. இன்னும் முத்தமிழும் விரவப் பெற்றதாதலின் இந்நூல் **இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுள்** என்றும், நாடக உறுப்புகளையுடையதாதலின் **நாடகக் காப்பியமென்றும்**, உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப்

பெற்றதாதலின் **உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யு**ளென்றும் பெயர் பெறும்' என்று நூல் பெறும் பலவகைப் பெயர்களையும் அப்பெயர்களுக்காம் காரணங்களையும் விளக்கிக் கூறுவதோடு, உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் காரணப் பெயருக்குரிய ஆதாரச் சான்றுகளையுங் காட்டுவார்.

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்" (தொல்.செய். 173)

என்னும் நூற்பா அடிக்கு உரை கூறிய நச்சினார்க்கினியர், ஒரு பாட்டு இடையிடை கொண்டு நிற்கும் கருத்தினால் வருவது என்று கூறி அவை தகடூர் யாத்திரையும் **சிலப்பதிகாரமும்** போல்வன என்று சான்று காட்டினார்-

என்பது போன்று மேலும் பல சான்று காட்டுவது அவர்தம் கடின உழைப்பை எடுத்துக்காட்டுவதோடு மட்டுமன்றி, நாம் பதிப்பிக்கும் ஒவ்வொரு நூலுக்கும் இத்தகு ஆழ்ந்த ஆதாரங்களோடு நூற்பெயர்க் காரணங்களை நிறுவ வேண்டும் என்னும் வழிகாட்டியாகவும் அமைகிறது.

இந்நூல் முதல் நூலேயாகும். இளங்கோவடிகளால் இயற்றப் பெற்றது.

1. **புகார் காண்டம்** - மங்கல வாழ்த்துப் பாடல் முதல் பத்துக்காதைகளையுடையது.
2. **மதுரைக்காண்டம்** - காடுகாண்கதை தொடங்கிப் பதின்மூன்று காதைகளைப் பெற்றது.
3. **வஞ்சிக்காண்டம்** - குன்றக்குறவை முதலான ஏழுகாதைகளாலானது.

நூலைத் தெளிவுபடுத்தும் இந்த விளக்கங்களை நூலின் **பதிகம்** என்னும் முதற்பகுதியே தெளிவுபடுத்துகிறது. இவற்றைத் தவிர,

1. **இயற்றமிழின்** பாகுபாடுகளான - அகவற்பா, வெண்பா, கலிப்பா ஆகியவையும்
2. **இசைத்தமிழின்** பாகுபாடுகளாகிய - ஆற்று வரி, ஊசல் வரி, கந்துகவரி முதலிய பாவகைகளும்
3. **நாடகத்தமிழின்** பகுதியாகிய - உரைப்பாட்டுகளும் இடம்பெற்று **முத்தமிழிலக்கியத்திற்குச்** சிறப்பூட்டுகின்றன.

## இசைத்தமிழ்

நூலுள் இடம்பெறும் இசைச்செய்திகளுக்கு விளக்கம் தருவதற்காக,

1. கசபுட வெண்பா
2. தாள சமுத்திரம்
3. சுந்தாநந்தப் பிரகாசம்

- ஆகிய நூல்களை ஆய்ந்து, செய்திகளைத் திரட்டினார். அந்த நூல்களில் ஆங்காங்கு ஏற்பட்ட ஐயங்களை, இசையறிஞர்களாக விளங்கிய,

1. மகாவைத்தியநாதையர்,
2. வையை இராமசாமிஐயர்

ஆகியோரை அணுகிக் கேட்டறிந்தார். இதே போல, அபிநயம், கைமுத்திரை ஆகியவற்றின் வகைகளை, பரதநாட்டியக் கலைஞர் - **நடேச தீட்சதர்** அவர்களிடமும், யோகம் பற்றிய செய்திகளை **ஐயாசாமி சாஸ்திரியார்** அவர்களிடமும், நாட்டியம் தொடர்பான செய்திகளை **நட்டுவர்** பலரிடமும் அணுகிக் கேட்டறிந்துள்ளார் என்பது வழிகாட்டி அவர்களின் பேருழைப்புக்கு எடுத்துக்காட்டாகி நமக்கும் வழிகாட்டுகிறது.

### மணிமேகலை

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் அருளிச் செய்யப் பெற்றது இந்நூல். இதில் கூறப்பெற்றுள்ள மலை, கடல், தீவு, வனம், நாடு, நகர், ஆறு போன்றவற்றை நேரிற் கண்டாற் போலப் புலப்படச் செய்யும் நலப்பாடுடையது.

சில தெய்வங்கள், அத்தெய்வ வழிபாட்டு முறைகள், சிலசாதியார், அவர்களின் நடை, சில நகரங்கள், தீவுகள், மலைகள், வனங்கள், தோட்டங்கள், அறச்சாலைகள், மன்றங்கள் - அவை இன்னின்ன வண்ணமுடையவை என்பனவற்றையும் அவற்றின் இலக்கணங்களையும் இந்நூலின் வழி தெளிவாக அறிந்து மகிழலாம்.

சிலப்பதிகாரத் தலைவனான கோவலன் மகளாகிய **மணிமேகலையின்** வரலாறு கூறுதலின் இப்பெயர் பெறுகிறது.

மணிமேகலை பௌத்த சமயச் சார்பினளாதலின் அச்சமயக் கொள்கைகள் நிறைந்த நூல்.

"ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்" (பதிகம்-98)

முப்பது காதைகளையுடையது இந்நூல் என்பதைச் சுட்டும் இவ்வடியால், பாட்டு என்பதே காதை எனப்பெறுகிறது என்பதையும் உணரலாம்.

இந்நூல் அம்மை முதலாகிய வனப்பு எட்டினுள் **இயைபு** என்னும் வனப்பையுடையது. **இயைபு** என்பது,

"ஞகாரை முதலா னகாரை யீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே" (தொல்.செய். 240)

அதாவது ஞ, ண, ந, ம, ன; ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு ஈற்று மெய்யினுள் ஏதேனும் ஒரு மெய்யையே ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் பெற்று முடிவது **இயைபு** வனப்பாகும். இந்த அடிப்படையில்,

பதிகம் - 'ஆறைம் பாட்டினுள் அறியவைத் தானெென்'

காதை-1 'அணிவிழா வறைந்தனன் அகநர் மருங்கென்'
காதை-2 'கையற்றுப் பெயர்ந்தனன் காரிகை திறத்தென்'
காதை-3 'புகுந்தனள் மணிமே கலையென்'
காதை-4 இளங்கோ முன்னென்'
- - - - - - - - - - - - - - - - - - - -

காதை-16 'காரிகை தானென்'
காதை-17. 'அம்பல மருங்கென்'
காதை-18. 'இறைமகன் றானென்'
- - - - - - - - - - -

காதை-27 'ஐவகைச் சமயமு மறிந்தன ளாங்கென்'
காதை-28 'மணிமே கலையென்'
காதை-29 'அறிந்துகொ ளாய்ந்தென்"
காதை-30. 'பவத்திற மறுகெனப் பாவைநோற் றனளென்'

இவ்வாறு பதிகம் தொடங்கி முப்பது காதைகளின் முடிவுத்தொடர்கள் 'ன'கர மெய்யீறு பெற்றே முடிகின்றனவாதலின் மணிமேகலை இலக்கியம் **இயைபு** என்னும் வனப்பாகிய இலக்கண நெறியைக் கொண்டு அமைகிறது என்பது தெளிவு.

## பத்துப்பாட்டு

மதுரை சங்கப்பலகையில் வீற்றிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்களாகிய நக்கீரனார் முதலிய எண்மரால் இயற்றப் பெற்ற திருமுருகாற்றுப்படை - - - - என்னும் பத்துமாகும்.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து"

என்பதனால் இவற்றின் பெயர்களும் முறையும் விளங்கும்.

"சோழன் கரிகால் பெருவளத்தானை, முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநராற்றுப்படைக்கு, மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று" என்பது போல ஒவ்வொரு பாட்டுக்குரிய உரையின் ஈற்றிலும் பாடப்பெற்றோர், பாடியோர் பெயர்களும் காணப்பெறுகின்றன. இவற்றின் வழி-

| பாட்டு | பாடப்பெற்றோர் | பாடியவர் |
|---|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | முருகபெருமான், அறுபடை வீடு | நக்கீரனார் |
| 2. பொருநராற்றுப் படை | சோழன் கரிகால் பெருவளத்தான் | முடத்தாமக் கண்ணியார் |
| 3. சிறுபாணாற்றுப்படை | நல்லியக்கோடன் | நல்லூர் நத்தத்தனார் |
| 4. பெரும்பாணாற்றுப்படை | தொண்டைமான் இளந்திரையன் | கடியலூர் உருத்திரங் கண்ணனார் |
| 5. முல்லைப்பாட்டு | தோழியர் தம்முட் கூறல் | நப்பூதனார் |
| 6. மதுரைக்காஞ்சி | பாண்டியன் நெடுஞ்செழியன் | மாங்குடி மருதனார் |
| 7. நெடுநல்வாடை | பாண்டியன் நெடுஞ்செழியன் | நக்கீரனார் |
| 8. குறிஞ்சிப்பாட்டு | ஆரிய மன்னன் பிரகத்தனுக்கு | கபிலர் |
| 9. பட்டினப்பாலை | சோழன் கரிகால் பெருவளத்தான் | கடியலூர் உருத்திரங் கண்ணனார் |
| 10. மலைபடுகடாம் | நன்னன் | பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார். |

என்னும் பத்துப்பாடல்களும் புலவர் எண்மரால் பாடப் பெற்றுள்ளதை அறியலாம். இவற்றுள்,

*1. திருமுருகாற்றுப்படை* – முருகக் கடவுள் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம் முதலாகிய ஆறுபடை வீடுகளைப் பாராட்டியுரைக்கும் பாட்டு. முருகக்கடவுளின் திருவுருவச்சிறப்பு, அவர் அணியும் மாலை, சூரரமகளிர் செயல்கள், முருகன் எழுந்தருளும் யானையின் இயல்பு, ஆறு திருமுகங்களின் பண்பு, பன்னிரண்டு திருக்கரங்கள் ஆற்றுவன, குன்றக் குரவையின் நிகழ்ச்சி, அவரைத் துதிக்கும் முறை, அருள்பெறும் வழி போல்வனவற்றை விரித்துக் கூறுவது.

*2. பொருநராற்றுப்படை* – போர்க்களம் பாடும் பொருநர் இயல்பு, கரிகாற் பெருவளத்தானின் வழங்கும் இயல்பு, பொருநர் பொற்றாமரை பெறுதல், கரிகாற் பெருவளத்தானின் வெற்றி, காவிரியின் பெருமை போல்வனவற்றைச் சிறப்பித்துப் பாடுவது.

*3. சிறுபாணாற்றுப்படை* – பரிசில் பெற்ற பாணன் ஒருவன், பரிசில் பெற விரும்பிய பாணன் ஒருவனை ஓய்மா நாட்டு நல்லியக்கோடனிடத்து ஆற்றுப்படுத்துவது. விறலியின் உவமைகள், வஞ்சி, கொற்கை, மதுரை, உறந்தை ஆகிய மன்னர் நகரங்கள், நல்லியக் கோடனின் நற்குணம், வீரச்செயல், வள்ளல் தன்மை போன்றவற்றைத் தொகுத்துக் கூறும் பாட்டு.

*4. பெரும்பாணாற்றுப்படை* – பெரும்பாணன் ஒருவனைத் தொண்டைமான் இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவது. இளந்திரையன் செங்கோல்முறை, உப்பு வணிகர், எயிற்றியர், கானவர், எயினர் அரண், மறவர் வீரம், ஆய்மகள் இயல்பு, வலைஞர் இருப்பு, தெரு, பட்டினம், கலங்கரை விளக்கம் ஆகியவற்றின் சிறப்பு ஆகியவற்றைச் சிறப்புறப் பாடி, பரிசிலரை மன்னன் உபசரிக்கும் முறை கூறி ஆற்றுப்படுத்துவது.

*5. முல்லைப்பாட்டு* – போருக்குச் செல்ல விரும்பிய தலைவனது கருத்தை அறிந்த தலைவி ஆற்றாளாய போது, பெருமுது பெண்டிர் ஆற்றுவித்தலும், போர் முடித்து வரும் தலைவனைக் கண்டு தம்முள் கூறுதலுமாகிய நிகழ்ச்சிகளைத் தெளிவுபடுத்திக் கூறும்பாட்டு.

**6. மதுரைக்காஞ்சி** – போர்ச்செயலிலேயே மூழ்கியிருந்த பாண்டியன் **நெடுஞ்செழியனுக்கு**, நிலையாமையை அறிவுறுத்த, முன்னோர்தம் நல்லியல்புகளைக் கூறிப் பாராட்டுவதன் வழி அமைதிபடுத்திய பல்வகைச் சிறப்புகளைப் பாடுவது

**7. நெடுநெல்வாடை** – கூதிர் காலத்து வருத்தநிலைகளோடு, தலைவியின் ஆற்றாமையும் தலைவன் புண்பட்ட வீரர்களிடத்துக் காட்டிய அன்பு முதலியவற்றையும் விரித்துக் கூறும் பாட்டு.

**8. குறிஞ்சிப் பாட்டு** – களவொழுக்கம் கூறும் பாட்டு. விரகவேறுபாடுகள், களிறுதருபுணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, அகத்திணைக் கடவுளாகிய முருகனைப் பற்றிய செய்திகள் போல்வன இடம்பெறுகிறது.

**9. பட்டினப்பாலை** – பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறும் பாலைத் திணைப்பாட்டு. சோழநாடு, காவிரிபூம்பட்டினம் ஆகியவற்றின் சிறப்பு, **கரிகாற் பெருவளத்தானின்** வீரம், பரதவர் வாழ்க்கை, வருண வழிபாடு போல்வன தொடர்ந்து இடம் பெறுகின்றன.

**10. மலைபடுகடாம்** – மலைச்சாரலின் வளம், அங்கு வாழும் குறவர், வேடர், விருந்து உபசரிப்பு முறை, கூத்தர், விறலியர் ஆகியோருக்குப் பரிசில் நல்கல் போல்வன இப்பாட்டில் சிறப்பிடம் பெறுகின்றன.

இத்தகு விரிவான செய்திகளடங்கியது பத்துப்பாட்டின் முகவுரை.

### பரிபாடல்

**"பரிபா டல்லே தொகைநிலை விரியின்**
**இதுபா வென்னு மியல்நெறி யின்றிப்**
**பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப"**

**(தொல்.செய். 120)**

என்பதனால் பரிபாடல் என்பது வெண்பா உறுப்பாக வரினும் இன்னபா வென்பது உணரப் படாமல் பொதுப்பட நிற்கவும் உரித்து என்னும் அமைப்பையுடையது என்பது தெளிவாகும். அதாவது, பரிபாடலென்பது பரிந்து வருவது; கலியுறுப்புப்போலாது பல வடிவும் ஏற்று வருவது எனப்பெறும்.

இத்தகு அமைப்பையுடைய பரிபாடலால் இயன்றது ஆதலின் நூலும் இப்பெயர் பெற்றது. சங்கப் புலவர்கள் செய்த எட்டுத் தொகையுள் ஐந்தாவது இடத்தைப் பெறுவது.

மதுரை, வையையாறு, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலை மலை என்பவற்றின் பண்டைக் கால நிலைமைகளை உணர்த்துகிறது இந்நூல். இவற்றைத் தவிர அக்கால நாகரிகம், வைதிக ஒழுக்கம், தெய்வ வழிபாட்டு முறை போன்ற தமிழ்நாட்டு வரலாறுகள் பலவற்றை அறிதற்குரிய உயர்ந்த கருவியாக விளங்குவது இந்நூல்.

நூலுள் இருபத்து இரண்டு பாடல்கள் பரிபாடல் வடிவில் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்கள் குறைந்தது 32 அடிகளையும் உயர்ந்தது 140 அடிகளையும் பெற்றுள்ளன. அவை முறையே,

1) 1, 2, 3, 4, 13, 15 ஆகிய ஆறும் திருமாலைப் பற்றியவை.

2) 5, 8, 9, 14, 17, 18, 19, 21 ஆகிய எட்டும் செவ்வேளைக் குறிப்பவை.

3) 6, 7, 10, 11, 12, 16, 20, 22 ஆகிய எட்டும் வையையாற்றைச் சிறப்பிப்பவை.

| **பா. எண்.** | **பாடப்பெறுவோர்** | **பா அடி** | **பாடியோர்** |
|---|---|---|---|
| 1. | திருமால் | 1-65 அடி | கீரந்தையார் |
| 2. | திருமால் | 1-76 அடி | கீரந்தையார் |
| 3. | திருமால் | 1-94 அடி | கடுவன் இளவெயினனார் |
| 4. | திருமால் | 1-73 அடி | கடுவன் இளவெயினனார் |
| 5. | செவ்வேள் | 1-81 அடி | கடுவன் இளவெயினனார் |
| 6. | வையை | 1-106 அடி | ஆசிரியன் நல்லந்துவனார் |
| 7. | வையை | 1-86 அடி | மையோடக் கோவனார் |
| 8. | செவ்வேள் | 1-130 அடி | ஆசிரியன் நல்லந்துவனார் |
| 9. | செவ்வேள் | 1-85 அடி | குன்றம்பூதனார் |
| 10. | வையை | 1-131 அடி | கரும்பிள்ளைப் பூதனார் |
| 11. | வையை | 1-140 அடி | ஆசிரியன் நல்லந்துவனார் |
| 12. | வையை | 1-103 அடி | நல்வழுதியார் |
| 13. | திருமால் | 1-64 அடி | நல்லெழுநியார் |
| 14. | செவ்வேள் | 1-32 அடி | கேசவனார் |
| 15. | திருமால் | 1-66 அடி | இளம்பெருவழுதியார் |

| | | | |
|---|---|---|---|
| 16. | வையை | 1-55 அடி | நல்லழிசியார் |
| 17. | செவ்வேள் | 1-53 அடி | நல்லழிசியார் |
| 18. | செவ்வேள் | 1-56 அடி | குன்றம்பூதனார் |
| 19. | செவ்வேள் | 1-105 அடி | நப்பண்ணனார் |
| 20. | வையை | 1-111 அடி | ஆசிரியன் நல்லந்துவனார் |
| 21. | செவ்வேள் | 1-70 அடி | நல்லச்சுதனார் |
| 22. | வையை | 1-49 அடி | ---- ---- ---- |

என்னும் முறையில் பாடல்கள் அமைகின்றன.

## ஐங்குறுநூறு

எட்டுத் தொகையுள் மூன்றாவது இடம்பெறும் நூல். அக இலக்கண அமைப்புக்கு ஒரு இலக்கியமாக விளங்குவது. வாழ்த்துப்பா ஒன்றுடன் 501 பாக்களாலானது. இப்பாக்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையுங் கொண்டவை.

கடவுள் வாழ்த்து பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப் பெற்றது. பிற திணைப்பாக்களுள்,

| | |
|---|---|
| முதல் நூறாகிய **மருதம்** | - ஓரம்போகியார் |
| இரண்டாம் நூறாகிய **நெய்தல்** | - அம்மூவனார் |
| மூன்றாம் நூறாகிய **குறிஞ்சி** | - கபிலர் |
| நான்காம் நூறாகிய **பாலை** | - ஓதலாந்தையார் |
| ஐந்தாம் நூறாகிய **முல்லை** | - பேயனார் |

என்னும் அமைப்பில் ஐம்பெரும் புலவர்கள் உருவாக்கியுள்ளனர். இவற்றை இம்முறையில் - அதாவது மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் முறையில் தொகுத்தவர் **புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்** ஆவார். அவரைத் தொகுக்கச் செய்தவர் **யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை** என்பவர் ஆவார். இந்த முறை வைப்பு சுவடி எழுதியோர் போன்ற பிறரால் தங்கள் விருப்பம் போல் மாற்றிஅமைக்கப் பெற்றதன்று என்பது,

**"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்**
**கருதுங் குறிஞ்சி கபிலன் – கருதிய**
**பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே**
**நூலையோ தைங்குறு நூறு"**

என்னும் வெண்பாவால் தெளிவு பெறுகிறது.

"மாயோன் மேய மைவரை யுலகமும்

- - - - - - - - - - - - - - - - - - - - -

முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல்.அகத். 5)

என்னும்நூற்பா நில அமைப்புகளை முறைப்படுத்திக் காட்டுகிறது. என்றாலும், சொல்லிய முறையாற் **சொல்லவும் படும்** என்னும் உம்மையால், வேறு முறைவைப்பாலும் சொல்லவும் படும் என்று உணர்த்தியுள்ளதால், ஐங்குறுநூற்றைத் தொகுத்த கூடலூர் கிழார் இம்முறையில் - அதாவது, மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் முறையில் தொகுத்தார்.

ஐந்திணைகளடங்கிய பிறநூல்களும் இம்முறைவைப்பில் வெவ்வேறு வைப்பு முறைகளைக் கையாண்டுள்ளன. சான்றாக,

| | |
|---|---|
| கலித்தொகை | - பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் |
| ஐந்திணையைம்பது | - முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் |
| திணைமாலை, நூற்றைம்பது | - குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் |
| மதுரைக்காஞ்சி | - மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் |

என இவ்வாறு பல நூல்களும் பொருள் வைப்பின் அடிப்படையில் நிலஅமைப்பைப் பலவாறு மாற்றி அமைக்கின்றன. ஆனால் எந்த நூலிலும் நெய்தல் தொடக்கத்தில் இடம்பெறவில்லை.

இவ்வாறே நமது வழிகாட்டி அவர்களின் வெளியீடுகள் அனைத்திலும் முகவுரைப் பகுதி தொடக்கத்தில் இடம்பெறும் முறை வைப்பில் வழிகாட்டுகிறது. சுவடிப்பதிப்பு வெளியீடுகளில் சிறப்பாக, நூலின் அமைப்புகளும் உட்கருத்துகளும் இடம்பெறுவதோடன்றி, சுவடிகளுக்காகத் தாம் மேற்கொண்ட வழிமுறைகளும், அவை கிடைத்த இடங்களும் நிலைநிறுத்தப் பெறுகின்றன. நூல் கருத்துகளில் ஐயங்களை நீக்குவதிலும் வேறுபலவகை உதவிகளிலும் துணைநின்ற சான்றவர் பலரும் முகவுரையுள் நன்றியுணர்வுடன் இடம் பெறுகின்றனர்.

இந்த வழிகாட்டு முறைகளைப் பின்பற்றி, சுவடிப்பதிப்பினை மேற்கொள்ளும் இக்காலப் பதிப்பாசிரியர்கள், பதிப்பாசிரியர்தம்

உழைப்புகளை வெளிப்படுத்தும் இந்த முதற் பகுதியைப் **பதிப்புரை** என்னும் தலைப்பில் உருவாக்குகின்றனர். இவற்றுள் ஒரு பகுதியாகிய நூலின் அமைப்பை **ஆய்வுரை** என்னும் தனித்தலைப்பில் வெளியிடுகின்றனர்.

## புறநானூறு

எட்டுத்தொகை என்னும் சங்க நூலுள் எட்டாவது நூலே புறநானூறு என்னுந் தொகை நூல். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பன பிற ஏழுநூல்கள். இவை பலரால் இயற்றப் பெற்றுத் தொழில், அளவு, பாட்டு, பொருள் என்னும் அடிப்படையில் தொகுக்கப் பெற்றவையாதலின் தொகை நூல் எனப்பட்டது. இந்நூல் நானூறு அகவற்பாக்களால் தொகுக்கப்பெற்றுள்ளது.

பாரதம் பாடிய **பெருந்தேவனார்** பாடியது கடவுள் வாழ்த்து. பிறவாகிய முன்னூற்றுத் தொண்ணூற்றொன்பது பாடல்களும் **முரஞ்சியூர் முடிநாகனார்** தொடங்கி கோவூர் கிழார் ஈறாகப் பலரால் பாடப்பெற்றவையாகும். தொகுத்தோர் தொகுப்பித்தோர் யார் என்பது தெரியவில்லை.

புறமாவது, தலைவன் தலைவியராகிய அன்புடையார் மட்டுமன்றி எல்லோராலும் உணரப்பட்டு இவ்வாறு இருந்ததெனப் பிறருக்கும் எடுத்துக் கூறப்படும் பொருளாகும். இந்நூல் வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைப்பொருள்கள் அடங்கிய நானூறு பாக்களைக் கொண்டது.

இந்நூலுள் புறத்திணைக்குரியனவாகிய வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய பன்னிரண்டு திணைகளும் இடம்பெறுகின்றன. இத்திணை என்பன ஒழுக்கங் களைக் காட்டுவனவாகும்.

மக்களும் மாவும் முதலாயின சென்று நீருண்ணும் நீர் நிலைத் துறையைப் போலப் பலவகைப்பட்ட பொருளும் ஒருவகைப் பட்டு ஒழுகுதலாகிய வழிகளைக் கூறுவன துறைகள் எனப்பெறும். அத்தகு துறைகளும் திணைகளுள் இடம்பெறுகின்றன. இவ்வாறு வகைப்படுத்தப் பெற்ற நிலைகளுக்குள் உருவாக்கப் பெற்றுள்ள இப்பாடல்களுள்,

பண்டைய முடியுடை மூவேந்தர்களின் சிறப்புறு வரலாறுகள் பலவும் இடம்பெறுகின்றன. அம்மன்னர் வரலாறுகளைத் தவிர சிற்றரசர் பலர், சிறப்புடை அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள் போன்றோர் வரலாறுகள் கிடைக்கின்றன. கடைச்சங்கப் புலவர் வரலாறுகளும் அக்காலத்தார் மொழிநடைகளும் நூலாலறியப்படுவனவாகும்.

இந்நூலினைப் பதிப்பித்து வெளியிடுதற்குத் துணை நின்றவை, மூலச்சுவடிகளும், பழைய உரையுடன் கூடிய சுவடிகளுமாகப் பதின்மூன்று சுவடிகளாகும்.

இச்சுவடிகளுள் மூலப்பாடல்கள் சிலவற்றில் எழுத்துஞ் சொல்லும் மிகுந்துங் குறைந்தும், பிறழ்ந்துந் திரிந்தும் பலவாறு காணப்பட்டன. சில பாடல்களின் இறுதியில் திணை எழுதப் பட்டிருக்காது. சிலவற்றின் இறுதியில் துறை இருக்காது. சிலவற்றின் இறுதியில் திணை, துறை இரண்டுமே எழுதப்பட்டிருக்காது. பாடினோர் பெயர் சிதைந்து காணப்பட்டன. சிலவற்றில் பாடப் பட்டோர் பெயர் சிதைந்து கிடந்தன. சில பாடல்களில் பாடியோர், பாடப்பட்டோர் ஆகிய இரண்டு பெயர்களும் சிதைந்து கிடந்தன.

சில பாடல்கள் இரண்டு இடங்களில் எழுதப்பட்டு இரண்டுக்கும் வெவ்வேறு எண்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அதே போல இரண்டு பாடல்கள் ஒரே இடத்தில் ஒரே எண்ணின் கீழ் எழுதப்பெற்றிருந்தன.

முதல் குறைந்தும், இடைக்குறைந்தும் கடைக்குறைந்தும் காணப்பட்ட அடிகள் பலப்பல. வந்த அடியே மீண்டும் வந்த இடங்கள் பல.

ஜி.யு. போப் துரையவர்கள் இந்நூலில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். இது நூலாக வெளிவந்த போது நூலைப் பாராட்டி நமது வழிகாட்டி அவர்களுக்கு அடிக்கடி எழுதி வந்தார்கள். ஆங்காங்கே சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். ஒவ்வோராண்டும் ஆங்கில வருஷப் பிறப்பன்று ஒரு பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நமது வழிகாட்டி அவர்களுக்கு அனுப்பி வந்திருக்கிறார்கள்.

இவை புறநானூற்று முகவுரைக் கருத்துகளின் சுருக்கம்.

## பதிற்றுப் பத்து

எட்டுத்தொகை நூல்களின் வரிசையில் நான்காவதாக இடம் பெறுவது பதிற்றுப்பத்து என்னும் இந்நூல். பத்துப்பத்து அகவற்பாக்களாகப் பத்துப் பகுதிகள் அடங்கிய நூலாதலின் இது பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது.

பத்து + பத்து - இற்றுச் சாரியை பெற்றுப் பதிற்றுப் பத்து ஆயிற்று (நன். 244).

புலவர் ஒவ்வொருவரும் சேரமன்னர் ஒவ்வொருவரைப் பாடிய பாடல்களடங்கிய ஒரு தொகுப்பு நூல். தொகுத்தோர் தொகுப்பித்தோர் யார் என்பது அறிய இயலவில்லை. குறிப்பிட்ட மன்னன் ஒருவனைப் பற்றிய ஒரு சில வரலாற்றுச் செய்திகள் பிறதொகை நூல்களுள் இடம்பெற்றிருப்பினும் மன்னர் ஒருவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளாகப் பத்துபாடல்களில் தொடர்ந்து வரும் முழுமையைப் பெற்றது இந்நூல் மட்டுமே எனலாம். புலவர் பதின்மர்; மன்னர் பதின்மர் என இடம்பெறும் நூல்.

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அப்பாடற் பொருளமையும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகள் பாடியோராலேயே குறிப்பிடப் பெற்றுள்ளன. சிறப்பாக நான்காம் பத்து அந்தாதி நடையில் அமைவது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு பத்துப்பாட்டின் இறுதியிலும் பதிகம் என்னுந் தலைப்பில் ஒரு பாடல் இடம்பெறுகிறது. அப்பதிகப் பாடலில் பாட்டுடைத் தலைவன் பெயர், பாடிய புலவர் பெயர், மேற்காணும் பத்துப்பாடல்களையும் பாடிப் புலவர் பெற்ற பரிசில்கள், அந்தப் பத்துக்குரிய சேரமன்னன் ஆட்சி புரிந்த கால அளவு போன்ற செய்திகள் இடம்பெறுகின்றன. இவை மெய்க்கீர்த்தியின் தன்மையைப் பெற்றுள்ளது என்பர்.

மேலே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இடம்பெறும் துறைகளாக,

| | |
|---|---|
| இயன்மொழி வாழ்த்து, | உழிஞையரவம் |
| ஒள்வாளமலை, | களவழிக் காட்சி வாழ்த்து |
| காவன்முல்லை, | குரவை நிலை |
| செந்துறைப்பாடாண் பாட்டு, | தும்பையரவம் |

| | |
|---|---|
| நாடு வாழ்த்து, | பரிசிற்றுறைப் பாடாண் பாட்டு |
| பாணாற்றுப்படை, | பெருஞ்சோற்றுநிலை |
| முல்லை, | வஞ்சித்துறைப் பாடாண் பாட்டு |
| வாகை, | வாகைத்துறைப் பாடாண் பாட்டு |

விறலியாற்றுப்படை - ஆகிய துறைகள் காணப்பெறுகின்றன.

**சிற்றிலக்கியங்களுள் முகவுரை**

**சான்று ஒரு இலக்கியம்**

**மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது**

**"பயிறருங் கலிவெண் பாவி னாலே**
**உயர்திணைப் பொருளையு மஃறிணைப் பொருளையுஞ்**
**சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்**
**பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே"**
**(இலக். விள. 874)**

'காம மிக்க கழிபடர் கிளவி' என்னும் அகத்திணைத்துறையின் பாற்பட்டது.

"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே" (நன். 409)

என்னும் இலக்கண அமைப்பு, தூது இலக்கியங்களைக் குறித்து உருவானதாகும்.

மதுரைச் சோமசுந்தரக் கடவுள்பாற் காதற் கொண்ட தலைவி ஒருத்தி விரகத்தால் துன்புற்றுத் தமிழை அவர்பால் தூது விடுத்ததாகப் பாடப்பெற்றுள்ளதே **தமிழ்விடுதூது** என்னும் இவ்விலக்கியம்.

இது புறத்திணைத்துறைகளுள் கடவுண்மாட்டுமானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின் பாற்படும். 268 கண்ணிகளால் உருவாக்கப் பெற்றுள்ள நூல்.

சிவபெருமான் முதல் அகத்தியர், தொல்காப்பியர் போன்றோரைச் சுட்டி, எல்லாரும் நீயாயிருந்தமையால், உன் பொன்னடிகளே புகலாப் போற்றினேன், என்னும் தலைவிக் கூற்றோடு நூல் தொடங்குகிறது.

"பஞ்சுபடா நூலே! பலர்நெருடாப் பாவே!
அழுக்கேறாக் கலையே! நிறந்தோயாச் செந்தமிழே!
சொல்விளையுஞ் செய்யுளே!

என்றெல்லாந் தமிழை விளிக்கிறாள் தலைவி.

"நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்
கொராயிரம்பொ னீந்த வுலாவும் – பராவுமவன்
பிள்ளைத் தமிழு முன்னாம்"

எனத் தொடங்கித் தமிழ் படைத்த இராசராச சோழனுலா, குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் - - - - போல்வனவற்றைச் சுட்டுகிறது நூல் என்பன போன்ற செய்திகளைச் சுருங்கத் தருகிறது நூல் முகவுரை.

## நூலாசிரியர் வரலாறு

சுவடிப் பதிப்புகளை மேற்கொள்ளும்போது, பாட்டு நடையில் அமையும் நூல்களை மூலம், உரை என்று கண்டு மூல நூலாசிரியர், உரையாசிரியர் என்போரை அறிந்து அவர்கள்தம் வரலாறுகளைக் கூறும் முறையைச் சிறப்பாகக் கையாண்டு, நமக்கும் வழிகாட்டியிருக்கிறார். ஒரே நூலுக்குப் பலருடைய உரையிருக்குமேயாயின் அவர்களையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

சங்கநூல்களுள் பல, புலவர் பலரால் பாடப்பெற்ற பாடல்களை அகப்பொருள் புறப்பொருள் என்னும் பொருள் அடிப்படையிலும், பாடல் களின் அடிப்படையிலும், பாடல் அளவின் அடிப்படையிலும் தொகுத்து நூல் வடிவாக்கியுள்ளனர் என்பது இன்றைய நிலையில் நாம் தெளிவாக அறிந்த செய்தியாகும். அத்தகு தொகைநூல்களைப் பதிப்பிக்கும் நிலையில், பாடல் ஆசிரியர் அவரால் பாடப் பெற்றோர் அவற்றைத் தொகுத்தோர், தொகுக்கச் செய்தோர், உரையாசிரியர் போன்ற பலர் தம் வரலாறுகளையும் வெளியிட்ட பெருமை நமது வழிகாட்டி அவர்களுக்கு உண்டு. இன்றைய நிலையில் அவ்வரலாறுகளை அறிவதற்குப் பல துணைக்கருவிகள் நமக்குப் பயன்படுகின்றன. 1900 ஆண்டுகளில், துணைக்கருவிகள் என்று எதுவும் இல்லாத நிலையில்,

1. அந்தந்த நூல்களில் இடம்பெறும் பாயிரச் செய்திகள், பதிகச் செய்திகள்,

2. அந்தந்தப் பாடல்களின் இறுதியிலும், உரையாசிரியர் விளக்கங்களின் இறுதியிலும் இடம் பெறும் செய்திகள்

போன்றவை இவ்வரலாறுகளை வெளியிடத் துணைக்கருவிகளாக இருந்துள்ளன.

இத்தகு துணைக்கருவி முறைகள் எதுவும் இல்லாத நிலையில் வரலாறுகள் மட்டுமன்றி, பழம்பெரும் வழக்காறுகளையும் தலைமுறைச் செய்திகளையும் அந்தந்த நாட்டுப் பகுதியைச் சேர்ந்த, துறை வல்லுநர்களாம் சான்றோர்களை நாடி அறிந்து கொள்ளுவதே ஒருவகைத் துணைக்கருவியாக இடம் பெற்றுள்ளது. இத்தகு அனைத்துத் துணைக்கருவிகளுமே நமது வழிகாட்டி அவர்களுக்குத் துணை நின்றிருக்கின்றன.

இவற்றின் துணை கொண்டு, அந்தந்த நூல்களுக்கு ஏற்ப,

1. நூலாசிரியர் வரலாறு 2. ஆசிரியரால் பாடப் பெற்றோர் வரலாறு 3. உரையாசிரியர் வரலாறு 4. தொகுத்தோர் வரலாறு 5. தொகுக்கச் செய்தோர் வரலாறு போல்வனவற்றைத் தெளிவு படுத்திக் கூறி நமக்கும் வழிகாட்டியிருக்கிறார்கள்.

### திருத்தக்கதேவர்

சீவகசிந்தாமணியின் நூலாசிரியரும் சமணசமயப் பெருந்துறவியுமான திருத்தக்கதேவர் அவர்களின் வரலாற்றைத் தமிழ்நாட்டுச் சமண சமயத்தவர், கர்ண பரம்பரையாக வழங்கிவருஞ் செய்திகளைச் சமணச்சான்றோர் பலரிடத்துங் கேட்டறிந்து நூலில் இடம்பெறச் செய்திருக்கிறார்.

திருத்தக்கதேவர் சோழர் குலத்திலே உதித்தவர். நல்லாசிரியரிடத்து அகத்தியம், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் பழம்பெரும் சங்க இலக்கியச் செய்யுட்களையும் அக்காலம் வழங்கி வந்த சமய நூல்கள் பலவற்றையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெருமைக்குரியவர்.

வடமொழியில் வல்லுநராகி, ஆருகத சமய நூல்களின் பொருளுணர்ந்து, துறவறம் பூண்டவராகித் தம் ஆசிரியப் பெருந்தகையை விட்டு நீங்காது ஒழுகி வந்த சமணப் பெருந்தகையானார். தம் ஆசிரியருடன் மதுரையில் சிலகாலம்

தங்கினார். அக்காலத்துச் சங்கப் புலவர் பலர் அவருடன் நெருங்கி வந்து பழகித் தமிழ்மொழியிலுள்ள பழம்பெரும் நூல்கள் பலவற்றை எடுத்துக் கூறி மகிழ்வித்து வந்தனர்.

'ஆருகத சமயத்துப் புலவர் பலரும் **துறவறம்** பற்றியே பெரிதும் வலியுறுத்திப் பாடியுள்ளனர்; காமச்சுவையைப் பாராட்டிப் பாடத் தெரிந்தாரில்லை என்று சங்கச் சான்றோர் கருத்துகள் பல நிலவத் தொடங்கின. சமயப் புலவர்கள் இன்பச் சுவையைப் பாராட்டுவதில் வெறுப்புற்றிருந்தாரே யல்லாது பாடத் தெரியாதாரல்லர் என்று தேவர் மறுத்தார். அவ்வாறானால் காமச்சுவை முழுவதும் விளங்குமாறு அமைத்துத் தேவர் அவர்களே ஒரு நூல் இயற்றுங்கள் என்று அவர்கள் கூற, ஆசிரியர் அவர்களின் அனுமதி பெற்றுச் சீவகன் வரலாற்றை அகப்பொருள் ததும்ப இயற்றுவாராயினர்.

## இளங்கோவடிகள்

சேரமன்னன் சேரலாதனுக்கும் சோழன் மகள் நற்சோணைக்கும் பிறந்த மக்கள் இருவர். மூத்தவன் சேரன் செங்குட்டுவன்; இளையவன் இளங்கோ. அரசவையில் வந்த நிமித்தகன் ஒருவன், மக்கள் இருவரையும் கூர்ந்து நோக்கி அரசாளுரிமை இளையோர்கே உண்டு எனக் கூறினன். கேட்ட இளங்கோ, அண்ணனாகிய செங்குட்டுவனின் துன்பம் நீங்குமாறு, அந்தமி லின்பத்து அரசாளுந் துறவியாயினன். அதனால் **இளங்கோவடிகள்** ஆயினன்.

குன்றக் குறவர் பலரும் அடிகள் முன்வந்து, மலைப்பக்கத்து ஒரு வேங்கையின் கீழ், ஒரு நகில் இழந்து நின்ற பத்தினியிடம் தேவர் வந்து, அவள் கணவனைக் காட்டி, இருவரையும் விண்ணுலகுக்கு அழைத்துச் சென்றனர். இக்காட்சியை நாங்கள் கண்டோம் என்று கூறினர்.

பரிசில் காரணமாக அரசவை வந்த சாத்தன் என்பான் குறவர் உரையைக்கேட்டு, அம்மகளுக்கு நிகழ்ந்ததை யெல்லாம் நானறிவேன் என்று - கண்ணகி-கோவலன் ஆகியோர் வரலாற்றைக் கூறி, சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஒரு பாட்டுடைச் செய்யுள் இயற்றுவீராக என்று கூற, மங்கல வாழ்த்து தொடங்கி வரந்தரு காதை ஈறாக முப்பது காதைகளில்

உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுளை இயற்றியருளினார் இளங்கோடிவகள்.

துறவு பூண்ட நிலையில் இந்நூலைச் செய்தாராதலின்,

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதும்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்" (பதிகம்)

ஆகிய தருமநெறிகளை உலகத்தோர்க் களித்தல் காரணமாகவே இந்நூலை இயற்றினார்.

தமது மரபினராகிய சேரர்களின் உயர்வுகளைக் கூறியது போலவே சோழ, பாண்டியர்தம் மரபுகளைச் சிறப்பித்துக் கூறுவதில் சிறிதும் வேறுபட்டாரில்லை.

"நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி . . . . .
யிறைஞ்சி வலங்கொண்டு" (கால்கோட் - 54-57)

"செஞ்சடை வானவ னருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்!" (ஷே அடி. 98-99)

என்று சேரன் செங்குட்டுவனைக் கூறுதலின் இவரும் சைவ சமயத்தவரேயாகிறார். மலையினின்றும் விண்ணுலகெய்திய கண்ணகி - கோவலன் வரலாற்றை இளங்கோவடிகளுக்குக் கூறிய சாத்தனார், மணிமேகலை வரலாற்றைத் தாமே எழுதினார். சீத்தலைச் சாத்தனாரால் செய்யப் பெற்றது மணிமேகலை என்னும் பேராசிரியர் கூற்று, சங்கப் புலவருள் ஒருவரே சீத்தலைச் சாத்தனார் என்பதை உறுதிப்படுத்துகிறது. எனவே இளங்கோவடிகளும் சங்ககாலத்தவர் என்பது புலப்படுகிறது.

### சீத்தலைச் சாத்தனார்

மணிமேகலை என்னுங் காப்பியத்தின் ஆசிரியரும், கடைச்சங்கப் புலவருள் ஒருவருமான இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் சிறப்புப் பெயரைப் பெறுகிறார். மதுரையைச் சார்ந்தவர்; வணிக மரபினர்; கூல வியாபாரஞ் செய்தவர்; சாத்தன் என்னும் இயற்பெயரைப் பெற்றவர். இவற்றால் மதுரைக் கூல வாணிகன் சாத்தன் என்னும் பெயர்த் தொடர் உருவாயிற்று. கடைச்சங்கத்து நல்லிசைப் புலவராய் விளங்கி ஆர் விகுதி பெறுகிறார்.

சங்கத்தில் அரங்கேற்றத்திற்கு வரும் நூல்களில் குறையேதுங் கண்டால், ஆக்கியோர் மீது குறை கூறாது, இப்பிழைகளைக் காணும்படி நேரிட்டதே என்று தமது தலையில் குட்டிக்கொள்ளுவார். அதனால் தலையில் புண் உண்டாகிச் சீழ் ஏற்பட்டது. இதனால் சீத்தலைச் சாத்தனாராயினார்.

சீத்தலைத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் சாத்தன். சீத்தலைச் சாத்தனார் என்று சிறப்பிப்பர். அப்பெயரே இவர் இயற்பெயர் என்னுங் கருத்தும் உண்டு.

சேரன் செங்குட்டுவனும் இளங்கோவடிகளும் நட்புரிமை பூண்டவர்கள். மணிமேகலையின் வஞ்சிமாநகர் புக்க காதையில் செங்குட்டுவனின் செங்கோற் சிறப்பையும் வெற்றியையும் விளக்கியிருக்கிறார். இந்நூலை இளங்கோவடிகள் கேட்டிருக்கிறார்.

கண்ணகியின் வரலாற்றை இளங்கோவடிகளுக்குக் கூறிப் பண்டை வினையின் பயனால் நிகழ்ந்தவற்றை எடுத்துக் காட்டுமாறு கூறியது போலவே தம் நூலாகிய மணிமேகலையிலும் பண்டை வினையின் பயனாக விளந்த நிகழ்வுகளை,

> **"ஆங்கவன் தீவினை உருத்த தாதலின்" (22-193)**
> **"உடற்றுணி செய்தாங்கு உருத்தெழும் வல்வினை" (23-83)**
> **"காண்டகு நல்வினை நும்மையீங் கழைத்தது" (24-98)**

என்பன போன்று பலவிடங்களில் சுட்டிக் கூறுவார்.

மணிமேகலை வரலாற்றை நேரில் அறிந்தது போலவே காவிரிப்பூம்பட்டினம், வஞ்சிமாநகர், கச்சியம்பதி போன்ற பெருநகரங்களையும் கண்டறிந்து பழகிய காரணத்தால் அந்நகரங்களின் சிறப்பு, அக்காலத்து நாகரிகப் பண்பு, வளமை போன்றவற்றைச் சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார்.

அகநானூறு, புறநானூறு, திருவள்ளுவமாலை போன்றவற்றிலும் இவருடைய பாடல்கள் இடம்பெறுகின்றன. செங்குட்டுவன், இளங்கோவடிகள் ஆகியோரைப் போலவே மருத்துவன் தாமோதரனாரிடத்தும் நட்பு பூண்டிருக்கிறார்.

### பத்துப்பாட்டு பாடியோர்

1. **நக்கீரனார் - கீரனார்**, சிறப்புப் பொருளைத் தரும் இடைச்சொல் இணைந்து நக்கீரனார் என்றாயிற்று. இவர் மதுரையைச்

சேர்ந்தவர். தந்தை கணக்காயனார் (ஆசிரியர்). இவற்றால், கீரர், நக்கீரர், நக்கீரனார், நக்கீரதேவர், நக்கீரதேவநாயனார், மதுரை நக்கீரர், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்னும் பெயர்கள் ஆங்காங்கு காணப்பெறுகின்றன. இவருடைய மகனார் கொற்றனார், கீரங்கொற்றனார் என்னும் பெயர் பெற்றவர்.

நக்கீரர் இறையனாரகப் பொருளுக்கு உரைகண்டு அதனைத் தம் மகனார் கீரங் கொற்றனாருக்குக் கூறினார் என்று இறையனாரகப் பொருளுரை கூறும்.

தருமி என்னும் அந்தணன் மன்னரிடத்துப் பரிசில் பெற வேண்டும் என்பதன் பொருட்டு,

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி' என்று தொடங்கும் பாடலை எழுதிக் கொடுத்தனுப்பினார் சிவபெருமான். அப்பாடற் பொருட் குற்றமுடையது என்று நக்கீரர் மறுத்துக் கூறி, இறைவனோடும் வாதிட்டார். வாதத்தில் பெற்ற வருத்தம் நீங்கவே திருமுருகாற்றுப்படை பாடி முருகன் அருள் பெற்றார் என்பது திருமுருகாற்றுப்படை தோன்றிய வரலாற்றுச் செய்தி. இவர் இயற்றிய பாடல்கள்:

1. பத்துப்பாட்டில் - திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை
2. நற்றிணையில் ஏழு பாடல்கள்
3. குறுந்தொகையில் எட்டு
4. அகநானூற்றில் பதினேழு
5. திருவள்ளுவமாலையில் ஒன்று
6. பதினோராந் திருமுறையில் திருமுருகாற்றுப்படையைத் தவிர ஒன்பது பிரபந்தங்கள் ஆகியவை.

மதுரை மேலைமாசி வீதியில் நக்கீரர் கோயில் ஒன்று உள்ளது. அதில் இவருடைய திருவுருவம் உள்ளது. திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீமுத்துக்குமாரசாமி சிலையின் அருகே இவருடைய திருவுருவம் அமைக்கப் பெற்றுள்ளது. திருக்காளத்தியில் இவரால் நியமிக்கப் பெற்ற சிவலிங்கம் நக்கீரநாதர் என்றும் நக்கீரலிங்கம் என்றும் பெயர் பெறுகிறது.

நக்கீரர் பாடல்களுள் இடம்பெறும் இறைவர்கள் - இந்திரன், இல்லுறை தெய்வம், சிவபிரான், திருமால், பலதேவர், பிரமன், வரையாமகளிர் ஆகியோர்.

**பாடிய – உபகாரிகள்**

அருமன், எவ்வி, கிள்ளி வளவன், குட்டுவன், கோசர், கோதைமார்பன், சோழன், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், தழும்பன், தித்தன், திதியன், திரையன், பசும்பூட்பாண்டியன், பழையன் மாறன், பாண்டியன் இலவந்திகை துஞ்சிய நன்மாறன், பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன், முசுண்டை, வடுகர் பெருமகன் எருமை, வழுதி, வன்னி, வானவரம்பன் போன்றோர் இவர்தம் பாடல்களில் இடம்பெறுகின்றனர்.

**பாடிய – புலவர்கள்**

அகத்தியர், கபிலர், தூங்கல், பரணர் ஆகியோர்.

**பாடிய – ஊர்கள்**

ஆலங்கானம், இடையாறு, உறையூர், ஊணூர், கருவூர் காவிரிப்பூம்பட்டினம், திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம், திருமருதந்துறை, திருவாவினன்குடி, திருவேரகம், தொண்டி, பவத்திரி, பழமுதிர்ச்சோலை, பெருங்குளம், மதுரை, மருங்கூர்ப்பட்டினம், முசிறி, மூதில், வேங்கடம் ஆகியவை.

**ஆறுகள்** – அயிரியாறு, ஆன்பொருநை, காவிரி, வையை.

**2. முடத்தாமக் கண்ணியார்**

பொருநராற்றுப்படையை இயற்றியவர். இவர் பெயர் உறுப்பால் வந்ததென்றும் இவர் பெண்பாலார் என்றும் கூறுவர்.

**3. நல்லூர் நத்தத்தனார்**

சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியராகிய இவர், சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள இடைக்கழி நாட்டைச் சார்ந்தவராதலின் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்றே சுட்டுவர். அந்நாட்டிலுள்ள ஒரு சிற்றூரே நல்லூர் ஆகும். தத்தன் என்பதே இயற்பெயர். சிறப்பு கருதி நகர இடைச்சொல்லும் ஆர் விகுதியும் சேர்க்கப்பெற்றன. நக்கீரர், நப்பாலத்தர், நப்பூதனார், நச்செள்ளையார் என்றாற் போல.

சிறுபாணாற்றுப்படையில் ஐந்திணைகளையும் சிறப்பித்துப் பாடியவர். பண்களைப் பற்றிய நுண்ணறிவு உடையவர். தொண்டை

நாட்டவரேயாயினும் சங்கப்புலவருள் ஒருவராதலின் மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகிய நல்லியக்கோடனைப் பாடிய, புறத்திணை நன்னாகனார் என்பவரே இவர் காலத்துப் புலவர் ஆகிறார்.

**இவர்காலத்துப் பிரபுக்கள்**

சிறுபாணாற்றுப்படை - பாட்டுடைத்தலைவன் - நல்லியக்கோடன் புறத்திணை நன்னாகரால் பாடப்பெற்ற ஓய்மானல்லியாதன்; ஓய்மான்வில்லியாதன், கரும்பனூர் கிழார் ஆகியோர்.

4. **கடியலூர் உருத்திரங்கண்ணனார்** - இவர் பெரும்பாணாற்றுப் படையையும் பட்டினப்பாலையையும் பாடியவர். கண்ணன் என்பதே இவர் இயற்பெயர். சிறப்பு கருதி ஆர் விகுதி சேர்ந்தது. உருத்திரனார் என்பவர் கண்ணனாரின் தந்தை. ஐயம் தீர்தற் பொருட்டு உருத்திரங்கண்ணனார் ஆனார். அந்தணர் மரபினர்.

பெரும்பாணாற்றுப்படையுள்,

அந்தணர் மனை, அந்தண மகளிர் கற்பு, அவர்கள் விருந்து பேணும் முறை, அந்தணர் அருங்கடல் நிறுத்த வேள்வித்தூண் போல்வன சிறப்பித்துக் கூறப்பெறுகின்றன.

> "இருநிலங் கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன்"
> "பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்"

என்பன போன்ற பலதிறத்தில் திருமால் பாராட்டப் பெறுகிறார். இவை உருத்திரங் கண்ணனாரது திருமாலிடத்து அன்புடைமையைத் தெளிவுபடுத்துகிறது.

குறுந்தொகை - 352ஆம் பாடலும் அகநானூறு -- 167ஆம் பாடலும் இவரால் இயற்றப்பெற்றவை.

பாட்டுடைத் தலைவர்களாகிய, தொண்டைமான் இளந்திரையனும், சோழன் கரிகால் பெருவளத்தானும் இவரை ஆதரித்தவர்கள். பட்டினப்பாலையைக் கேட்டு மகிழ்ந்த சோழன் கரிகால் பெருவளத்தான், புலவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான்.

பெரும்பாணாற்றுப்படையில் உமணர், எயினர், எயிற்றியர், ஆயர், ஆய்ச்சியர், உழவர், வலைஞர், அந்தண மகளிர் ஆகியோரைப் பற்றியும்,

பட்டினப்பாலையில் பரதவர், வணிகர் ஆகியோரைப் பற்றியும் சிறப்பித்துப் பாடியுள்ள முறை இப்புலவர், பல சாதியாருடைய ஒழுக்கங்களையும் அவர்தம் குடியிருப்புகளையும் மிகச்சுவைபடத் தெரிவிக்கும் ஆற்றலுடையவர் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

5. **நப்பூதனார் – முல்லைப்பாட்டை** இயற்றியவர். பூதன் என்பதே இவரது இயற்பெயர். சிறப்பு கருதி நகர இடைச்சொல்லும் ஆர் விகுதியும் இணைந்தன. ஊர் காவிரிப்பூம்பட்டினர். தந்தை பொன் வாணிகனார். வணிக குலத்தவர். எனவே **காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்** என்னும் முழுப்பெயர் பெறுகிறார். முல்லைப் பாசறையை விரிவாகப் பாடியுள்ள இவர் வீரம் பொருந்திய அரசர்களோடு பழகியவர் என்று கூறுவர்.

6. **மாங்குடி மருதனார்** இவர் மதுரைக் காஞ்சியின் ஆசிரியர். தலையாலங்கானத்துச் செருவென்ற **பாண்டியன் நெடுஞ்செழியனின்** அவைக்களப் புலவர். மன்னனுக்கு நிலையாமையை அறிவுறுத்திப் பல்வேறு செய்திகளைப் பாடிய நூலே மதுரைக் காஞ்சி என்பது. இந்நூலின் சிறப்பால் இவரை **மதுரைக்காஞ்சிப் புலவன்** என்றே வழங்கினர்.

மதுரைக் காஞ்சியைத் தவிர, நற்றிணையுள் 2 பாடல், குறுந்தொகையுள் 3, அகநானூற்றில் 1, புறநானூற்றில் 6, திருவள்ளுவமாலையுள் 1, குறுந்தொகை 173ஆம் பாடல், அகநானூறு 89ஆம் பாடல் ஆகியவற்றில் இவர் பெயர் காஞ்சிப்புலவன், மதுரைக் காஞ்சிப் புலவன் என்றே காணப்பெறுகின்றன. எனவே மதுரைக்காஞ்சி இயற்றிய பிறகே இப்பாடல்களை எழுதியுள்ளார் என்பது தெளிவாகிறது.

“அரசுபட வமருழக்கி முரசுகொண்டு களம்வேட்ட
வடுதிறலுயர் புகழ்வேந்தே” (மதுரைக். 128–30)

‘அரசுபட வமருழக்கி உரைசெல முரசுவெளவி
– – – அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய” (புறம். 26)

என்பன போன்ற பலவிடங்களில் சொற்பொருள் பொருந்த இவருடைய பாடல்கள் இடம்பெறுகின்றன.

மதுரைக் காஞ்சியின் வழி, பல்வேறு நிலையாமைக் கருத்துகளைத் தமக்கு ஊட்டியதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்த பாண்டியன் நெடுஞ்செழியன் இவர்பால் நன்மதிப்பு கொண்டவனாகி,

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை" (புற-72)

என்று வஞ்சினங் கூறுகிறான்.

**7. கபிலர் –** இவர் குறிஞ்சிப்பாட்டை இயற்றிய புலவர்.

"காதல்கூர் பனுவல் பாடுங் கபிலனார் பிறந்த மூதூர்
– – – – – – – – –
வேதநாயகனார் வாழும் வியன்திரு வாதவூரால்"
(திருவிளை. 27–3)

"புலனழுக் கற்ற வந்தணாளன்" (புறநா. 126)

என்பன **கபிலர்** திருவாதவூரில் பிறந்தவர். அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதைப் புலப்படுத்துகின்றன.

வள்ளல் **வேள்பாரி**யின் உயிர் நண்பராகி அவனுடைய அவைக்களப் புலவராகவும் விளங்கினார். முள்ளூருக்குரியவனாகிய வள்ளல் **மலையமான்** திருமுடிக்காரியையும், வள்ளல் **பெரும் பேகனையும்** பாடியவர்.

வேள்பாரியின் மகளிரை விரும்பி, மூவேந்தரும் போட்டியிட்டுப் பாரியை எதிர்த்தனர். அப்போது 'பாரியின் **பறம்பு மலையைக்** கைகொள்வது எளியதன்று; பாரியைப் பாடிப் பரிசிலராகவரின் கொள்ளலாம்' என்று பாடினார்.

இறுதியில் பகைவர் பறம்புமலையை வென்று, பாரியையுங் கொல்ல, பாரிமகளிரைத் தம் பொறுப்பிலேற்று, மலையன் என்பானுக்கு மணமுடித்து வைத்தார்.

ஆரியவரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழை அறிவித்தல் பொருட்டு அவனுக்கு விளங்குமாறு இக்குறிஞ்சிப் பாட்டினைப் பாடினார். பரணர் என்னும் புலவருடனும் இடைக்காடன் என்போருடனும் நட்பு பூண்டவர். **கபிலபரணர்** என்னும் தொடர் இதனை வலியுறுத்தும்.

**கபிலர் பாடியவை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தனிஅகவற்பாக்கள் | - | 208 | நற்றிணையுள் | - | 20 |
| குறுந்தொகையுள் | - | 29 | ஐங்குறுநூற்றில் (குறிஞ்சித் திணை) | - | 100 |
| பதிற்றுப்பத்தில் | - | 10 | அகநானூற்றில் | - | 17 |
| புறநானூற்றில் | - | 30 | குறிஞ்சிப்பாட்டு | - | 1 |
| 'நெட்டிலை யிருப்பை' என்பது | | 1 | வெண்பாக்கள் | - | 42 |
| திருவள்ளுவமாலை (திணையளவு) | | 1 | இன்னாநாற்பது | - | 41 |
| கலிப்பா | - | 29 | | | |

ஆகிய 529 பாடல்கள்.

**கபிலரால் பாடப்பெற்றோர்**

அகுதை, இளங்கோவேள், ஓரி, செல்வக் கடுங்கோ வாழியாதன், நள்ளி, பாண்டியன் மலையமான் திருமுடிக்காரி, விச்சிக்கோ, வேள்பாரி, வையாவிக்கோப் பெரும் பேகன், மலையன் ஆகியோர்.

**பாடிய ஊர்கள்**

அயிரை மலை, கொல்லிமலை, பறம்பு மலை, முள்ளூர்மலை, பறம்பு நாடு, கிடங்கில், கொடுமணம், பந்தர், மதுரை, முள்ளூர்க் கானம், வாரணாசி போன்றவை.

**இறைவர்கள்** - சிவபெருமான், திருமால், பலதேவர், பிரமன், முருகக்கடவுள் ஆகியோர் துதிகள் இடம்பெறுகின்றன.

**கபிலரைப் பாராட்டிக் கூறியோர்** - நக்கீரனார், பெருங்குன்றூர்க் கிழார், பொருந்திலிளங்கீரனார், மாறோக்கத்து நப்பசலையார்.

## 8. இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார்

இவர் மலைபடுகடாம் என்னும் பாட்டை இயற்றிய புலவர். மதுரையைச் சார்ந்த யானைமலை முதலான பகுதியே இரணிய முட்டம் என்னும் சிறிய நாடு, சாதியால் அந்தணர்.

இவர்தம் பாடலில் – ஆகுளி, எல்லரி, குழல், குறுபரந்தூம்பு, சிறுபறை, சீறியாழ், தட்டை, தண்ணுமை, துடி, தூம்பு, பன்றிப் பறை பாண்டில், பேரியாழ், முழவு போன்ற இசைக்கருவிகளைப் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

இதேபோல, குறிஞ்சி, படுமலை, மருதம் என்னும் பண்களைப் பற்றிய செய்திகள் பாடப்பெற்றுள்ளன. யாழ்வருணனை, காட்டுவழியில் இசைக்கருவிகளுக்கு நிகழும் இடையூறுகள், அவற்றை நீக்கிக்கொள்ளும் வழிவகைகள் போன்றவையும் விளக்கம் பெறுகின்றன. இவற்றால் இப்புலவர் பண்களையும், இசைக் கருவிகளையும் நன்கறிந்தவர் என்பது தெளிவாகிறது.

### பாடினோர் வரலாறு – புறநானூறு

இந்நூலுள் பாடினோர், பாடப்பெற்றோர் ஆகியோர் எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளமையால் இவர்கள்தம் பெயர்கள் மட்டுமே இங்குத் தொகுத்துத் தரப்பெறுகின்றன. பாடினோர் நூற்று ஐம்பத்தைந்து பேர்கள் இடம்பெறுகின்றனர்.

**அண்டநெடுங் கல்வியார்** – பாண்பாட்டு, மகட்பாற்காஞ்சி ஆகிய துறைகளைப் பாடியவர்.

**அண்டர்மகன் குறுவழுதி** – புறம் 346ஆம் பாடலைப் பாடியவர்.

**அரிசில் கிழார்** – கொள்ளிடத்தின் வடபாலுள்ள அரியலூரினர். குதிரை மறம், தானைமறம், பேய்க்காஞ்சி, மகட்பாற் காஞ்சித் துறைகளைப் பாடியவர். பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தினைப் பாடிப் பரிசில் பெற்றவர்.

**அள்ளூர் நன்முல்லையார்** - பாண்டிநாட்டுச் சிவகங்கையையடுத்த அள்ளூரினர்.

**ஆடுதுறைமாசாத்தனார்** - காவிரியின் தென்பால் ஒன்று, வடபால் ஒன்று, வடவெள்ளாற்றங்கரையில் ஒன்று என மூன்று

ஆடுதுறைகள் உள்ளன. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியவர்.

**ஆலங்குடி வங்கனார்** - பல ஊர்கள் ஆலங்குடி என்று உள்ளன. இவர் ஊர் எது என்பது அறிய இயலவில்லை.

**ஆலத்தூர் கிழார்** - பல ஊர்கள் உள்ளன. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், சோழன் நலங்கிள்ளி ஆகியோரைப் பாடியவர்.

**ஆலியார்** - ஆலிநாடு - திருமங்கையாழ்வார் அவதரித்த திருத்தலத்தினர்.

### பிறர்பெயர்கள் மட்டும்

ஆவூர் கிழார் ஆவூர் மூலங்கிழார் இடைக்காடனார்
இடைக்குன்றூர் கிழார் இரும்பிடர்த்தலையார் உலோச்சனார்
உறையூர் இளம்பொன் வாணிகனார்
உறையூர் ஏணிச்சேரி முட மோசியார்
உறையூர் மருத்துவன் தாமோதரனார்
உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
உறையூர் முதுகூத்தனார் ஊன்பொதி பசுங்குடையார்
எருக்காட்டுத் தாயங்கண்ணனார் எருமை வெளியனார்
ஐயாதிச் சிறுவெண்டேரையார் ஐயூர் முடவனார்
ஐயூர் மூலங்கிழார் ஒக்கூர் மாசாத்தனார்
ஒக்கூர் மாசத்தியார் ஒருசிறைப் பெரியனார்
ஒரூஉத்தனார் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
ஓரம்போகியார் ஓரேருழவர் ஔவையார்,
கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கண்ணகனார்,
கணியன்பூங்குன்றனார் கபிலர் கயமனார்
கருங்குழலாதனார் கருவூர்க் கதப்பிள்ளை
கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார் கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப்பூதனார்
கல்லாடனார் கழாத்தலையார்
கழைதின் யானையார் கள்ளில் ஆத்திரையனார்
காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் (மகளிர்)
காரிகிழார் காவட்டனார் காவற்பெண்டு
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்
குட்டுவன்கீரனார் குடபுலவியனார்

குடவாயிற் கீரத்தனார் குண்டுகட்பாலியாதன்
குளம்பாதாயனார் குறுங்கோழியூர்க்கிழார்
குன்றூர் கிழார் மகனார் கூகைக் கோழியார்
கூடலூர் கிழார் கோடைபாடிய பெரும்பூதனார்
கோதமனார் (கௌதமனார்) கோப்பெருஞ் சோழன்
கோவூர்க் கிழார் - கோனாட்டு எரிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்
சங்கவருணரென்னும் நாகரியார் சாத்தந்தையார்
சிறுவெண்டேரையார் சேரமான் கணைக்காலிரும்பொறை
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார்
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
சோழன் நல்லுருத்திரனார் சோழன் நலங்கிள்ளி
தண்காற்பூட் கொல்லனார் தாமப்பல் கண்ணனார்
தாயங்கண்ணனார் தாயங்கண்ணியார்
திருத்தாமனார் தும்பிசொகினனார்
துறையூர் ஓடைக்கிழார் தொடித்தலை விழுத்தண்டினார்
தொண்டைமான் இளந்திரையன் நரிவெரூஉத்தலையார்
நல்லிறையனார் நன்னாகனார்
நெட்டிமையார் நெடுங்கழுத்துப் பரணர்
நெடும்பல்லியத்தனார் நொச்சிநியமங்கிழார்
பக்குடுக்கை நன்கணியார் பரணர்
பாண்டரங்கண்ணனார் பாண்டியன் அறிவுடைநம்பி
பாண்டியன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்
பாண்டியன் தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
பாரதம் பாடிய பெருந்தேவனார் பாரிமகளிர்
பாலை பாடிய பெருங்கடுங்கோ பிசிராந்தையார்
பிரமனார் புல்லாற்றூர் எயிற்றியனார்
புறத்திணை நன்னாகனார் பூங்கணுத்தரையார்
பூதபாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு
பெருங்குன்றூர் கிழார்
பெருங்கோழி நாய்கன்மகள் நக்கண்ணையார்
பெருஞ் சித்திரனார் பெருந்தலைச்சாத்தனார்
பெரும்பதுமனார் பேய்மகள் இளவெயின்
பேரெயின் முறுவலார் பொத்தியார்
பொய்கையார் பொருந்திலிளங்கீரனார்

பொன்முடியார் மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்
மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்
மதுரைக் கணக்காயனார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
மதுரைத் தமிழ்க் கூத்தனார் மதுரை நக்கீரர்
மதுரைப் படைமங்க மன்னியார் மதுரைப் பூதனிளநாகனார்
மதுரைப் பேராலவாயர் மதுரை மருதனிளநாகனார்
மதுரை வேளாசான் மருதனிள நாகனார்
மாங்குடிக் கிழார் மாதிமாதிரத்தனார்
மார்க்கண்டேயனார் மாற்பித்தியார்
மாறோக்கத்து நப்பசலையார் முரஞ்சியூர் முகநாகராயர்
மோகி கீரனார் மோசி சாத்தனார்
வடமநெடுந்தத்தனார் வடமவண்ணக்கன் தாமோதரனார்
வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்
வடமோதங்கிழார் வன்பரணர்
வான்மீகியார் விரிஞ்சியூர் நன்னாகனார்
விரியூர் நக்கனார் வீரைவெளியனார்
வெண்ணிக்குயத்தியார் வெள்ளருக்கிலையார்
வெள்ளைக் குடிநாகனார் வெள்ளைமாளர்
வெறிபாடிய காமக்கண்ணியார் வேம்பற்றூர்க் குமரனார்.

## பாடினோர் வரலாறு – பதிற்றுப்பத்து

முதற்பத்து கிடைக்காமையின் நூலில் இடம்பெறவில்லை.

**2. குமட்டூர் கண்ணனார்** – இந்நூலின் இரண்டாம் பத்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேரமன்னன் மீது பாடி, உம்பர்காட்டு ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகவும் முப்பத்தெட்டு ஆண்டு, தென்னாட்டு வருவாயுள் பாகமும் பரிசிலாகப் பெற்றார்.

**3. பாலைக் கௌதமனார்** - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் மீது இந்நூலின் மூன்றாம் பத்தைப் பாடி, அம்மன்னன் உதவியால் ஒன்பது பெருவேள்வி வேட்டுப் பத்தாம் வேள்வி வேட்ட போது மனைவியுடன் சுவர்க்கப் பேறு பெற்றார். இவ்வரலாற்றுச் செய்திகள் சிலப்பதிகாரத்திலும்

எடுத்தாளப் பெறுகின்றன (சிலம்பு - 23. 63-64 அடிகள்; 28. 137-38 அடிகள்).

**4. காப்பியாற்றுக் காப்பியனார்** - இவர் **களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்** என்னும் மன்னன் மீது இந்நூலின் நான்காம் பத்தைப் பாடி, நாற்பது லட்சம் பொன்னும் அம்மன்னன் ஆண்டதில் பாதியும் பரிசிலாகப் பெற்றார்.

**5. பரணர்** - **கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனை** ஐந்தாம் பத்தால் பாடி உம்பற்காட்டு வருவாயையும் மன்னன் மகன் குட்டுவன் சேரல் என்பவனையும் பரிசிலாகப் பெற்றார்.

**6. காக்கைபாடினியார் நச்செள்ளையார்** - (பெண் பாலார்) இவர் **ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை** ஆறாம் பத்தில் பாடி, அணிகலனுக்காக ஆறு துலாம் பொன்னையும் நூறாயிரம் பொற்காசு களையும் பரிசாகப் பெற்றார்.

**7. கபிலர் – சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனை** இந்நூலின் ஏழாம் பத்தில் பாடி, நூறாயிரம் பொற்காசுகளையும், மலை மீதேறிச் சுட்டிக்காட்டிக் கொடுத்த நாட்டையும் பரிசிலாகப் பெற்றார்.

**8. அரிசில் கிழார் – இவர் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை** இந்நூலின் எட்டாம் பத்தாற்பாடி, ஒன்பது நூறாயிரம் பொற்காசுகளையும் சிங்காதனத்தையும் பரிசிலாகப் பெற்று, சிங்காதனத்தைத் திரும்ப ஈந்து அமைச்சுரிமையைப் பூண்டார்.

**9. பெருங்குன்றூர் கிழார் – இவர்** இந்நூலின் ஒன்பதாம் பத்தினைக் **குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையின்** மீது பாடி, முப்பத்தீராயிரம் பொற்காசுகளையும் மேலும் பலவகைப் பரிசுகளையும் பெற்றார்.

இந்நூலின் முதற்பத்தினைப் போன்றே பத்தாம் பத்தும் சுவடிகளிற் கிடைக்காமையின் இதுவும் இடம்பெற இயலாமற் போயிற்று என்பது பதிப்பாசிரியர் கூற்று.

பரிபாடல்

**1. கீரந்தையார்** - திருமால் வாழ்த்துப்பாடல்களாகிய முதலிரண்டு பாடல்களின் கீழ் - கடவுள் வாழ்த்து - கீரந்தையார் பாட்டு என்று காணப்பெறுவதால், முதலிரு பாடல்களின் ஆசிரியர் கீரந்தையார்

என்று கொள்ளப் பெறுகிறது. தொல்காப்பியச் செய்யுளியல் 119இன் மேற்கோளிலிருந்து எடுத்தது முதற் பாடல் என்று குறிப்பிடுவார் பதிப்பாசிரியர்.

இவரது இரண்டாம் பாடல், வானம், காற்று, தீ, மழை, நிலம் என்னும் ஐம்பூத ஊழிகளும் திருமாலோடு தொடர்புடையவை என்பது தொடங்கி, அவரது பலவகை வடிவங்களையும் உவமைகளாற் சிறப்பித்துக் கூறி அவரை அடிதொழும் சிறப்பினைப் பெற்றிருக்கிறது.

**2. கடுவன் இளவெயினனார்** - இவர் இந்நூலின் 3, 4, 5ஆம் பாடல்களை இயற்றிய புலவர். மூன்றாம் நான்காம் பாடல்களில், ஐவகைக் கோள்கள், திருமாலின் அவதாரங்கள், அவர்தம் கொடிகள், அவரைப் போற்றித் துதிக்கும் வழிபாட்டு முறைகள், அவர் எழுந்தருளியிருக்கும் இடங்கள் போன்றவற்றைத் தெளிவுபடக் கூறுகிறார்.

இதே போல ஐந்தாம் பாடலில் முருக பெருமானின் அவதார வரலாறு தொடங்கி, அவரது வெற்றி, பெற்ற வாகனங்கள் போன்றவற்றின் சிறப்புகளை எடுத்துக்காட்டுகிறார்.

**3. ஆசிரியர் நல்லந்துவனார்** - பரிபாடலின் எட்டாம் பாடலில் முருக பெருமானையும், ஆறு, பதினொன்று, இருபதாம் பாடல்களாகிய மூன்று பாடல்களிலும் வையையையும் சிறப்பித்துப் பாடிய பெருமையைப் பெற்றவர் ஆசிரியர் நல்லந்துவனார்.

திரிமூர்த்திகளும் தேவர்களும் திரண்டு வந்து முருக பெருமானை வணங்கிய திருத்தலமாக விளங்குவது திருப்பரங்குன்றம் என்னும் பெருமலை. அதிலுள்ள சுனையே சரவணப் பொய்கையை நிகர்த்தது. இத்தகு சிறப்புறு செய்திகளைக் கூறி இன்புறச் செய்வதே அவர்தம் இறையருளுடைமைப் பண்பு ஆகிறது. இது இந்நூலின் எட்டாம் பாடற்பொருள்.

பிற மூன்று பாடல்களில் வையையின் சிறப்புகள் இடம் பெறுகின்றன. மழைவளம், வையைப் பெருக்கு, கையுறைப் பொருளாகிய பொன்மீன், நீர்விளையாட்டுக் கருவிகள், தெப்ப வகைகள் போல்வன இயற்கையை வெளிப்படுத்தி மகிழ்விப்பன. அந்த ஆறு தமிழ் வையை, தென்னவன் வையை என்றே விளிக்கப் பெறுகிறது. மதுரையாசிரியன் நல்லந்துவனார் (அகநா. 43) என்பவர் இவரேயாவார்.

**4. மையோடக் கோவனார் - வையையைச்** சிறப்பிக்கும் ஏழாம் பாடலின் ஆசிரியர் இவர். பாண்டியர் சேனை பகைமேற் செல்லுதலால், வையையாறு பலபொருள்களை அடித்துக் கொண்டு வருகிறது என்று வையையைச் சிறப்பிக்கும் இவர் அரச பக்தியுடையவரென்று புலப்படுகிறது. புனல் விளையாட்டிற்குரிய கருவியாகிய ஓடத்தைச் சிறப்பித்துப் பாடி ஓடக் கோவனார் எனச் சிறப்புப் பெயர் பெற்றார். **கோவனார்** என்பது இயற்பெயர். மை, ஓடம் என்பன சிறப்புப் பெயராக இணைந்தனவாகும்.

**5. குன்றம்பூதனார்** -- ஒன்பது, பதினெட்டு ஆகிய இரண்டு பாடல்களையும் செவ்வேளாகிய முருகபெருமானைச் சிறப்பித்துப் பாடியவர். பூதனார் என்னும் இயற்பெயருடையவர். திருப்பரங் குன்றத்தைப் பாடிக் **குன்றம்** பூதனாராயினர் என்ப.

திருப்பரங்குன்றம், அக்குன்றத்துள்ள முருகன் ஆலயம், அருகிலுள்ள சித்திரவம்பலம், சோலை, சுனை, அருவி, காந்தள், தினை, மயில் போல்வனவற்றைச் சிறப்பித்து எடுத்துக்காட்டி, திருப்பரங்குன்றம் இவ்வனைத்து வகையாலும் இமயத்தை நிகர்த்தது என்று சிறப்பித்திருக்கிறார்.

**6. கரும்பிள்ளைப் பூதனார் – வையையைச்** சிறப்பிக்கும் பத்தாம் பாடலை இயற்றியவர். புதுநீர் விழாச் சிறப்பு, நீர் விளையாட்டின் முறை, வாச்சியத்தின் விளம்பித நடை, பாண்டியன் கொடை போல்வன சிறப்பித்தும் உவமித்தும் பாடப் பெறுகின்றன. இவர் பாண்டிய மன்னனின் அன்புக்கு உரியவராய் விளங்கியவர்.

**7. நல்வழுதியார் – வையையைச்** சாரும் பன்னிரண்டாம் பாடலை இயற்றியவர். சையை மலையிலிருந்து பலவகை மரங்களை அடித்துக் கொண்டு வருவது வையை. அது மதுரையின் மதிலைப் பொருதுகிறது. புது நீர்ப் பெருகி வரும் வையையில் மகளிர் தம் தலைவர்களுடன் ஊர்திகளில் ஏறிச்செல்லுகின்றார்கள். கண்டோர் போற்றுகின்றனர். இத்தகு வியப்புறு செய்திகள் விளக்கப் பெறுகின்றன. வழுதியார் என்பது பாண்டிய குலத்தவர் என்பதைப் புலப்படுத்தும்.

**8. நல்லெழுனியார் - திருமாலுக்குரிய** பதின்மூன்றாம் பாடலின் ஆசிரியர். **எழுனி** என்னுஞ் சொல் அதிகமான் நெடுமானஞ்சியின் பரம்பரையைக் குறிப்பது. அவர் பரம்பரையினராகலாம். திருமாலின் திருவுருவம், அவரைப் போற்றித்துதிக்கும் வழிபாட்டுமுறைகள் பாட்டில் சிறப்புற அமைகின்றன. **நல்லெழினியார்** என்பதே வழக்கு.

**9. கேசவனார்** – முருகபெருமானாகிய செவ்வேளைப் பதினான்காம் பாடலிற் பாடியுள்ளவர். திருப்பரங்குன்றம், அங்கு இடம்பெறும் சுனை முதலிய இயற்கையமைவுகள், கார்காலத்துச் சிறப்பு, முருகபெருமானை முன்னிலைப்படுத்தும் கூற்றுகள், வழிபாட்டு முறைகள், வழிபடுவதன் பயன் ஆகியவற்றைச் சிறப்புறக் கூறி, வழிபாடு தொடர்தல் வேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடுகிறார். ஆசிரியர் இசை வல்லுநராதலின் இப்பாடலுக்குத் தாமே இசை வகுத்துள்ளார்.

**10. இளம்பெருவழுதியார்** - நூலின் பதினைந்தாம் பாடலை இயற்றிய புலவர். திருமாலின் சிறப்புகளைப் பற்றிய பாடல். திருமாலிருஞ்சோலை எனப்பெறும் இருங்குன்றத்தின் அழகு, அக்குன்றத்து வளம், அங்கு விரும்பி எழுந்தருளியிருக்கும் கண்ணபிரானும் பலதேவருமாகிய இருவரின் ஒருமைப்பாட்டு அருட் செயல்கள், மயக்க மறுக்கும் அக்குன்றத்தின் அருட்குணம் போன்றவற்றை உள்ளவாறு எடுத்துக்காட்டும் ஆசிரியர், நேரிற் சென்றோ திசைநோக்கிக் கண்டோ இல்லத்தாருடன் வழிபடுமின் என்று உலகோர்க்கு அறிவிக்கிறார்.

இளமை முதலே பேரறிவுடன் விளங்கிய இவர் பாண்டியர் குடியிற்றோன்றியவராதலின் இப்பெயர் பெறுகிறார்.

**11. நல்லழிசியார்** – இந்நூலின் பதினாறாம் பாடலை வையைக்குரியதாகவும், பதினேழாம் பாடலைச் செவ்வேளாகிய முருகபெருமானுக்குரியதாகவும் இயற்றியுள்ள புலவராவார்.

வையையாறு, அதன் கரை, துறை, கரைச்சோலை, நீர்ப்பெருக்கம், அதில் நிகழும் நீர் விளையாட்டு போன்றவற்றைச் சிறப்பிப்பது வையைப்பாடல்.

திருப்பரங்குன்றம், முருகன் எழுந்தருளியுள்ள கடம்பமரம், அம்மரத்தை வணங்கவரும் அன்பர் கூட்டம், அவர்தம் வழிபாட்டுச் சிறப்பு போல்வனவற்றையும் மதுரையின் சிறப்பையும் எடுத்துக்காட்டுவதே செவ்வேள் பாடல்.

**12. நப்பண்ணனார்** – செவ்வேளுக்குரித்தாகிய இந்நூலின் பத்தொன்பதாம் பாடலின் ஆசிரியர். திருப்பரங்குன்றம், அக்குன்றத்துக்கே பெருமை தந்துள்ள வள்ளியம்மையின்

திருமணவிழா நிகழ்வுகள், முருகபெருமானின் மணவிழா காண வரும் மதுரை மாநகர மக்கள் ஏறிவரும் ஊர்திகள், நெருக்கத்தால் அமையும் வழியின் காட்சி, பாண்டிய மன்னன் உரிமை மகளிரோடும் மந்திரிமார்களோடும் வந்து மலை மீதேறித் திருக்கோயிலை வலம் வரும் காட்சி, மண்டபத்தில் வரையப்பெற்றுள்ள பழஞ்செய்திகளை எடுத்துக்காட்டும் சித்திர வகைகள் போன்றவற்றை உணர்த்தும் இப்பாடல், கடம்ப மரத்தடி முருகபெருமானின் வழிபாட்டை நேரில் அனுபவிக்கும் மகிழ்ச்சியை ஊட்டுவதாகும்.

ஆசிரியரின் இயற்பெயர் 'பண்ணன்' என்பதே. சிறப்புக் காரணத்தால் நகர இடைச்சொல்லையும் ஆர் விகுதியையும் பெறுகிறார்.

**13. நல்லச்சுதனார்** – முருகக் கடவுளைக் குறித்த இருபத்தோராம் பாடலின் ஆசிரியர். முருகக்கடவுளின் ஊர்தியாகிய யானை, அவர் தொடும் அடையற் செருப்பு, அவருக்குரிய வேற்படை, அவர் அணியும் கடப்பமாலை, அவர் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம், அதை வழிபடும் மகளிர்தம் செயற்பாடுகள், ஆடும் மயிலின் காட்சி, சுனையில் நிகழும் நீர்விளையாட்டு, அவ்விடத்துத்தென்றலின் இயல்பு, மகளிராடல் போன்ற பலவகைச் சிறப்புகளை நிரல்படக் கூறும் இவர் இப்பாடலுக்கு இசையும் வகுத்திருக்கிறார்.

பாடினோர் வரலாறு என்னுந் தலைப்பின் கீழ் அமைந்தாலும் பரிபாடலின் ஆசிரியர் வரலாறு என்பது அவர்தம் பாடல் சிறப்புகளைக் கூறுவதாக மட்டுமே அமைகிறது. பிற நூலாசிரியர்களின் வரலாறுகளைப் போல, ஊர், நாடு, பெற்றோர், சமயம், செய்த வேறு நூல்கள், பாடிய வேறு பாடல்கள் போன்ற வரலாறுகளை அறிந்து எழுத இயலாத நிலை இந்நூலாசிரியர் வரலாற்றில் பொருந்தி விடுகிறது.

### ஐங்குறுநூறு

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற் கீழ்
மூவகை யுலக முகிழ்த்தன முறையே"

என்னும் பாவின் கீழ் - வாழ்த்து - பாரதம் பாடிய பெருந்தேவனார் என்னுங் குறிப்பு மட்டும் காணப்பெறுகிறது. அடுத்து,

*1. மருதம்* என்னும் திணையில் அமையும் முதல் நூறு பாடல்களின் இறுதியில் - மருதம் முற்றிற்று - ஓரம் போகியார் என்னும் தொடர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. இதேபோல

*2. நெய்தல்* திணையின் இறுதியில் நெய்தல் முற்றிற்று - அம்மூவனார் எனவும் 3. *குறிஞ்சியின்* இறுதியில் குறிஞ்சி முற்றிற்று - கபிலர் எனவும் 4. *பாலையின்* இறுதியில் பாலை முற்றிற்று - ஓதலாந்தையர் எனவும் 5. *முல்லையின்* இறுதியில் முல்லை முற்றிற்று - பேயனார் எனவும் ஐங்குறுநூறு முற்றிற்று எனவும் மட்டுமே இடம்பெறுகின்றன.

பதிப்பாசிரியர் அவர்களோ, பாடினோர் முதலியவர்களின் வரலாறு என்னுந் தலைப்பில் அனைவர் வரலாற்றையுங் கண்டு எழுதி நமக்கு வழிகாட்டியிருக்கிறார்.

**1. பாரதம் பாடிய பெருந்தேவனார்** - தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். பன்னீராயிரம் பாடல்களைச் சங்கப் பலகையில் ஏற்றியவர்; ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் இடம்பெறும் கடவுள் வணக்கப் பாடல்கள் இவர் எழுதிய சிவபெருமான் துதிகள்; நற்றிணையில் உள்ளது திருமால் துதிப்பாடல்; குறுந்தொகையுள் முருகக்கடவுள் துதிப்பாடல்களாகும். திருவள்ளுவமாலை, பாரத வெண்பா ஆகியவற்றோடு, அகநானூற்றில் ஒரு பாடல், நற்றிணையுள் ஒரு பாடல் ஆகியவற்றையும் இவர் இயற்றியிருக்கிறார்.

**2. ஓரம் போகியார்** - இந்நூலுள் முதல் நூறாகிய மருதத்தைப் பாடியவர். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இந்நூறுள் 1. சேரமான் ஆதன் அவினி (முதற் பத்து) 2. வெல்போர்ச் சோழன் கடுமான்கிள்ளி (56, 78) 3. பாண்டிய மன்னன் (54) 4. புதுக்கோட்டை விராலிமலையைச் சேர்ந்த விராஅன் (58) 5. மத்தி (61) ஆகிய ஐவரைப் பாடியுள்ளார்.

இந்நூறுள் 1. தேனூர் (54, 55, 57) 2. ஆமூர் (56) 3. இருப்பை (58) 4. கழார் (61) என்னும் நான்கு ஊர்களும், 1. காவிரி (42) 2. வையை (7) ஆகிய இரண்டு ஆறுகளும், இந்திரவிழா (62) தைந்நீராடல் (84) ஆகியவையும் பாடப்பெறுகின்றன.

இவர் ஐங்குறுநூற்றில் முதல் நூறு, நற்றிணையில் இரண்டு (20, 360), குறுந்தொகையுள் ஐந்து (10, 70, 122, 127, 384), அகநானூற்றில் இரண்டு (286, 316), புறநானூற்றில் ஒன்று (284) ஆகிய நூற்றுப்பத்துப் பாடல்களைப் பாடியிருக்கிறார்.

**3. அம்மூவனார்** - இந்நூலின் இரண்டாவது நூறாகிய நெய்தல் திணையைப் பாடியவர். சங்ககாலப் புலவருள் ஒருவர். இந்நூல் நெய்தல் திணை - 100, நற்றிணையுள் 10, குறுந்தொகையுள் 11, அகநானூற்றில் 6 ஆக 127 பாடல்கள் இவரால் பாடப்பெற்றுள்ளன. சில பாடல்களின் இறுதியில் மூவன் என்றும் அம்மூவன் என்றும் காணப்படுவன இவர் பெயராகக் கருதப் பெறுகின்றன. தமிழ் மன்னருள் சேரன், பாண்டியன் என்னும் முடியுடை வேந்தர்களாலும், திருக்கோவலூரை யாண்ட காரி வள்ளலாலும் ஆதரிக்கப் பெற்ற இவர், சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டி நகரம், அந்நாட்டின் மரந்தை நகரம், பாண்டிநாட்டுக் கடற்கரைப் பட்டினமாகிய கொற்கை நகரம், நடுநாட்டிலுள்ள கோவலூர் ஆகியவற்றைப் பாராட்டிப் பாடியிருக்கிறார்.

**4. கபிலர்** - இந்நூலின் மூன்றாம் நூறாகிய குறிஞ்சித் திணையைப் பாடியுள்ள இவரும் சங்கப்புலவருள் ஒருவரே. பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்தவர் (திருவிளையாடல் - 27-4); அந்தண குலத்தைச் சார்ந்தவர் (புறநானூறு - 200, 201, 126); பத்துப்பாட்டில் குறிஞ்சிப் பாட்டைப் பாடியவர் (பிற பத்துப்பாட்டில்).

**5. ஓதலாந்தையார்** - ஐங்குறுநூற்றின் நான்காவது நூறாகிய பாலைத்திணையைப் பாடியவர் இவர். ஆதன் தந்தையார் என்னும் பெயரே ஆந்தையார் என மருவி நின்றது. ஓதல் என்பது இவர்தம் கல்விப் பணியே என்பர். குறுந்தொகையுள் இவர் பாடிய மூன்று பாடல்கள் இடம்பெறுகின்றன. இவர்தம் பாடல்களில் அறம்புரி கொள்கைகள் மிகுந்து காணப்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

**6. பேயனார்** - இந்நூலின் ஐந்தாந்திணையாகிய முல்லையை நூறு பாடல்களால் பாடிய சங்கப் புலவரே பேயனார். குறுந்தொகையுள் இவர் பாடிய நான்கு பாடல்கள் இடம்பெறுகின்றன.

## பாடப்பெற்றோர் வரலாறு

### பத்துப்பாட்டு

**1. முருகபெருமான்** - திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்ச்சோலை

என்னுந் திருத்தலங்களைத் தமது படைவீடுகளாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகபெருமான் பத்துப்பாட்டின் முதலாவது பாட்டாகிய திருமுருகாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகப் பாடப் பெறுகிறான்.

2. சோழன் கரிகாற் பெருவளத்தான் - இவன் பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகிய இரண்டின் பாட்டுடைத் தலைவன். சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னியின் மகன்; நாங்கூர் வேளின் மகளை மணந்தவன். வீரமிக்க இவன் கருவூரிலிருந்து யானையாற் கொண்டு வரப்பட்டு அரசன் ஆனவன்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் தம்மீது பாடிய பட்டினப்பாலையைக் கேட்டு அவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தவன். சேரமான் பெருஞ்சேரலாதனையும் பாண்டிய மன்னனையும் வெண்ணியென்னுமிடத்தே போரில் வென்றவன். இமயம்வரை படையெடுத்து வெற்றி கண்டவன். உறையூர் நாட்டை யுடையவன். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசுபுரிந்தவன்.

3. நல்லியக்கோடன் - ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் என்னும் இவன் சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாவான். பெருங்கொடை வள்ளல். ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன் ஆகிய வள்ளல்கள் இவன் பரம்பரையினராவர். நல்லியக்கோடனின் கிடங்கில் என்னும் ஊர் திண்டிவனத்தையடுத்து உள்ளது. இங்குச் சிதைந்த கோட்டையும் அகழியும் இன்றும் காணப்படுகின்றன.

அருவாநாடு, அருவாவட தலைநாடு, எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பவை இவனுடைய ஊர்களாகும். தொண்டைநாட்டு இருபத்துநான்கு கோட்டங்களுள் மூன்று கோட்டங்களின் தலைநகரங்களாக விளங்கியவை எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய மூன்று நகரங்களும்.

4. தொண்டைமான் இளந்திரையன் - இவன் பத்துப்பாட்டின் நான்காம் பாட்டாகிய பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன். நாகலோகத்து நாககன்னிகையிடத்துத் தோன்றிய இம்மகனை, தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிடக் கரையில் வந்தவனாதலின், திரை தந்த மகன் எனத் திரையன் எனப் பெயர் சூட்டி அரசுரிமையளிக்கப் பெற்றவன்.

இவன் நல்லிசைப் புலவனாகவும் விளங்கியவன். இவன் இயற்றிய பாடல்கள் நற்றிணையுள் மூன்றும், புறநானூற்றில் ஒன்றும் காணப்பெறுகின்றன.

**5. பாண்டியன் நெடுஞ்செழியன்** - பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை அறிவுறுத்துவதாக அமைவது **மதுரைக்காஞ்சி. நெடுநல்வாடை** என்னும் பாட்டும் அவனைச் சிறப்பிப்பதே. இளமைப் பருவத்திலேயே கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையோடு தலையாலங்கானம் என்னுமிடத்துப் போர் செய்து அவனைச் சிறைப்படுத்தியதால் இவன் **தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்** என்றே பெயர் பெறுகிறான். இவன் **சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்** என்பவரையும் வென்றவன். வேள்எழினியின் மிழலைக்கூற்றம், பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றம் ஆகியவற்றையும் கைகொண்டவன்.

மாங்குடி மருதனார் போன்ற பெரும் புலவர்களை ஆதரித்தவன். புறநானூற்றுள் நகுதக்கனரே எனத் தொடங்கும் (பா. 72) பாடலை இயற்றியவன்.

**6. ஆரிய மன்னன் பிரகத்தன்** - எட்டாவது பாட்டாகிய **குறிஞ்சிப்பாட்டு** இம்மன்னனுக்குத் தமிழை அறிவுறுத்துதல் பொருட்டுப் பாடப் பெற்றது. அப்பாட்டைக் கேட்டுத் தமிழ்ச் சுவையை அறிந்து மகிழ்ந்தவன்.

**7. நன்னன் - மலைபடுகடாம்** என்னும் பத்தாம் பாடலின் தலைவன் நன்னன். வேளிர் குலத்தவன். வேளிர்தலைவனாதலின் வேண்மான் - நன்னன் வேண்மான் எனப் பெறுகிறான்.

பல்குன்றக் கோட்டத்தின் மன்னன். நகர்-செங்கண்மா. மலை-நவிரமலை. ஆறு சேயாறு.

தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று பல்குன்றக் கோட்டம். திருவண்ணாமலையின் மேற்கேயுள்ளது செங்கண்மா என்னும் நகர். இதுவே செங்கம் என்பது. இந்நகர் அகழி, கோட்டை, பெருவீதி, கடைத்தெரு, குறுந்தெரு, இராசசபை, நாளோலக்கம் ஆகியவற்றையும் அரிய காவல்களையும் பெற்றது. நவிரமலை என்பது திருவண்ணாமலையின் வாயு திசையாகிய வடமேற்கிலுள்ளது. இன்று திரிசூலகிரி, பர்வதமலை என

வழங்கப்பெறுகிறது. இம்மலையில் காரியுண்டிக் கடவுள் என்னும் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். நன்னன் இம்மலையையும் ஆலயத்தையும் முறையாகப் பரிபாலித்து வந்தான்.

சேயாறு என்பதே இன்று சண்முகநதி என வழங்கப் பெறுகிறது.

பரணர், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், மாங்குடிமருதனார், மாமூலனார் ஆகிய பெரும்புலவர்கள் நன்னன் காலத்தவர் ஆவர்.

## பாடப்பெற்றோர் வரலாறு – புறநானூறு

வரலாறு என்று அமைந்தாலும் மிகுதி கருதி பெயர்கள் மட்டுமே தரப்பெற்றுள்ளன. பாடப்பெற்றோர் பெயர்த்தொகுப்பு.

அகுதை - பரிசிலர்க்கு யானை வழங்கிய கொடையாளிகளுள் ஒருவர்; அஃதை எனவும் வழங்கப் பெறுவர்.

அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி.

அதியமான் நெடுமானஞ்சி (கடையெழு வள்ளல்களுள் ஒருவர்)
அதியமான் நெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினி

| | | |
|---|---|---|
| அந்துவஞ்சாத்தன் | அந்துவன்கீரன் | அம்பர்கிழாஅன் |
| அருவந்தை | அவியன் ஆதனழிசி | ஆதனுங்கன் |
| ஆந்தை ஆமூர்மல்ல | ஆய் | இயக்கன் |
| இருங்கோவேள் | இளங்கண்டீரக்கோ | இளங்குமணன் |
| இளந்தத்தன் | இளவிச்சிக்கோ | இளவெளிமான் |
| ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன் | | எயினன் |
| எவ்வி | எழினி (கடையெழு வள்ளலுள் ஒருவர்) | |
| ஏறைக்கோன் | ஏனாதிதிருக்கிள்ளி | |

ஒல்லையூர்க் கிழான்மகன் பெருஞ்சாத்தன்
ஓய்மான் நல்லியக்கோடன்
ஓய்மான் வில்லியாதன் கடியநெடுவேட்டுவன்
கண்டீரக்கோப்பெருநள்ளி கண்ணகி
கந்தன் கபிலர் (பாடியோரே) கரிகால்வளவன்
கரும்பனூர்க்கிழான் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி
கானப்பேரெயில் கடந்தஉக்கிரப்பெருவழுதி
குமணன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்

கொண்கானங்கிழான்
கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை
கோப்பெருஞ்சோழன் சிறுகுடிக்கிழான்பண்ணன்
சேரமானந்துவஞ்சேரலிரும்பொறை
சேரமான் கடலோட்டிய வெல்கெழுகுட்டுவன்
சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப் பெருஞ்சேரலிரும்பொறை
சேரமான் குட்டுவன் கோதை
சேரமான் குடக்கோச்சேரலிரும்பொறை
சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன்
சேரமான் கோக்கோதை மார்பன்
சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோவாழியாதன்
சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை
சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி
சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ
சேரமான் பெருஞ்சேரலாதன்
சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்
சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை
சேரமான் மாரிவெண்கோ
சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை
சேரமான் வஞ்சன்
சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன்
சோழநாட்டுப் பிடவூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன்
சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி
சோழன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி
சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னி
சோழன் கரிகால் பெருவளத்தான்
சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
சோழன் செங்கணான்
சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி
சோழன் நலங்கிள்ளி
சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தான்
சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி
சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி
சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி

சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி
சோழிய வேனாதிதிருக்குட்டுவன் தந்து மாறன்
தருமபுத்திரன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
தழும்பன் தாமான்தோன்றிக் கோன்
தித்தன் தேர்வண்மலையன் தொண்டைமான்
நம்பிநெடுஞ்செழியன் நள்ளி நன்னன் நாஞ்சில் வள்ளுவன்
நாலைக்கிழவன் நாகன் நெடுங்கிள்ளி
நெடுமானஞ்சி நெடுவேளாதன் பரதவர்
பழையன் பாண்டியன்அறிவுடைநம்பி
பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்
பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும் பெயர் வழுதி
பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதி
பாண்டியன் கீரஞ்சாத்தன்
பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதி
பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்
பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் (முன்பேவந்தது)
பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி
பாரி (கடையேழு வள்ளலுள் ஒருவர்)
பாரிமகளிர்
பிசிராந்தையார் பிட்டங் கொற்றன்
புல்லி பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
பேகன் (கடையெழுவள்ளலுள் ஒருவர்)
பொகுட்டெழினி பொறையாற்றுக்கிழார்
மல்லிகிழான் காரியாதி
மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணன்
மலையமான் திருமுடிக்காரி மலையமான் மக்கள்
மாங்குடிமருதனார் மாவளத்தான்
முக்காவனாடடு ஆமூர் மல்லன் முதியன்
மூவன் மூவேந்தர்
யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை (முன்பே)
வடிவம்பலம் நின்ற பாண்டியன் வல்லார் கிழான் பண்ணன்
வல்வில் ஓரி (கடையெழு வள்ளலுள் ஒருவர்)
வையாவிக்கோப்பெரும் பேகன் (கடையெழு வள்ளலுள் ஒருவர்)

**சீவகசிந்தாமணி** – சீவக சிந்தாமணியின் படைப்பாசிரியராகிய **திருத்தக்கதேவர்**, தம் ஆசிரியருடன் சென்று மதுரை மாநகரிலே தங்கியிருந்தார். சங்கப்புலவர்களின் புலமைத் திறங்களை உணர்ந்து அவர்களோடு கலந்து உரையாடி, அவர்களால் நன்கு சிறப்பிக்கப் பெற்றிருந்து வந்தார்.

ஒருநாள் சங்கப்புலவர்கள், தேவரை நோக்கி,

"ஆருகத சமயத்தாருள் பாடும் புலவர் பலரும் துறவினை வலியுறுத்திப் பாடுந்திறனுடையவர்களே யல்லாது காமச்சுவையைப் பாடத்தெரிந்தவரல்லர். இக்காலத்து வழங்கும் காமச்சுவையுடைய நூல்கள் பலவற்றுள்ளும் ஒன்றேனும் ஆருகத சமயப்புலவர் இயற்றியதாகக் காணப்பெறவில்லை" என்று கூறினர்.

"இன்பச்சுவையைப் பாடுவதில் ஆருகத சமயப்புலவர்கள் வெறுப்புற்றிருந்தார்களேயல்லது, பாடத்தெரியாதிருந்தாரல்லர்' என்று தேவர் மறுத்துரைத்தார்.

"அப்படியானால் தேவரீரே காமச்சுவை முழுதும் விளங்க ஒரு நூல் இயற்றுமின்!" என்று சங்கப்புலவர்கள் வற்புறுத்தினர்.

அவர்கள் கூற்றைத் தம் ஆசிரியரிடம் கூறி அவர்தம் இசைவு பெற்றுப் பாடிய நூலே இன்பச்சுவை ததும்பும் மணநூலாகிய சீவகசிந்தாமணியாகும். இக்கூற்றுகள் இந்நூலைப் பாடச்செய்தோர் **சங்கப்புலவர்களே** என்பதை நிறுவுகின்றன.

**சிலப்பதிகாரம்** - துறவுபூண்டு விளங்கிய இளங்கோவடிகளிடத்தில், செங்குன்றத்துக் குறவர்கள் கூடி வந்து, 'எம்மலையிலுள்ள வேங்கையின் கீழ் நின்றாள் பத்தினி ஒருத்தி. இந்திரன் கூட்டத்தவர் வந்து அவள் கொழுநனைக் காட்டி, விண்ணுலகழைத்துச் சென்றனர். நாங்கள் கண்டோம்' என்று கூறினர். இளங்கோவடிகளருகிலிருந்த **சாத்தன்** என்னுந் தமிழ்ப்புலவர்,

**"யானறிகுவனது பட்டதென்று"**

என்று கூறி சோழன் மூதூர், புகார் நகரத்து கோவலன், தன் மனைவி காற்சிலம்பு விற்க வந்து, மதுரையில் பொன்செய்கொல் கொல்லனிடம் காட்டினன். அவன் மன்னனிடம் கூற

வினைவிளைகாலமாதலின், வேம்பன் தேரானாகி, கள்வனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க என்றனன். கொலைக்களப்பட்ட அக்கோவலன் மனைவியே, கூடல் மாநகரை எரியூட்டி வந்து நும்மலையடி நின்று வானவர் உடன் சென்றனள் என்று தாம் அறிந்ததைக் கூறி, சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் அடிகள் நீரேயருளுக என, ஆறைந்து காதையில் இந்நூலை இயற்றினார் இளங்கோவடிகள்.

இளங்கோ அருளியதை மதுரைக்கூலவாணிகனாகிய சாத்தனார் கேட்டார். இக்கூற்றுகள் இந்நூலைப் பாடச்செய்தோர் சாத்தனார் அவர்களே என்பதைப் புலப்படுத்துகின்றன.

> "குணவாயிற் கோட்டத்து அரசுதுறந் திருந்த
> குடக்கோச் சேரலிளங்கோ வடிகட்குக்
> குன்றக் குறவர்" கூற (பதிகம் 1–3)

> "அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
> யானறிகுவனது பட்டதென் றுரைப்போன்" (பதி. 10–11)

என்னும் அடிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார்,

அடி. 2. சேரலென்றது செங்குட்டுவனை. சேரற்கு - இளங்கோவாகிய அடிகட்கென்க. எனவும்.

1-9 (இதன் பொருள்) - - - - - தவவுருத் தாங்கியிருந்த குடதிசைக் கோவாகிய செங்குட்டுவனென்னும் சேரற்கு இளங்கோவாகிய அடிகட்குக் குறவர்" கூற;

10-11 (இதன் பொருள்) குறவர் இளங்கோவடிகளை நோக்கி அறிந்தருளென்ற அளவிலே செங்குட்டுவன் அதிசயித்து முகநோக்கப் பரிசில் காரணமாக வந்து அவனுழையிருந்த சாத்தன் அதனைக் குறிப்பான் அறிந்து. '- - யானறிகுவன்' என்றனன் எனவும் உரைவகுப்பார். இவற்றுள்

அடி 2. சேரலென்றது செங்குட்டுவனையாகாது. குணவாயிற் கோட்டத்தில் துறவியாய் வீற்றிருக்கிறார் - யார்? குடவாயிற் கோட்டத்துச் சேரலாகிய இளங்கோவடிகள். அவரிடத்தே கூறுகின்றனர் குன்றவர். 1-9 உரையிலும் 'குடதிசைக் கோவாகிய செங்குட்டுவனென்னும் சேரற்கு இளங்கோவாகிய அடிகட்கு' என்றவிடத்தும் செங்குட்டுவன் இடம்பெற வேண்டுவதில்லை.

10-11 (இ.பொ) குறவர் இளங்கோவடிகளை நோக்கி அறிந்தருளென்ற அளவிலே செங்குட்டுவன் அதிசயித்து முகநோக்கப் பரிசில் - - - - சாத்தன் என்னும் உரையும் பொருந்துவதில்லை. அவனுழையிருந்த சாத்தன் - இளங்கோவடிகளுக்குக் கூறுகிறார். இளங்கோவடிகளிடத்து இருந்த சாத்தன் என்பதே கருத்து.

**மணிமேகலை** – குறவர் கூற்றைக் கேட்ட சாத்தனார், 'யானறிகுவ னதுபட்டது' என்று கூறிச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் 'அடிகள் நீரேயருளுக என்று வழிகாட்டி, அவ்வாறே இளங்கோவடிகள் அருளிய நூலைக் கேட்டவராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் அவர்கள்,

சிலப்பதிகாரத் தலைவனாகிய கோவலன் மகள் மணிமேகலையின் வரலாற்றையறிந்தவராதலின், சிலப்பதிகாரத்தின் தொடர் வரலாற்று நூலாக இதனை இயற்றியுள்ளார்.

## ஐங்குறுநூறு தொகுத்தோர்

**புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்** – இவர் மலைநாட்டைச் சேர்ந்த கூடலூரில் வாழ்ந்தவர்; வேளாண் மரபினர்; கணிதத்தில் வல்லவர். இவரைக் **கோச்சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை** என்னும் மன்னவன் ஆதரித்து வந்தான். அவன் வேண்டுகோளின்படியே இவர் ஐங்குறுநூறு என்னும் இத்தொகை நூலைத் தொகுத்தார். இவர் இயற்றியனவாகக் குறுந்தொகையுள் மூன்று பாடல்களும் புறநானூற்றில் ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளன.

**யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையார்** – புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரை ஆதரித்து, அவரைக் கொண்டு **ஐங்குறுநூறு** என்னும் நூலைத் தொகுக்கச் செய்தவர். சேரர் பரம்பரையினர்; சேரமன்னர். கபிலரின் நண்பர். பெருவீரமும் வள்ளற்றன்மையுமுள்ளவர். கொல்லிமலைத்தலைவர்; தொண்டி நகரையாண்டவர்.

## உரையாசிரியர் வரலாறு

### நச்சினார்க்கினியர் -

"- - - பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை
எழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய
னென்னும்பே ராளன்"

"தொல்காப் பியத்திற் றொகுத்த பொருளனைத்தும்
எல்லார்க்கு மொப்ப வினிதுரைத்தான் - சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் - - - -'

என்பன போன்று பலபாடல்களால் சிறப்பிக்கப் பெறுபவர் நச்சினார்க்கினியர். பாண்டி நாட்டு, மதுரையம்பதி, அந்தண, பரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர்.

தொல்காப்பியத்தின் ஓரெழுத் தொருமொழி என்னுஞ் சூத்திரவுரையில் ஆறெழுத்தொரு மொழி, ஏழெழுத்தொரு மொழிகளுக்குச் சிதம்பரத்தின் வேறுபெயர்களாகிய திருச்சிற்றம்பலம், பெரும்பற்றப் புலியூர் ஆகிய பெயர்களைச் சுட்டியவர்.

சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகை, தொல்காப்பியம் போன்ற பல நூல்களுக்கு உரைகண்டவர். அவர்தம் உரைகளுள்,

அகத்தியம், அணியியல், இறையனாரகப் பொருள், காக்கைப் பாடினியம், சிறுகாக்கைப்பாடினியம், தொல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை, முத்தொள்ளாயிரம், யாப்பருங்கலம் ஆகிய பத்து இலக்கண நூல்களை மேற்கோள் களுக்காக எடுத்துக் காட்டியிருக்கிறார். இதே போல, சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, காப்பியங்கள், உதயணன் கதை, திருவாசகம், திருவாய்மொழி, நாடக நூல், பாரதவெண்பா, பூதபுராணம், மாபுராணம், யாழ்நூல், வசைக்கூத்து, விளக்கத்தார் கூத்து ஆகிய சுமார் எண்பத்திரண்டு நூல்களை மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார் என்பதை நமது வழிகாட்டி அவர்கள் தொகுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தா பிள்ளையாசிரியர் போன்றவர்களின் உரைகளை ஆங்காங்கு எடுத்துக்காட்டும் நச்சினார்க்கினியர் அவ்வுரையாசிரியர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பதோடு அவர்கள்தம் உரைகளை ஆழ்ந்து கண்டுள்ளார் என்னும் கல்வித்திறமையும் நன்கு புலனாகிறது.

**அடியார்க்கு நல்லார்** - இவர்தம் ஊர் பெயர் முதலிய ஏதும் தெரியவில்லை. ஐந்திணைகளுக்குமுரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களுக்குச் சிலப்பதிகார உரையுள் சான்று காட்டுதற்கு அந்நூலிலிருந்தே சான்றுகாட்டி விளக்கியிருக்கிறார். சிலப்பதிகாரத்துள் இடம்பெறும் இசை, நாடகப் பகுதிகளுக்கு உரை கூறுங்கால் இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் என்னும் ஐந்து நூல்களையும் மேற்கோளாகக் கொண்டிருக்கிறார்.

> **"வான்கண் விழியா வைகறை யாமத்து**
> **மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்**
> **காரிருள் நின்ற கடைநாட் கங்குல்** *(10. 1–3)*

என்பதனால் பூருவபக்கத்துப் பதினாலாம் பக்கமாதலான் அதனோடும்,

> **"ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்**
> **தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று"** *(23. 133–134)*

ஆடிமாதத்துக் கிருட்டின பக்கத்துக் கார்த்திகை, பரணி, அட்டமி நட்சத்திரத்து - என்பனவற்றை விளக்கி அவை மாறுபடுமாற்றினை விளக்கும் அடியார்க்கு நல்லார் கணித நூற்பயிற்சியில் வல்லவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

**அரும்பதவுரையாசிரியர்** - ஊர், பெயர் முதலியன அறிய இயலாத நிலையில் இவர்தம் உரையைக் கொண்டே பெயர் பெறுகிறார். ஒவ்வொரு நூலிலும் இவ்வாறு இடம்பெறும் பெயர் ஒருவரையே குறிப்பதன்று. சிலம்பில் இவர்தம் குறிப்புரைகளைக் கொண்டே பலவிடங்களில் அடியார்க்குநல்லார் விளக்கவுரை தருகிறார். ஆனால் சிற்சில இடங்களில் மூலபாடத்திலும் உரையிலும் இருவரும் மாறுபடுவதைக் காணலாம்.

பாடலின் ஒரு சொல், பாடலின் தொடக்கம், தொடக்க முடிவுத்தொடர் ஆகியவற்றுள் ஒன்றை எழுதிப் பொருள் எழுதும் முறை இவர்தம் உரையில் இடம்பெறுகிறது.

பரிமேலழகர்

"- - - - சங்க மென்னும் துங்கமலி கடலுள்
அரிதி னெழுந்த பரிபாட் டமுதம் - - -
பாடிய சான்றவர் பீடுநன் குணர - - -
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன்
பரிமே லழகன் உரிமையி னுணர்ந்தே"

(பரிபாடல் உரைச்சிறப்புப் பாயிரம்)

உரையாசிரியராகிய இவர் காஞ்சிமா நகரத்து ஸ்ரீஉலகளந்த பெருமாள் கோயில் அருச்சக பரம்பரையிற் பிறந்தவர். வைணவ சமயத்தவர். இவர்தம் திருக்குறள் உரை உலகறிந்த ஒன்று.

இவர்தம் உரைகளுள் தொல்காப்பியம் தொடங்கி, சங்க நூல்கள், காப்பியங்கள், திருவாய்மொழி போன்ற முப்பது நூல்கள் மேற்கோள் நூல்களாக விளங்குகின்றன.

# இயல்-5

## வழிகாட்டும் தொகுப்பு நெறிகள்

முகவுரைகளைத் தவிர, நூலாசிரியர், உரையாசிரியர், தொகை நூல்களாயின் பாடிய புலவர்கள், நூல்களில் பாடப் பெற்றோர், நூல்களைத் தொகுத்தோர், தொகுக்கச் செய்தோர் போன்றவர்களுடைய வரலாறுகள், பதிப்பாசிரியர்களுக்கு மட்டுமன்றி, பலவகை ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கும் மிக எளிமையாக அறிய உதவுகின்றன.

சிறப்புச் செய்திகளாக ஒவ்வொரு நூலிலும் இடம்பெறும் மன்னர், புலவர், நாடு, ஊர், மலை, ஆறு, நூல் போன்ற செய்திகள் ஒவ்வொரு தனித்தலைப்பிலும் நூல் செய்வோர் ஆய்வு செய்வோர் ஆகியோருக்குப் பெரிதும் துணைநிற்கின்றன.

சான்றாக ஒரு நாடு, அந்நாட்டு ஊர்கள், ஆறுகள், மலைகள் போன்றவற்றின் பெயர்களை இச்சிறப்புச் செய்திகளில் கண்டு, அவை எந்தெந்தப் பாடல்களில், அடிகளில், பக்கங்களில் இடம்பெறுகின்றன என்பதை, நூலின் இறுதியில் இடம்பெறும் சொல்லகராதிகளின் துணையால் அறிந்து அந்தந்தப் பாடல்களில் அவை சிறப்பிக்கப் பெறும் வரலாறுகளை - உரைகளின் துணைகொண்டு - முழுமையாக அறிய முடிகிறது. இத்தகு சிறப்புப் பணிகளுக்குத் துணிபுரியும் இந்த அமைப்புகள் அனைத்தையும் அனைவரும் தங்கள் பதிப்புகளிலும் வெளியீடுகளிலும் எடுத்துக்காட்ட வேண்டும் என்பதை உணர்த்தி இவை வழிகாட்டுகின்றன.

இத்தகு பயன்பாடுகளைக் கொண்டு இச்சிறப்புச் செய்திகள் பலவற்றையும் ஒரே இடத்தில் அறியும் வாய்ப்பாக இங்குத் தொகுத்தளிக்கப் பெறுகின்றன.

**நூல்களாலறியப்பெறுவன**

ஒவ்வொரு நூலிலும் நூற்பொருள், நூலின் கதைச்சுருக்கம் என்னும் தலைப்புகளில் நூலின் முழுக்கருத்தையும் அறியச் செய்வது நமது வழிகாட்டி அவர்களின் பதிப்பு நெறிகளுள் ஒன்றாக இடம் பெறுகிறது.

நூலைப்பற்றிய இச்சுருக்கச் செய்திகளால், நூலினுட் புகுதற்கு ஆர்வத்தை யூட்டுகிறார் நம் வழிகாட்டி அவர்கள். இதே நெறிமுறைகளைக் கையாளுவதில் பதிப்பாசிரியர்கள் ஆர்வமுடையவர்களாகவும் உழைப்புடையவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதே அவர்தம் வழிகாட்டு முறையுள் இடம் பெறுகிறது.

சீவகசிந்தாமணி

1. அரசன் அமைச்சரைப் பலமுறை ஆராய்ந்து தெளிதல் வேண்டும்.
2. பெண்வழிச் சேறல் பெருந்துயர் விளைக்கும்.
3. தன்னாசிரியன் கட்டளைப்படியே எப்பொழுதும் ஒழுகல் வேண்டும்.
4. பகையை வெல்லக் கருதினோன் உரிய காலமும் இடமும் வாய்க்குமளவும் தன் எண்ணத்தை வெளிப்படுத்தா திருப்பதில் உறுதியாதல் வேண்டும்.
5. பிறவுயிர்க்குத் துன்பம் வரின் உடனே தீர்த்தற்கு முயற்சித்தல் வேண்டும்.
6. வருந்தும்படி நேரினும் தனக்கு ஒருவாற்றானும் பகைவரில்லாதாரைச் சிறிதும் வருத்துதலாகாது.
7. தந்தை தாயர் சொல்லைத் தலையாகக் கொள்ளல் வேண்டும்.
8. அறிவு மன்புமுள்ள துணைவனிருந்தால் தானெண்ணி யவற்றை யெல்லாம் எளிதில் முடித்துக் கொள்ள இயலும்.
9. தமக்கு இன்பதுன்பங்கள் வந்தவிடத்து முறையே மகிழ்தலும் வருந்துதலுமின்றி எல்லாம் ஊழ்வினைப் பயனென்றே கொள்ளுதல் வேண்டும்.
10. எல்லா வுயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடை யனாதல் வேண்டும்.
11. சற்பாத்திர மறிந்து தானஞ் செய்தல் வேண்டும்.

12. தீவழிச் செல்வோரைக் காணின் இரங்கி, உடனே அவரை நல்வழிப்படுத்த முயற்சித்தல் வேண்டும்.

13. என்றும் நன்றி மறவா திருத்தல் வேண்டும்.

என்னும் இப்பதின்மூன்று உண்மைகளை இந்நூலின் பதின்மூன்று இலம்பகங்களும் உணர்த்துகின்றன என்பதைச் சுருக்கிக் காட்டுகிறார் வழிகாட்டி அவர்கள்.

**சிலப்பதிகாரம்**

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்"

(பதிகம். 55–57)

ஆகிய இம்மூன்று உண்மைகளும் உலகத்து என்றும் நிகழக்கூடிய உண்மைகளே என்பதை உலகத்தார்க்கு உணர்த்துதல் பொருட்டே சிலம்பை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்ற நூலாதலின் இதனாலறியப் பெறுவன இம்மூன்று உண்மைகளுமேயாகும்.

**மணிமேகலை**

சிறுவயதிலேயே தாயொடு பழகியதால் வாய்மைநான்கும் சீலமைந்தும் நிறைந்த பௌத்த தருமங்களை அறிதற்கு உணர்ச்சி தோன்றுகிறது.

புத்தபீடிகைக் காட்சியால் பழம்பிறப்பு அறியப் பெறுகிறது. அப்பீடிகையின் காவல் தெய்வமாகிய தீவதிலகையின் அருள் கிடைக்கிறது. அவ்வருள் துணைநிற்கக் கோமுகி என்னும் பொய்கையில் அமுதசுரபியென்னும் அட்சய பாத்திரம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பசித்த உயிர்களுக்கு உணவளிப்பதே உயர்ந்த தருமம் என்பதை அறவணவடிகள் உணர்த்துகிறார். உணவளிக்கும் கொள்கையை மேற்கொள்ள விருப்பம் ஏற்படுகிறது. அமுதசுரபியை ஏந்திப் பிச்சை எடுத்த செயலும், பிச்சை பெற்றுக் காயசண்டிகை என்னும் வித்தியாதரமங்கையின் பசியைப் போக்கிய செயலும் மிக உயர்ந்த செயலாகி, அப்பாத்திரத்தில் அமுதுவளரும் நிலையை ஏற்படுத்துகிறது.

அறத்தின்வழி பத்தினிக்கடவுளைத் தரிசிக்கும் பேறு கிடைக்கிறது. பத்தினித் தெய்வத்தின் அருள், மேலும் மேலும் அறம் செய்து தவம் மேற்கொள்ளும் வாய்ப்பை உருவாக்கிப் பேறு பெறும் நிலை உருவாகிறது.

இந்த உண்மைகள் மணிமேகலையின் வரலாறாக இருந்தாலும், அறநிலைகள் அழிவைத் தடுத்துப் பேற்றையளிக்கும் என்ற பேருண்மையை உலகிற்கு உணர்த்துவதே இந்நூலின் கொள்கையாகிறது.

இவ்வாறே அரசு, ஆட்சி முறை, வீரம், வெற்றி, வள்ளற்றன்மை, புகழ், போற்றுதல், போற்றப்பெறுதல் போன்ற பல்வகைச் சிறப்புகளைப் பிற ஒவ்வொரு நூலாலும் அறிய முடிகிறது.

### சிறப்புச் செய்திகள்

**சீவகசிந்தாமணி** – நூலாலறியப்பெறும் செய்திகளாகச் சீவக சிந்தாமணி உணர்த்தும் உண்மை அறிவுரைகளை இலம்பகவாரியாக எடுத்துக்காட்டியதோ டல்லாமல் விசேடக்குறிப்பு என்னும் பொருளில் கொடுக்கப் பெற்றிருக்கும் சிறப்புச் செய்திகள் பல நூலின் உட்பொருள்களைத் தெளிவுபடுத்துகின்றன. சான்றாக:

**தேவர்** - துறந்தோரைத் தேவர் என்பது சைனசமய மரபு. திருத்தக்கதேவர், உதீசித்தேவர், குணபத்திரதேவர் போல்வன.

**அம்மை முதலிய எட்டு** - அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன (தொல்.செய். 235-242).

**பாடாண்** - பாடுதல் வினையையும் பாடப்பெறும் ஆண்மகனையும் நோக்காது அவனது ஒழுக்கங்களை உணர்த்துவது. அது செந்துறைப் பாடாண் பாட்டு எனப் பெறும் மூன்று வகையில் அமையும். அவை

1. பரவற்கண்வரும் செந்துறைப் பாடாண் பாட்டு
2. புகழ்ச்சிக்கண் வரும் செந்துறைப் பாடாண் பாட்டு
3. முன்னோர் கூறிய குறிப்பின்கண் வரும் செந்துறைப் பாடாண் பாட்டு என்பன.

இவற்றைப் போன்று பஞ்ச நமஸ்கார மந்திரங்கள், சக்கரவர்த்தி, காமன், பண்வகை, கிணைநிலை, மும்மலம், யோசனை, பட்டம், புறம்பில்அகழ், பவணம், காவன்மகளிர், மயிர்வகை,

இமவான், ஐவகைத் தாயர், கிளவியாக்கம், திலோத்தமை, பால்நிறவண்ணன், சுக்கிலத்தியானம், போதி, பரிதியன்ன கடவுள், வெள்ளிமலை என்பன போன்ற பல சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் உரிய சான்றுகளாக இந்நூலிலிருந்தும் வேறுபல நூல்களிலிருந்தும் பலவற்றை எடுத்துக்காட்டியிருப்பது பதிப்பாசிரியர்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதோடு நூலின் உட்பொருளில் தெளிவை உண்டாக்குகிறது.

**சிலப்பதிகாரம்** – நூலாசிரியர், உரையாசிரியர் போன்றோர் வரலாறுகளையடுத்துச் சிலப்பதிகாரத்திலும் இந்த நூலாலும் உரைகளாலும் தெரியவரும் அரசர் பெயர் முதலான சிறப்புச் செய்திகள் என்னும் வகையில் பல செய்திகள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. அவற்றுள்,

*1. அரசர்*

| | | |
|---|---|---|
| அநாகுலன், | அவந்தி | நாட்டரசன், |
| அழும்பில்வேள், | இளஞ்செழியன், | உத்தரகௌத்தன், |
| உத்தரன், | உதியஞ்சேரல், | உருத்திரன், |
| கங்கர், | கட்டியர், | கடுங்கோன், |
| கயவாகு, | கரிகால்வளவன், | கருநாடர், |
| கலிங்கர், | கன்னர், | கனகன், |
| காய்சினவழுதி, | கொங்கணர், | கொங்கர், |
| கொங்கிளங்கோசர், | சிங்கன், | சித்திரன், |
| சிவேதன், | சேரலாதன், | தனுத்தரன், |
| தொண்டியோர் பழையன், | பெருநற்கிள்ளி, | பைரவன், |
| மகதநாட்டரசன், | மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன், | |
| மாந்தரஞ்சேர விரும்பொறை, | | மாளுவவேந்தர், |
| முசுகுந்தன், | யவனர், | வச்சிரநாட்டரசர், |

வசு, விசயன், விசித்திரன், வெற்றிவேற்செழியன் என்னும் நாற்பத்தொரு மன்னர் பெயர்கள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. இவற்றைப் போலவே,

**2. நாடுகள்**

| | | |
|---|---|---|
| அவந்தி, | ஈழம், | கலிங்கம், |
| குடகம், | குண்டூர்க்கூற்றம், | குணகாரைநாடு, |
| குமரிநாடு, | குறும்பனைநாடு, | குன்றநாடு, |
| கொங்கு, | கொல்லம், | சோணாடு, |

தெங்கநாடு, தென்பாலி, நாகநாடு,
பாண்டிநாடு, பின்பாலைநாடு, மகதநாடு,
மத்திமதேசம், மதுரைநாடு, முத்தூர்க் கூற்றம்,
முன்பாலைநாடு, வச்சிரநாடு
என்னும் இருபத்து மூன்று நாடுகள் இடம் பெற்றுள்ளன.

3. ஊர்கள்

இடும்பில் இரவிபுரம் இருந்தையூர்
இலங்காபுரம் உஞ்சை (உச்சைனி) உறந்தை
கச்சி கபாடபுரம் கபிலபுரம் காப்பியக்குடி
குணவாயில் கொடுங்கோளூர் கொடும்பாளூர்
கொற்கை சிங்கபுரம் செந்தில் சேடி
சோநகர் தங்கால் தலைச்செங்கோடு
திருவனந்தபுரம் திருவரங்கம் தொண்டி
நெடுங்குளம் நேரிவாயில் பட்டினப்பாக்கம்
பறையூர் புகார் மங்கலாபுரம் (மங்களூர்)
மதுரை மருவூர்ப்பாக்கம் மாங்காடு
வஞ்சி வயலூர் வாரணம் (வாரணாசி) வியலூர்
ஆகிய முப்பத்தாறு ஊர்கள்.

4. மண்டிலம் – கொங்கு ஒன்று மட்டும்.

5. மலைகள்

அழகர்மலை இமயம் ஏரகம்
குடமலை குமரிக்கோடு கொல்லி
சிறுமலை செங்குன்று திருச்செங்கோடு
நீலகிரி நெடுவேள்குன்றம் பெருமலை
பொதியில் மேரு வெண்குன்று
வெள்ளியம் பெருமலை வேங்கடம்
என்னும் பதினேழு மலைகள்.

6. ஆறுகள்

அயிரை கங்கை காவிரி
குமரி சிலம்பாறு சோணை
தொழுனை பஃறுளி பேராறு
பொருநை வையை
ஆகிய பன்னிரண்டு ஆறுகள்.

**7. பொய்கைகள்**

இட்டசித்தி, சூரியகுண்டம், சோமகுண்டம், பவகாரணி, புண்ணிசரவணம்
என்னும் ஐந்து பொய்கைகள்.

**8. கோயில் கொண்டுள்ள தெய்வங்கள்**

அரன், அறுமுகன், இந்திரன்,
இயக்கி, இருந்தவளமுடையார், ஐயை,
ஐராவதம், கண்ணகி, கயிலாயம்,
கற்பகம், காமன், சந்திரன்,
சாத்தன், சாதவாகனன், சினன்,
சூரியன், திருமால், பலதேவன்,
புத்தன், மங்கலாதேவி, வச்சிரம்
வேல் என்னும் இருபத்திரண்டு இறைவர்கள் கோயில் கொண்டுள்ளனர்.

**9. புலவர்**

அகத்தியனார் அறிவனார் அறிவுடையரனார் ஆதிவாயிலார்
இருந்தையூர்க்கருங்கோழி மோசியார், இறையனார்,
கீரந்தையார் கீரங்கொற்றர் சாத்தனார் சிகண்டியார்
சிறுபாண்டரங்கனார் செயிற்றியனார் துவரைக்கோமான்
தொல்காப்பியனார் நாரதனார் நிதியின்கிழவன்
பரதசேனாபதியார் பாண்டியன்மதிவாணனார்
மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்
மதுரையாசிரியன் மாறனார் முரஞ்சியூர் முடிநாகனார்,
யாமளேந்திரர் வெள்ளூர்க்காப்பியனார்
என்னும் புலவர் பெருமக்கள் பெயர்கள் இருபத்து நான்கு.

**10. உரையாசிரியர்** - இருவர் - இளம்பூரணர், நக்கீரர்

**11. உரையிற்காணும் நூல்கள்**

அகத்தியம், அகநானூறு, அணியியல்
ஆசிரியமாலை, இசை நுணுக்கம், இந்திரகாளியம்
உதயணன்கதை ஓவிய நூல் கலி கலிங்கத்துப்பரணி
கலித்தொகை களரியாவிரை கனா நூல்
குருகு குறுந்தொகை கூத்தநூல் சயந்தம்

சிறுபாணாற்றுப்படை சீவகசிந்தாமணி சூளாமணி
செயிற்றியம் சொல்லகத்தியம் தண்டியலங்காரம்
தாளவகையோத்து திருக்குறள்
திருச்சிற்றம்பலக் கோவையார் திருமுருகாற்றுப்படை
திவாகரம் தொல்காப்பியம் நற்றிணை
நாலடியார் நான்மணிக்கடிகை நூல்
நெடுநல்வாடை பஞ்சபாரதீயம்
பஞ்சமரபு பட்டினப்பாலை
பதிற்றுப்பத்து பதினாறுபடலம் பரதசேனாபதீயம்
பரதம் பரிபாடல் பழமொழி பாசண்டம்
புறநானூறு புறப்பொருள் வெண்பாமாலை
பெருங்குருகு பெருங்குறிஞ்சி பெருநாரை
பெரும்பாணாற்றுப்படை
பொருநராற்றுப்படை மணிமேகலை மதிவாணர்நாடகத்தமிழ் நூல்
மதுரைக்காஞ்சி மலைபடுகடாம்
முத்தொள்ளாயிரம் முறுவல்
வளையாபதி வெண்டாளி - என்னும் ஐம்பத்தொன்பது
நூல்கள் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

மணிமேகலை

1. அரசர்

அத்திபதி இரவிவன்மன் இராகுலன்
இராமன் உதயகுமரன் ககந்தன் கரிகால்வளவன் (கரிகால் பெருவளத்தான்) கனகன்
காந்தன் கிள்ளிவளவன் குமரன்
சீதரன் செங்குட்டுவன் துச்சயன்
துணையிளங்கிள்ளி
தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்
தொடுகழற்கிள்ளி நாகநாட்டரசரிருவர் நெடுஞ்செழியன்
நெடுமுடிக்கிள்ளி புண்ணியராசன் பூமிசந்திரன்
மனு மாவண்கிள்ளி மாவலி
முசுகுந்தன் வசு வடிவேற்கிள்ளி
வத்தவன் (வத்ஸராஜன்) வளைவணன் வாணன்
விசயன் விடர்ச்சிலைபொறித்தவேந்தன்
விராடன் வெண்வேற்கிள்ளி
என்னும் முப்பத்தைந்து மன்னர்கள்.

**2. அட்சயபாத்திரம் – அமுதசுரபி**

**3. ஆறுகள் –** கங்கை, காயங்கரை, காரியாறு, காவேரி, குமரி (5)

**4. உலகம் –** துடிதலோகம், வித்தியாதரருலகு (2)

**5. ஊர்கள்**

அசோதரநகரம் இடவயம் உஞ்சை கச்சயம்
கபிலை காஞ்சனபுரம் காஞ்சி
காவிரிப்பூம்பட்டினம் (காகந்தி) கொற்கை
கோசம்பி (கௌசாம்பி நகரம்) சண்பை சிங்கநகரம்
சித்திபுரம் சேடி தக்கணமதுரை (மதுரை)
நாகபுரம் வஞ்சி வயனங்கோடு வாரணாசி (19)

**6. குலங்கள்** இந்திரகுலம், சூரியகுலம், மாவலிகுலம் (3)

**7. கோயில்கள்**

இந்திரவிகாரம், கலைநியமம்
குச்சரக்குடிகை சக்கரவாளக்கோட்டம்
தருநிலை (கற்பகதருநிற்குங் கோயில்)
தீவதிலகைகோயில் புத்தபாதபீடிகைக்கோயில்
பூதசதுக்கம் மணிமேகலா தெய்வக் கோயில்
வச்சிக்கோட்டம் (வச்சிராயுதம் நிற்கும் கோயில்) (10)

**8.** தருமசாலை – உலகவறவி (1)

**9. தீவங்கள்**

இரத்தினத்தீவம், இலங்காதீவம் சம்புத்தீவம்,
சிறுதீவுஇரண்டாயிரம், பெருந்தீவு நான்கு மணிபல்லவம் (6).

**10. தெய்வங்கள்**

அந்தரி (துர்க்கை) அரூபப்பிரமர்நான்கு வகையினர்,
இந்திரன், உரூபப் பிரமர்பதினாறு வகையினர்,
கண்ணகி, கந்திற்பாவை (துவதிகள்), குமரி,
கோவலன், சம்பூதீவக்காவற் தெய்வம் (சம்பாபதி,
சித்திர சேனன், சிந்தாதேவி, சிவபெருமான்,
திருமால், தீவதிலகை, பலதேவன்,
பிரமன், பூதம் (அங்காடிப் பூதம், சதுக்கப் பூதம்),
மணிமேகலா தெய்வம், மகாபிரஹ்மா, மாரன்,
மாருதவேகன், முருகக்கடவுள், விந்தாகடிகை. (23).

*11.* **நகரத்தெய்வங்கள்** – சம்பாதி, மதுராபதி (2).

12. **நாடுகள்** – அங்கநாடு, உத்தரமகதம், கலிங்கநாடு, காந்தாரநாடு, சாவகநாடு, நாகநாடு, பாண்டிநாடு, பூருவதேயம், மகதம். (9)

13. **நூல்கள்** – ஓவிய நூல், திருக்குறள், பிடகம், மடை நூல், மற்கலிநூல் (5).

14. **நோய்** – யானைத்தீ நோய் (1)

15. **பாம்பு** – திட்டிவிடம் (1)

16. **புத்தஸ்தலமுள்ள இடங்கள்** – காஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், சமந்தம் (சமனொளி, பாதபங்கயமலை), மணிபல்லவம், வஞ்சி நகர் (5)

17. **புலவர்கள்** – இளங்கோவடிகள், திருவள்ளுவர் (2)

18. **பொய்கைகள்** – கோமுகி, சரவணம் (2).

19. **மலைகள்** – இமயம், சமந்தம் (சமனொளி, பாதபங்கய மலை, கிருத்திர கூடம்) தவளமலை, நாகர்மலை, பொதியில், மேரு, மேருவைச் சூழ்ந்த ஏழுகுன்றங்கள், விந்தம். (8). (8+6=14 எனினுமாம்)

20. **முனிவர்கள்** – அக்கபாதர், அகத்தியர், அசலர், அறவணவடிகள், கவேரர், கிருதகோடி, கேசகம்பளர், கௌதம முனிவர், சங்கதருமர், சாதுசக்கரர் சிருங்கி, சைமினி, தருமசாவகர், பரசுராமர், பிரமதருமன், புத்தன், மண்முகமுனிவன், விசுவாமித்திரன் வியாசன் விரிஞ்சி விருச்சிகன் (21).

21. **வனங்கள்** – கவேரவனம், சம்பாதிவனம், தருமதவனம் (3)

22. **வாதங்கள்** – அளவைவாதம், ஆசீவகவாதம், சாங்கிய வாதம், சைவாதம், நிகண்டவாதம், பிரமவாதம், பூதவாதம், மந்திரவாதம், வேதவாதம், வைசேடிகவாதம், வைணவவாதம் (11).

23. **விழாக்கள்** – இந்திரவிழா, மங்கலத்திருநாள் (2).

என்பன மணிமேகலையில் இடம் பெறும் சிறப்புச் செய்திகளாகத் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

**1. அணிகலன்கள் – (38 வகை)**

| | | |
|---|---|---|
| ஆரப்பூண் | ஆழிமோதிரம் | இருவடமேகலை |
| எண்வடக்காஞ்சி | கட்டுவடம் | கடிப்பு |
| கழல் | காஞ்சியணி | கால்மோதிரம் |
| காழ் | காற்சிலம்பு | குழை |
| கொக்குவாய் | சுடுபொன் | செறிக்கும்தோள்வளை |
| தலைக்கோலம் | தலைக்கோல்முத்து | தலைப்பாளை |
| திருக்கோவை | தோள்வளை | நாளணி |
| நித்திலஅரிச்சிலம்பு | நித்திலமதாணி | பவழமாலை |
| பவழவளை | பொலங்கலம் | பொற்பூ |
| பொன்மாலை | மகரகுண்டலம் | மகரவலயம் |
| மத்தகநித்திலம் | மதாணி | மார்பின்வடம் |
| முச்சி | முத்தணி | மேகலைவகை |
| மேகலைவடங்களின் நூல் | வளை. | |

**2. ஆயுதங்கள் (8 வகை)**

அம்பறாத்தூணி, குந்தம், செறியிலை ஈட்டி, பாரவளை, பொலம்படை, மத்திகை, வாள், வாளிகள்.

**3. ஊர்திகள் (4 வகை)**

அத்திரி, களிறு, சிவிகை, தண்டுஆர்சிவிகை.

**4. கதைகள் – (13 கதைகள்)**

அகலிகை கல்லுருவானமை, அமரர்க்கு அமுதருத்தியது, அவுணர் கடலிற்பாய்ந்தது, திருமால் மழையைவற்றச் செய்தது, இந்திரன் இமயத்தைக் காத்தது, இந்திரன் சாபமேற்றது, இறைவன் திரிபுரஞ்செற்றது, உருப்பசிகுதிரையானது, கடல்கடைந்தது, கருடன் வினதைசிறைமீட்டது, திருமால் கருடனைஅடக்கியது, தேவமருத்துவர் வரலாறு, பிரமன் கங்கையை பூமிக்கு அளித்தது.

**5. குன்றங்கள் – (11 மலைகள்)**

இமயம், குருகு எனும் மால்வரை, கூருதைகுன்று, சையமலை, சோலைமலை, திருமால் குன்றம், திருமாலிருஞ்சோலை (இருங்குன்று), திருவரை (அழகர்மலை), நெடுங்குன்றம், பரங்குன்று, மேருமலை.

6. சாதிகள் - (13 சாதிகள்)

அந்தணர், உழவர், காதற்பரத்தை, காருகப்புண்ணியவணிகர், கீழோர், குறிஞ்சிநிலமாக்கள், குன்றவர், கொடிச்சியர், கொடிச்சென்னியர் - பாணர், பாண்சாதி, யாழ்ப்பாணர், விலைக்கணிகையர், வேளாளர்.

### 7. தொகைப் பெயர்கள் (21 பெயர்கள்)

அந்தக்கரணம்மூன்று அட்டமூர்த்தம் அட்டவசுக்கள்
அறுவர்தெய்வமுனிவர் ஆகாயமுதல்பூதங்கள் ஆதித்தர்பன்னிருவர்
ஆறிருகை ஆறுபொறி இந்திரன்முதலியஎண்மர்
இருபத்தைந்துதத்துவம் உருத்திரர்பதினொருவர்
எழுமகளிர் கன்மேந்திரியம்ஐந்து கோள்கள்ஏழு
சித்தபரிகருமம்நான்கு ஞானேந்திரியம் ஐந்து
தாமாஇருவர் பத்துத்ததுவர் முப்பத்துமூவர்
மூவகைஇராசி வியூகம் நான்கு.

### 8. நீரில் செலுத்தும் ஊர்திகள் (24 ஊர்திகள்)

அம்பி அரக்குநீர்வட்டு இதை
எக்குவ எறிவன ஓடம் கிடைத்தேர்
கிடைமாடம் சிவிறி சென்மரம் (புணை)
திமில் துருத்தி நீர்க்கோடு
நீர்வீசுகருவி நீர்வீசுகொம்பு நெட்டித்தேர்
நெய்ச்சிவிரி(புழுகு) பள்ளியோடவையம் புனைந்ததெப்பம்
மிதவை மூங்கிற்புணை வட்டு
வெண்கிடைமிதவை வெள்ளக்கால்.

### 9. பறவைகள் (14 வகை)

கிரௌஞ்சம் கிளி குயிலினம்
குருகு குருவி கோகிலம்
கோழி (கொடி) சக்கரவாளம் செவ்வாயுவணம் சேவல் (கொடி)
தாதுண் பறவை
தோகை மகன்றில் (நீர்ப்பறவை) மயில்.

### 10. பூமாலை வகை (14 வகை)

அதிரற்கண்ணி இணைப்பிணையல் இலைக்கோதை
இலைமாலை ஒலியல் கண்ணி தாமம்

தார் தூக்கிக்கட்டுமாலை நெய்தல்மாலை
படலைமாலை பிணைத்தமாலை புகைசுற்றியதார்
மாலையணிய விலைதருதல்.

### 11. மரவகை (23 வகை மரங்கள்)

| | | |
|---|---|---|
| அகரு (அகில்) | அசோகு (பிண்டி) | ஆல் |
| இலவம் | இறவி | ஏழிலைப்பாலை |
| கடம்பு | கரும்பு | கவிர் |
| குருக்கத்தி | சுரபுன்னை | செயலை ஞெமை |
| தேவதாரம் | நாகமரம் | பனை |
| பாதிரி | மகிழமரம் | மராமரம் |
| மூங்கில் | வஞ்சி | வெண்கடம்பு |
| வேங்கை. | | |

### 12. மலர்கள் (35 வகை மலர்கள்)

| | | |
|---|---|---|
| அசோகம்பூ | அதிரல் | ஆம்பல் |
| இருவேரி | எருவை | கணவிரி |
| கல்லாரம் | கழுநீர்மலர் | காந்தட்குலை |
| காந்தள் | காயாம்பூ | குல்லை |
| குவளை | குவளைத்தண்டு | குளிரி - கல்லாரப்பூ |
| கொட்டை (தாமரை) | கோங்கு | சினைப்பூ |
| ஞாழல் | தாமரை | தும்பை |
| துழாய் | தோன்றிச்செம்பூ | நரந்தப்புல் |
| நறவம்பூ | நாவற்பூ | நீலமலர் |
| நெய்தற்பூ | பச்சிலை | பூதர்அருச்சனைப்பூ |
| மல்லிகை | மாலையில் நெய்தல் | மாலைமலர்ப்பூ |
| மௌவல் | வெட்சி. | |

இப்பன்னிரண்டு வகைச் சிறப்புச் செய்திகளைத் தவிர பரிபாடலில் இடம்பெறுவனவாக,

உடை முதலிய பொருள்கள், சபை வகைகள் சிலசெய்திகள், சிவபெருமான், சூளுறவ்வகைகள், தமிழ், திருநாள்முதலியன, திருமால், பல தேவேர், தொழில்கள், நீர்நிலைகள், நீர்வாழ்வன, பாண்டியன், பானவகை - மதுவகை, போகப்பொருட்செய்திகள், மரபுகள் முதலியன, வாத்திய வகை, விலங்குகள், வெறியாட்டு, வையை சம்பந்தமானவை.

என்னும் பத்தொன்பது புதுவகைச் சிறப்புச் செய்திகள் முழுமையாகத் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

## புறநானூறு

**திணைகள் -** உழிஞை, கரந்தை, காஞ்சி, கைக்கிளை, தும்பை, நொச்சி, பாடாண், பெருந்திணை, பொதுவியல், வஞ்சி, வாகை, வெட்சி ஆகிய பன்னிரு திணைகள்.

## துறைகள் (65 துறைகள்)

அரசவாகை, ஆனந்தப்பையுள், இயன்மொழி,
உடனிலை, உண்டாட்டு, உவகைக்கலுழ்ச்சி,
எருமைமறம், ஏர்க்கள உருவகம் ஏறாண்முல்லை,
கடவுள் வாழ்த்து, கடைநிலை, கடைநிலைவிடை,
களிற்றுடனிலை, குடிநிலையுரைத்தல்,
குடைமங்கலம், குதிரைமறம், குறுங்கலி, கையறுநிலை,
கொற்றவள்ளை, செருமலைதல், செருவிடைவீழ்தல்,
செவியறிவுறூஉ, தலைத்தோற்றம், தாபதநிலை,
தாபதவாகை, தானைநிலை, தானைமறம், துணைவஞ்சி,
தொகைநிலை, நல்லிசைவஞ்சி, நீண்மொழி, நூழிலாட்டு,
நெடுமொழி, பரிசில்கடாநிலை, பரிசில்விடை,
பரிசிற்றுறை, பழிச்சுதல், பாண்பாட்டு,
பாணாற்றுப்படை, பார்ப்பனவாகை,
பிள்ளைப்பெயர்ச்சி, புலவராற்றுப்படை,
பூக்கோட்காஞ்சி, பூவைநிலை, பெருங்காஞ்சி,
பெருஞ்சோற்றுநிலை, பேய்க்காஞ்சி,
பொருண்மொழிக்காஞ்சி, மகட்பாற்காஞ்சி,
மகண்மறுத்தல், மழபுலவஞ்சி, மறக்கள்வழி,
மறக்களவேள்வி, மனையறந்துறவறம்,
முதல்வஞ்சி, முதுபாலை, முதுமொழிக்காஞ்சி,
மூதின்முல்லை, வஞ்சினக்காஞ்சி,
வல்லாண்முல்லை, வாண்மங்கலம், வாழ்த்தியல்,
வாழ்த்து, விறலியாற்றுப்படை, வேத்தியல்

என்னும் **அறுபத்தைந்து** துறைகள் நூலுள் இடம்பெறுவனவாகத் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

## சிறப்புச் செய்திகள் (62 வகைச் செய்திகள்)

| | | | |
|---|---|---|---|
| அளவுகள், | ஆபரணவகை, | ஆயுதவகை, | ஆறுகள், |
| இடவகை, | உடைவகை, | உணவுவகை, | உலகவகை, |
| உலோகவகை, | உவமைகள், | ஊர்கள், | ஊர்திவகை, |
| ஐதீஹ்யம், | கட்டில்வகை, | கதைகள், | கூத்துவகை, |
| கூற்றங்கள், | கோயில்கள், | சாதிகள், | சிறுதெய்வங்கள், |
| தானியங்கள், | துவசவகை, | தெய்வவகை, | தொகைகள், |
| நாடுகள், | நார்வகை, | நீர்நிலைவகை, | நீர்மிதவை, |
| நீர்வாழ்வன, | நூல்கள், | நோய்கள், | பண்கள், |
| பந்தர், | பரிசில், | பலி, | பழமொழி; |
| பழவகை, | பறவைவகை, | பாத்திரங்கள், | பால்வகை, |
| பாவைவகை, | பின்வருவனவற்றைமுன்அறிவிப்பன, | | புகைவகை, |
| புளிவகை, | பொருள்களின் இயற்கை மணிகள் மரம்முதலியன, | | |
| மலைகள், | மன்றவகை, | மாலைவகை, | முடிமன்னர், |
| முள்வகை, | யுத்தவகை, | வழக்கங்கள், | வணிகம், |
| வாத்தியங்கள் | வாழ்த்துவகை, | விலங்கு | |

முதலியன விழாக்கள், வேலிகள், வேள்வி வேறுபெயர்கள் என்னும் அறுபத்திரண்டு வகைப் பொருள்களின் பெயர்கள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

## தமிழ்விடுதூது – சிறப்புச் செய்திகள்

1. "சொல்லே ருழவர் தொகுத்தீண்டி – நல்ல நெறி"(64)
   நல்லநெறிநான்கு - வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் என்பன.

2. 'நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
   மேலே பலன்பெறச்செய் விக்குநாள்" (65)
   நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

3. 'முற்றுணர்ந்த தேவர்களு முக்குணமே பெற்றார்நீ
   குற்றமிலாப் பத்துக் குணம்பெற்றாய் – மற்றொருவர்" (73)
   முக்குணம் - சத்துவம், இராசதம், தாமதம் என்பன.
   பத்துக்குணம் - செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்பன.

4. 'ஆக்கிய வண்ணங்க ளைந்தின்மே லுண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுடையாய்' (74)

**வண்ணம் ஐந்து** - வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை.

"பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்" (நன். 454)

**வண்ணங்கள் நூறு** - தூங்கிசைவண்ணம் இருபது; ஏந்திசை வண்ணம் இருபது; அடுக்கிசை வண்ணம் இருபது; பிரிந்திசை வண்ணம் இருபது; மயங்கிசை வண்ணம் இருபது என வண்ணங்கள் நூறு. (யாப். கல. விருத்தி).

5. "ஊனரச மாறல்லா லுண்டோ செவிகளுண
வான நவரசமுண் டாயினாய்" (75)

**ஊனரசம் ஆறு** - கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்பன.

**நவரசம்** - வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடவுநிலை, உருத்திரம் என ஒன்பது.

என்னும் சிறப்பு விளக்கங்களை ஆங்காங்கு தருகிறார். இவற்றைத் தவிர, நூலுள் இடம் பெறும் இருபத்துமூன்று நூல்களைத் தொகுத்துக்காட்டி, அவை இடம் பெறும் கண்ணிகளையும் சுட்டுவார். மேலும், இலக்கணப் பகுதிகளாக - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இசை என்னுந் தலைப்புகளில் ஒரு தொகுப்பு இடம் பெறுகிறது. தொடர்ந்து,

தலங்கள் - 4; திருவிளையாடல்கள் - 31; தெய்வங்கள் - 18; நதிகள்-6; அடியார்களும் நாயன்மார்களும் - 26 பேர்; புலவர்களும் ஆசிரியர்களும் - 14 பேர்; மதுரைக்குரிய பெயர்கள் - 7 போல்வனவும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

## தென்றல்விடுதூது – சிறப்புச் செய்திகள்

தென்றலே!

'மின்வடிவம் பத்தும் விதனப் படும்வடிவே
நின்வடிவம் பத்தும் நிசவடிவே' (கண்ணி – 9)

**மின்வடிவம் பத்து** - திருமாலின் அவதாரங்கள் - அவை:
மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கற்கி என்ற பத்து.

**நின்வடிவம் பத்து** - தசவாயுக்கள் - அவை:
பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், தனஞ்சயன், கூர்மன், கிருகரன், தேவதத்தன் என்னும் பத்து.

'ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே - இப்பாலும்
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன்
தீதிலா தேவதத்த னே" (சிலம்பு - 3-26. உரை)

'நந்துமிழுந் தண்பொருநை நன்னதியுஞ் சேர்பொருப்பில்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே!" (கண். 4)

பொருநை - தாமிரபரணி
பொருப்பு - பொதியமலை; (மதுரையை)

சான்று - "பொருப்பிலே பிறந்து தென்னன்"- - - -
(வில்லிபார. சிறப்பு - 2).
"பொருப்பில் பொருந" (மதுரைக்காஞ்சி - 2)

இவற்றைப் போன்று ஆங்காங்கு பலவகை விளக்கங்களையும் சான்றுகளையுந் தருவதற்கு உரியனவாக, முறையே,

அருணைக்கலம்பகம், அழகர்கலம்பகம்,
உத்தரகாண்டம், ஏகாம்பரநாதருலா,
கம்பராமாயணம், காளமேகப்புலவர்பாடல்,
கோடீச்சுரக்கோவை, சீகாழிக்கோவை,
செவ்வந்திப்புராணம், சோணசைலமாலை,
தமிழ்விடுதூது, தனிப்பாடல் (பல),
திருக்குறள், திருக்குற்றாலக்குறவஞ்சி,
திருச்சிற்றம்பலக்கோவையார், திருமந்திரம்,
திருவாசகம், திருவாரூருலா, திருவாரூர்ப்புராணம்,
திருவிடைமருதூர், திருவிளையாடற்புராணம்,
திருவெங்கைக்கோவை, பகவத்கீதை,
பாசவதைப்பரணி, புறநானூறு,
மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ், வில்லிபாரதம்

என்னும் **இருபத்தேழு நூல்கள்** எடுத்தாளப் பெற்றுள்ளன.

# இயல்-6

## ஒருமைப்பாடு

### இலக்கிய ஒருமைப்பாடு

சுவடிப்பதிப்பு வெளியீடுகளில் அமையும் வரலாற்றுச் செய்திகள், பலவகை சிறப்புச் செய்திகள் போல்வன தனித்தனி நூல்களுக்குரியவை எடுத்துக்காட்டப் பெற்றன. அவற்றைப் போல ஒரு நூலில் காணப்பெறும் சொற்கள், சொற்பொருள்கள், தொடர்கள், தொடர் கருத்துகள் போல்வன பிற நூல்களிலும் அமைந்து உருவாகியுள்ள **ஒருமைப்பாடு**களுள் சிலவற்றை இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது.

### முந்நீர்–சொல்

'முந்நீர்ப் பிறந்த **பவழத்**தொடு சங்கு முத்தும்
**அந்நீர் உவர்க்குமெனின் யாரவை நீக்கு** கிற்பார் (சீவக. 5)

நிலத்தைப் படைத்தலுங் காத்தலு மழித்தலுமாகிய மூன்று தொழிலு முடைமையின், முந்நீர் - ஆகுபெயர். (நச்சர் உரை)

இது மூன்று நீர்மையுடையது என்னும் பொருளினது
(அடிக்குறிப்பு)

"குணகடல் வரைப்பின் *முந்நீர்* நாப்பண்" (பெரும்பா. 441)

"வானியைந்த *விருமுந்நீர்ப்*" (மதுரைக்–75)

*முந்நீர்* - கடல். ஆகுபெயர். ஆற்று நீர், ஊற்று நீர், மேனீரென இவை என்பார்க்கு அற்றன்று: ஆற்று நீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில் வழி ஊற்று நீரும் இன்றாமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று. முதிய நீரெனின் 'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்' என்பதனால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது என்பன அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் தரும் விளக்கம்.

பிறப்புகள் பல

'புண்டோய்த் தெடுத்த பொருவேலெனச் சேந்து நீண்ட
கண்போன்ற மாமன்மகள் கண்மணிப் பாவை யன்ன
பெண்பா லமிர்தின்நலம் பெற்றதும்– – – " (சிந்தா. 26)

சிவந்த வேலெனச் சிவந்த நீண்ட, கண் போன்ற மாமன் மகளாகிய பெண் - என்னும் சிறப்பு வாய்ந்த தலைவியைச் சுட்டுவன இவ்வடிகள். இச்சிறப்புகளுக்கு,

"மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி – – –
நோதக வுண்டோ நும்மக னார்க்கினிச்
சாவக நோன்பிக ளடிகள்" (சிலம்பு – 16–15–17)

"நினக்கிவன் மகனாத் தோன்றிய தூஉம்
மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்
பண்டும் பண்டும் பல்பிறப் புளவால்
கண்ட பிறவியே யல்ல காரிகை" (மணிமே–21–29–32)

என்னும் நூற் செய்திகளைச் சான்று காட்டி, நினக்கு இவன் மகனாய்த் தோன்றியதும், மனக்கினியாற்கு நீ மகளாயதும் போல்வன - பண்டும் பண்டும் பல பிறப்புளவாதலின் பயனேயோம்; இப்பிறவி மட்டுமே அல்ல என்பதை உணர்த்துவர் உரையாசிரியர் பலரும்.

வாழ்த்து – வணக்க நெறிகள்

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலம்பு–5. 72–73)

இந்திர விழாக்காலத்து, இந்நிலமடங்கலும் பசியும் பிணியும் பகையும் நீங்கி, மன்னனுக்கு உரிய வசீகரமும் வளப்பமும் தோன்றிப் பெருகுவதாக என்று வாழ்த்தினர்.

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும் – – –

இம் – மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய வந்நாள்"
(சிலம்பு–5. 89–94)

தமிழ்நாட்டு எல்லையுள், பகைவரே இல்லாதவனாகி, போரில் பேராசை கொண்ட கரிகாலன், வாளும் குடையும் முரசும் நண்ணாரைப் பெறுவதாக வென்று வாழ்த்தி வணங்கி வடதிசை நோக்கிப் புறப்படுகிறான். இதே நெறிமுறைகள்,

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (மணி. 1. 70–71)

"நால்வேறு தேவரு நலந்தகு சிறப்பில்
– – – மன்னன் கரிகால் வளவனீங் கியநாள்"
(மணி – 1– 37–39)

என அவ்வாறே மணிமேகலையிலும் இடம்பெறுவது சுட்டிக் காட்டப் பெறுகிறது.

அறச்சாலைகள்

"அடிசில் வைக லாயிரமறப் புறமு மாயிரம்
கொடிய னார்செய் கோலமும் வைகறோறு மாயிரம்"
(சீவக. 76. 1–2)

ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் ஆயிரக்கணக்கான அடிசிற்சாலைகளும், தருமசாலைகளுக்காக விடப்பட்ட இறையிலி நிலங்களும் இருந்தன. இதே நிலையில் மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்றவையும் ஊர்களில் அறச்சாலைகள் பலவற்றை எடுத்துக் கூறுகின்றன.

"அருள்புரி நெஞ்சத்து அறவோர் பள்ளியும்
அட்டிற் சாலையும் அருந்துனர் சாலையும்"
(மணி–20–6–7)

"அறவோர் பள்ளியு மறனோம் படையும்" (சிலம்பு–5. 179)

என்பன மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் இடம்பெறுவன.

வண்டுடை இயற்கை

"மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்

**கட்கமழ் நெய்த லூதி யெற்படக்**
**கண்போன் மலர்ந்த காமரு சுனைமலர்**
**அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்**
**குன்று – – – –"** **(திருமுரு. 71–77)**

மாடங்கள் நிறைந்த மதுரையின் மேற்றிசையில், அகன்ற வயல்களிலே மலர்ந்து நிற்கும் முள்ளையுடைய தாள்களோடுகூடிய தாமரை மலரிலே இரவு முழுமையும் துயில் கொள்ளுகின்றன. விடியற் காலத்து தேன் நிறைந்த நெய்தல் பூவை ஊதுகின்றன. கதிரவன் உதித்தவுடன் மலர்ந்த சுனைமலர்களில் இசையெழுப்புகின்றன. இத்தகு செயல்களையுடைய அழகிய சிறகோடு கூடிய வண்டினங்கள் இசையெழுப்பும் குன்று. இது திருப்பரங்குன்றின் சிறப்பு கூறுவது.

இதே கருத்துடைத் தொடர்களை மதுரைக் காஞ்சியும் தருகிறது.

**"களிறுமாய்க்குஞ் கதிர்க்கழனி**
**ஒளிறிலஞ்சி யடைநிவந்த**
**முட்டாள் சுடர்த்தாமரை**
**கட்கமழு நறுநெய்தல்**
**வள்ளித ழுவிழ்நீலம்**
**மெல்லிலை யரியாம்பலொடு**
**வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை"**
**(மதுரைக் – 247–253)**

பூம்பொய்கையின் சிறப்பு கூறுவன இவ்வடிகள். கதிர்க்கழனி; யானை நின்றால் அதை மறைக்குமளவு உயர்ந்து விளைந்துள்ள கழனி. அருகிலே மடுக்கள். இவற்றில் முள்தாள் தாமரை, தேன்நாறும் நெய்தல் மலர், மலர்ந்த நீல மலர், ஆம்பல் மலர் ஆகியவற்றில் வண்டுகள் நிறைந்து நிற்கும் பூம்பொய்கை என்பது குன்றின் சிறப்பு கூறியது போன்ற சொற்றொடர்களைக் கொண்டமைவது. இத்தகு சிறப்புடையவண்டு, தூது அனுப்பினால்,

**"அப்பாலோர் வண்டை யனுப்பி னவர்காமம்**
**செப்பாதே என்றாற் திகைக்குமே" (தமிழ்விடு தூது – 108)**

**"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந். 2)**

திகைத்து நிற்கும் நிலையை இவ்வடிகள் ஒருமித்துக் கூறுகின்றன.

அந்தணர் ஒழுகலாறு

"இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல" (திருமுரு. 178-182)

தாயுந் தந்தையு மாகிய இருவர் குலமும் உலகத்தாரால் புகழப் பெற்றவை. அக்குடியிற் பிறந்தவரே இரு பிறப்பாளராகிய அந்தணர். அவர் வேத நெறிபிறழாது நாற்பத்தெட்டு ஆண்டு இளமையைக் கழித்தவர் (6 x 4 x 2 = 48). அவர் ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருக பத்தியம் என்னும் முத்தீயினாலுண்டாகிய பெருஞ்செல்வத்தை இயல்பாகவே பெற்ற இருபிறப்பாளர். அவர் உரிய காலமறிந்து வழிபடு தோத்திரங்களை ஓதும் இருபிறப்பாளர். அந்தணர் குலத்துச் சிறப்பினைக் கூறுவது இப்பகுதி. அந்தணர் குறித்த இதே சிறப்புச் செய்திகளை மேலும் விரிவாக **பாலைக் கௌதமனாரைச்** சுட்டுகிறது மணிமேகலை.

"ஒன்றுபுரி கொள்கை யிருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியுஞ் செய்தொழி லோம்பும்
அறுதொழி லந்தணர்" (சிலம்பு. 23. 67-70)

ஒன்று புரி கொள்கை என்றது முத்தி பெறுதலை.

இருபிறப்பு - உபநயனத்துக்கு முன்பிறவி; பின்பிறவி.

நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

ஐம்பெருவேள்வி - இறைவேள்வி, பிரமவேள்வி, பூதவேள்வி, மானிட வேள்வி, தென்புலத்தார் வேள்வி.

ஆறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

முருகாற்றுப்படையும், மணிமேகலையும் கூறும் அந்தணர் ஒழுகலாறுகள் ஒருமித்த தொடர்களால் இயன்றுள்ள முறை குறிப்பிடத்தக்கது.

**பாலைக் கௌதமனார்**
**சிலம்பும் - பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தும்**

> "வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
> திண்டிறல் நெடுவேற் சேரலற் காண்கென"
> (சிலம்பு - 23-63-64)

> "நான்மறை யாளன் செய்யுட் கொண்டு
> மேனிலை யுலகம் விடுத்தோ னாயினும்" (சிலம்பு -28. 137-138)

என்பன சிலப்பதிகாரச் செய்திகள். இவற்றுள் முதலடியுள் மறையோன் என்றது பாலைக் கௌதமனாரைக் குறிப்பது. இவருக்குச் சுவர்க்கங் கொடுத்த சேரமன்னன், சேரன் இமையவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆவான் என்னுஞ் செய்தியைக் குறிப்பன முதலிரண்டடிகள். நான்மறை யாளனாகிய பாலைக் கௌதமனார் பாடிய செய்யுளை ஏற்று, அவன் விரும்பியவாறு வேள்வி செய்ய உதவி செய்து சுவர்க்க லோகத்தை யடைய உதவியவனாகிய சேரமன்னனேயாயினும் - என்னும் பொருளைத் தருவனவே அடுத்த இரண்டு அடிகளும் (சிலம்பு. 28. 137-138).

பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் **பாலைக் கௌதமனார்** பாடினார் **பத்துப்பாட்டு** ... பாடிப்பெற்ற பரிசில்: 'நீர் வேண்டியது கொண்மினெனப் பார்ப்பாரில் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாம் வேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பினியையுங் காணாராயினர்' என்பது பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தின் இறுதியில் காணப்பெறும் வாக்கியம். இம்முழுவரலாற்றை உள்ளடக்கியதே அம்மூன்றாம் **பத்து**.

**நாடும் மக்களும்**

> "நற்றவஞ் செய்வார்க் கிடந்தவஞ் செய்வார்க்கு மஃதிடம்
> நற்பொருள் செய்வார்க் கிடம்பொருள் செய்வார்க்கு
> மஃதிடம் (சீவக. 77. 1-2)

வீடுபெறத் தவஞ்செய்வோர், மறுமை வேண்டி இல்லறம் நடத்துவோர், நற்பொருள் விரும்பி கல்வி கற்போர், நிலையாத பொருளைத் தேடுவோர் ஆகிய அனைவருக்குமே இடந்தந்து நிற்பது ஏமாங்கதநாடு என்னும் நாட்டு வளத்தை எடுத்துக் கூறும் இப்பாடல்,

"தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு" (குறள் 731)

"நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு" (குறள் 739)

என்னும் குறட்பாக்களை உட்கொண்டு உருவாகிய பாடலாகும்.

"மல்லன் மலையனைய மாதவரை வைதுரைக்கும்
பல்லவரே யன்றிப் பகுத்துணாப் பாவிகளும்
அல்குல் விலைபகரு மாய்தொடியா ராதியார்
வில்பொருதோண் மன்னா! விலங்காய்ப் பிறப்பரே"
(சீவக. 2789)

மலைபோலும் மாதவத்தோரை இழித்துப் பேசுவோர், பகுத்துண்டு வாழும் பண்பற்ற பாவிகள், விலை மகளிர் ஆகியோர் விலங்காய்ப் பிறப்பார்கள் என்பது, அத்தகையோரில்லாது அமைவதே நாடு என்று சிறப்பிக்கிறது. இப்பாடலும்,

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து" (குறள் 898)

என்னுங் குறட் கருத்தை உட்கொண்டு உருவாகியுள்ள பாடல் எனலாம்.

"ஐவகைப் பொறியும் வாட்டி யாமையி னடங்கி யைந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை - - - " (சீவக. 2824)

ஆமையைப் போல் ஐம்பொறிகளையும் அடக்கி, பொய், கொலை, களவு, காமம், அவா வாகிய ஐந்தின் நிலைகளை ஆய்ந்தறியும் உள்ளமுடைமையாகிய இந்த மக்கட் பண்பு,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் 126)

என்னும் குறட் கருத்தினின்று எழுந்துள்ளது.

**'கற்புக்கடம் பூண்டவித் தெய்வ மல்லது**
**பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்**
**வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது**
**நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது**
**பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு - - - ' (சிலம்பு 15. 143-147)**

கற்புடைத் தெய்வமே யாம் கண்டது; பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் மழை பொய்க்காது; வளம் குறையாது; மன்னர் நீதி வழுவாது என்பன உண்மையாம் என்னும் இக்கருத்துகள்,

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55)

என்னும் குறட் கருத்தினை விரிவுபடத் தெளிவு படுத்துகின்றன.

"தீதறு நல்லுரை கேளாது ஒழிவேனேல்
நோதக்க செய்தாளென் றெள்ளல் இதுஒன்று என்று
அல்லலுற் றாற்றா தழுவாளைக் கண்டேங்கி
மல்லன் மதுரையா ரெல்லாருந் தாமயங்கிக்
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்"
(சிலம்பு - 19. 13-18)

கணவனைக் காண்பேன். தீதிலன் என்னும் நல்லுரை கேட்பேன். கேளாதொழிந்தால் நோதக்க செய்தாள் என்று இகழ்ந்துரைப்பீர். துயருற்று வருந்துவாளைக் கண்டு மதுரையாற் இரங்கித் தங்கள் துயரைக் காட்டுகின்றனர். ஒருநாளும் வளையாத செங்கோல் வளந்ததே! என்று ஏங்குகின்றனர். இச்செய்திகள் அனைத்திற்கும்,

"அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி" (குறள் 245)

"அறிவினா லாகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை" (குறள். 315)

"அல்லற்பட் டாற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள். 555)

என்னும் குறட்பாக்கள் காரணங் கூறுகின்றன. அருள் உள்ளமுடையார்க்குத் துன்பமில்லை; பிறர் துன்பம் தம் துன்பமாய்க் கொள்ளுவதே அறிவுடைமை; அல்லல் கண்ணீர் அரசையே அழிக்கும் என்னும் உண்மைகள் சிலம்புக் கூற்றுகளுக்குத் துணை நிற்கின்றன.

"முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகா ணற்பகலே"
(சிலம்பு-21.3-4)

வேந்தன் தேவியாகிய அடியேன் ஏதுமறியேன். என்றாலும், ஒருவருக்குத் துன்பம் விளைவித்தால் அன்றைய பிற்பகலே தனக்கு அழிவு நிகழும் என்பது பகல் போலும் ஒளியுடைய கருத்தாகும் என்னும் பாண்டியன் தேவியின் கூற்று,

'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்' (குறள். 319)

என்னும் குறட் கருத்தை, அத்தொடர்களாலேயே கூறும் நிலையைப் பெற்றிருக்கிறது.

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்டதிரு கண்டாயே" (தமிழ்விடு. 194)

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தாரென்னும் - மாமகிமை"
(தமிழ் விடு. 196)

என்னும் தமிழ்விடு தூதிலிடம்பெறுங் கண்ணிகள் முறையே குறள் 408, 399 ஆகியவற்றை அப்படியே எடுத்தாளுவனவாகும்.

"ஆற்றி னளவறிந்து கல்லா தவையஞ்சும்
கூற்றின்பா லேகாதே கூடாதே" (தமிழ். 189)

என்னுங் கண்ணி,

"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு" (குறள். 725)

என்னும் குறளை உட்கொண்டமைகிறது.

இத்தகு ஒருமைப்பாட்டுத் தொடர்களும் கருத்துகளும் மிகப்பலவாக அமையுமாற்றினை நமது வழிகாட்டியவர்கள் ஒவ்வொரு பதிப்பிலும் மேற்கோள்கள் என்னுந் தலைப்பில் ஒவ்வொரு பாட்டின் உரைக்குப் பின்னால் தனிப் பகுதியமைத்து, அப்பகுதியில் தொகுத்துத்தருகிறார்.

இம்முறை சுவடிப்பதிப்பாசிரியர்களுக்கு மட்டுமன்றி நூலாசிரியர்கள், நூல் வெளியிடுவோர் போன்ற அனைவருக்கும் பயனுடைய வழிகாட்டு முறையாக அமைகிறது.

## இலக்கிய – இலக்கண ஒருமைப்பாடு

இலக்கியத் தொடர்களில் ஒருமைப்பாடுகள் காணப் பெறுவது போலவே இலக்கணங்களுக்குத் துணைநிற்கும் இலக்கியத் தொடர்கள் பலவும் இலக்கணக் கூற்றுகளுக்கு எடுத்துக்காட்டுகளாகி, பொருள் காண்பதில் எளிமைத் தன்மையைப் பெற்று நிற்கின்றன. அவற்றுள் சில:

### ஒடு, ஓடு – உருபு

"நாவீற் றிருந்த புலமா *மகளோடு* நன்பொற்
பூவீற் றிருந்த திருமா மகள்புல்ல நாளும்" *(சீவக. 30)*

என்னுமடிகளிலுள்ள மகளோடு என்பது ஓடு என்னும் மூன்றாவது வேற்றுமை உருபை ஏற்று உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. இதற்கு,

*"மூன்றாகுவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி
வினைமுதற் கருவி யனைமுதற் றதுவே"* (தொல்.சொல். 73)

*"மூன்றா வதனுரு பாலான் ஒடொடு
கருவி கருத்தா உடனிகழ் வதன்பொருள்"* (நன். 297)

என்னும் நூற்பாக்களைச் சுட்டிக் காட்டித் தம் குறிப்புரையுள் இலக்கணம் கூறுவார். மேலும் இவற்றிற்குச் சான்றாக இலக்கண நூல்களிற் காட்டப் பெறும்,

"மனத்*தொடு* வாய்மை மொழியிற் றவத்*தொடு*
தானஞ்செய் வாரிற் றலை" (குறள். 295)

என்னுங் குறளையும் எடுத்துக் காட்டுவார்.

### திணை மயக்கம்

"[illegible] தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே" *(சீவக. 53)*

மாந்தரைப் போல - தலை தாழ்ந்து காய்த்தன என்னும் பொருளிலமைந்த இப்பாட்டடியை

"உருவக உவமையில் திணைசினை முதல்கள்
பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே" (நன். 410)

என்னும் இலக்கணத்திற்குச் சான்று காட்டி, இது அஃறிணையோடு உயர்திணை மயங்கிற்று என்பர். இதே போல,

**"மல்லன் மலையனைய மாதவரை வைதுரைக்கும்"**
***(சீவக. 2789)***

என்பது உயர்திணையோடு அஃறிணை மயங்கிற்று என்பர்.

இந்த இலக்கண அமைதிகளை மேற்கோள் பகுதிகளில் எடுத்துச் சுட்டிக் காட்டுவார்.

**உயிர்முன் உயிர்**

"ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார் (சீவக. 652)

ஏ ஏ இவள் என உயிர்முன் உயிர் வந்து ஏயே யிவள் எனவமைந்த இவ்வடியின் அமைப்பை,

**"இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி**
**வவ்வும் - - - உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்"**
***(நன். 162)***

என்னும் இலக்கணப்படி அமைந்ததை எடுத்துக்காட்டும் நன்னூல் உதாரணத்தைச் சிந்தாமணி மேற்கோளில் எடுத்துக் காட்டுவார். பேடியோ என்றார் என்பதும் பேடியோ வென்றார் என வகர உடம்படுமெய்யேயாகும்.

**இரட்டைக்கிளவி**

"சலசல மும்மதஞ் சொரிய தத்தமுள்" *(சீவக. 82)*

என்னுமடியின் முதல் தொடரை,

"இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா" (நன். 396)

என்னும் நூற்பாவின் இரட்டைக் கிளவிக்குச் சான்று காட்டுவார்.

**செய்யுமென் எச்சம்**

**"ஆம்பொருள்க ளாகுமது யார்க்கு மழிக்கொண்ணாப்**
**போம்பொருள்கள் போகுமவை - - - "** *(சீவக. 848)*

என்னுமடிகளுள் ஆகும் பொருள், போகும் பொருள் என்பன முறையே ஆம்பொருள், போம் பொருளென ஈற்று உயிர்மெய் நீங்கி நிற்பதை,

"செய்யுமென் எச்சஈற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யு மேகலும் உளவே" (நன். 341)

என்னும் இலக்கணத்திற்குச் சான்று காட்டியுள்ளதை எடுத்து மேற்கோளுள் அமைத்துக் காட்டுகிறார்.

ஆம்பொருள்க ளாகுமது;
போம்பொருள்கள் போகுமவை – என்னுந்தொடர்களுள்

ஆம்பொருள்க ளாகுமவை - என்றிருப்பதே பொருந்தும். இரண்டாமடியுள் பன்மை பொருந்த அமைகிறது.

அஃறிணை

"மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும்
தேய்தலு முடைமையைத் திங்கள் செப்புமால்"
(சீவக. 2932)

என்பதனுள் திங்கள் செப்பும் என்பது அஃறிணைப் பொருள் கூறியதாக வருந் தொடர். இத்தொடரை,

"கேட்குந போலவும் கிளக்குந போலவும் – – –
அஃறிணை மருங்கினு மறையவும் படுமே" (நன். 409)

என்னும் இலக்கணத்திற்குச் சான்று காட்டுவதை எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு ஐம்பதுக்கும் மேலான இடங்கள் மேற்கோளுள் எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

மிகைத் தொடர்

ஒரு இலக்கினை உடையதே இலக்கிய உருவாக்கம் என்றாலும் அந்த உருவாக்கங்கள் கருத்தும் கற்பனையும் நிறைந்திருத்தலே இயல்பு. இந்த அடிப்படைக்கும் இலக்கணம் இடம்பெறுகிறது.

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்" (சிலம்பு–1. 1–3)

பாண்டியன் செம்பியனின் வெண்கொற்றக் குடை போன்று இவ்வுலகிற்கு அளிசெய்தலால் திங்களைப் போற்றுவோம் என்னும் சிறப்பைக் கூறுவன இவ்வடிகள்; இதேபோல

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் றிகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்" (சிலம்பு-1-3-5)

காவிரிநாடனாகிய பாண்டிய மன்னனின் செங்கோலாகிய ஆணைச்சக்கரத்தைப் போன்று, மேருமலையைச் சுற்றி வருதலால் ஞாயிற்றைப் போற்றுவோம் என்று சிறப்பிக்கின்றன இவ்வடிகள். இவ்வாறு மிகுத்துக் கூறுவது

"நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபு" (தொல்.புறத். 36)

என்னும் இலக்கணத்தினால் அமைவதாகும். இவ்விலக்கணத்தின் துணையால் இங்கு மன்னனின் வள்ளற்றன்மையும் - கொடையும், திகிரியும், உயர்வும் போல்வன புனைந்துரை வகையால் மிகுத்துரைக்கப் பெற்றவையாகும்.

## தன்மைப் பன்மை

திங்களைப் போற்றுதும்; ஞாயிறு போற்றுதும் என்பனவற்றிலுள்ள போற்றுதும் என்பது பன்மைத் தன்மை வினைமுற்றாயிற்று? இலக்கணம் உண்டா?

"அம்மா மெம்மே மென்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற வென்னும்
அந்நாற் கிளவியா டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே" (தொல்.சொல். 202)

என்னும் இலக்கணப்படி கும், டும், தும், றும் என்னும் ஈற்றையுடையவை பன்மைத் தன்மை யுரைப்பன என்பதனால் இங்கு தும் ஈறு பன்மைத் தன்மைச் சொல்லாய்ப் பொருந்திற்று.

## இடப்பொருள்

"அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்" (சிலம்பு-பதி-10)

இவ்வடியுள் அவனுழை என்றது அவனிடம் என்னும் பொருளில் நின்றது. இங்கு உழை என்பது இடம் என்னும் பொருளில் வந்தது. இதனை,

"கண்கால் கடையிடை - - - -
பின்பா டளைதேம் உழைவழி - - - " (நன். 302)

என்னும் இலக்கணக்கூற்றுப்படி இருபத்தெட்டு இடப்பொருள் சொற்களுள் ஒன்றாக எடுத்துக்காட்டுவர்.

## குறிப்பு வினைமுற்று; அசை நிலை

"பெண்டிரு *முண்டுகொல்* பெண்டிரு முண்டுகொல்"
(சிலம்பு. 19–51)

அது உண்டு என அஃறிணை ஒருமைக்கே உரிய வினைச்சொல் உண்டு என்பது. இவ்வடியுள் பெண்டிரும் உண்டு என, உயர்திணையிலும் வந்தது. இங்கு,

"வேறில்லை உண்டைம் பால்மூ விடத்தன" (நன். 339)

என்னும் இலக்கணப்படி, வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்றும் வினைக்குறிப்பு முற்றுகள். இவை ஐம்பாலுக்கும் மூவிடத்துக்கும் உரிய பொது வினையாகி - பெண்டிரும் உண்டு என உயர்திணைப் பெண்பாலுடன் நின்று புதியனபுகுதலாயிற்று.

உண்டுகொல் - கொல் என்பது

'கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே' (நன். 435)

கொல் என்பது ஐயப்பொருளிலும், அசைநிலைப் பொருளிலும் வரும் என்ற இவ்விலக்கணப்படி இங்கு அசைநிலைப்பொருளில் வந்தது.

## உயர்திணை – அஃறிணை

"குழவித் திங்க ளிமையவ ரேத்த" (சிலம்–2–38)

இவ்வடியுள் பிறைநிலவைக் குழவித் திங்கள் என்றது எவ்வாறு?

"குழவியும் மகவு மாயிரண் டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே" (தொல்.மரபு. 23)

குழவி என்ற சொல் மக்கட் குரியது என்பதை உணர்த்துவது இம்மரபியல் கருத்து. ஆனால் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் குழவித் திங்கள் என்பதில் குழவி என்னுஞ் சொல் அஃறிணைக்கு வந்தது எவ்வாறு?

"பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவு மமையும் ஓரறிவுயிர்க்கே" (தொல். மரபு.24)

என்னும் இலக்கணக் கூற்று அஃறிணையிலும் குழவி இடம்பெறலாம் என்பதற்கு இடந்தருகிறது.

எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (நன். 388)

என்பதன் உரையில் மயிலைநாதர் இதே சான்றுகளைக் காட்டிப் பொருத்துவார்.

"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு"
(சிலம்பு-21.53-54)

என்னுமடிகளுள் உயர்திணைப் பெயர்களோடு பசு என்னும் அஃறிணைப் பெயரும் இடம்பெற்று எனும் இவரை என்னும் உயர்திணை முடிபேற்பது பொருந்துமா?

"பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யுளுள்ளே" (தொல்.கிளவி. 51)

என்னும் நூற்பாவைக் கூறி,

வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேய்எருமை என்றிவை ஆறும்
குறுகார் அறிவுடை யார்"

என, இவை ஆறும் என்பதைச் சான்றுங் காட்டினார்.

ஆனால் சிலம்புத் தொடருள் எனும் இவரை என்றே இடம் பெறுகிறதே!

"பல்வயினானும் . . . அஃறிணைமுடிபின"

என்றே கூறினார். அதாவது எண்ணுத்திணை விரவுப்பெயர் செய்யுளுள் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற் கொண்டு முடியும் என்றதனால் சிறுபான்மை உயர்திணைச் சொல்லைக் கொண்டு முடியவும் பெறும் என்பது பெறப்படுகிறது. அதன்வழி,

பார்ப்பார் அறவோர் . . . எனும் இவரை என்னும் முடிபேற்றது.

"உயர்திணை தொடர்ந்த பொருள்முத லாறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின" (நன். 377)

உயர்திணைச் சொல்லைத் தொடர்ந்து நிற்கும், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகை அஃறிணைப் பொருள்களும் உயர்திணை முடிபினையே ஏற்கும்.

> "திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
> மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே" (நன். 378)

திணையாலும் பாலாலும் வினையாலும் வெவ்வேறு வகைப்பட்ட பல பொருள்கள் விரவி நிற்கும் தொடர், அப்பொருள்களின் சிறப்பு, மிகுதி, இழிபு ஆகிய காரணங்களால் உரிய ஒரு திணையின், ஒருபாலின் முடிபையே ஏற்கும். இவ்விரு நூற்பாக் கூற்றுகளும் எனும் இவரை என்னும் சிலம்பின் முடிபுக்கு இலக்கணமாகின்றன.

**மெய்யீற்றின்முன் – உடம்படுமெய்**

> "மன்னவன் செல்வுழிச் செல்க யானென" (சிலம்–25–84)

இவ்வடியிலுள்ள செல்வுழி என்பது - மெய்யீற்றின் முன் உயிர்வரினும் உடம்படுமெய் தோன்றும் என்பதாகாது. விண்வத்துக் கொட்கும் என்பது போலச் செல்வுழிச் செல்க என்பதும் மெய்யீற்றின் முன் உயிர் வருங்கால், இவ்வாறு உடம்படுமெய் அன்று எனக்கூறும் வகரந்தோன்றியதே யாகும்.

**தொகையுள் மயக்கம்**

> "குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
> காவற் பெண்டிர் *கடிப்பகை* யெறிந்து (மணி 7–57–58)

> "அரவாய்க் *கடிப்பகை* யையவிக் *கடிப்பகை*
> விரவிய மகளி ரேந்திய தூமத்துப்" (மணி–7–73–74)

என்னும் அடிகளில் இடம்பெறும் கடிப்பகை என்னுஞ் சொல் 'கடி–பேய்; பேய் தீண்டி வருத்தாவண்ணம்'

> அரவாய்க் *கடிப்பகை* – வேப்பிலை
> ஐயவிக் *கடிப்பகை* – வெண்சிறுகடுகு

பேய் தீண்டிக் குழந்தையை வருத்தாவண்ணம், வேப்பிலையும், வெண்சிறுகடுகுப் பொடியும் குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதைக் குறிப்பிடுவதே இச்சொல். இதனை,

"தொக்குழி மயங்குந இரண்டு முதலேழ்
எல்லைப் பொருளில் மயங்கு மென்ப" (நன். 373)

என்னும் நூற்பாவில் இடம்பெறும் தொகைநிலைத் தொடர்களில் கடிப்பகை என்பது கடிக்குப் பகை, கடியினது பகை, கடியாகிய பகை என மூன்று பொருளால் மயங்கிய ஒரு தொடர், தொடர்ச்சொல் எனக்காட்டுவார்.

## செய்யுமென்முற்றுகள்

"முதுமறை யந்தணிர் முன்னிய துரைமோ" (மணி – 13–56)

"மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ" (மணி – 13–93)

அந்தணீர்! எண்ணியதை உரையுங்கள்; மக்களே! வருங்குலங் கேளுங்கள் என்னும் பொருள்களில் வந்த இவ்வடிகளுள், முறையே உரைமோ என்பது உரையும் என்னும் ஏவற் பன்மை, உயிர்மெய் கெட்டு ஓகாரம் பெற்று வந்தது; கேண்மோ என்பது கேளும் என்னும் ஏவற் பன்மை உயிர்கெட்டு ஓகாரம் பெற்று வந்தது (உரையும் - உரை+ம்; உரை-ம்+ஓ=உரைமோ; கேளும்-கேண்+ம்; கேண்+ம்+ஓ= கேண்மோ).

இத்தொடர்களை,

"செய்யுமென் எச்சஈற் றுயிர்மெய் சேறலும்
செய்யுளுள் உம்உந் தாகலும் முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே" (நன். 341)

என்னும் நூற்பாவினுரையுள்,

செய்யும் என்னும் முற்று என்றேனும், செய்யும் என்னும் ஏவல் முற்று என்றேனும் விதவாது பொதுமையின் முற்றேல் என்றமையின்,

"மாமறை மக்கள் வருகுவங் கேண்மோ
முதுமறை யந்தணீர் முன்னிய துரைமோ"

எனக் கேளும், உரையும் என்னும் ஏவல் முற்றும் இவ்வாறு உயிரும் உயிர்மெய்யும் கெட்டு வருதல் கொள்க என்று சான்றுகள் காட்டி விளக்கினார். மாக்கள் - மக்கள் என்றும், வருகுலம் - வருகுவம் என்றும், யந்தணிர் - யந்தணீர் என்றும் - மணிமேகலையிலும் நன்னூலிலும் மாறுபட்டு அமைகின்றன.

சொல்—என்னும் பொருளன

"இருபிறப் பாளர் பொழுதறிந்து *நுவல*" (திருமுரு. 182)

என்னுமடியுள் - வழிபடுங்காலமறிந்து, தோத்திரங்களைக் கூற என்னும் பொருளில் பொழுதறிந்து **நுவல** என்னுந் தொடர் அமைந்தது. இதனை நன்னூல்,

*"மாற்றம் நுவற்சி செப்பு உரைகரை நொடிஇசை*
*- - - - - - - - - - - - - -*
*பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே"* (நன். 458)

சொல் என்னும் ஒரு பொருளைத் தரும் பதினாறு சொற்களைச் சுட்டிக் காட்டும் இந்த நூற்பாவில், **நுவற்சி** என்னும் சொல்லைச் சுட்டி,

'இருபிறப்பாளர் பொழுதறிந்து **நுவல**' என்பதைச் சான்று காட்டுகிறார். நுவல என்பது ஒரு குணத்தை உணர்த்தும் பதினாறு உரிச்சொற்களுள் நுவற்சி என்னும் சொல்லாகும்.

தொகைப்பொருள்

"*முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறை*" (திருமுரு-73)

முள்ளையுடைத் தாகிய தாளையுடைய தாமரை மலரின்கண் இரவிலே துயில் கொண்டு என்னும் பொருள்படும் (முள்+தாள்+தாமரை) இவ்வடியுள் முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி வந்தமையின் அம்முன்மொழிக்கண் பொருள் சிறப்பின்றியும் தாமரை என்னும் பின்மொழிக்கண் பொருள் சிறந்தும் நின்றது என்னும் இலக்கணமுடைத்தாய்,

"முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும்நான் கிடத்தும் சிறக்கும் தொகைப் பொருள்"
(நன். 370)

என்னும் நூற்பாவிற்குச் சான்று காட்டினார்.

எனவே முட்டாட்டாமரை என்றது தொகை நிலைத் தொடராயிற்று. முள்ளை உடைத்தாகிய தாளை உடைய தாமரை என இரண்டன் உருபும் பொருளும் விரிந்து நின்று தாமரை என்னும் பின்மொழியால் பொருள் சிறந்து நின்றது.

'லள வேற்றுமையிற் றடவும்' (நன். 227)

என்னும் புணர்ச்சி விதியால்,

முள்+தாள்=முட்டாள்

எனவும்,

தாள்+தாமரை = தாட்டாமரை

எனவும்,

ளகரம் டகரமாயிற்று. இவ்விதிமுறை இன்றேல் முட்டாள்தாமரை எனப் பொருள் மாறுபட்டு இழிநிலை ஏற்படும்.

## ஐந்தன் உருபுப்பொருள்

'திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்" (சிறுபா–172–73)

முருகன் கையிலுள்ள திறல்மிகு வேலின் நுனியைப் போல கேணியிற் பூத்த வேலாலே வென்ற அவ்வேலூரடைக" என்னும் பொருளில் கூறப்பெற்ற இவ்வடியுள், வேல்நுதியிற் பூத்த கேணி என்றது வேலினது நுனியைப் போல, கேணியில் மலர்ந்த மலராகிய வேல் என்னும் பொருளிலமைந்தது. இதனை,

"ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
நீங்கல்ஒப் பெல்லை ஏதுப் பொருளே" (நன். 299)

என்னும் இலக்கணப்படி - நுதியில் - ஐந்தாவதன் உருபாகிய இல், ஒப்புப்பொருளில் வந்தது என்பதற்குச் சான்று காட்டுவார். இது நல்லியக்கோடன் தன்பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட போது, முருகன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறி என்று ஆணையிட்டான். மலராகிய வேல் எறிந்த ஊராதலின் வேல் ஊர் - வேலூர் என்று பெயர் பெற்றது என்பது இவ்வடிகள் கூறும் வரலாறு.

"கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்" (பெரும்பா–163)

யானைக் கொம்பினாற் செய்யப் பெற்ற முகையினையுடைய நெடுந்தேர் என்னும் பொருளிலமைவது இவ்வடி. இதில் இடம் பெறும் இல் என்னும் ஐந்தனுருபு,

"வண்ணம் வடிவே யளவே சுவையே – – – – –
புதுமை பழமை யாக்க மென்றா – – –" (தொல்.வேற்–17)

என்ற இலக்கணக் கூற்றுப்படி ஆக்கப் பொருளில் வந்தது என்பதற்குச் சான்று காட்டப் பெறுகிறது. இதனையே,

> "ஐந்தா வதனுரு பில்லு மின்னும்
> நீங்கல்ஒப் பெல்லை ஏதுப்பொருளே" (நன். 299)

என்னும் அதே இலக்கணக் கூற்றில்,

> கோட்டிற் செய்த என்னும் இல் உருபு

ஏதுப்பொருளாக வேற்றுமை செய்தது என்று சான்று காட்டப் பெறுகிறது.

### ஒருபொருட் பன்மொழி

> "ஆடுபசி யுழந்தநின் னிரும்பே ரொக்கலொடு"
> (பொருந-61)

என்னும் அடி,

> "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" (நன். 398)

என்னும் நூற்பா உரையுள் ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று காட்டப் பெறுகிறது. இதே பொருளில்

> "உயர்ந்தோங்கு பெருமலை யூறின் றேறலின்" (மலைபடு-41)

என்னும் அடியும் சான்றாக அமைகிறது.

### உம்மை

> "குறவரும் மருளுங் குன்றத்துப் படினே" (மலைபடு-275)

குன்றத்தின் சிறப்பு கூறுவது இவ்வடி. இராக் காலமேயாயினும் வலிய வில்லை யுடையராய்ச் சுழன்று திரிபவர் குறவர். அத்தகு குறவரும் மயங்கும் குன்றம் என்னும் பொருளமைந்தது. அத்தகு குறவரும் மயங்குவர் என்பதில் இடம் பெறும் உம்மை,

> "எதிர்மறை சிறப்புஐயம் எச்சம்முற்று அளவை
> தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே" (நன். 425)

என்னும் எட்டுவகை உம்மையுள் சிறப்பு உம்மையின் பாற்படும் என்று சான்று காட்டப் பெறுகிறது.

பாடாண் – கைக்கிளைப்புறன் – வஞ்சிப்பொருள்

"வெண்கை மகளிர் வெண்குரு கோப்பும் – – –
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பி றானை பரவா லூங்கே" (பதிற்றுப். 23)

இதில் இமையவரம்பன் தம்பி **பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப்** பாலைக் கௌதமனார் துறக்கம் வேண்டினா ரென்பது குறிப்பு வகையாற் கொள்ள வைத்தலின் இது வஞ்சிப்பொருள் வந்த பாடாண் ஆயிற்று என்பதை,

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே" (தொல்.புறத். 25)

என்னும் இலக்கணக் கூற்றினுளடங்கும் எண்வகைப் பொருள்களுள் வஞ்சிப் பொருளுக்குச் சான்று காட்டுவார்.

நிரல்நிறை

"குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத" (சிலம்பு.4.15–16)

ஊதுகுழலாகிய இசைக்கருவியில் கோவலர் முல்லைப் பண்ணை இசைத்து ஊதுகின்றனர். அதே சமயம் இன்பமுறும் மகளிர் குழலாகிய கூந்தலில் வளருகின்ற முல்லை மலரிலே இருந்து தும்பி என்னும் வண்டுகள் இசைக்கின்றன என்னும் பொருளில் அமையும் இத்தொடருள்,

குழல் - ஊதுகுழலையும், மகளிர் கூந்தலையும் உணர்த்தி நிற்கிறது. முல்லை - குழலில் ஊதி உண்டாக்கப் பெறும் முல்லைப் பண் என்னும் இசையையும் மகளிர் சூடியுள்ள முல்லை மலரையும் உணர்த்துகிறது. கோவலராகத் தும்பி என்னும் வண்டு செயலாற்றுகிறது. கோவலர் வாய் வைத்து ஊதி இசையை எழுப்புகின்றனர். வண்டு வாயால் இசையை எழுப்புகிறது. இவ்வாறு இவ்வடிகள் நிரல்நிறையாகப் பொருள் கொள்ளும் தன்மையைப் பெறுகின்றன.

"கோவலர் முல்லைக் குழன்மேற் கொள்ள" (மணி–5.136)

என்னும் மணிமேகலைத் தொடர் கோவலர் முல்லைப் பண்ணைக் குழலில் இசைக்கும் பண்பை மட்டும் எடுத்துக்காட்டுகிறது.

இவற்றைப் போன்ற இலக்கணக் கூற்றுகளும் வழிகாட்டி அவர்களால் ஆங்காங்கு எடுத்துக்காட்டப் பெறுகின்றன. இந்த இலக்கண ஒருமைப்பாட்டு முறை, நூலின் பொருளை எளிமைப்படுத்திக் காட்டுவதற்குப் பதிப்பாசிரியர்களுக்குப் பெரிதும் வழிகாட்டியாக அமைகிறது.

## வழிகாட்டிய நிறைவு வழி

எடுத்துக்காட்டப் பெற்ற அனைத்துப் பதிப்புகளின் வழி சுவடிப் பதிப்புக்கலையில் மிக நுணுக்கமாக, மிக ஆழமாக வழிகாட்டியுதவியுள்ள நமது வழிகாட்டி அவர்கள், தமது பதிப்பு வெளியீடுகளின் வழி, பதிப்புப் பணிகளை முடித்துக்காட்டி அவற்றின் அமைப்பு நெறிகளை நமக்கு எடுத்துக் கூறும் நிலையிலிருந்து வேறுபட்டுச் செய்முறைப் படுத்திக் காட்டுவதன் மூலமே முழுமையாக வழிகாட்டியிருப்பதே அவர்தம் தனிச்சிறப்பு வழிகாட்டு நெறிகளாகியுள்ளன.

இந்நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்றும் நமக்குப் பலவகை இன்னல்களும் இடையூறுகளும் இக்காலத்து ஏற்படுகின்றன. சான்றாக,

சுவடி திரட்டும் பணியில் நமது வழிகாட்டி அவர்கள் கடின உழைப்பையும் யாத்திரை முறைகளையும் மேற்கொண்டார்கள். அக்காலச் சான்றோர்கள் அவர்கள்தம் உழைப்புக் கேற்பத் தங்களிடம் இருந்த சுவடிகளை மகிழ்ச்சியோடு கொடுத்து உதவியது மட்டுமன்றி, சுவடி வைத்திருப்போர் பலரையும் சுட்டிக்காட்டியும், உடன் சென்றும், கடித மூலமும் பலரிடமிருந்து பெற்றுத் தந்தும் பலவாறு உதவி புரிந்துள்ளார்கள். ஆனால் இன்றைய நிலையில் நமது நிலையோ!

பதிப்புப்பணியில் இன்றைய கல்வித்திறத்திற்கேற்ப, செய்யுள்களுக்கு உரையெழுதும் பொழுது முறையான, தெளிவான பொழிப்புரைகளை ஒவ்வொரு செய்யுளுக்கும் அல்லது தொடர்நிலையாயின் ஒவ்வொரு உட்பகுதிக்கும் எழுதி அமைப்பது தேவையான ஒன்றாகும். அதன் பிறகே பிறவகை விளக்கங்கள் இடம் பெறுவது நல்லது.

உரைநடைத் தொடர்களில் ஒரு நிரலான முறையைக் கையாளுவதில் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். சான்றாக-

ஒரு இடத்தில் கோவூர் கிழார் - பிறிதோரிடத்தில் கோவூர்க் கிழார்
ஒரு இடத்தில் குராப்பள்ளி துஞ்சிய - பிறிதோரிடத்தில் குராப்பள்ளித் துஞ்சிய
ஒரு இடத்தில் மாங்குடி கிழார் - பிறிதோரிடத்தில் மாங்குடிக் கிழார்

போன்ற பல்வேறு பிழைகளும் வேறுபாடுகளும் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுவது மிகமிக இன்றியமையாப் பணியாகிறது.

ஒவ்வொரு புலவராலும் கையாளப்பெற்றது என்பது மாறி புலவர் ஒவ்வொருவராலும் கையாளப்பெற்றது என்னும் முறையமைவது சிறப்புடையது.

நூல் அமைப்பிலும், பொருளடக்கம் முதற் பக்கத்தில் இடம் பெறுவது பயனுடையதாக அமையும். சுவடிப் பதிப்பு வெளியீடு ஆதலின் முன்னுரை இரு பகுதிகளாக அமையலாம். ஒன்று பதிப்புரை. அதாவது, சுவடி பற்றிய நிறை, குறைச்செய்திகள், பதிப்பில் கையாண்டுள்ள நெறிமுறைகள் போன்றவை. இவை பதிப்பாசிரியரின் முழுமையான உழைப்பை வெளிப்படுத்துவதாக அமையும். மற்றொன்றே முன்னுரை என்பது. அதில் நூலில் அமையும் பலவகைப்பட்ட கருத்து நெறிகள் இடம்பெறும். அம்முன்னுரைச் செய்தி, படிப்போரை நூலினுள் புகத்தூண்டுவதாக அமையும்.

இம்முன்னுரைகளை யடுத்து நூல் தொடங்குவதே சிறப்புடையது. இந்நூலில் இடம்பெறும் எடுத்துக்காட்டு நூல்கள், புலவர் பெயர்கள், சிறப்புச் செய்திகள் போன்ற பலவும் பின் இணைப்பில் அமைவதே பயன் தருவதாகும்.

சுவடியிலிருந்து மாற்றம் ஏதும் செய்யாமல் பதிப்பித்தல் என்பது சிறந்த கொள்கையே. ஆனால் கிறாமம், நகறம், வாளி, பாளாகி, நானம், ஞாணிகள் போன்றவை முறையே கிராமம், நகரம், வாழி, பாழாகி, நாணம், ஞானிகள் என அமைய வேண்டியவை. இவை மூல நூலாசிரியர் எழுதிய பிழைகளல்ல. படியெடுப்போர் கல்விக் குறையால் செய்த பிழைகளே. இவற்றைத் திருத்தியே பதிப்பிக்க வேண்டு:ம. ஆனால் அந்தந்தப் பாடலின் கீழ் சுவடிச் சொல் எனக் குறிப்பிட்டு விடலாம். இம்முறை திருத்திப் பதிப்பித்த தாகாது.

பாடவேறுபாடு என்ற பெயரால் பலபதிப்புகளில் காண்பனவற்றைத் தொகுத்து 100, 200 பக்க அளவில் ஒரு நூலில் கொடுப்பது என்பது பயனற்ற பணியாகக் கூடும்.

## பெறும் பயன் பெரும் பயன்

நமது வழிகாட்டி அவர்கள் வழிகாட்டுந் திறனைப் பலவகையாலும் பெற்றார்கள். அத்திறன் துணைநிற்கப் பலவகைப் பதிப்பு வெளியீடுகளை உருவாக்கி நமக்கு வழிகாட்டினார்கள். அவ்வெளியீடுகள் நமக்கு எவ்வாறு வழி காட்டுகின்றன?

நமது அடிப்படைத் திறனுக்கேற்ப, மக்கட் தேவைக்கேற்ப, கிடைக்கும் சுவடிக்கேற்ப எத்தகைய சுவடிப் பதிப்பை மேற்கொள்ளலாம் என்று முடிவெடுக்க முதலில் வழிகாட்டுகின்றன. முடிவெடுத்தபின் முடிவிற் கேற்ற சுவடிகளைத் தேடித் திரட்டுவதில் வழிகாட்டுகின்றன. இதே நிலைகளில்,

படியெடுக்க, ஒப்பிட, பலவகை உரை விளக்கம் உருவாக்கப் படிப்படியே வழிகாட்டி நிற்கின்றன. முழுமை பெறுமளவில் நூலுக்கு முன்னும் பின்னுமான அமைப்புகளை உருவாக்க வழிகாட்டுகின்றன.

இவ்வகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதால் பெறும்பயன் என்ன? அப்பயன் யாருக்கு உரியதாகிறது? சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி முறைகளைப் பின்பற்றுவதால் முதற் பயன் முறையான, தெளிவான சுவடிப்பதிப்பு வெளியீடுகள் வெளி வருகின்றன. அவ்வெளியீடுகளின் வழி நமது முன்னோர்கள் நிலைநிற்கின்றனர். அவற்றை எல்லோரும் அறிந்து பயன்பெற முடிகிறது.

முன்னோர்க் கருத்துகளடங்கிய சுவடிகள் அச்சுவடிவம் பெற்று விடுவதால் அவற்றின் அழிவிலிருந்து காப்பதே மிகப் பெரும் பயனாகி நிலைநிற்கின்றன.

'தமிழாகிய அரசுக்குச் சிற்றிலக்கியங்களே மெய்க்காப்பாளர்கள்' என்னுங் கொள்கையில் ஊறித்திளைத்து, அவற்றின் பயனாகப் பேரிலக்கியங்கள் பலவற்றையும் நம்மிடையே பரவச் செய்து நமக்கெல்லாம் சுவடிப் பதிப்புக்கலையில் தெளிவான வழிகாட்டி யருளிய நமது வழிகாட்டி, வணக்கத்திற்குரிய டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு என்றும் கடப்பாடுடையவர்களாகித் தலைதாழ்த்தி வணக்கத்தைத் தெரிவித்து மகிழ்வோமாக.

## துணை நூல்கள்


ஆண்டு

1. உவே.சா. பதிப்புப் பணியும் பன்முகமாட்சியும்,
முனைவர் செ. இராசு, உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம், சென்னை. 2003

2. உவே.சா. நூல்களில் சொல்லும் சுவையும்,
முனைவர் ஆறு. அழகப்பன்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2000

3. எட்டுத் தொகையுள் மூன்றாவதாகிய
ஐங்குறுநூறு மூலமும் பழைய வுரையும்,
டாக்டர் உவே.சாமிநாதையர் பதிப்பு,
ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு. 1944

4. என் சரித்திரம்,
மகாமகோபாத்தியாய டாக்டர். உவே. சாமிநாதையரவர்கள்,
டாக்டர் உவே.சா. நூல்நிலையம். 1982

5. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது,
டாக்டர் உவே. சாமிநாதையர் பதிப்பு.

6. குமர குருபரர் பிரபந்தங்கள்,
டாக்டர் உவே. சாமிநாதையர் பதிப்பு. 1939

7. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்,
டாக்டர் உவே. சாமிநாதையர் செய்த உபந்யாசம். 1929

8. இளங்கோவடிக ளருளிச்செய்த
சிலப்பதிகார மூலமும் - அரும்பதவுரையும்,
அடியார்க்கு நல்லாருரையும், மகாமகோபாத்தியாய
டாக்டர் உவே. சாமிநாதையர் பதிப்பு,
ஸ்ரீதியாகராசவிலாச வெளியீடு. 1927

9. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர்
உரையும் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய
கலாநிதி டாக்டர் உவே. சாமிநாதையர்,
ஸ்ரீதியாகராசவிலாச வெளியீடு. 1949

10. சுவடிஇயல்,
முனைவர் பூ. சுப்பிரமணியம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 1991

11. சுவடிப் பதிப்புத் திறன், தொகுதி 1,
முனைவர் சா. கிருட்டினமூர்த்தி,
முனைவர் தி. மகாலட்சுமி, முனைவர் கு. நிர்மலாதேவி,
திரு த. பூமிநாகநாதன், உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம், சென்னை. 2002

12. டாக்டர் உவே.சா. பதிப்புப்பணி - ஓராய்வு,
டாக்டர் பூ. சொல்விளங்கும் பெருமாள்,
வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை-18. 1981

13. திருக்குடந்தைப் புராணம்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான் -
திருசிரபுரம் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளை
இயற்றியது. தியாகராச செட்டியார்,
உவே. சாமிநாதையர் பதிப்பித்தது.

14. திருக்குறள் - மூலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2004.

15. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயருரையும்
மகாமகோபாத்தியாய டாக்டர் உவே.சாமிநாதையர்
பதிப்பு, ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு. 1953

16. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்,
டாக்டர் உவே.சா. பதிப்பு, 1941.

17. பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர்
பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும்
டாக்டர் உவே.சா. பதிப்பு. 1931

18. பரிபாடல்,
டாக்டர் உவே.சா. பதிப்பு. 1935

19. புறநானூறு மூலமும் பழைய உயையும்,
டாக்டர் உவே.சா. பதிப்பு. 1935

20. மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்,
டாக்டர் உவே.சா. பதிப்பு. 1931

21. மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடுதூது,
டாக்டர் உவே.சா. பதிப்பு,
ஸ்ரீதியாகராசவிலாச வெளியீடு. 1941

22. ஸ்ரீபத்மகிரிநாதர் தென்றல்விடு தூது,
டாக்டர் உவே.சா. பதிப்பு,
ஸ்ரீதியாகராசவிலாச வெளியீடு. 1932

# சொல்லடைவு

(எண். பக்க எண்)


அகத்தியம் 18
அக நானூறு 93, 94, 96-97
அக வாழ்க்கை 17
அகவிருள் 13
அசைநிலை 152
அச்சுக்கலை 20
அடியார்க்கு நல்லார் 54, 120
அட்சய பாத்திரம் 130
அஷ்டபிரபந்தம் 28
அட்டாவதனம் 36
அணிகலன்கள் (38) 131
அணியிலக்கணம் 32
அண்ணாமலைரெட்டியார் 33
அந்தணர் 96-98, 143
அமரம் 25
அமுதசுரபி 124
அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழ் 28
அம்பர்புராணம் 30, 34, 39
அம்பாசமுத்திரம் 35
அம்மூவனார் 53
அம்மை முதலிய எட்டு 125
அயோத்தியா காண்டம் 31
அரசர் (35), (41), 126, 129
அரிச்சுவடி 24, 38, 42
அரியலூர் 24, 25, 33, 34, 56
அரியலூர் ஜமீன்தார் 24, 56
அரும்பதவுரை 54, 120
அறச்சாலைகள் 141
அறப்பளீசுரசதகம் 26
அறவணவடிகள் 124
அறுசீரடி விருத்தம் 27
அறுபத்து மூவர் 63
அஃறிணை 150
ஆடிப்பட்டம் 14
ஆதீனகர்த்தர் 29, 34, 52, 62
ஆதீனங்கள் 54
ஆதீனமகாவித்துவான் 60
ஆத்திசூடி 26, 27, 38
ஆயர், ஆய்ச்சியர் 97
ஆயுதங்கள் (8) 132
ஆராய்ச்சிப் பதிப்பு 56
ஆருகத சமயம் 90, 91, 116
ஆலந்துறை ஈசர்பதிகம் 26
ஆழ்வார்திருநகரி 54
ஆறறிவு 13
ஆறுகள் (12), (5) 127, 130
ஆறுமுக சுவாமிகள் 62
ஆறுமுக நாவலர் 22
ஆறைம் பாட்டு 98
இங்கிலாந்து சுவடி நூலகம் 54
இசைக்கருவிகள் பல 100
இசைத்தமிழ் 76, 77
இடப்பொருள் 151
இடைக்கழிநாடு 95
இப்புத்தகத்தல் அடங்கியவை 73
இயலிசை நாடகம் 75
இயற்றமிழ் 76
இயைபு வனப்பு 78
இரட்டைக் கிளவி 149
இரணியமுட்டம் 100
இரத்தினசபாபதி மாலை 26
இராசகோபாலாச்சாரியார் 37, 54
இராசராச சோழ னுலா 89
இராசி, இலக்கணம் 16
இராமச்சந்திர கவிராயர் 59
இராமானுசக் கவிராயர் 22
இருபத்து நான்கு கிணறுகள் 23
இருபத்து மூன்று சுவடிகள் 52
இலக்கணக்கொத்து 31
இலக்கணம் 17
இலக்கண விளக்கச் சூறாவளி 31
இலக்கண விளக்கம் 32
இலக்கியக் கலை 17
இலம்பக உண்மைகள் 124
இல்லத் தலைவியார் 53
இளங்கோவடிகள் 75, 91
இறையனா ரகப்பொருள் 94
இன்னா நாற்பது 99
உத்தமதானபுரம் 23, 24, 33
உபநயனம் 37

உமணர் 97
உயர்திணை - அஃறிணை 152
உயிர் முன் உயிர் 149
உருத்திரங் கண்ணனார் 96
உரையாசிரியர் 119
உவே. சாமிநாதையர் 62
உழவர் 97
ஊர்கள் (19), (36), 99, 127, 130
ஊர்திகள் (4) 132
ஊற்றுக்கால் 14
ஊன ரசம் (6) 136
எட்டுத்தொகை 85, 87
எணசுவடி 24
எண்ணும் எழுத்தும் 16
எயினர், எயிற்றியர் 97
எழுத்தாணி 25, 39
ஏகாதசி 23
ஏம்பல் 33
ஏரைத்தேடு 15
ஏர்நடத்தல் 14
ஏலாதிச் சூரணம் 18
ஏழாம் வயது 26
ஏற்றங்கள் 14
ஐங்குறு நூறு 83, 85, 99
ஐந்தன் உருபுப்பொருள் 157
ஐந்திணைகள் 63
ஐந்திணையைம்பது 84
ஐயாகுட்டிஐயர் 26, 33
ஐயாசாமி சாஸ்திரியார் 77
ஐவகை வேர்கள் 18
ஒடு, ஓடு உருபு 148
ஒப்பிடும் பணி 50, 51
ஒருபொருட் பன்மொழி 158
ஒருமைப்பாடு 139
ஓதலாந்தையார் 83
ஓய்மான் வில்லியாதன் 96
ஓரம்போகியார் 83
ஓலைச் சுவடிகள் 19, 25
ஔவையார் 27
கசபுடவெண்பா 77
கச்சியம்பதி 93
கடியலூர் 96
கடைய நல்லூர் 52
கட்டிடக்கலை 15
கணக்காயனார் 94
கணிதக்கலை 16
கண்ணகி 75
கண்ணுவையர் 38
கதிரவன் 13, 14
கதிர்வேல் கவிராயர் 26
கதைகள் (13) 132
கத்திய சிந்தாமணி 74
கந்த புராணம் 30
கந்தர் கலிவெண்பா 35
கபிலர் 83, 98, 99
கம்ப ராமாயணம் 27, 31
கரிவலம்வந்த நல்லூர் 35
கரும்னனூர் கிழார் 96
கருவை கலித்துறை யந்தாதி 35
கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி 35
கலித்தொகை 84
கலிப்பா 50, 99
கலைக்களஞ்சியம் 57
கலைச்செல்வங்கள் 20
கறடா 25
கனகசபை ஐயர் 29
கஸ்தூரி ஐயங்கார் 27, 33
காசி காண்டம் 30
காசிக் கலம்பகம் 30
காய சண்டிகை 124
காரி யாசான் 18
காரை (ஊர்) 32
காரோணப் பதிகம் 62
கார்குடி 27, 33
காலில்லா மண்டபம் 60
கால்டுவெல் 58
காவடிச்சிந்து 33
காவிரிப் பூம்பட்டினம் 75, 93, 97
காளமேகப் புலவர் 27
கிருஷ்ணசாமி ரெட்டியார் 33
கிருஷ்ண வாத்தியார் 25, 33, 34
கிருஷ்ணாபுரம் 52
கீரங் கொற்றனார் 94
கீழ்க்கணக்கு 57

கீற்றுப் பந்தல் 60
குடமுழுக்கு விழா 35
குமர குருபரர் 35
குமரேச சதகம் 26
குமாரசாமி செட்டியார் 42
குமாரசாமித் தம்பிரான் 30, 61
குமாரசாமி முதலியார் 54
குமாரதேவர் சரித்திரம் 27
கும்பகோணம் 31, 36, 37, 56
குலங்கள் 130
குலோத்துங்க சோழன்
பிள்ளைத்தமிழ் 89
குவலயா னந்தம் 32
குறிஞ்சிப் பாட்டு 98
குறிப்பு வினைமுற்று 152
குறுந்தொகை 94, 96, 97, 99
குன்றக்குறவர் 91, 118
குன்றங்கள் 132
குன்னம் (குன்றம்) 26, 27, 33, 34
கூடலூர் கிழார் 83, 84, 118
கூட்டெழுத்து 41
கூல வணிகர் 92
கூறை நாடு 29
கைக்கிளைப் புறன் 159
கைப்பிரம்பு 24
கைவல்ய நவநீதம் 27
கொங்குவேளிர் மாக்கதை 56
கொல்லம் 21
கொழும்புத் துறை 42
கொழும்பு நகரம் 54
கொறுக்கந்தட்டுப் பேனா 25
கொன்றை வேந்தன் 27, 38
கோபால கிருஷ்ண பாரதியார் 28, 34
கோயிலூர் 33
கோயில்கள் (10) 130
கோவலன் 75
கோவலன் மகள் 77
கோவிந்த சதகம் 26
கோவூர் கிழார் 85
சகுனம் 16
சங்கநூல் 56
சங்கப் புலவர் 116
சங்கர நயினார் கோயில் 35
சங்கீதம் 28
சடகோபையங்கார் 26, 33, 34
சட்டம் 25
சதுரகராதி 59
சந்திரசேகர செட்டியார் 53
சந்திரநாதச் செட்டியார் 37, 53
சபாபதி ஐயர் 38
சபாபதி முதலியார் 36
சமணசமயம் 37
சமணச் சான்றோர் 90
சமுத்திர விசயம் செட்டியார் 53
சம்க்ஷேப ராமாயணம் 25
சரசுவதியம்மாள் 23, 24
சரவணப் பெருமாளையர் 22, 24
சவேரிநாதப் பிள்ளை 28
சாதிகள் 13, 132
சாத்தன் 91
சாமி ஐயங்கார் 27, 33
சாமிநாதன் 24
சாமிநா தையர் 25, 33, 34, 62
சாமி மலை 24
சிதம்பரம் பிள்ளை 26, 33, 34, 37
சிந்தாமணி உரை 42
சிந்தாமணி ஏடு 42
சிந்தாமணிச் சுவடி 52, 53
சிலப்பதிகாரச் சுவடி 54
சிலப்பதிகாரம் 56, 75, 116, 124, 126
சிவகிரி ஜமீன்தார் 60
சிவசாமி ஐயர் 25
சிவஞான சித்தியார் 32
சிவஞான போதம் 32
சிவப்பிரகாச சுவாமிகள் 34
சிறப்பதிகாரம் 56
சிறப்புச் செய்திகள் (62) 135, 136
சிறுபஞ்ச மூலம் 18
சிறுபா ணாற்றுப்படை 95, 96
சிற்றிலக்கியங்கள் 70, 71, 162
சின்னிகுளம் 33
சீகாழிக் கோவை 29, 38
சீகாளித்திப் புராணம் 30, 38
சீத்தலைச் சாத்தனார் 77, 92, 116, 117

சீத்தலைத் திருத்தலம் 93
சீர்அளவு ஒத்து வருதல் 49, 50
சீவக சிந்தாமணி 36, 37, 56, 74, 90, 116, 123, 125
சீவக சிந்தாமணிச் சுவடிகள் 51, 52
சீனிவாச ராகவாச்சாரியார் 56
சுத்தாநந்தப் பிரகாசம் 77
சுப்பராய ஐயர் 22
சுப்பராய செட்டியார் 36
சுப்பிரமணிய தம்பிரான் 31
சுப்பிரமணிய தேசிகர் 29, 31, 33-35, 52, 57, 60, 62
சுப்பிரமணிய தேசிக விலாசம் 60, 61
சுவடிகள் 22, 54
சுவடிச் சுடர் 22
சுவடி நூலகங்கள் 54
சுவடிப்பதிப்புக்கலை வழிகாட்டி 22
சுவடிப்பதிப்பு வெளியீடுகள்(74) 64-66, 72
சூடாமணி நிகண்டு 22, 26
சூரிய மூலை 24
செங்கணம் 27, 33, 38
செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் 28
செங்கோட்டை 52
செங்கோல் மடம் 54
செந்தில் பெருமான் 35
செய்யுமென் எச்சம் 149
செய்யுமென் முற்றுகள் 155
செல்லத்தம்மா 23
செவந்திபுரம் 35, 60, 61
செவந்தியப்ப நாயகர் 60
செவந்தீசுவரர் 60
சென்னை நகரம் 36
சேரமான் பெருமா ணாயனார் 56
சேரலாதன் 91
சேரன் செங்குட்டுவன் 91
சேலம் இராமசாமி முதலியார் 36, 56, 74
சேற்றூர் ஜமீன்தார் 60
சேனாதிபதி 30, 34
சொக்கநாதப் புலவர் 27
சொந்த வெளியீடுகள் 67-70
சொல்-என்னும் பொருளன 156
சோடசாவதானம் 36
சோதிடக் கலை 16
சோழ, பாண்டியர் 92
சோழ மண்டல சதகம் 30
சோழர் குலம் 90
சோழன் கரிகால் பெருவளத்தான் 96
சோழன் மகள் 91
ஞாயிறு 14
ஞானப் பிரகாசன் 21
ஞான வாசிட்டம் 27
தஞ்சை 52
தஞ்சை மன்னர் 23
தஞ்சை மாவட்டம் 23
தஞ்சை வாணன் 30, 34
தஞ்சைவாணன் கோவை 29, 30, 59
தண்டி யலங்காரம் 32
தமிழர்கள் 13, 16
தமிழாகிய அரசு 162
தமிழ்மொழி 13
தமிழ்விடு தூது 88, 136
தம்பிரான்கள் 29, 33, 38
தம்பிரான் வணக்கம் 21
தரங்கம்பாடி 21
தருமபுரம் 54
தர்மதானபுரம் 38
தலையாலங் கானம் 97
தனிஅகவற் பாக்கள் 99
தனிப்பாடல் 26
தன்மைப் பன்மை 151
தாண்டவராய முதலியார் 22, 59
தாத்திரேயப் பாட்டியல் 27
தாமோதரம் பிள்ளை, சி.வை., 22, 37, 57
தாளசமுத்திரம் 77
திங்கள் 14
திணைகள்-12 134
திணைமயக்கம் 148
திணைமாலை 150 84
தியாகராச செட்டியார் 31, 36, 62
திரிகடுகம் 17
திரிகூடராசப்பக் கவிராயர் 34, 52
திருக்காளத்தி 94

திருக்குடந்தை 62
திருக்குடந்தைத் திரிபு அந்தாதி 28, 38
திருக்குடந்தைப் புராணம் 62
திருக்குறள் 21, 26, 59
திருக்குற்றாலம் 52
திருக்கோவையார் 29
திருசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 62
திருச்சிற்றம்பலக் கோவையார் 31
திருச்செந்தூர் 35
திருஞானசம்பந்தர் பதிகம் 62
திருத்தக்க தேவர் 53, 90, 116
திருத்தணிகை 59
திருத்தப் பதிப்பு 59
திருநாகைக் காரோணப் புராணம் 30
திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் 62
திருநெல்வேலி 52, 62, 71
திருப்பரங் குன்றம் 94
திருப்புகலூர் திரிபந்தாதி 28
திருப்பெருந்துறை 31
திருப்பெருந்துறைப் புராணம் 31, 34
திருமுருகாற்றுப்படை 94
திருவண்ணாமலை 54
திருவரங்கத் தந்தாதி 27
திருவள்ளுவ மாலை 21, 93, 94, 97, 99
திருவாதவூர் 98
திருவாதிரை 31
திருவாவடுதுறை 29-34, 52, 54, 62
திருவானைக்கா புராணம் 30, 33, 38
திருவிளையாடற் சொற்பொழிவு 32
திருவிளையாடற் புராணம் 26, 35, 37
திருவேங்கடத் தந்தாதி 26
திருவேங்கட மாலை 26
திருவேரகத்து யமக அந்தாதி 28
தில்லையமக அந்தாதி 28
தீவங்கள் (6) 130
துக்காராம் ஹோல்கார் 52
துணைக்கருவிகள் 55
துறைகள் (65) 87, 88, 134
துறைசை யமக அந்தாதி 28
தெய்வங்கள் (20) (22) 128, 130
தெளிவுப் பதிப்பு 59
தென்றல்விடு தூது 71, 137, 138
தேரழுந்தூர் 37, 54
தொகுப்புப் பதிப்பு 59
தொகைப்பெயர்கள் (21) 133
தொகைப்பொருள் 156
தொகையுள் மயக்கம் 154
தொண்டைநாடு 95
தொண்டைமான் இளந்திரையன் 96
தொல்காப்பிய சூத்திரவிருத்தி 31
தொல்காப்பியம் 18, 22, 32
தொழுவூர் வேலாயுத முதலியார் 36
நகரச்சிறப்புகள் 63
நக்கீரர் 93
நக்கீரலிங்கம் 94
நச்சினார்க் கினியம் 22
நச்சினார்க்கினியர் 40, 119
நடேச தீட்சதர் 77
நந்தனார் சரித்திரம் 37
நப்பூதனார் 97
நயனியப்ப முதலியார் 22, 59
நல்லநாள் 16
நல்லப்ப ரெட்டியார் 27
நல்லாதனார் 17
நல்லியக் கோடன் 96
நல்லூர் நத்தத்தனார் 95
நல்வழி 27
நவநீதப் பாட்டியல் 27
நவரசம் 136
நற்சோணை 91
நற்றிணை 94, 97, 99
நன்னூல் 22, 26, 27, 31, 33
நன்னெறி 27
நாகமா நரகமா 39, 40
நாடகக் காப்பியம் 76
நாடகத் தமிழ் 77
நாடுகள் (9), (23) 126, 130
நாடும் மக்களும் 144
நாதத்தில் 40
நாராயணசாமி பிள்ளை 31
நாராயணையர் 24, 33, 34
நாலடியார் 21, 26
நாற்பத்தெட்டு வீடுகள் 23

நிமித்தகன் 91
நிரல் நிறை 159
நிலவுலகு 14
நிறைவு வழி 160
நீதிசாரம் 25
நீதிநெறி விளக்கம் 27
நீதிபதி முத்துசாமி ஐயர் 36
நீதிவெண்பா 26
நீர்ஊர்திகள் (24) 133
நூலாசிரியர் 89, 90
நூல்கள் (5), (59), 21, 128, 130, 138
நெடுநல்வாடை 94
நெட்டிவை யிருப்பை 99
நேமிநாதம் மூலம் 59
நைடதம் 28
நோயற்ற வாழ்வு 15
பக்களண் 73
பக்கத் தலைப்பு 73
பஞ்ச நமஸ்காரம் 40
படலப் பெயர்கள் 63, 64
படியெடுத்தல் 47
பட்டாபிராம பிள்ளை 57
பட்டினப்பாலை 96
பட்டீசுரம் 30
பதிப்பு 46
பதிற்றுப்பத்து 87, 88, 99, 103, 104
பதினேழு சுவடிகள் 42
பதினோராந் திருமுறை
பத்தினிக் கடவுள் 125
பத்துக் குணம் 136
பத்துச் சுவடிகள் 53
பத்துப்பாட்டு 79-81, 93, 94, 110-112
பத்மகிரிநாதர் 71
பயஹரமாலை 56
பயிர்செய் 14
பரதவர் 97
பரதேசிகள் 26, 33
பரமசிவத் தம்பிரான் 60
பரிபாடல் 81-85, 104-108, 131-134
பரிமேலழகர் 32, 121
பழமலைத் திரிபந்தாதி 28
பழமொழி 18
பழைய பதிப்பு 59
பறம்பு மலை 98
பறவைகள் (14) 133
பனைஓலை ஏடுகள் 19
பன்னிரு திணைகள் 85
பாடப்பெற்றோர் 79, 99, 110-115
பாட வேறுபாடு 44
பாடாண் 159
பாடிய உபகாரிகள் 95
பாடிய ஊர்கள் 95
பாடிய புலவர்கள் 95
பாடியோர் 83, 101-104, 108-110
பாட்டு-பாடியோர் 79
பாண்டியநாடு
பாண்டியன் நெடுஞ்செழியன் 97, 98
பாபநாசம் வட்டம் 23
பாரீஸ் சுவடி நூலகம் 54
பாலபோத இலக்கணம் 31
பாலைக் கௌதமனார் 144
பிரபந்த இலக்கணங்கள் 27
பிரபவாச் சுவடி 25
பிரமோத்திர காண்டம் 30
பிள்ளைப் பெருமாளையங்கார் 28
பிறப்புகள் 140
பிறவுகைகள் (19) 134
புகார் காண்டம் 76
புதுவை 59
புத்தஸ்தலங்கள் (5) 130
புரசவாக்கம் 36
புலத்துறை 118
புலவர்கள் 17, 128
புறநானூறு 85, 93, 97, 99, 101-103, 113-115, 134, 135
புறவாழ்க்கை 17
புறவிருள் 13
பூண்டி அரங்கநாத முதலியார் 36, 37
பூமாலை வகை (10) 133
பெரிய காறுபாறு 60, 61
பெரிய புராணம் 29-31
பெருங்கதை 57
பெருங்குன்றூர் 100
பெருங்கௌசிகனார் 100

பெருந்தேவனார் 85
பெருமாளையர் 27, 33
பெரும்பயன் 162
பெரும்பாணாற்றுப்படை 96, 97
பெரும்பேகன் 98
பெறும்பயன் 162
பேயனார் 83
பேரளம் 33
பேராசிரியம் 22
பொய்கைகள் (5) 128
பொய்யாமொழிப் புலவர் 30, 34
பொன் வாணிகர் 97
பௌத்த சமயம் 53, 78
மகாலிங்க ஐயர் 22
மகாவைத்தியநாதையர் 77
மட்டிக் காகிதம் 25
மணவாள நாராயண சதகம் 26
மணி ஐயர் 35
மணிமேகலை 53, 56, 77, 118, 124, 129-131
மதுரை 35, 54, 92
மதுரைக் காஞ்சி 84, 97, 98
மதுரைக் காண்டம் 76
மதுரைக் கூலவாணிகன் 77
மதுரைச் சொக்கநாதர் 88
மதுரைச் சோமசுந்தரர் 88
மயக்கம் தந்தவை 39
மரபுச் செல்வம் 19
மரவகை (23) 134
மருதநிலம் 15
மருத்துவக்கலை 15
மருத்துவன் தாமோதரனார் 93
மலர்கள் (35) 134
மலைகள் (17), (14) 127, 131
மலைக்காட்சி 14
மலையமான் திருமுடிக்காரி 98
மலையன் 98
மலைவாழ்க்கை 15
மறுபதிப்பு 59
மறைசை யந்தாதி 28
மன்வந்தரம் 25
மாங்குடிமருதனார் 97
மாடங்கள் 15
மாடுவெட்டிமங்கலம் 26, 33
மாணிக்கவாசகர் 63
மாநிலக்கல்லூரி 36, 53
மாந்தரஞ்சேர லிரும்பொறை 83, 118
மாமழை 14
மாயூரப் புராணம் 30, 33
மாயூரம் 28, 30, 33
மாயூரம் வேதநாயகம் 35
மிகைத்தொடர் 150
மிட்டா மிராசுதார் 35
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 28, 33-35, 38, 42, 52
மீனாட்சிசுந்தரேசுவரர் 35
மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் 28
முகவுரை 74, 88
முக்குணம் 136
முடத்தாமக் கண்ணியார் 95
முத்தமிழ் 13
முத்துகுமாரசாமி சிலை 94
முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ் 28
முத்துக்கள் 20
முத்துசாமிப் பிள்ளை 22
முந்நீர் 139
முப்பத்தைந்து ஊர்கள் 54
மும்மணிக் கோவை 60
முரஞ்சியூர் முடிநாகனார் 85
முருகபெருமான் 24
முல்லைப்பாட்டு 97
முள்ளூர் 98
முனிசீப் வேதநாயகம் பிள்ளை 34
முனிவர்கள் (21) 131
முன்றுரையரையனார் 18
மூதுரை 26, 27
மூலஏடு 25
மூலச் சுவடிகள் 19, 43
மூலிகைகள் 15
மூவெழுத்துப் பேரறிஞர் 22
மெய்க்காப்பாளர் 162
மேலகரம் 52
யாத்திரை 53, 54
யாப்பருங்கலக் காரிகை 27, 32

யாழ்ப்பாணம் 22, 37
யானைக்கட்சேய் 83, 118
யானைமலை 100
ராவ் பகதூர் 57
வஞ்சிக் காண்டம் 76
வஞ்சிப்பொருள் 159
வஞ்சிமாநகர் 93
வடமொழிப் பேராசிரியர் 53
வடமொழி வல்லுநர் 90
வடிவம் (10) 137
வணிகர் 97
வண்டுடை இயற்கை 141
வண்ணங்கள் (5), (100) 136
வரதுங்கராம பாண்டியர் 35
வரிவடிவங்கள் 19
வலைஞர் 97
வழிச் சுவடி 43, 44
வறிதுநகை தோற்றல் 29
வனங்கள் (3) 131
வன வளப்பம் 14
வாதங்கள் (11) 131
வாத, பித்த, சிலேத்துமம் 15
வாரெழுத்தாணி 39
வாழ்த்து - வணக்கநெறி 140
வானிலை 16
விசாகப்பெருமாளையர் 22, 31-34
விசேட உரை 75
வித்தியாப்பியாசம் 24
விநாயகர்கள் 62
விரதக்கேடு 23
விருத்தாசல ரெட்டியார் 27, 33, 38
விருஷபதாச முதலியார் 52
விழாக்கள் (2) 131
விஷ்ணு சகஸ்ரநாமம் 25
வீடூர் அப்பாசாமி நயினார் 37, 53
வீதிகள் 63
வீரசைவர் குமாரசாமி ஐயர் 37
வீரசோழியம் 22
வீரமா முனிவர் 59
வெகுதானிய - ஆனி 62
வெங்குசாமி ஐயர் 71
வெண்பா அந்தாதி 35
வெளியீடு 21, 46, 47
வெற்றிவேற்கை 27
வேங்கட சுப்பையர் 23, 24, 33
வேங்கடாசலையர் 23, 24, 33
வேணுவனலிங்க விலாசம் 60, 61
வேதகிரி முதலியார் 22
வேதநாயகம் பிள்ளை 61
வேலூர் 37
வேளாண்மைக் கலை 15
வேள்பாரி 98
வேள்வித் தூண் 96
வைதிக ஒழுக்க நெறி 23
வையை இராமசாமி ஐயர் 77
வைராக்கிய சதகம் 27
F.W. எல்லீஸ் 59
ஹாலாஸ்ய மகாத்மியம் 26
ஜமீன்தார்கள் 35
ஜவந்திபுரம் 60
ஜி.யு. போப் 57, 86
ஜீவந்த சம்பு 74
ஜூலியன்வின்சன் 54
ஜைன சமயம் 52
க்ஷத்திரிய சூடாமணி 74
ஸ்ரீஅரங்காச்சாரியார் 53
ஸ்ரீபுராணம் 74
ஸ்ரீவைகுண்டம் 54
16 நூறாயிரம் பொன் 96
20-2-1557 21
கி.பி. 1712 21
கி.பி. 1812 21, 59
கி.பி. 1822 - 1879 22
கி.பி. 1824, 1836, 1838 59
கி.பி. 1971 28
கி.பி. 1872 30
கி.பி. 1873 டிசம்பர் 31
கி.பி. 1876, 1880 56
19-2-1885 24
கி.பி. 1887 அக்டோபர்
கி.பி. 1892, 1893, 57
---- 1894 பாடல் 30

*******

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 100.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கைமாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கியம் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| சங்ககாலக் காசு இயல் | 30.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |
| மபொசியின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார் | 50.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் திவை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| பாரத வெண்பா | 80.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் 100 | 50.00 |
| Studies in Manimekalai | 70.00 |
| தமிழெழுத்தின் வரிவடிவம் | 30.00 |
| திராவிடமொழி இலக்கியங்கள் | 180.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| நாவல் கலையியல் | 50.00 |
| நாடகவியல் | 70.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் - 3 தொகுதிகள் | 260.00 |
| குமரமலைப் பிள்ளைத் தமிழ் | 75.00 |
| தென்னிந்திய மருத்துவ வரலாறு | 115.00 |
| சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள் | 45.00 |
| தொல்காப்பியத் தொடரியல் | 120.00 |
| மொழிபெயர்ப்புத் தமிழ் | 60.00 |

**527.சுவடிப் பதிப்புக்கலை வழிகாட்டி டாக்டர் உ.வே.சா. 50.00**